வெளியீடு 21-12-1992 Issued 21-12-1992

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 24, 1992 - தொகுதி 26 எண். 1
Friday, the 24th April 1992 - Volume 26 No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Secretariat,**
**Madras-600 009**

விலை ரூ. 3-00] Price Rs. 3-00

(307)

# உள்ளடக்கம்

**24—4—1992**


| | பக்கங்கள். |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iv–vii |
| Personnel of the Government of Tamil Nadu | vii ix |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். | xi–xii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி). | xiii–xxii |
| **1. இரங்கல் குறிப்பு—** | |
| திரைப்பட இயக்குநர்-தயாரிப்பாளர் திரு. சத்தியஜித் ரேயின் மறைவு குறித்து. | 1 |
| **2. வினாக்கள்—விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 2–36-ஆ |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள். .. .. | 36இ–139 |
| **3. கவன ஈர்ப்பு—** | |
| (அ) அரியலூர் தொகுதி வேப்பங்குழி கிராமத்தில் விஷக்காய்ச்சல் பரவியுள்ளது குறித்து. | 140–143 |
| (ஆ) குளித்தலையில் சாக்கடை நீர்தேக்கத்தால் ஏற்படும் பாதிப்பு குறித்து. | 143–145 |
| **4. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) பொது நிறுவனங்கள் குழு .. .. | 145–146 |
| (ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு. . .. | 146 |
| (இ) மனுக்கள் குழு .. .. .. | 147 |
| **5. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1992. | 147–148 |

D/V2l1,31 N92
N92·26·1




| | பக்கங்கள். |
|---|---|
| **5. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— தொடர்ச்சி.** | |
| (ஆ) பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) சட்ட முன்வடிவு, 1992. | 148–152 |
| (இ) நிலக் கொடை வேள்வி (பூதான யக்ஞ) (திருத்த) சட்ட முன்வடிவு, 1992. | 152–153 |
| (ஈ) சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1992. | 153–154 |
| (உ) சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1992. | 154 |
| (ஊ) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1992. | 154–155 |
| (எ) ஏற்பு பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன் வடிவு, 1992. | 155–156 |
| (ஏ) பல்கலைக் கழகங்களுக்கான சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1992. | 156 |
| (ஐ) மாநில உயர் கல்வி மன்றச் சட்டமுன் வடிவு, 1992. | 157 |
| (ஒ) மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்) வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1992. (ஆ.செ.), | 158 |
| (ஓ) இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1992. | 158–159 |
| (ஔ) வன (திருத்த) சட்ட முன்வடிவு, 1992, | 159–160 |
| (அஅ) நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு, 1992. | 162–163 |
| (ஆஆ) நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு, 1992. | 163–164 |
| **6. அறிவிப்புகள்—** | |
| (அ) மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்) வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1992 (ஆ.செ.). | 157 |
| (ஆ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1983–84 மற்றும் 1984–85 (ஆ.செ.), | 160 |





| | பக்கங்கள். |
|---|---|
| **6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.** | |
| (இ) நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு, 1992 (ஆ.செ.). | 162 |
| (ஈ) நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு, 1992 (ஆ.செ.). | 163 |
| **7. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1983–84 வாக்கெடுப்பு.** | 160–161 |
| **8. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1984–85 வாக்கெடுப்பு.** | 162 |
| **9. சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)—** | |
| நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு, 1992. | 164 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 164, 227–228, 230, 234–252 |
| திரு. எஸ். டேனியல்ராஜ் .. .. | 167–172 |
| டாக்டர் ஜெ. பரந்தாமன் .. .. | 172–175 |
| திரு. ஜி. பழனிசாமி .. .. .. | 175–181 |
| திரு. தி. சாத்தையா .. .. .. | 181–185 |
| திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் .. | 186–188 |
| திரு. ச. இராமச்சந்திரன் .. .. | 189–195 |
| டாக்டர் எஸ். சுந்தரராஜ் .. .. | 195–200 |
| திரு. த. க. இராதாகிருஷ்ணன் .. | 200–202 |
| திரு. வே. தம்புசாமி .. .. .. | 202–207 |
| *திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் | 207–234 |
| மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா | 220, 228, 247–249, 254–258, 262–266 |
| **10. விதி 110–இன் கீழ் கல்வியமைச்சரின் அறிக்கை—** | |
| முன்னாள் தி.மு.க. ஆட்சியின்போது சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற அத்துமீறல்கள் மற்றும் முறைகேடுகள் குறித்து விசாரிப்பதற்காக கமிஷன் நியமிக்க அரசு எடுத்துள்ள முடிவு குறித்து. .. | 165–166 |
| **11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.** | |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—திரு. பீஷ்ம நாராயண் சிங்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. முதலமைச்சர் | .. | மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத் துறை, சர்க்கரைப்பாகு கழிவு, சிறுபான்மையினர் நலம், இந்து சமய அறநிலையத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுரங்கம் மற்றும் கனிம வளம், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, மின்னணுவியல் மற்றும் அச்சுக் காகிதக் கட்டுப்பாடு. |
| 2. நிதி அமைச்சர் | .. | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிதி, திட்டம், தேர்தல்கள், சட்டமன்றம். |
| 3. சட்ட அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட), கம்பெனிகள் பதிவு. |
| 4. வருவாய்த் துறை அமைச்சர். | .. | மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை, முத்திரைச் சட்டம், எழுது பொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம் மற்றும் கிராமதானம், பயண இசைவுச் சீட்டு, வணிக வரிகள். |

5. பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : பிற்பட்டோர் நலம், மிகப் பிற்பட்டோர் நலம் மற்றும் சீர் மரபினர், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர், முன்னாள் இராணுவத்தினர் நலம்.

6. கல்வி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : கல்வி, தொழில் நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தொல் பொருளியல்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலம், சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல்.

8. போக்குவரத்து துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள், சட்டம், துறைமுகங்கள், வனங்கள் மற்றும் சின்கோனா.

9. கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

10. பொதுப்பணித் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப் பணிகள், பாசனம் (சிறு பாசனம் உட்பட), நெடுஞ்சாலைகள், மின்சாரம், மரபு சாரா எரிசக்தி வளர்ச்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு.

11. உள்ளாட்சித் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை, நகர்ப்புற மற்றும் கிராமப்புற குடிநீர் வழங்கல்.



12. உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : உணவு, கூட்டுறவு, நுகர்பொருள் வழங்கல், விலைவாசிக் கட்டுப்பாடு, புள்ளிவிவரங்கள்.

13. தொழிலாளர் நலத்துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. செ. ரகுபதி : தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு.

14. வேளாண்மைத் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்பு வரி மற்றும் கரும்பு வளர்ச்சி.

15. வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : வீட்டு வசதி, குடிசை மாற்றுத் திட்டம், ஊரக வீட்டு வசதி வளர்ச்சி, இடவசதிக் கட்டுப்பாடு, நகர அமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

16. சமூக நலத்துறை அமைச்சர். .. மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : சமூக நலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), சத்துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

17. ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : ஆதி திராவிடர் நலம், மலை வாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர், கால் நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம்.

18. மீன்வளத்துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மீன்வளம்.

19. ஊரகத் தொழில் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான்: சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் (குடிசைத் தொழில்கள் உட்பட), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், வக்ஃப்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU

THIRU BHISHMA NARAIN SINGH.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

| | |
|---|---|
| 1. Chief Minister .. .. | THE HON. DR. J. JAYALALITHA : Public, General Administration Indian Administrative Service, Indian Police Service and other All India Services, District Revenue Officers, Police, Prevention of Corruption, Industries, Prohibition and Excise, Molasses, Minorities, Hindu Religious and Charitable Endowments, Information and Publicity, Film Technology, Cinematograph Act, Tourism and Tourism Development Corporation, Mines and Minerals, Tamil Development and Tamil Culture. Electronics and News Print Control. |
| 2. Minister for Finance .. | THE HON. DR. V.R. NEDUNCHEZHIAN : Finance, Planning, Elections and Legislature. |
| 3. Minister for Law .. | THE HON. THIRU K.A. KRISHNASAMY : Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt relief including Legislation on Money lending, Chits and Registration of Companies. |
| 4. Minister for Revenue .. | THE HON. THIRU S.D. SOMASUNDARAM : Revenue, District Revenue Establishment. Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodan and Gramdan, Passports and Commercial Taxes. |
| 5. Minister for Backward Classes. | THE HON. THIRU. ERAAMA VEERAPPAN : Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas and Refugees and Evacuees and Welfare of Ex-Service man. |

6. Minister for Education.. THE HON. Dr. C. ARANGANAYAGAM : Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare and Archaeology.

7. Minister for Health . THE HON. THIRU S. MUTHUSAMY : Health, Medical Education, Family Welfare and Environmental Pollution Control.

8. Minister for Transport .. THE HON. THIRU K. A. SENGOTTAYAN : Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Forests and Cinchona.

9. Minister for Handlooms and Textiles.. THE HON. THIRU E. MADHUSUDHANAN : Handlooms and Textiles.

10. Minister for Public Works. .. THE HON. THIRU S. KANNAPPAN : Public Works, Irrigation including Minor Irrigation, Highways, Electricity, Non-Conventional Energy Development and Iron and Steel Control.

11. Minister for Local Administration. .. THE HON. THIRU ALAGU THIRUNAVUKKARASU : Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness and Urban and Rural Water Supply.

12. Minister for Food and Co-operation. ... THE HON. THIRU G. VISWANATHAN : Food, Co-operation, Civil Supplies, Price Control and Statistics.

13. Minister for Labour .. THE HON. THIRU S. RAGUPATHY : Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes and Census.



14. Minister for Agriculture. .. THE HON. THIRU KU. PA. KRISHNAN : Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane, Cess and Sugarcane Development.

15. Minister for Housing and Urban Development. .. THE HON. THIRU T.M. SELVAGANAPATHI : Housing, Slum-Clearance, Rural Housing Development, Accommodation Control, Town Planning, Urban Development and Madras Metropolitan Development Authority.

16. Minister for Social Welfare. .. THE HON. TMT. R. INDIRA KUMARI : Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon-Meals, Beggar Homes, Orphanages and Correctional Administration.

17. Minister for Adi-Dravidar Welfare. .. THE HON. THIRU M. ANANDAN : Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour, Animal Husbandry, Milk and Dairy Development.

18. Minister for Fisheries. .. THE HON. THIRU D. JAYAKUMAR : Fisheries.

19. Minister for Rural Industries. .. THE HON. THIRU S. NAGOOR MEERAN : Small-Scale Industries, Rural Industries including Cottage Industries, Khadi and Village Industries Board and Wakf.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பேரவைத் தலைவர்:

மாண்புமிகு திரு. இரா. முத்தையா

பேரவைத் துணைத் தலைவர் :

பேராசிரியர் க. பொன்னுசாமி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல் :

1. திரு. ம. சின்னசாமி
2. திரு. வ. சத்தியமூர்த்தி
3. திரு. ஆர். சிங்காரம்
4. திரு. வே. தம்புசாமி
5. திரு. நா. சா. பழனிச்சாமி

செயலாளர் :

திரு. செ. சு. ஜானகிராமன்

## பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி).

| | |
|---|---|
| இராமச்சந்திரன், திரு. ரெ. கு., பி.ஏ., பி.எல். | இணைச் செயலாளர் |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி. எல். | இணைச் செயலாளர் |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் (ப்திப்பாளர்). |
| சண்முகநாதன், திரு. கோ., பி. காம். | துணைச் செயலாளர் (ப்திப்பாளர்). |
| சந்திரசேகர், திரு. ஆர்., பி.ஏ. | துணைச் செயலாளர் |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல். | துணைச் செயலாளர் |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா., பி.ஏ., பி.எல்., டி.பி. மற்றும் பி.ஏ. | துணைச் செயலாளர் |
| கிருஷ்ணமூர்த்தி, திரு. ச., பி.எஸ்ஸி. | குழு அலுவலர் |
| வெங்கட்டராமன், திரு. ப. சீ., பி. காம். | குழு அலுவலர் |
| அப்துல் சத்தார், திரு. ஜெ., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| இராசாராமன், திரு. வி., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| உமா, திருமதி வி. நா., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| கண்ணன், திரு. கே., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| கணேசன், திரு. சா., பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| சாயிநாதன், திரு. கி., பி.ஏ., பி.ஜி. எல். | சார்புச் செயலாளர் |
| புவானி சுப்பையா, திருமதி, பி.ஏ., பி.ஜி. எல். | சார்புச் செயலாளர் |
| பானுமதி அனந்தராஜன், திருமதி, பி.எஸ்ஸி., பி.ஜி. எல். | சார்புச் செயலாளர் |

| | |
|---|---|
| முடிகோபதி, திரு. நா., எம்.ஏ. | சார்புச் செயலாளர் |
| முனிர்உன்னிசா, திருமதி பி.எஸ்ஸி., பி.ஜி. எல். | சார்புச் செயலாளர் |
| ராஜன், திரு. கே. பி., டி. ஆர். எஸ். | சார்புச் செயலாளர் |
| ராஜேந்திரன், திரு. பி. சி., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| வெங்கட்டராமன், திரு. கோ. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| சுந்தரராஜுலு, திரு. துரை., எம்.ஏ. | தலைமை நிருபர் |
| துரைபாண்டியன், திரு. செ.ஏ., பி.ஏ. | தலைமை நிருபர் |
| ஜெயதேவ், திரு. பி. சி. | தலைமை நிருபர், |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்.

| | | |
|---|---|---|
| 1. | அண்ணாமலை, திரு. எஸ். | ஆலந்தூர் |
| 2. | அபரஞ்சி, திரு. பெ. | அரூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | மயிலாடுதுறை |
| 4. | அமர்நாத், திரு. ஓ.எஸ். | மதுரை கிழக்கு |
| 5. | அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு. | கன்னியாகுமரி |
| 6. | அரங்கநாதன், திரு. ஆர். டி. | விருத்தாசலம் |
| 7. | அரங்கநாயகம், டாக்டர் செ. | தொண்டாமுத்தூர் |
| 8. | அர்ச்சுனன், திரு. க. | வீரபாண்டி |
| 9. | அழகிரி, திரு. ச. | சிதம்பரம் |
| 10. | அழகு திருநாவுக்கரசு, திரு. | ஒரத்தநாடு |
| 11. | அறிவழகன், திரு. ஆ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 12. | அன்பழகன், திரு. எஸ். | நாமக்கல் (செ.வ.) |
| 13. | ஆசைமணி, திரு. எஸ். | குத்தாலம் |
| 14. | ஆண்டி அம்பலம், திரு. எம். | நத்தம் |
| 15. | ஆண்டித் தேவர், திரு.எஸ். | திருப்பரங்குன்றம் |
| 16. | ஆரோக்கியசாமி, டாக்டர் ச. | திருச்சிராப்பள்ளி-1 |
| 17. | ஆறுமுகம், திரு. செ. | வானூர் (செ.வ.) |
| 18. | ஆனந்தன், திரு. எம். | உளுந்தூர்பேட்டை (செ. வ.) |

19. இந்திரகுமாரி, திருமதி இரா. — நாட்றாம்பள்ளி

20. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. — மேலூர்

21. இராசாராமன், திரு.சோ. — பாபநாசம்

22. இராசாராம், திரு. க. — பனமரத்துப்பட்டி

23. இராதாகிருஷ்ணன், திரு. த. க. — திருமங்கலம்

24. இராமகிருஷ்ணன், டாக்டர். இ. — அச்சரப்பாக்கம் (செ.வ.)

25 இராமசாமி அம்பலம், திரு. கே. ஆர். — திருவாடனை

26. இராமசுவாமி, திரு. சி. — சங்கராபுரம்

27. இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். — கம்பம்

28. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். — சாத்தூர்

29. இராமச்சந்திரன், திரு. ச. — பண்ருட்டி

30. இராமச்சந்திரன், திரு. மா.சா. மா. — இளையாங்குடி

31. இராமதாஸ், திரு. எஸ்.எஸ்.ஆர். — செஞ்சி

32. இராமநாதன், திரு. இராம. — கும்பகோணம்

33. இராஜமன்னார், திரு. கு. சே. — ஓட்டப்பிடாரம் (செ.வ.)

34. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, திரு. கி. — திருத்தணி

35. இராஜேந்திரன், திரு. பி.வி. — வேதாரண்யம்

36. இராம வீரப்பன், திரு — காங்கேயம்

37. இலதா பிரியகுமார், திருமதி. — அரக்கோணம் (செ.வ.)



38. இளம்வழுதி, திரு. — எழும்பூர் (செ.வ.)

39. ஈஸ்வரமூர்த்தி, திரு. பி. — தாராபுரம் (செ.வ.)

40. ஈஸ்வரன், திரு. ஆர். — வாசுதேவநல்லூர் (செ.வ.)

41. ஏகாம்பர ரெட்டி, திரு. எ. — பள்ளிப்பட்டு

42. கண்ணப்பன், திரு. எஸ். — திருப்பத்தூர்

43. கண்ணன், திரு. வே. — திருவண்ணாமலை

44. கந்தசாமி, திரு. கா. — தலைவாசல் (செ.வ.)

45. கருப்புசாமி, டாக்டர் எம். — குன்னூர் (செ.வ.)

46. கலியபெருமாள், திரு. ப. — திருவையாறு

47. கலைச்செல்வி, திருமதி கே. எம். — காட்பாடி

48. கவிநிலவு தர்மராஜ், திருமதி — மொடக்குறிச்சி

49. கற்பகம் இளங்கோ, திருமதி — காரைக்குடி

50. கனகவல்லி, திருமதி என். சி. — விளாத்திகுளம்

51. காஞ்சி பன்னீர்செல்வம், திரு. — உத்திரமேரூர்

52. காந்திராஜன், திரு. ச. — வேடசந்தூர்

53. காளன், திரு. கோ. — வில்லிவாக்கம்

54. காளிராஜன், டாக்டர் மு. — சமயநல்லூர் (செ.வ.)

55. கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ. — ஆயிரம்விளக்கு

56. கிருஷ்ணன், திரு. எஸ். எம். — தாம்பரம்

57. கிருஷ்ணன், திரு. கு.ப. — ஸ்ரீரங்கம்

58. கிருஷ்ணன், திரு. சி. — ஓமலூர்

59. குப்பன், திரு. க. — திருவொற்றியூர்

60. குமரி அனந்தன், திரு. — சாத்தான்குளம்

| | | |
|---|---|---|
| 61. | குமாரதாஸ், டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 62. | குழந்தைவேலு, திரு. சி. | குளத்தூர் (செ.வ.) |
| 63. | கோடிமாரி, திரு. ஆர். | நாகப்பட்டினம் |
| 64. | கோபாலகிருஷ்ணன், திரு. வே. | சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 65. | கோபால், டாக்டர் க. | நன்னிலம் (செ.வ.) |
| 66. | கோவிந்தராசு, திரு. மா. | ரிஷிவந்தியம் |
| 67. | சக்குபாய், திருமதி ரா. | கும்மிடிப்பூண்டி |
| 68. | சக்குபாய் தேவராஜ், திருமதி டி. | திருவள்ளூர் |
| 69. | சஞ்சய் ராமசாமி, திரு. | விருதுநகர் |
| 70. | சண்முகநாதன், திரு. எஸ். | ஆலங்குடி |
| 71. | சண்முகம், திரு.எஸ்.வி. | மதுரை மேற்கு |
| 72. | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 73. | சந்திரசேகர், திரு.வி.பி. | பொள்ளாச்சி |
| 74. | சம்பத், திரு. எ. | வாணியம்பாடி |
| 75. | சரஸ்வதி, திருமதி அ.தி. | சத்தியமங்கலம் |
| 76. | சரஸ்வதி, திருமதி ப. | கபிலர்மலை |
| 77. | சரோஜா, டாக்டர் வெ. | சங்கரி (செ.வ.) |
| 78. | சாத்தையா, திரு. தி. | இராஜபாளையம் (செ.வ.) |
| 79 | சாவித்திரி அம்மாள், திருமதி ஆர். | முகையூர் |
| 80. | சிங்காரம், திரு. ஆர். | பேராவூரணி |
| 81. | சிங்காரம், திரு. கே. | மொரப்பூர் |
| 82 | சிங்கை கோவிந்தராசு, திரு. | சிங்காநல்லூர் |
| 83. | சியாமளா, திருமதி ரெ. | கோவில்பட்டி |



| | | |
|---|---|---|
| 84. | சிவசுப்பிரமணியன், திரு. கு. | குறிஞ்சிப்பாடி |
| 85. | சிவபதி, திரு. என். ஆர். | தொட்டியம் |
| 86. | சின்னசாமி, திரு. கா. | சேந்தமங்கலம் (ம.ப.) |
| 87. | சின்னசாமி, திரு. ம. | கரூர் |
| 88. | சின்னசாமி, திரு. வி.கே. | பவானிசாகர் |
| 89. | சின்னப்பன், திரு. கே. கே. | ஜெயங்கொண்டம் |
| 90. | சீனியம்மாள், டாக்டர் மு. | அவினாசி (செ.வ.) |
| 91. | சீனிவாசன், திரு. ஆ. கு. | பெரணமல்லூர் |
| 92. | சீனிவாசன், திரு. கு. | மன்னார்குடி |
| 93. | சுதர்சனம், திரு. டி. | பூந்தமல்லி |
| 94. | சுந்தரசாமி, திரு. எம். | கலசப்பாக்கம் |
| 95. | சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு |
| 96. | சுந்தரம், திரு.எம்.கே. | தண்டராம்பட்டு |
| 97. | சுந்தரராஜ், டாக்டர், எஸ். | பரமக்குடி (செ.வ.) |
| 98. | சுந்தரவேல், திரு. ஏ. கே. சி. | திருப்பத்தூர் |
| 99. | சுந்தராம்பாள், திருமதி செ. | மேட்டூர் |
| 100. | சுப்பிரமணியம், திரு. வ.மு. | மானாமதுரை (செ.வ.) |
| 101. | சுப்பிரமணியன், திரு. வி. என். | பெருந்துறை |
| 102. | சுப்பிரமணியன், திரு. வீ. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 103. | சுப்புரத்தினம், திரு. ஆ. | பழனி (செ.வ.) |
| 104. | சுலோசனா, செல்வி எல். | மேட்டுப்பாளையம் |
| 105. | சுவாமிநாதன், திரு. சி. | புதுக்கோட்டை |
| 106. | செங்கோட்டையன், திரு. கே. ஏ. | கோபிசெட்டிபாளையம் |

| | | |
|---|---|---|
| 107. | செல்லக்குமார், டாக்டர் அ. | அண்ணா நகர் |
| 108. | செல்லசாமி, திரு. ஏ.டி. | ஒட்டன்சத்திரம் |
| 109. | செல்லதுரை, திரு. ஆ. | திருச்செந்தூர் |
| 110. | செல்வகணபதி, திரு. டி. எம். | திருச்செங்கோடு |
| 111. | செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 112. | செல்வராஜ், திரு. கே. | கோயம்புத்தூர் மேற்கு |
| 113. | செழியன், திரு. தா. | பெரம்பலூர் (செ.வ.) |
| 114. | சேகர், டாக்டர் எம். பி. | பெரம்பூர் (செ.வ.) |
| 115. | சேகர், திரு. எம். ஜி. | பாலக்கோடு |
| 116. | சொக்கலிங்கம், திரு. பி. | மதுராந்தகம் |
| 117. | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | தஞ்சாவூர் |
| 118. | ஞானசேகரன், திரு. சி. | வேலூர் |
| 119. | டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 120. | தங்கமுத்து, திரு. கு. | திருவோணம் |
| 121. | தங்கராஜ், திரு. ஆர். | ஆண்டிமடம் |
| 122. | தங்கவேல், திரு. எம். | முசிறி |
| 123. | தண்டாயுதபாணி, திரு.வி. | குடியாத்தம் |
| 124. | தமிழரசன், திரு. செ.கு. | வந்தவாசி (செ.வ.) |
| 125. | தமிழரசு, திரு. வே. | ஆத்தூர் |
| 126. | தம்புசாமி, திரு. வே. | திருவாரூர் (செ.வ.) |
| 127. | தர்மலிங்கம், திரு. கி. | அணைக்கட்டு |
| 128. | தர்மலிங்கம், திரு. பே. | பாளையங்கோட்டை |
| 129. | தவசி, திரு. கே. | ஆண்டிப்பட்டி |
| 130. | தனபால், திரு. ம. | திருப்போரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 131. | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 132. | தாமோதரன், திரு. சி. | நெல்லிக்குப்பம் |
| 133. | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 134. | துரை, திரு. எஸ். எம். | ஆத்தூர் |
| 135. | துரைமுருகன், திரு. கு.க. | பல்லடம் |
| 136. | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 137. | தெய்வநாயகம், திரு. எ. | மதுரை மத்தி |
| 138. | தென்னவன், திரு. மு. | இராமநாதபுரம் |
| 139. | தேவராஜ், திரு. அ. | செய்யாறு |
| 140. | தேனி பன்னீர்செல்வம், திரு. | போடிநாயக்கனூர் |
| 141. | நடேசன், திரு. இரா. | திருவட்டாறு |
| 142. | நடேசன், திரு. மு. | சேலம்-2 |
| 143. | நடேசன் பால்ராஜ், திரு. வெ. | நாங்குநேரி |
| 144. | நாகூர் மீரான், திரு. எஸ். | கடையநல்லூர் |
| 145. | நிர்மலா, செல்வி பி. | திண்டுக்கல் |
| 146. | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | தேனி |
| 147. | பஞ்சவர்ணம், திருமதி கே. | வலங்கைமான் (செ.வ.) |
| 148. | பட்டாபிராமன், திரு. கா.ப. | காஞ்சிபுரம் |
| 149. | பரந்தாமன், டாக்டர் ஜெ. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 150. | பரமசிவம், திரு. ஆர்.பி. | சின்னசேலம் |
| 151. | பரமசிவன், திரு. ஏ.எம். | சோழவந்தான் |
| 152. | பலராமன், திரு. உ. | பூங்காநகர் |
| 153. | பழனிசாமி, திரு. இரா. | தாரமங்கலம் |
| 154. | பழனிசாமி, திரு. க. | எடப்பாடி |
| 155. | பழனிசாமி, திரு. நா.சா. | கிணத்துக்கடவு |
| 156. | பழனிசாமி, திரு. வெ. | திருப்பூர் |
| 157. | பழனிசாமி, திரு. ஜி. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |

158. பழனியம்மாள், திருமதி க. ராசிபுரம்
159. பன்னீர்செல்வம், திரு. என். திருவிடைமருதூர்
160. பன்னீர்செல்வம், திரு. சா. திண்டிவனம்
161. பன்னீர்செல்வம், திரு.ஜெ. திருநாவலூர்
162. பாண்டியம்மாள், திருமதி இரா. உசிலம்பட்டி
163. பாப்பா சுந்தரம், திரு.அ. குளித்தலை
164. பாலகங்காதரன், திரு.ஜெ. சிவகாசி
165. பாலகிருஷ்ணன், திரு.சோ. முதுகுளத்தூர்
166. பாலசுப்ரமணியன், திரு. எஸ். ஆர். பொங்கலூர்
167. பாலசுப்பிரமணியன், திரு. கி. பட்டுக்கோட்டை
168. பாலன், திரு. எம்.கே. சைதாப்பேட்டை
169. பாலையா, திரு. ஆ. குளச்சல்
170. பீட்ரிக் டி'சோசா, டாக்டர் நியமனம்
171. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். தென்காசி
172. புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. சேரன்மகாதேவி
173. புரட்சிமணி, திரு. ச. மங்களூர் (செ.வ.)
174. புருஷோத்தமன், டாக்டர் வெ. பெண்ணாகரம்
175. பூராசாமி, திரு. எம். பூம்புகார்
176. பெரியசாமி, திரு. வே. அந்தியூர் (செ.வ.)
177. பெரியவீரன், திரு. எம். பெரியகுளம்
178. பெருமாள், திரு. செ. ஏற்காடு (ம.ப.)
179. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். நிலக்கோட்டை (செ.வ.)
180. பொன்னுசாமி, பேராசிரியர் க. மருங்காபுரி
181. பொன்னுசாமி, திரு. பெ. தருமபுரி



182. பொன்னுவேலு, திரு. ஏ. நா. வரகூர் (செ.வ.)
183. போளூர் வரதன், திரு. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
184. மணிமேகலை, டாக்டர் சு. அரியலூர்
185. மணிமேகலை, திருமதி வி. ஜி. அருப்புக்கோட்டை
186. மணிவாசகம், திரு. கே.பி. உடுமலைப்பேட்டை
187. மதுசூதனன், திரு. இ. டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர்.
188. மரியம்உல் ஆசியா, திருமதி கே. அரவக்குறிச்சி
189. மல்லிகா, செல்வி கோ. புவனகிரி
190. மனோகரன், திரு. கே. ஏ. ஓசூர்
191. மாணிக்கம், திரு. சி. ஈரோடு
192. மாலா, டாக்டர் ஜி. ஆர். திருச்சிராப்பள்ளி-2
193. முத்துசாமி, திரு. சு. பவானி
194. முத்தையா, திரு. இரா. சேடப்பட்டி
195. முருகானந்தம், திரு. கே. ஆர். சிவகங்கை
196. முருகையா பாண்டியன், திரு. ஆர். அம்பாசமுத்திரம்
197. முனிரத்தினம், திரு. ஏ. எம். சோளிங்கர்
198. முனிவெங்கடப்பன், திரு. கே. கிருஷ்ணகிரி
199. முனுசாமி, திரு. கா.பூ. காவேரிப்பட்டிணம்
200. முஹமது ஆசிப், திரு. திருவல்லிக்கேணி
201. மூர்த்தி, திரு. து. சீர்காழி (செ.வ.)
202. மோசஸ், டாக்டர் எம். நாகர்கோவில்
203. ரகுபதி, திரு. செ. திருமயம்
204. ரங்கநாதன், திரு. ப. புரசைவாக்கம்
205. ரங்கராஜன், திரு.டி. எம். மயிலாப்பூர்
206. ரத்தினவேல், திரு. த. திருவெறும்பூர்
207. ரமணி நல்லதம்பி, திருமதி ராதாபுரம்
208. ரமேஷ், திரு. வி.பி.ஆர். தூத்துக்குடி

| | | |
|---|---|---|
| 209. | ரவிக்குமார், திரு. ஏ. [illegible] | பொன்னேரி (செ.வ.) |
| 210. | ரவிச்சந்திரன், திரு. வி. | உப்பிலியாபுரம் (ம.ப.) |
| 211. | ராமசுப்பு, திரு. எஸ். எஸ். | ஆலங்குளம் |
| 212. | ராஜு, திரு. எச்.எம். | உதகமண்டலம் |
| 213. | ராஜு, திரு. கே. ஆர். | கூடலூர் |
| 214. | ராஜு, திரு. கே. பி. | பேரூர் |
| 215. | ராஜேந்திரன், திரு. என். ஆர். | காட்டுமன்னார் கோவில் (செ.வ.) |
| 216. | லட்சுமணன், திரு. வி. கே. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 217. | லாரன்ஸ், திரு. கு. | பத்மநாபபுரம் |
| 218. | லோகாம்பாள், திருமதி ஜெ. | லால்குடி |
| 219. | வரதராஜன், திரு.செ.து. | செங்கல்பட்டு |
| 220. | விசுவநாதன், திரு. ஜி. | ஆற்காடு |
| 221. | வீரபாண்டியன், டாக்டர் பெ. | செங்கம் (செ.வ.) |
| 222. | வெங்கடராம ரெட்டி, திரு. மு. | தளி |
| 223. | வெங்கடேசன், திரு. பி.ஆர். எஸ். | கடலூர் |
| 224. | வேடியப்பன், திரு. தா. | போளூர் |
| 225. | வேணுகோபால், திரு. என. ஜி. | ராணிப்பேட்டை |
| 226. | வேலையா, திரு. டி. | திருநெல்வேலி |
| 227. | ஜனார்தனன், திரு. தே. | விழுப்புரம் |
| 228. | ஜானகிராமன், திரு.கோ. | மேல்மலையனூர் |
| 229. | ஜீனத் சர்புதீன், திருமதி | சேப்பாக்கம் |
| 230. | ஜெயக்குமார், திரு. எஸ். | தியாகராயநகர் |
| 231. | ஜெயகுமார், திரு. டி. | இராயபுரம் |
| 232. | ஜெயராமன், திரு.எஸ்.ஆர். | சேலம்-1. |
| 233. | ஜெயலலிதா, டாக்டர் ஜெ. | பர்கூர் |
| 234. | ஜெய்சன் ஜேக்கப், டாக்டர் | ஆரணி |
| 235. | ஸ்ரீதரன், டாக்டர் அ. | வால்பாறை (செ.வ.) |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.

| | |
|---|---|
| சுப்பிரமணியன், திரு. கே. | தலைமை வழக்கறிஞர். |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### சித்திரை 12, ஆங்கீரச-திருவள்ளுவர் ஆண்டு 2023.

### 1992, ஏப்ரல் 24, வெள்ளிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u>

> " செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
> எஃகதனிற் கூரியது இல். "

தமக்குச் சிறப்பு வேண்டுவோர் பொருளை ஈட்ட வேண்டும். பகைவர்களின் செருக்கை அழிக்கும் படைக்கலம் அப் பொருளைப்போல கூர்மை உடையது வேறொன்றும் இல்லை.

### 1. இரங்கல் முறிப்பு

### திரைப்பட இயக்குநர்—தயாரிப்பாளர் திரு. சத்தியஜித்ரேயின் மறைவு குறித்து.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இந்தியத் திரைப்படத் துறைக்கு ஈடு இணையற்ற புகழ் சேர்த்தவரும், அகில உலக அரங்கில் போட்டியிடத்தக்கப் பல்வேறு சிறந்த அம்சங்களைக் கொண்ட திரைப்படங்களைத் தயாரித்து நாட்டுக்கு வழங்கியவரும், தரமான திரைப்படங்களைத் தயாரிப்பதில் அவருக்கு இணை அவர்தான் என்று கூறிடத்தக்க வகையில் தலை நிமிர்ந்த தன்மையோடு திகழ்ந்தவருமான இந்தியத் திரைப்படத் துறை புகழ் பெற்ற இயக்குநர் திருமிகு சத்தியஜித்ரே நேற்றையதினம் மறைவு எய்திய செய்தியைப் பேரவைக்கு அறிவிக்கப் பெரிதும் வருந்துகின்றேன்.

அத்தகைய ஒப்பாரும் மிக்காரும் அற்ற புகழ் மிக்கவரான சத்தியஜித்ரேயின் மறைவு குறித்து இப்பேரவை தன்னுடைய ஆழ்ந்த இரங்கலையும், அவரை இழந்து தவிக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும், அவர் ஈடுபாடு கொண்டிருந்த துறையில் அவரை இழந்து அத்துறையே இன்றைக்கு இருள்மயமாகக் காட்சி அளிக்கிறதே என்று ஏங்கிடும் அளவிற்குத் திகழ்கிற அத்துறையினருக்கும் இப்பேரவையின் சார்பில் நம்முடைய ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ள வேண்டும் என்னும் தீர்மானத்தை முன் வைத்து, மறைந்த அப்பெருந்தகைக்குப் பேரவையின் சார்பில் இரங்கல் தெரிவிக்கிற வகையில் இரண்டு நிமிடங்கள் உறுப்பினர்கள் எழுந்து அமைதி காக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 2. வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண். 610, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

610—

### GRANTS GIVEN TO LEGAL AID AND ADVISORY BOARD

*1761—THIRU M. SUNDARADOSS :

Will the Hon. the Minister for Law be pleased to state :

(a) The grants given to the Legal Aid and Advisory Board for the last five years and

(b) The purposee for which this grant is mode during these Years ?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக் குழுவிற்குத் தமிழக அரசு வழங்கிய மானியத் தொகை பின் வருமாறு :

| | | |
|---|---|---|
| 87—88 | .. | 45,00,000 ரூபாய் |
| 88—89 | .. | 51,95,000 ரூபாய் |
| 89—90 | .. | 58,95,000 ரூபாய் |
| 90—91 ஆண்டுகளில் | .. | 75,00,000 ரூபாய் |

போற்றுதற்குரிய நமது தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 1991-92 இல் ரூ. 91 லட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(ஆ) இக்குழு, ஏழை எளியோருக்கு சட்ட ஆலோசனைகள் வழங்குவது, மோட்டார் விபத்துக்களில் பாதிக்கப் பட்டவர்களுக்கு இழப்புத் தொகைப் பெற்றுத் தருதல், மகளிருக்கும், குழந்தைகளுக்கும் வாழ்க்கைச் செலவுப் படி அளிக்க உதவி செய்தல் ஆகிய தொண்டுப் பணிகளை மேற் கொண்டு வருகிறது. இப்பணிகளை மேற்கொள்ள அரசின் மானியம் பயன்படுத்தப்படுகிறது.



முற்பகல் 9-35

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஃப்ரீ லீகல் எய்டினுடைய தலைவர், ரிடையர்டு ஹைகோர்ட் ஜட்ஜ். இதனுடைய 'எஸ்டாப்ளிஷ்மென்ட்' சார்ஜஸ் அதாவது டெலிகிராப் சார்ஜஸ், டிராவலிங் அலவன்ஸ், டிரான்ஸ்போர்ட், ஹானரோரியம் ஆக இதற்காகவே அதிக மாகப் பணம் செலவழிக்கப்படுகிறது. ஆனால் ஃப்ரீ லீகல் எய்டுக்கு, அந்த ஏழை மக்களுக்கு பணம், கொஞ்சமாகத்தான் போய்ச் சேர்கிறது. ஆகவே, ஒதுக்குகிற பணத்தை 'எஸ்டா பிளிஷ்மென்ட்' என்பதற்கு இவ்வளவு ரூபாய் அதாவது ஒரு 10 சதவிகிதம் என்றும், மீதி 90 விழுக்காடு பணத்தை அந்த ஏழை மக்களுக்கு எய்டுக்காகச் செலவழிக்கவும் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, அவர்கள் சொன்னக் கருத்துரு அடிப்படை யில் இந்த நிர்வாகம் சீரமைக்கப்படும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஃப்ரீ லீகல் எய்டு, சொசைட்டி ஆக்டிலே ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. இதனுடைய சட்டங்கள் எல்லாம் அவ்வளவு சரியானவை அல்ல. எனவே, அந்தச் சட்டங்களையெல்லாம் மாற்றி, நல்ல முறையிலே, ஏழை மக்களுக்கு, நாம் ஒதுக்குகிற பணம், அதாவது 99 சதவிகிதம் பணமும், அந்த ஏழை மக்களுக்கே செல்கிற வகையிலே அந்தச் சட்டங்களை அரசு மாற்றியமைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே முதல் கேள்விக்கு பதில் சொல்லியிருக்கிறேன். சீரமைத்துக் கொண்டிருக்கிற நேரத்தில், உறுப்பினர் சொன்ன நல்லக் கருத்துகள் மனதில் கொண்டு ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஓ.எஸ். அமர் நாத்.

திரு. ஓ.எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இலவச சட்ட உதவி முகாம் என்பது தமிழ் நாட்டிலுள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் செயல்பட்டு வரு கிறது. இந்த இலவச சட்ட உதவி முகாமிலே வழக்கறிஞர்கள், அவர்களுடைய திறமைக்கேற்ப 3 ஆண்டுகளுக்கு மேல் பயிற்சி பெற்ற வழக்கறிஞர்கள், உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

அதற்கு மேல் தகுதியாக 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் என்று அவர்களுடைய திறமைக்குத் தகுந்தவாறு வழக்குகள் ஒதுக்கப்படுகின்றன. அதே நேரத்திலே அவர்களுக்கு, அந்த வழக்குகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை எவ்வளவு? அது எவ்வாறு ஒதுக்கப்படுகிறது, என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் எங்கும் ஏறத்தாழ 141 மையங்களில் இது பணியாற்றுகிறது. அதில் நூற்றுக் கணக்கான வழக்கறிஞர்கள் பலவகையான வழக்குகளில், பலவகையான நீதிமன்றங்களில் பணியாற்றுகிறார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால், எங்கெங்கு எந்தெந்த அளவுக்கு வழக்கறிஞர்களுக்கு எந்தெந்த வழக்குகளுக்குக் கொடுக்கப்படுகிறது என்கிற விவரத்தை மேலான கவனத்திற்குக் கொண்டு வருவேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இலவச சட்ட உதவி மையங்களில் ஏதாவது ஒரு கைதி மனு செய்வாரேயானால், அந்த நீதிபதி, அவருக்கு வழக்கறிஞரை நியமனம் செய்கிறார். அவர் வாதாடி பெயில் உத்தரவைப் பெற்றுக் கொடுத்தாலும்கூட ஜாமீன்தாருக்கு வழி இல்லாதக் காரணத்தினால் அவர் சிறையை விட்டு வெளியே வரமுடியாத சூழ்நிலை இருக்கிறது. அதை மாற்றுவதற்கு ஏதாவது அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, இன்றைக்கு நீதிமன்றங்களே விட்டால்கூட, ஜாமீன் கொடுக்க ஆள் இல்லாத காரணத்தினால், சிறையிலே அன்டர்-டிரயல் பிரிசனர்ஸ் வாடுகிறார்கள். அது குறையாக இருக்கிறது. அண்மையில் மதுரை சிறைச்சாலைக்குச் சென்று நான் நேரிலேகூட அந்தத் துயரத்தைக் கண்டேன். அதற்கு விரைவில் சட்டத்துறையைக் கலந்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எச். எம். ராஜு,

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே நமது மாநிலத்தில்தான் இலவச சட்ட ஆலோசனைக் குழுவும். அதிலுள்ள வழக்கறிஞர்களும்



சிறப்பான முறையிலே ஏழை மக்களுக்காக இலவச சட்ட உதவி செய்து வருகிறார்கள். இன்னும் இலவச சட்டக் குழு மேலும் சிறப்பாக நடைபெற ஓய்வுபெற்ற நீதிபதிகளும், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகளும் அந்தக் குழுவிலே அமர்த்தி மேலும் சிறப்புற சேவை செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னக் கருத்து மனதிலே கொள்ளப்படும். இதுவரையில் தமிழகத்தில் 1,579 கேம்ப்ஸ் இதன் மூலம் நடத்தப்படுகிறது. ஏறத்தாழ 224 கோடி ரூபாய் 'லோக் அதாலத்' என்ற மக்கள் நீதிமன்றத்தின் மூலமாக மோட்டார் ஆக்சிடென்ட் வழக்கிலே பெற்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆக, மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. மேலும் சிறப்பாக. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்கள் மனதிலே கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

முற்பகல் 9—40

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உரிமையியல் நீதிமன்றங்களில் நீதிமன்றக் கட்டணத்தைச் செலுத்த முடியாதவர்கள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். அதற்காக இன்றைய தினம் ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணத்தில் அவர்களைப் போன்றவர்களுக்கு நீதிமன்றக் கட்டணம் செலுத்துவதற்கு இதில் வழிவகை செய்யப்படுமா? ஒருவேளை அந்தத் தொகையை கட்டுவதாக இருந்தால் யாருக்கு இலவச சட்ட உதவி கிடைக்க வேண்டுமோ அவர்களுக்கு நீதிமன்றம் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க முடியுமா? அதற்கான சட்டத்தை அரசு கொண்டு வர முயலுமா என்று நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ, கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய குறிப்பு தற்போது என்னிடத்தில் இல்லை, மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளைப் பரிசீலித்து நான் மேல் நடவடிக்கை எடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92ஆம் ஆண்டிலே சட்ட உதவியால் எவ்வளவு மக்கள் பயனடைந்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரம் இல்லை, தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 611 திரு. ஆ. கு. சீனிவாசன், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

611—

பெரணமல்லூரில் புதிய வட்டாட்சியர் அலுவலகம்.

*8616— திரு. ஆ. கு. சீனிவாசன் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் பெரணமல்லூரில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்பொருள் அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. ஆ. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில் பெரணமல்லூர் தொகுதியில் பெரணமல்லூரை மையமாகக் கொண்டு வட்டாட்சியர் அலுவலகம் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் பேரில் மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறிய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்து, அதே சமயத்தில் தற்போது டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் அவர்கள்.

'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்'

என்ற வள்ளுவர் வாக்குக்கு இணங்க, இன்று மக்கள் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பெரணமல்லூர் வட்டாட்சியர் அலுவலகம் கேட்பதற்கும், 'பிறவி பெருங் கடல் நீந்துவர்' என்று சொல்வதற்கும் என்ன சம்பந்தம் ? இதில் இந்த ஆண்டு இல்லை என்றாலும், அடுத்த ஆண்டு தருவீர்களா, பரிசீலிப்பார்களா என்று கேட்பதோடு நிறுத்திக் கொண்டால் நல்லது.

திரு. ஆ. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தங்களுடைய பிறப்பிலே இறைவனுடைய திருவடிகளைப் பொருத்தி, அந்த காரணத்தினால் இன்று முடிக்கப்படாத எந்த வேலையையும்



முடித்து. மக்களுடைய நலனுக்காக சிறப்பாகச் செயல்படுகிறார் என்ற நம்பிக்கையுடன் மேலும் உடனடியாக இந்த ஆண்டு இல்லையென்றால், அடுத்த ஆண்டிற்காவது இதனை பரிசிலனையில் ஏற்றுக் கொள்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி வட்டத்தில்தான் அந்த ஊர் இருக்கிறது. ஆகவே 10 உள் வட்டங்கள் இருக்கின்றன. அதைப் பிரிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் தான் வருவாய்த் துறையினுடைய ஆணையாளரின் மூலமாக அந்த அறிக்கை கேட்கப்பட்டு இருக்கிறது. அறிக்கை வந்தவுடன் அரசு ஆய்வு செய்துவிரைவில் முடிவு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

வினா எண் 612, திரு. ஏ. டி. செல்லச்சாமி, இருக்கையில் இல்லை.

வினா எண். 613, டாக்டர் அ. செல்லக்குமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

613—

சென்னையில் கொசு ஒழிப்புத் திட்டம்.

* 2483— டாக்டர் அ. செல்லக்குமார் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) சென்னையில் கொசு ஒழிப்புத் திட்டத்திற்காக ஆண்டு தோறும் ரூபாய் 15 இலட்சம் செலவு செய்கின்ற திட்டம் இப்போதும் நடைமுறையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கொசுவினால் பரவும் நோய்களான மலேரியா, யானைக்கால், டிங்கு காய்ச்சல், மூளைக் காய்ச்சல் போன்ற நோய்களை கட்டுப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கொசு ஒழிப்பு திட்டத்திற்காக நகரம் 30 பகுதிகளாக பிரிக்கப்பட்டு வாரந்தோறும் தேங்கிய நீர் நிலைகளில் கொசுத்தடுப்பு மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது 1991-92 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 37.78 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

<u>டாக்டர் அ. செல்லக்குமார் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் கேரள மாநிலம் கொச்சின் நகரில் கொசு ஒழிப்பதற்காக ஒரு நவீன முறையில் ''பேசிலஸ் ஸ்பெரிகஸ்'' என்கின்ற ஒரு பாக்டீரியாவை, அந்தக் கழிவு நீரிலே செலுத்தி அங்கே கொசு உற்பத்தி மஸ்கிட்டோ பிரீடிங்கினை தீவிரமாகத் தடை செய்து வருகின்ற அந்த முயற்சி வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றது என்பதனை பத்திரிகை வாயிலாகப் படித்து வருகின்றோம். அது போன்ற திட்டத்தினை சென்னையிலும், சென்னையில் இருக்கின்ற கூவம் நதி, போன்ற மாம்பலம் கெனால் ஆக இருந்தாலும் சரி, 'ஓட்டேரி நல்லா' ஆக இருந்தாலும் சரி, அந்தப் பகுதிகளில் அந்த ''பேசிலஸ் ஸ்பெரிகஸ்'' என்கிற பேக்டீரியாவினை செலுத்துகின்ற திட்டம் அரசினுடை பரிசீலனையில் இருக்கின்றதா என்று அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 9-45

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி இதற்கு முன்னாலே இதை பரீட்சார்த்தமாக முயற்சி எடுத்திருக்கிறார்கள். அந்தப் புதிய கண்டுபிடிப்பு கூட தமிழகத்திலே கண்டுபிடித்த பின்னாலே தான் அவர்கள் அதைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் பத்திரிகையிலே வந்திருக்கிற அளவுக்கு அது வெற்றிகரமாக இருக்கிறதா என்பதிலே சந்தேகம் இருக்கின்ற காரணத்தால் அவர்களிடத்திலே நிலைமைகளை எழுதி நாம் கேட்டிருக்கிறோம். அது ஒரு வேளை வெற்றிகரமாக இருக்குமேயானால் அதைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். ஏற்கனவே நாம் எடுத்துக் கொண்ட முயற்சிகளின் காரணமாக, அநேகமாக இரண்டு மாதங்களுக்கு முன்னாலே இருந்த தொல்லையைவிட இப்பொழுது தொல்லை கொஞ்சம் குறைந்திருப்பதாக எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது. இருந்தாலும் இன்னும் கொஞ்சம் தீவிரமான நடவடிக்கையை எடுத்து, முழுமையாக அந்தக் கொசுத் தொல்லையைத் தீர்ப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

<u>டாக்டர் அ. செல்லக்குமார் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்பேடு பம்பிங் ஸ்டேஷன் அருகில் கழிவு நீர் அத்தனையும் கூவம் நதியில் கலக்கின்ற காரணத்தினால் அந்தக் கூவம் நதி செல்லுகின்ற பகுதி முழுவதும், அந்த ஆற்று ஓரப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் கொசுக் கடியினால் மிகவும் பாதிக்கப்படுகின்றார்கள். கடந்த காலத்தில் வீராணத் திட்டத்திற்காக வாங்கப்பட்ட அந்தக் குழாய்கள் வீணான நிலையிலே இருக்கின்றன. அதன் மூலம் அந்தக் கழிவு நீரைக் கடலிலே சென்று கலக்கின்ற விதத்திலேயும், கூவம் நதியிலே கலக்காத விதத்திலே செய்கின்ற திட்டம் பற்றி அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.



<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலே மொத்தமாக ஒரு 70 கி.மீ. நீளத்திற்கு அந்தக் கேனால் இருக்கிறது. எனவே, இந்த நதியிலே தான் எல்லாக் கழிவுநீரையும் கலந்து விடுகிறார்கள். அனுமதி வாங்கியோ, வாங்காமலோ பல நிலைகளிலே கழிவுநீரைக் கலந்து விடுகிறார்கள். எனவே தான், கொசுத் தொல்லை கூட அதிகமாக ஏற்பட்டு விடுகிறது. தண்ணீரும் தேங்கி நிற்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் அந்த இடத்திலே கூட கழிவுநீரைக் கொண்டு வந்து கலப்பதன் காரணத்தால்தான் இந்தப் பிரச்சினை ஏற்படுகிறது. இதை விரைவாகத் தீர்க்க வேண்டுமென்று நினைத்தாலும் கூட, பெரிய பெரிய திட்டங்களின் மூலமாகத்தான் செயல்படுத்த முடியுமேயொழிய, வீராணம் திட்டத்திற்காக வாங்கப்பட்ட குழாய்களைக் கொண்டுவந்து சேர்ப்பதே கடினமான காரியம் என்று உங்களுக்குத் தெரியும், எனவே, அதைக் கொண்டு வந்து போட்டு செய்வது என்பது இயலாது. எனவே, அதற்காக ஒரு பெரிய திட்டத்தைத் தீட்டுவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அத்தகைய திட்டம் வருகின்ற போது இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> டாக்டர் வெ. புருஷோத்தமன்.

<u>டாக்டர் வெ. புருஷோத்தமன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் கீழ் இதற்கு ஏதேனும் மத்திய அரசிலிருந்து நிதி வருகிறதா? இது மாநிலம் முழுவதும் விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம், யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டம் என்ற இரண்டு திட்டங்களுக்கும் மத்திய அரசிலிருந்து உதவி செய்யப்படுகிறது. மாநிலம் முழுவதும் இந்தத் திட்டத்தை விரிவாக்குவதற்காக ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இது தீவிரமாக்கப்பட வேண்டுமென்பதற்காக இப்பொழுது நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திருமதி கற்பகம் இளங்கோ.

<u>திருமதி கற்பகம் இளங்கோ :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''டிங்கி'' காய்ச்சல் என்றால் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவரமாக அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1992 ஏப்ரல் 24

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்இந்தக் கேள்விக்கு பதில் கேட்ட போது டிங்கி காய்ச்சல் என்ற பெயர் தான தெரிய வந்தது.கொசுவினால் ஏற்படுகிற காய்ச்சல். அந்த நேரத்திலே ஏதோ ஒரு பெயரை வைத்திருக்கிறார்கள். ஆனால், எதற்காக அப்படிப் பெயரை வைத்தார்கள் என்று தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் அது கொசுவினால் வருகிறது என்று மட்டும் புரிகிறது. அது இட்போது புழக்கத்திலே இல்லை என்பதும் தெரிகிறது. (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி. ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியில் இரண்டு ராட்சஸ மெஷின்கள் இருக்கின்றன. அதன் மூலம் கொசு மருந்து அடித்தால் மிகச் சுலபமாக கொசுக்கள் ஒழிந்து போகின்றன. ஆனால் அவைகளில் ஒன்று பழுதடைந்திருந்தது. அதைப் பழுதுபார்த்து விட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த மாதிரி இயந்திரங்களின் மூலம் மருந்து அடித்தாலும்கூட கொசு போவதில்லை.

முற்பகல் 9-50.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இரண்டு இயந்திரங்களும் மருந்து அடித்தால் கொஞ்சம் நன்றாக இருக்கும் என்று சொன்னார்கள். அதிலே ஒன்று பழுதடைந்திருப்பதாகச் சொன்னார்கள். அது பற்றி எனக்குத் தகவல் இல்லை. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரிடத்திலே தெரிவிக்கிறோம். இங்கே சென்னை நகரைப் பொறுத்தவரையில் பொது மக்களும் மிகப் பெரிய ஒத்துழைப்பு கொடுக்கவேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக இப்போது நாம் டி. வி. யிலே பார்த்தால் பல நேரங்களிலே பிரச்சாரம் செய்கிறார்கள். ஆனால் பலர் மாடு வளர்க்கிறார்கள். சாணம் மற்றும் அத்தனை குப்பைகளையும் கொண்டுபோய் அங்கே ட்ரெயினேஜ்—லேதான் கொட்டுகிறார்கள். எனவே தண்ணீர் போகாமல் தேங்கி நின்று ரோட்டிலே வருகிறது. எனவே பொது மக்களுடைய ஒத்துழைப்பு இல்லை என்று சொன்னால் என்ன சிரமப்பட்டாலும் நம்மால் கொசுவை ஒழித்துவிட முடியாது. எனவே பொது மக்கள் நல்ல ஒத்துழைப்பு தரவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் சட்ட மன்றத்தின் வாயிலாகக் கூட வேண்டுகோள் வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். ஈஸ்வரன்.



1992 ஏப்ரல் 24]

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற நியூ ஹாஸ்டலில் பெரிய கொசுக்களாக இருக்கின்றன. எவ்வளவு மருந்து அடித்தாலும் கூட மீண்டும் பரவிக் கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் அருகில் இருக்கின்ற கூவம் நதி இருக்கிறதே, அங்கேயிருந்து வாடை வரும்போது பெரும் துர்நாற்றம் அடிக்கிறது. அதை மாற்றியமைக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? அடுத்து இங்கே சட்ட மன்றத்தில் கூட ஏற்கெனவே இரண்டு கொசுக்கள் தொல்லை பண்ணிக் கொண்டிருப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தக் கொசுக்களை ஒழித்துவிட்டீர்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் பெரிய கொசுக்களாக இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்றத்தில் இருந்தது இரண்டே இரண்டுதான். இவர் சட்டமன்ற விடுதியில் உள்ளதைச் சொல்கிறார்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெரியாமல் சொல்லிவிட்டேன். சட்டமன்ற விடுதியிலே பெரிய கொசுவாக இருப்பதாகச் சொன்னார்கள். அதை வந்து பார்த்து எப்படி இருக்கிறது, என்ன செய்யலாம் என்பதைப் பற்றி ஆய்வு செய்து, அதைத் தடுப்பதற்கான நடவடிக்கையை நாம் மேற்கொள்ளலாம். மாண்புமிகு ஈஸ்வரன் போன்ற உறுப்பினர்கள் அதற்குப் பாதுகாப்புக் கொடுக்காமல் இருக்கவேண்டும் என்று நான் வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன். பக்கத்திலே அந்தக் கூவம் நதி போகிற காரணத்தால் சில நேரங்களிலே கொசுக்கள் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அவ்வப்போது அந்த கூவம் நதியை டிரெட்ஜ் செய்துக்கொண்டு இருக்கிறார்கள். இருந்தாலும் கூட முகத்துவாரத்தில் போய்தண்ணீர் தேங்கி நின்றுவிடுகிற காரணத்தால் தினந்தோறும் எடுத்தாலும் கூட தண்ணீர் போவதில்லை. பி. டபிள்யூ.டி. நகராட்சி மற்றும் எங்களுடைய துறை எல்லாம் சேர்ந்து செய்தாலும் கூட பிரச்சினை இருந்துகொண்டுதான் இருக்கிறது. பல இடங்களில் புல் முளைத்துவிடுகிறது. பல செடிகள் அந்த கனாலிலே முளைத்துவிடுகிற காரணத்தாலும் தண்ணீர் தேங்கி கொசுக்கள் அதிலே தங்கிவிடுகின்றன. எனவே அதை எல்லாம் எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மருந்து தொடர்ந்து அடித்துக்கொண்டிருந்தால் அந்தப் பிரச்சினை ஓரளவுக்குத் தீர்க்கப்பட்டுவிடும். சட்டமன்றத்தில் இருப்பது பற்றிச் சொன்னார்கள். அது ஏற்கெனவே முடிந்த பிரச்சினை. அதைப்பற்றிப் பேசிக் கொண்டிருப்பது சரியல்ல.

[1992 ஏப்ரல் 24

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 614 திருமதி அ. தி. சரஸ்வதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

614—

திப்புசுல்தான் சாலையை சீரமைத்தல்.

*3459— திருமதி அ. தி. சரஸ்வதி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சத்தியமங்கலத்திலிருந்து தலைமலை வழியாக தாளவாடி செல்லும் திப்புசுல்தான் சாலையை சீரமைத்தால் 27 வளைவுகளுக்குபதிலாக இரண்டே வளைவுகளில் செல்லவும், 15 கி.மீ. தூரம் குறையவும் வாய்ப்பு உள்ளதால் இத்திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது அரசு நடவடிக்கை எடுக்கும் நிலையில் இல்லை.

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது நடவடிக்கை எடுக்காமல் இருந்தாலும், அடுத்த ஆண்டிலாவது நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்டுக் கொள்கிறேன். சத்தியமங்கலத்திலிருந்து தலைமலை வழியாக தாளவாடி செல்லும் திப்புசுல்தான் சாலையைச் சீரமைக்காத காரணத்தால் விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. லாரிகளில் கரும்பை ஏற்றி வரும் போது, திருப்பத்தில் லாரி வளையும்போது சரிந்து விடுகிறது. இதனால் 'ட்ராஃபிக்' இடையூறு ஏற்படுகிறது. குறித்த நேரத்தில் பயணிகள் குறித்த இடத்திற்குச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. இந்தப் பிரச்சினை அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் பிரச்சினையாக இருக்கிறது. இதை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நன்கு அறிவார்கள். 24 மணி நேரமும் அயராது உறக்கமின்றி தமிழக மக்களுக்காகவே தமிழகத்தின் நலன் கருதி பாடுபடக் கூடிய நமது தமிழக முதல்வர் நான் உயிருள்ள வரை வணங்கும் புரட்சித் தலைவியின் ஆட்சியிலாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்ற மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.



1992 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திப்புசுல்தான் சாலை என்பது தாளவாடி வரையிலும் 64 கிலோமீட்டர் தொலைவு உள்ளது. அதிலே ஏறத்தாழ 25.40 கிலோ மீட்டர் தொலைவுக்கு மண் சாலையாக இருக்கிறது. அங்கே பாலங்கள் நிறைய கட்ட வேண்டி இருக்கிறது. அதிலே சந்தன மரங்கள் நிரம்பி இருக்கின்ற காரணத்தால் மத்திய அரசின் வனத்துறையிலே இருந்து அனுமதி பெறவேண்டி இருக்கிறது. அதற்கு ஏறத்தாழ 2 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவாகிற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் இந்த ஆண்டு அதைப் பரிசீலிக்க முடியாது என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் பொறுத்து எதிர்காலத்தில் இதைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தை எப்போது தொடங்குவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9.55

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கும் தமிழகத்தின் புரட்சித் தலைவி அவர்கள் நெடுஞ்சாலைத் துறை என்று இருந்தாலும் சரி, பல்வேறு சாலைப் பணிகள் மேம்பாடு செய்வதற்காக என்று இருந்தாலும் சரி, நிதிகளை இந்த ஆண்டு அதிகமாக ஒதுக்கி இருக்கிறார்கள், ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதை செய்ய மத்திய அரசிடம் இருந்து அனுமதி பெறவேண்டியிருக்கிறது. அது வனத்துறைக்கு சொந்தமாக இருக்கின்ற காரணத்தினால், வனத்துறையிலிருந்து மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து அதற்காக எதிர்காலத்திலே அந்த சாலையை சீர்செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 615, திரு. செ. து. வரதராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

615—

ஆட்டோ ரிக்ஷாக்களில் எலக்ட்ரானிக் மீட்டர் பொருத்துதல்.

*4482— திரு. செ. து. வரதராஜன் ;

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆட்டோ ரிக்ஷாக்களில் எலக்ட்ரானிக் மீட்டர் பொருத்தச் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1992 ஏப்ரல் 24

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆட்டோ ரிக்ஷாக்களில் எலக்ட்ரானிக் மீட்டர்கள் பொருத்துவது குறித்து, ஆரம்ப பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. து. வரதராஜன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டோ ரிக்ஷாக்களில் முதன்முதலிலே கண்டு பிடிக்கப்பட்ட மீட்டர்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. ஆட்டோ ரிக்ஷா டிரைவர்கள் மீட்டர்களை தவறான முறையிலே திருத்தம் செய்து அதிகக் கட்டணம் வசூல் செய்கின்றார்கள். உதாரணத்திற்கு ஒரு எம்.எல்.ஏ. புது ஹாஸ்டலிலிருந்து சட்ட சபைக்கு வரவேண்டும் என்றால் 10 ரூபாய் கேட்கிறார்கள். சட்டசபையிலிருந்து எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்கு போகவேண்டு மானாலும் 10 ரூபாய் கேட்கிறார்கள். அவர்களிடம் நான் 'என்ன இப்படி கேட்கிறீர்களே' என்று கேட்டால் அவர்கள் சொல்கிறார்கள்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்திலே இதெல்லாம் வேண்டாம். ** கேட்டால் யாரும் கொடுக்காமல் இல்லை. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் மீட்டருக்கு வாருங்கள்.

திரு. செ. து. வரதராஜன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேண்டாம். அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது. கேள்வி நேரத்திலே இது எல்லாம் வேண்டாம்.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே நவீன முறையிலே நவீன காலத்திலே உள்ள எலக்ட்ரானிக் மீட்டர்களை பொறுத்துவார்களேயானால் துல்லியமான கட்டணங்களை வசூலிப்பதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே அங்கே நூற்றுக்கணக்கான போலீஸ் காவலர்கள் இருக்கின்ற இடத்திலே அந்த ஆட்டோ எல்லாம் வரும்போது மீட்டர்-ல் இருக்கின்ற அந்த 'பிளாக்'-ஐக்கூட போடாமல் வருகின்றார்கள். அதை ஏன் போடாதுவருகிறார்கள் என்று கேட்பது கிடையாது. ஆகவே கட்டணத்தை ஒழுங்காக வசூலிப்பதற்கும் எலக்ட்ரானிக் மீட்டர்ஸ் பொருத்துவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று கேட்டுக் கொள்கிறேன்.



1992 ஏப்ரல் 24]

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் ; **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது என்று சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே கோவா, மிசோராம் போன்ற இடங்களிலே மட்டும்தான் எலக்ட்ரானிக் மீட்டர்கள் வைப்பதற்காக அங்கே நடவடிக்கைகள் மேற் கொண்டு வைக்கப்பட்டிருக்கின்றன. மகாராஷ்டிரத்திலே அதை பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றார்கள். நம்மு டைய அரசு அதை பரிசீலனை செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல தவறான வழியிலே செல்கின்ற வர்களைத் திருத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ள இருக் கிறோம். குறிப்பாக ஒரு ஆட்டோவிலே அதை வைக்க வேண்டும் என்று சொன்னால் ஏறத்தாழ ரூ. 3,500லிருந்து ரூ. 5,500 வரையிலே எலக்ட்ரானிக் மீட்டர் வைப்பதற்கு செலவாகிறது. ஆகவே இங்கே ஏழையெளிவர்கள் அந்த ஆட்டோவை வைத் துக்கொண்டு பயன்படுத்துகின்ற காரணத்தினாலே அதை விரைந்து செயல்படுத்துவதற்கு அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, மனைவி கணவன் பெயரைச் சொன்னால் மரி யாதைக் குறைவு என்று நினைக்கிறோம். அதை போல அரசியல் வாதிகளாக இருக்கின்ற நாங்கள் எங்களை வளர்த்த தங்கத் தலைவர்களையும், தங்கத் தலைவிகளையும் பெயர் சொல் வதற்கு நாங்கள் கூச்சப்படுகிறோம். இந்த நிலையிலே போக்கு வரத்துக் கழகங்களிலே இருக்கின்ற தந்தை பெரியார், அன்னை சத்தியா என்றும், பட்டுக்கோட்டை அழகிரி என்றும் விலா சங்கள் போடப்பட்டிருக்கின்றன. அந்த பஸ்களிலே இருக்கிறது போல, அண்ணா என்றும் எம், ஜி. ஆர். என்றும் இருப்பதை மாற்றி 'பேரறிஞர் அண்ணா' என்பது போலவும், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். என்பது போலவும் எழுதினால் அரசுக் குக் கொஞ்சம் பெயிண்ட்தான் செலவாகும். அதை செய்வார் களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிக் கேள்வி போடவும். திருபோளூர் வரதன்.

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே ஓடுகிற அந்த ஆட்டோக் களிலே ஏறுகின்றபோது காசு கூட கேட்கிறார்கள். கூப்பிட்ட இடத்திற்கு வருவதில்லை. காரணம் கேட்டால் வண்டி உரிமை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப் பெற்றன.

யாளர்களுக்கு நாங்கள் ஒரு நாளைக்கு ரூ. 80 கொடுக்கவேண்டும் என்று சொல்லி அதிகமாகக் கேட்கிறார்கள். சென்னை நகரத்திலே ஓடுகின்ற வண்டிகள் அத்தனையும் ஆட்டோ ஓட்டுகின்ற டிரைவர்களுக்கு சொந்தமாக இல்லை. அதை சொந்தமாக்க வேண்டும். போலீஸ் இலாகாவிலே இருக்கின்ற உயர் அதிகாரிகளுக்குத்தான அந்த ஆட்டோ சொந்தமாக இருக்கின்ற காரணத்தினாலே மீட்டரை அதிகமாகத் திருத்தி கூடுதலாக பெறுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அதைப் பரிசீலித்து ஆட்டோ ஓட்டுநர்களுக்கே அந்த ஆட்டோக்களை சொந்தம் ஆக்குகின்ற ஒரு நிலையை உருவாக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் போல ஆட்டோ ஓட்டுநர்களுக்கு ஆட்டோ சொந்தம் என்றெல்லாம் எங்களால் அறிவிக்க முடியாது. அடுத்த நாள் காலையிலே அவர்கள் டிக்-லே கடன் பெற்றவர்களுக்கு மட்டும்தான் ஆட்டோ சொந்தம் என்று குறிப்பிட்டார்கள். அது போல எங்களால் சொல்ல முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல இந்த அரசு கவனமாக மேற்கொண்டு 'பிரி பெய்ட் சிஸ்டம்' என்ற ஒரு சிஸ்டத்தை இங்கே ஆட்டோக்களுக்குக் கொண்டு வரலாம் என்று இருக்கிறோம். சென்ட்ரல், அதுபோல எக்மோர், அதைப்போல பஸ் ஸ்டாண்ட்களில் அதைப் போன்ற சிஸ்டங்களை அடாப்ட் செய்யும்போது கூடுதலாக அவர்களுக்காக அந்த ஆட்டோக்கள் தனியாக நிறுத்தப்படும். அப்போது மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோன்ற கூடுதலாக கொஞ்சம் கட்டணம் வசூலிக்கட்டும். மீட்டருக்கு மேலே அப்படி வசூலிக்கும்போது இதுபோன்ற தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு அரசு கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது மீட்டர்களை அடிக்கடி அட்ஜஸ்ட் செய்வதற்காக சில கருவிகளை வைத்துக் கொண்டு அப்படி செய்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் கடுமையான நடவடிக்கை மிக விரைவிலே எடுக்க வேண்டுமென்று எங்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். சட்டமன்றக் கூட்டம் முடிந்ததற்குப் பிறகு இங்கே இருக்கின்ற அனைத்துக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் இதற்கு ஆதரவு அளிப்பார்களானால் 6 மாதக் காலத்திலேயே இதுபோன்ற தவறுகள் இல்லாமல் தமிழகத்தில் உருவாக்கித் தரப்படும் என்ற உத்தரவாதத்தை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10-00.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு.





திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு வந்து இறங்குகின்ற சட்டமன்ற உறுப்பினர்களான நாங்கள் சென்னை சென்ட்ரல் ஸ்டேசனில் இருக்கிற ஆட்டோ ஓட்டுநர்களிடம் எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்கு ஓட்டுங்கப்பா என்று சொன்னால் யாருமே வருவதில்லை. அதை மீறிக் கேட்டாலும் சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற மரியாதை இல்லாமல் மிரட்டுகிறார்கள். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல சென்ட்ரலுக்கு யார் வந்து இறங்கினாலும் மீனம்பாக்கம் என்று சொன்ன உடனேயே வருகிறார்கள். எம்.எல்.ஏ. ஆஸ்டல் என்று சொன்னால் யாரும் வருவதில்லை. ஆகவே, அங்கிருந்து வருவதற்கு அந்த டிரைவர்களுக்கு அறிவுரை கூறி, எங்களை மற்றும் எங்களைப் போன்ற மற்றவர்களை அங்கிருந்து அழைத்து வருகின்ற அளவில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பிரி பெய்ட் சிஸ்டம்என்பது டாக்சிகளுக்கு, கார்களுக்கு மட்டும் தான் இருக்கிறது. ஆட்டோக்களுக்கு அது போன்ற சிஸ்டங்கள் இல்லை. ஆகவே சென்ட்ரல், எக்மோர், பஸ் ஸ்டான்ட் போன்ற இடங்களில் இது போன்ற தொல்லைகள் இருக்கின்றன என்பதற்காக 'பிரீபெய்ட் சிஸ்டம்' என்ற அடிப்படையில் தனியாக 50 ஆட்டோக்களை நிறுத்தி அதில் நீங்கள் சென்ற உடனேயே கூடுதலாக 2 ரூபாய் அல்லது 3 ரூபாய் எவ்வளவு பிக்ஸ் பண்ணுவது என்று இன்னும் நாங்கள் முடிவு செய்யவில்லை—செலுத்துவது பற்றி பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம். இந்த சட்டமன்றக் கூட்டம் முடிந்த பிறகு ஆட்டோ சங்கத்தைச் சார்ந்தவர்களையும், காவல் துறையைச் சார்ந்தவர்களையும் அழைத்து வைத்து பேசி விரைவிலே அதற்கான நடவடிக்கை மேற்கொண்டு பிறகு இது போன்ற தவறுகள் எதிர்காலத்தில் இருக்காத அளவுக்கு நம்முடைய தமிழகத்தினுடைய ஒப்பற்ற தலைவியாக புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை மேற் கொள்ளவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை இந்தத் துறை மேற் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 616. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுக்கோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

வினா எண் 539 திரு. எஸ். எம். துரை, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

539—

பெரியகோம்பை, சின்னக் கோம்பை அணைகளில் பாசன உரிமை முறைப்படுத்துதல்.

*3315— திரு. எஸ். எம். துரை:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆத்தூர் (அண்ணா மாவட்டம்) தொகுதியில் ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்தில் கோடல்வாலி கிராமத்தில் பெரிய கோம்பை மற்றும் சின்னக் கோம்பை அணைத் திட்டங்களில் உள்ள பழைய ஆயக்கட்டுதாரர்களுக்கும் புதிய ஆயக்கட்டுதாரர்களுக்கும் பாசன உரிமை முறைப்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இவ்விரு திட்டங்களும் கடைமடை ஆயக்கட்டுதாரர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஏரிகளிலிருந்து வழிந்துபோகும் உபரித் தண்ணீர் மட்டுமே கீழே உள்ள கண்மாய்களுக்குச் செல்லும். எனவே பாசன விதிகளை முறைப்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

(ஆ) இந்த கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ்.எம். துரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டம், ஆத்தூர் தொகுதியிலுள்ள ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்தில் கோடல்வாலி கிராமத்தில் பெரிய கோம்பை, மற்றும் சின்னக் கோம்பை ஆகிய அணைக்கட்டுகளின் பழைய ஆயக்கட்டு பகுதிகள் 225 ஏக்கர் ஆகும். புதிய ஆயக்கட்டுப் பகுதி 150 ஏக்கர் ஆகும். தற்போது உபரி நீர் வருகின்ற சூழ்நிலையில் தான் புதிய ஆயக்கட்டு பகுதி விவசாயிகளுக்கு பயன்பட வாய்ப்பு உள்ளது. கட்டசின்மை நாயக்கன்பட்டி, இராமநாதபுரம், தத்தம்பட்டி, புதுப்பட்டி, சத்தம்ம நாயக்கன்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ளவர்களுக்கு பாசன வசதி கிடைக்காத நிலையில் அவர்கள் வாழ்வு இழந்து தவிக்கின்ற சூழ்நிலையில் நம்முடைய ஏழையெளிய மக்களின் நம்பிக்கை நட்சத்திர துருவமாக திகழும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் புனித ஆட்சியில் அம்மக்களுக்கு பாசன வசதி கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகோம்பை, சின்னக் கோம்பை இரண்டு திட்டங்களும் கடைமடையில் உள்ள ஆயக்கட்டுதாரர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. நான் ஏற்கெனவே கூறியதுபோல உபரி தண்ணீர் கீழே உள்ள கண்மாய்களுக்கு செல்லலாம் என்று இருக்கிறது. ஆகவே, இந்த ஏரியை ஆண்டுக்கு இரண்டு முறை நிரப்புகின்ற திட்டம் இருக்கின்ற காரணத்தால் கீழே இருக்கிற கண்மாய்களுக்கு உபரி தண்ணீரைத்தான் விட முடியும். ஆகவே, ஏற்கெனவே இருக்கின்ற அந்த அணைக்கட்டு பகுதியில் உள்ள பாசன பகுதிகள் பாதிக்காத அளவுக்கு கீழே உள்ள கண்மாய்களுக்கு உபரி தண்ணீரைத்தான விட இந்த அரசினுடைய கவனத்திற்கு பிரச்சினை வருகின்ற போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டுவருவார்களானால் அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. எஸ்.எம். துரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைமடை பகுதி விவசாயிகள் நலனை கருத்தில் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுவதாக அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். நீர்வரத்து அதிகமாக வரும் நேரங்களில் இந்த முறை கடைப்பிடிக்கப்படுகிறது. ஆனால் குறைவாக வரும் நேரத்தில் பழைய ஆயக்கட்டுத்தாரர்கள் பயன்பெற தமிழக மக்களின் இதயத்தில் இடம் பெற்றிருக்கிற புரட்சித் தலைவி அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்து, நீர் விடும் இம்முறையை மறுபரிசீலனை செய்து முறைப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயக்கட்டு நிலங்களைப் பொறுத்த வரையில் நாம் பொதுவாக தண்ணீர் விடுகிற காலங்களில் ஏற்கெனவே உள்ள பழைய ஆயக்கட்டுதாரர்களுக்கு பாசனத்தைக் கொடுத்து விட்டு, பின்னாலேதான் மற்ற ஆயக்கட்டுதாரர்களுக்கு தண்ணீர் விட முடியும். ஏனென்றால் ஏற்கெனவே அவர்களுக்கு உரிமை இருப்பதால் பிரச்சினையை உண்டுபண்ணுவார்கள். ஆகவே அவர்களுடைய பாசன பரப்புக்குப் பாதிப்பு இல்லாத வகையில் தான் விடமுடியும். ஆகவே எக்ஸ்டென்ஷன் பகுதி என்று சொல்கிற நீட்டிப்புப் பகுதிகளுக்கு, ஏற்கெனவே உள்ளவர்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில்தான் விடமுடியும். ஆகவே எக்சிஸ்டிங் ஆயக்கட்டுதாரர்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில். தண்ணீர் அதிகம் வரும் காலங்களில் பிரச்சினை இல்லாமல் இருப்பதால். குறைவாக வரும் காலங்களில் தான் இந்தப் பிரச்சினை எழுகிறது, ஆகவேதான் குறைவாக நீர் வரும் காலங்களில் ஏற்கெனவே இருக்கிற ஆயக்கட்டுதாரர்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் அவர்களுக்கு போதுமான அளவுக்குப் போக எஞ்சியிருக்குமானால் அந்த கீழே இருக்கிற உபரி நிலங்களுக்கு தரமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண், 540. திரு. இரா. நடேசன். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

540—

**கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயத்திற்கு விடப்படும் தண்ணீரைப் பயனபடுத்தி மினசாரம் தயாரிக்க திட்டம்,**

*4927— திரு. இரா. நடேசன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் அணைகளில் இருந்து விடப்படும் தண்ணீரைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில். திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவரவர்களே.

(அ) மற்றும் (ஆ) ஆம், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள. பெருஞ்சாணி மற்றும் பேச்சிப்பாறை நீர்த்தேக்கங்களிலிருந்து பாசனத்திற்காக விடப்படும் நீரைப்பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் திட்டங்களுக்கான ஆய்வுகள் முடிக்கப்பெற்று விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது,

திரு, இரா, நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மினசாரத்தின் தேவை அதிகமாக இருப்பதன் காரணமாக பல வருடங்களாக இத்திட்டத்தைச் செயல்படுத்தும் நடவடிக்கை நடந்துகொண்டு வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மிகச் சிறப்பாகக் கூறினார்கள். இதை கூடிய சீக்கிரமாக முடித்து மின் பற்றாக்குறையைப் போக்குகிற அளவில் திட்டத்தை விரைவில் முடிக்க அமைச்சர் முன்வருவாரா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பெருஞ்சாணி அணை புனல் மினதிட்டம் என்பது உலக வங்கி ஒப்புதலோடு நிறைவேற்றப் படுவதற்காக நடவடிக்கையில் இருந்து வருகிறது. இதன் மூலம் 4.7 மில்லியன் யூனிட் ஆக இருக்கும். அதனுடைய திட்ட மதிப்பீடு ஏறத்தாழ இரண்டரைக்கோடி ரூபாய். இதற்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு. உலக வங்கியின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல பேச்சிப்பாறை அணைத்



திட்டம் ரூ, 2 கோடியே 89 லட்சத்துக்கு தயாரிக்கப்பட்டு 2×650 கிலோவாட் உள்ள மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டத்தையும் உருவாக்கியிருக்கிறோம், இதன் மூலம் 2.9 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தியாகும், இந்த இரண்டு திட்டங்களுக்கும் உலக வங்கியின் நிதி கோரப்பட்டுள்ளது, திட்ட முன்வடிவுகள் தயாரிக்கப்பட்டு ஆயத்த நிலையில் இருக்கின்றன, நிதியுதவி கிடைத்தவுடன் உடனடியாக இத்திட்டம் துவங்கப்படும்.

திரு. இரா. நடேசன் : பேரவைத் தலைவர் அவர்களே. நிதி உதவி கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டால் மாற்று வழியில் இத்திட்டத்தை நிறைவேற்ற முடியுமா? அதிக அளவுக்கு மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. எனவே, நிதியுதவிக்குக் காத்திராமல் நமது புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியிலே அடுத்து வருகின்ற ஆண்டிலாவது இத்திட்டத்தைத் துவங்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, எஸ், கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் உதவி பெறும் திட்டத்தின் கீழ் இது சேர்க்கப்பட்டிருக்கிறது, ஆகவே நிதி பெறுவதில் எந்தவிதமான பிரச்சினையும் இருக்காது, உலக வங்கி நிதி கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதால் வேறொரு திட்டத்தைத் தயார் செய்து அதன் மூலமாக நிறைவேற்றப்படுவது இயலாத காரியம், ஆகவே இதையே கூடிய விரைவில் முடிக்க அரசு முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண், 541. திரு. எம். தங்கவேல் இருக்கையில் இல்லை.

வினா எண், 617. டாக்டர் ஜெய்சன் ஜேக்கப். திரு, வி,கே. சின்னசாமி. திரு, மா, சுந்தரதாஸ். திரு, ஆர், தங்கராஜ், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

617—

**கூட்டுறவுத்துறை இளநிலை ஆய்வாளர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு,**

*819— டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:

திரு. வி. கே, சின்னசாமி ;

திரு, மா, சுந்தரதாஸ் :

திரு. ஆர், தங்கராஜ்:

[1992 ஏப்ரல் 24

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

6—12—1985 முதல் கூட்டுறவுத் துறையில் இளநிலை ஆய்வாளர் மற்றும் தனி அலுவலராக நியமிக்கப் பெற்று பணி நீக்கம் செய்யப்பட்ட 1,000 கூட்டுறவுத் துறை இளநிலை ஆய்வாளர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987-ல் பணியிடம் இல்லாத காரணத்தாலும். தேர்தல் நடந்து முடிந்து நிர்வாகக் குழுக்கள் பதவி ஏற்றுக் கொண்டபோதும் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள கூட்டுறவு இளநிலை ஆய்வாளர்களுக்குப் பணியிடங்கள் அளிப்பதற்குத் தேவையான பணியிடங்களைத் தோற்றுவித்து. 22-1—92-ல் தக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு இப்போது அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த வினாவை நான் கேட்டபோது. அவர்கள் பணியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார்கள், இந்த மன்றத்திலே வினா வருகிறபோது அவர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள், ஆகவே இதில் மேற்கொண்டு பேசுவதற்கு ஏதும் இல்லை என்று கூறி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுவாக இதுபோன்ற நிலைமை வருவதற்குக் காரணம். பல்வேறு வினாக்கள், சென்ற கூட்டத் தொடருக்காகக் கொடுக்கப்பட்ட வினாக்களாகும். அவற்றில் பலவற்றுக்கு இன்னும் கூட துறைகளிலேயிருந்து பேரவைக்குச் சரியான பதில்கள் வராமல் இருக்கின்றன, இது போன்ற நிலைமையைத் தவிர்ப்பதற்காக இது வரையிலும் கொடுக்கப்பட்டிருக்கிற எல்லாக் கேள்விகளையும் வருகிற 28 ஆம் தேதி வரை உடுக்குறியிட்ட வினாக்களாக அனுமதிக்கப்பட்டதைத் தவிர, மீதம் இருக்கிற அனைத்து வினாக்களும் 28ஆம் தேதி உடுக்குறியில்லாத வினாக்களாகப் பேரவையில் வைத்து அதற்குரிய விடைகளை அளித்துவிட்டு, வர இருக்கின்ற கூட்டத் தொடர்களுக்கு உறுப்பினர்களிடமிருந்து புதிய கேள்விகளைப் பெறுவதாக இருக்கிறோம், எனவே மாண்புமிகு அமைச்சர்கள் அவர்கள் துறைகளிலேயிருந்து வர வேண்டிய பதில்கள் ஏதேனும் இருக்குமானால் 28 ஆம் தேதிக்குள் சட்டமன்றப் பேரவைத் துறைக்குத் தெரிவிக்குமாறு அவரவர்களுடைய துறைகளுக்குத் தெரிவிக்கக் கேட்டுக் கொள்கிறேன்,

**எஞ்சியிருக்கிற எல்லாக் கேள்விகளையும் உடுக்குறியில்லாத வினாக்களாக்கி அவைகளைப் பேரவையில் வைக்க இருக்கிறோம்,**



1992 ஏப்ரல் 24]

முற்பகல் 10,10

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விகளை மாண்புமிகு உறுப்பினர்கள் எப்போது கேட்டாலும் நாங்கள் பதில் சொல்கிற போது எந்த அளவுக்கு அதில் முன்னேற்றம் இருக்கிறது என்று ஆராய்ந்துதான் பதில் சொல்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்காக நான் சொல்லவில்லை. இன்னும் இதுபோன்ற பல முடிந்த பிரச்சினைகளை வினாக்களாக வைத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது, எனவே இப்போது துறைகளுக்கு அனுப்பப்பட்டிருக்கக்கூடிய எல்லா வினாக்களுக்கும் வருகிற 28 ஆம் தேதிக்குள் பதில் கொடுத்து விடுவீர்களேயானால் அவற்றை உடுக்குறியிடாத வினாக்களாகப் பேரவையில் வைத்து விடுகிறோம், அதன் பின்னால் வர இருக்கிற காலங்களில் வேறு வேறு புதிய வினாக்கள் வருகிற போது அன்றாட நடைமுறைகளில் இருக்கிற பிரச்சினைகள் கேள்விகளாக வரும், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: நம்முடைய லோக் சபாவிலே கடைப்பிடிக்கப்படுகிற முறை அந்த கூட்டத் தொடருக்குக் கேட்கப்படுகிற கேள்விகள் அந்தந்த கூட்டத் தொடரிலேயே முடிந்துவிடும். புதிய கூட்டத் தொடருக்கு புதிய கேள்விகளைத் தான் எடுக்கிறார்கள், அதையே நாமும் கடைப்பிடித்தால் நன்றாக இருக்கும்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நானும் சொல்கிறேன், இந்தக் கூட்டத் தொடருக்குக் கொடுக்கப்படுகிற வினாக்களுக்கு இந்தக் கூட்டத் தொடரின் இறுதி நாளுக்குள்ளாவது நீங்கள் பதில்கள் கொடுத்து விட்டால், வரவிருக்கிற கூட்டத் தொடர்களுக்கு அந்தந்தக் கூட்டத் தொடர்களுக்குரிய கேள்விகள் அனுமதிக்கப்படும். (குறுக்கீடு) வருகிற 28 ஆம் தேதிக்குள் துறையில் இருக்கிற எல்லாக் கேள்விகளுக்கும் விடை அளிக்கவேண்டும் என்ற வகையில் பேரவையில் வைக்க இருக்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் எழுப்புகின்ற வினாக்களுக்கு 42 நாட்களுக்குள்ளாக அந்தந்தத் துறைகள் கட்டாயம் பதிலை அனுப்ப வேண்டுமென்ற முறை இருக்கிறது, ஆகவே கேள்விக்கும், இந்த அவைக்கும் மதிப்புத் தருகின்ற வகையில் ஒவ்வொரு துறையினரும் அந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகளும் அதிக அக்கறை எடுத்துக் கொண்டு கேள்விகளுக்கான பதிலை அவ்வப்போது அனுப்பிவிட்

டால் உடனுக்குடன் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கவும் அது பற்றிய விளக்கங்கள் தரவும் வாயப்பு ஏற்படும். அமைச்சர்களைப் பொறுத்தவரையில் அதை வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அதிகாரிகள் அதில் அதிக அக்கறையும் ஆர்வமும் காட்டவேண்டுமென்பதை இந்த மன்றத்தின் மூலமாகத் தெரிவித்து அதற்கு நடவடிக்கை எடுக்க தாங்கள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெரிவித்ததைப் போல, 42 நாட்களுக்குள் கொடுக்க வேண்டும், கொடுக்காமல் இருக்கிறார்கள் என்றால் அதற்குரிய அதிகாரிகள் யாரேனும் இருந்தால் கூட, கொடுக்க வேண்டுமென்று அவை முன்னவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மேற்கொண்டு இதில் பிரச்சினை வேண்டாம். (குறுக்கீடு) உட்காருங்கள்,

பேரவை முன்னவர் அதைத்தான் சொல்லியிருக்கிறார், அதாவது இப்போது துறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள எல்லா வினாக்களையும் 28 ஆம் தேதி வரை உடுக்குறியிட்ட வினாக்களாக கேள்வி நேரத்தில் எடுத்துக் கொள்ளப்படுகிற கேள்விகள் தவிர, எஞ்சியிருக்கிற எல்லா கேள்விகளும் உடுக்குறியிடாத வினாக்களாக 28 ஆம் தேதி பேரவையில் வைக்கப்படும், அதற்குரிய பதில்களை மாண்புமிகு அமைச்சர்கள் துறைகளிலிருந்து பெற்று. 28 ஆம் தேதிக்குள் பேரவைக்கு வைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : நான்கு நாள், ஐந்து நாளைக்கு முன்னாலே கொடுத்தது எப்படி 28 ஆம் தேதிக்குள் வரும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை, 42 நாளைக்கு முன்பு கொடுக்கப்பட்டதுதான்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அப்படியென்றால் 42 நாளைக்கு முன்பு கொடுக்கப்பட்டது வர வேண்டும் என்று சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அந்த விதியில் வரும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஒரே மாதிரியான கேள்வி, ஒரே தொடரிலே ஒரே விதமான கேள்வியே இரண்டு, மூன்று முறை வந்துவிடுகிறது. எனவே அதுவும் கூடத் தேவையில்லை,





மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. அதையெல்லாம் நாங்கள் ஒன்றாக்கிவிடுவோம். நான்கைந்து உறுப்பினர்கள் கேட்டிருப்பார்களேயானால் அதை ஒரே கேள்வியாக ஆக்கிவிடுவோம்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : கேள்விக்கு நாங்கள் சட்டமன்றத்திலே பதில் சொன்ன பின்னாலேயும் மீண்டும் ஒரு கேள்வி அதே போல கேள்வி, அதே பொருள் சம்பந்தப்பட்ட கேள்வி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேறுவிதமாக வருகிறபோதுதான் அனுமதிப்போம். அதே மாதிரி கேள்வி வருகிறபோது நாங்களே அனுமதிப்பதில்லை. வினா எண். 168. (குறுக்கீடுகள்) இதிலே வேண்டாம். இதிலே வேண்டாம். கேள்வி நேரம் முடிந்த பிறகு வேண்டுமானால் சொல்லுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பெல்லாம் கேள்வி போட்டால் அதற்கான கம்யூனிகேஷன் வரும். Your question has been sent to the concerned Minister and you will get the reply என்று உறுப்பினர்களுக்கு கம்யூனிகேஷன் வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போதும்தான் அனுப்புகிறோம்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : வருவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வராமல் இருந்தால் நான் அதைப்பற்றிப் பார்க்கிறேன். வினா எண் 618.

திரு. மா. சுந்தரதாஸ் : வினா எண். 617-ல் ஒரு கேள்வி கேட்கவேண்டும். அதில் என்னுடைய பெயரும் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஆயிரம் பேர்களையும் நிரந்தரம் ஆக்கியிருப்பதாக சொன்னதற்கு எங்களுடைய கட்சியின் சார்பாக பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். 6—12—1985-இல் இருந்து அவர்களுடைய பணி நிரந்தரம் ஆக்கப்பட்டிருக்கிறதா, இல்லை இப்போது ஆணை பிறப்பிக்கப் பட்ட 1992 சனவரி மாதம் 22-ஆம் தேதியில் இருந்து நிரந்தரம் ஆக்கப் பட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே இரண்டு மூன்று பகுதிகளாகப் பிரித்து, மொத்தம் 1,235 பேர் தேர்வாணை ஆணையத்தால்,

தேர்வு நடத்தப்பட்டு, நமக்கு பட்டியல் அனுப்பப்பட்டது. அதிலே ஏற்கெனவே கூட்டுறவுத் தணிக்கைத் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் இளநிலை ஆய்வாளர்கள் 355 பேர் இருக்கிறார்கள். பால் கூட்டுறவு தணிக்கைத் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற இளநிலை ஆய்வாளர்கள் 35 பேர் இருக்கிறார்கள். தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தின் ஆணையின்படி அவர்கள் அட்மினிஸ்ட்ரேட்டீவ் டிரிபியூனல் சென்று ஆணையை பெற்றவர்கள்—ஏற்கெனவே 152 பேருக்கு வேலை கொடுத்து விட்டோம். மீதமுள்ள 693 பேருக்கு இந்த சனவரி மாதத்தில் நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஒப்புதலோடு 693 பேருக்கும், அவ்வளவு பேருக்கும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ஆர். தங்கராஜ் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தபோது அங்கே கூட்டுறவுத் துறையிலே இளநிலை ஆய்வாளர்களாகவும், தனி அலுவலர்களாகவும் இருந்த ஆயிரம் நபர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தார்கள். அவர்களுக்கு மீண்டும் பணிகொடுக்க வாய்ப்பு அளித்தமைக்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக மாண்புமிகுகூட்டுறவுத்துறைஅமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண் 618, திருமதி வி. ஜி. மணிமேகலை. மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

618—

<u>ஒருங்கிணைந்த எண்ணெய் வித்துக்கள் மேம்பாட்டுத் திட்டம்.</u>

<u>*3895— திருமதி வி. ஜி. மணிமேகலை :</u>

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதிய ஒருங்கிணைந்த எண்ணெய் வித்துக்கள் மேம்பாட்டுத் திட்டம் அருப்புக்கோட்டைத் தொகுதிக்கும் விரிவுபடுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

<u>மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னால் நடைபெற்ற வேளாண்மை மானியக் கோரிக்கையில் பதில் அளிக்கும்போது தமிழகத்தில் நீலகிரி மாவட்டம், கன்னியாகுமரி



மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் ஒருங்கிணைந்த எண்ணெய் வித்து மேம்பாட்டுத் திட்டம் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறேன்.

<u>திருமதி வி. ஜி. மணிமேகலை :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் எல்லா மாவட்டங்களிலும் இந்த ஒருங்கிணைந்த எண்ணெய் வித்து மேம்பாட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள், குறிப்பாக காமராஜர் மாவட்டத்திலே என்னுடைய தொகுதியான அருப்புக்கோட்டை மிகவும் வறட்சியான தொகுதி, அங்கே உள்ள மக்கள் அதிகமான படிப்பறிவு இல்லாத நிலையிலே எண்ணெய் வித்து மேம்பாட்டுத் திட்டத்தை அங்கே கொண்டு வந்தால் நலமாக இருக்கும். சூரியகாந்தி, ஆமணக்கு போன்ற எண்ணெய் வித்துக்கள் பயிரிட அதிகமான தண்ணீர் தேவையில்லை. ஆகவே, என்னுடைய தொகுதியான அருப்புக்கோட்டையில் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவார்களா என்றுதான் பேரவைத் தலைவர் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்,

<u>மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்தில் நிலக்கடலை 12,000 எக்டேரிலும், எள் மற்றும் சூரியகாந்தி எண்ணெய் வித்துக்கள் எட்டாயிரம் எக்டேரிலும் பயிரிடப்பட்டு வருகின்றன, காமராஜர் மாவட்டத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டுக்கு இந்த ஒருங்கிணைந்த எண்ணெய் வித்துக்கள் மேம்பாட்டுத் திட்டத்துற்கு 9.714 இலட்சத்தை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள், அதிலும் குறிப்பாக அருப்புக்கோட்டை தொகுதிக்கு மட்டும் மூன்று இலட்சத்தை புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்,

முற்பகல் 10-20.

<u>திருமதி வி. ஜி. மணிமேகலை :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்னுடைய அருப்புக்கோட்டை தொகுதிக்கு இந்த எண்ணெய்வித்து மேம்பாட்டுத் திட்டத்திலே 3 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்ததற்கு என் தொகுதி மக்களின் சார்பாக எனது நன்றியை அவர்களுடைய பொற்பாதங்களில் காணிக்கையாக்குகின்றேன்,

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண், 619. திரு. வி. கே. இலட்சுமணன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

619—

<u>மாற்றளிப்பு ஆவணம் மூலமாகப் பதிவு செய்யப்படும் மனைகளுக்கு முத்திரைக் கட்டணம் ரத்து செய்ய நடவடிக்கை.</u>

[1992 ஏப்ரல் 24

*3444—திரு. வி. கே. லட்சுமணன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வீடுகட்டும் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு மாற்றளிப்பு ஆவணம் (Conveyance deed) மூலமாகப் பதிவு செய்யப்படும் மனைகளுக்கு முத்திரைக் கட்டணம் (Stamp duty) வசூலிக்கும் முறையை ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வீட்டு மனையோ அல்லது வீட்டுடன் கூடிய மனையோ உறுப்பினர்களுக்கு சங்கம் ஒதுக்கி 5 ஆண்டுகள் கடந்துவிட்டால் விற்பனை ஒப்பாவணம் (Sale deed) வழங்கும்போது Stamp duty-க்கு முத்திரைக் கட்டணத்திலிருந்து விலககளிக்கப்பட்டுள்ளது. அதே போல் சங்கத்தில் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக உறுப்பினராக உள்ளவர்களிடமிருந்து சொத்தினைச் சங்கத்திற்கு வாங்கும்போதும், Sale deed-க்கு (Stamp duty exemption) முத்திரைக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது,

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சென்ற சில மாதங்கள் வரை கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திலே இருக்கும் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய சங்கத்தின் மூலமாக நிலம் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றபோது அந்த நிலத்திற்கு முத்திரைத்தாள் தீர்வையிலிருந்து முழுவதுமாக விலக்கு இருந்தது. ஆகையினால் தான் பல பேர் அந்த சலுகைக்காக கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திலே உறுப்பினர்களாக ஆனார்கள், ஆனால், இப்பொழுது எல்லா கிரயப் பத்திரங்களைப் போலவே இதற்கும் முழுவதுமாக முத்திரைத் தாள் தீர்வை கட்ட வேண்டுமென்று இருப்பதனாலே பல பேர் இந்த கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திலே உறுப்பினர்களாக ஆவதற்குக் கூட தயங்குகிறார்கள் என்பதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. டி. எம், செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1966ஆம் ஆண்டினுடைய அரசாணை எண். 2179-ன்படி 5 ஆண்டுகள் வரை உறுப்பினர்களாக இருந்தால் முத்திரைத்தாள் கட்டணத்திலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட்டு வந்தது. இது அரசுக்கு பெருத்த வருமான இழப்பு ஏற்படுகின்ற காரணத்தினால், 21-8-1972-ல் வருவாய்த்துறை மூலம் வெளியிடப்பட்டுள்ள அரசாணையின்படி



1992 ஏப்ரல் 24]

விதி விலக்கு அளிக்கத் தேவையில்லை என்று ஒரு அரசாணையும் இருக்கின்றது. அந்த அடிப்படையில் இது முறையாக ஆய்வு செய்யப்பட்டு, எந்த நிலை சலுகையை நீட்டிக்கக் கருதியும், எந்த நிலை சிறப்பாக இருக்கும் என்றும் அரசு தீவிரமாக ஆய்வு செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 620, திரு. ஆர். சிங்காரம். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்,

620—

சத்துணவுக் கூடத்திற்கு கட்டிடம் கட்டுதல்.

*2999—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சி, ஆண்டிக்காடு சத்துணவுக்கூடத்திற்கும் கால்வாடி கூடத்திற்கும் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்கு மிக்க நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, அது எப்போது கட்டி முடிக்கப்படும். 1992–93-க்குள் முடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒரு கட்டிடம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு அக்கட்டிடம் 70 ஆயிரம் மதிப்பீட்டுக்குள் ஆவுடையாளி கோட்டை மையத்திற்கு கட்டிடம் கட்டிக் கொடுக்க முன்மொழிவு திட்ட அலுவலர் சேதுபாவாசத்திரம் கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 1991-92 மற்றும் 1992-93 ஆம் ஆண்டிற்கு சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். குழந்தைகள் மையம் சத்துணவுக் கூடங்கள் முறையே 1991–92-ல் 9-ம், 1992–93-ல் 6-ம் ஆக கூடுதல் 15 கட்டுவதற்கு அரசின் நிதி ஒதுக்கீடுக்கு

[1992 ஏப்ரல் 24

உட்பட்டு சம்பந்தபட்ட சட்டமன்ற உறுப்பினருடன் கலந்தாலோசித்து முடிவு செய்து திட்ட அலுவலர் மூலம் முன் மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் முன்னுரிமைப் படி ஊமத்தநாடு ஊராட்சி, ஆவடிக்காடு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். குழந்தைகள் சத்துணவுக் கூடத்திற்கு கொட்டகை, நிரந்தரக் கட்டிடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காக மீண்டும் நன்றியைத் தெரிவித்து, விரைவாக கட்டிக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் பதில் அளித்ததற்காக மீண்டும் நன்றியைத் தெரிவித்து, இப்போது எல்லாம் அந்த சத்துணவுக் கூடங்களும் பால்வாடி கட்டிடங்களும் கட்டுவதற்கு டார்ஜட் கொஞ்சம் குறைந்து இருக்கிறது. அதை சற்று அதிகரிக்க — அதாவது ஒரு ஒன்றியத்திற்கு 3 அல்லது 4 கட்டிடங்கள், சத்துணவுக் கூடங்கள் என்று இருக்கிறது. அதனை சற்று அதிகரிக்க அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அடுத்த ஆண்டு பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 621, திரு ச. புரட்சிமணி, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

621—

சத்துணவுக் கட்டிடம் கட்டுதல்.

*5405—திரு. ச. புரட்சிமணி :

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மங்களூர் தொகுதி, நாவலூர் கிராமத்தில் சத்துணவுப் பள்ளியும், அதற்கு சத்துணவுக் கட்டிடமும் கட்ட அரசு முன் வருமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்த கிராமத்தில் குழந்தைகள் நல மையம் அமைக்கவும், அதற்குரிய கட்டிடம் கட்டவும், செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.



1992 ஏப்ரல் 24]

திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இந்த கிராமம் மிகச் சிறிய கிராமம் ஆகும். இந்த கிராமத்தில் பின்தங்கிய மக்கள் மிக அதிகமாக வசித்து வருகிறார்கள். அதனால் இது அடுத்த ஆண்டிலாவது அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிராமத்திற்கு அரை கிலோ மீட்டர் தூரத்திலேயே ஒரு குழந்தைகள் நல மையம் இருக்கிறது. ஒரு பள்ளி மையமும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, பின்தங்கிய மக்களாக இருந்தாலும் அங்கே எவ்வளவு குழந்தைகள் இருக்கிறார்கள் என்ற அடிப்படையில் தான் அந்த மையம் செயல்படுவதற்கு, புதிய மையத்தை தொடங்குவதற்கு முடியும். அந்த அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர் அதைப்பற்றி எடுத்துக் கொடுப்பார் என்று சொன்னால் பின்னர் அது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 622. திரு. எஸ். ஆசைமணி. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

622—

கால்நடை மருந்தகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டுதல்.

*1555—திரு. எஸ். ஆசைமணி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தஞ்சாவூர் மாவட்டம், ஏனங்குடியில் இயங்கிவரும் கால்நடை மருந்தகத்திற்கு ஆதிதிராவிடர் காலனிக்கு அருகில் உள்ள இடத்தில் சொந்தக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 15 ஆண்டுகாலமாக வாடகைக் கட்டிடத்தில் பஞ்சாயத்து அலுவலகத்தில் இயங்கி வருகிற இந்த கால்நடை மருந்தகத்திற்கு அங்கே இடம் இருக்கிற காரணத்தால் ஸ்பெஷல் காம்போனன்ட் ஸ்கீமில், ஆதிதிராவிடர் நலத்துறையின்கீழ் கட்டிடம் கட்டி கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏனங்குடி கிராமத்திற்கு கால்நடை மருந்தக கட்டிடம் கட்டுவது பற்றி அரசுக்கு தீர்மானம் ஒன்றியத்தின் மூலமாக வரப்பெற்றால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் மூன்றாண்டுகளுக்கு முன்னால் திருமருகல் ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக தீர்மானம் போட்டு அது அரசுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக அறிகிறேன். எனவே, அந்தத் தீர்மானத்தை வாங்கி சிறப்புத் திட்டத்தின் கீழ் கட்டித் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மருந்தகம் கட்டுவதற்கு ஒரு ஏக்கர் நிலம் இனாமாக தரவேண்டும். அதைப் போல மருந்தகம் கட்டுவதற்கு தொகையை ஊராட்சி ஒன்றியம் ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதுபோன்ற கண்டிஷன்கள் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு கோப்புகள் இன்னும் வரவில்லை. வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 623. டாக்டர் எஸ். சுந்தரராஜ். மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

623—

## ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்டுதல்.

*1653—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

இராமநாதபுரம் மாவட்டம், சத்திரக்குடியில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

இராமநாதபுரம் மாவட்டம், சத்திரக்குடியில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்ட செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. நிதி நிலைக்கேற்ப எதிர் வரும் ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்திரக்குடியில் வாடகை கட்டிடம் கிடைக்காததால் சத்திரக்குடியிலிருந்து மூன்று கிலோ மீட்டர்





அப்பாலுள்ள சின்ன இளம்பாக்கம் கிராமத்தில் மாணவர்களுக்கு விடுதி கையகப்படுத்தப்பட்டுள்ளது. அங்கேயிருந்து மாணவர்கள் பள்ளிக்கு செல்வதற்கு கிட்டத்தட்ட 3 கிலோ மீட்டர் இருப்பதால் நகரப் பேருந்துகளில் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மதியம் விடுதிக்கு வந்து சாப்பிட்டு செல்வதற்கு அவர்களுக்கு கஷ்டமாக இருப்பதால், காலையிலேயே சமைத்து எடுத்துச் செல்வதற்கு பாத்திரங்கள் முதற்கொண்டு எதுவும் இல்லையென்று ஆதிதிராவிடர் நலத்துறை மாவட்ட அதிகாரி அவர்கள் சொல்கிறார். ஆகவே, பல்வேறு கஷ்டங்கள் மாணவர்களுக்கு இருப்பதால், அந்த விடுதி கட்டிடம் சீக்கிரம் கட்டுவதற்கு அரசு முன்னுரிமை கொடுத்து கட்டித் தருவதற்கு நடவடிக்கையெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்வரும் ஆண்டுகளில் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அளித்து செயல்படுத்தப்படும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்திரக்குடியில் கட்டிடம் கட்டுவதற்கு சர்வே நம்பர் 64/11/பி-போவாளூர் கிராமத்தில் 1-10-1991 தேதியிட்டு தாட்கோ அலுவலகத்திற்கு டி.ஓ. நம்பர் கே4/57600-ல் அனுப்பப்பட்டு, இன்னும் தாட்கோ அலுவலகத்தில் நடவடிக்கையெடுக்கப்படாமல் இருக்கிறது, ஆகவே, உடனடியாக நடவடிக்கையெடுப்பதற்கு அந்த தாட்கோ அலுவலகத்திற்கு அமைச்சர் அவர்கள் அறிவுரை கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்,

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண். 624. திரு. எஸ்.ஜி. வேணுகோபால். மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

624—

## ஆடு வளர்ப்பு மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரி.

*8870—திரு. என்.ஜி. வேணுகோபால் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) முதுநிலை பட்டமேற்படிப்பு பயில ஆடு வளர்ப்பு மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரி (Post-Graduate course for Sheep Development and Research College) இராணிப்பேட்டை முகுந்தராயபுரத்தில் துவக்கப்பட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1992 ஏப்ரல் 24

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. என். ஜி. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "European Economic Project" என்ற அமைப்பின்கீழ் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த முகுந்த ராயபுரத்தில் ஆரம்பிக்கப்பட உள்ள ஆட்டுப் பண்ணை ஒரு மிகப் பெரிய அளவிலே உருவாக உள்ளது. இதை நவீன முறையில் மேலும் மேம்பாடு செய்யவேண்டுமெனில், விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்ய கல்லூரி ஒன்று அமைத்தால் மிகவும் பயனுள்ளதாக அமையும். எனவே இதை அரசு மீண்டும் பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சிக் கல்லூரியை நிறுவுவதற்கு 500 ஏக்கர் நிலமும், ரூ. 25 கோடி செலவும் தேவைப்படுகிறது. ஆகையினால் இவ்வாண்டு இதுபோன்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. என். ஜி. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் அங்கே துவக்கப்பட இருக்கின்ற ஐரோப்பிய நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட இருக்கின்ற ஆடு வளர்ப்புப் பண்ணை மிகச் சீரிய முறையில் பயனுள்ள வகையிலே அது பயன்பட வேண்டுமென்று சொன்னால் இந்தக் கல்லூரியை அமைத்தால் மிகவும் சிறந்த வகையில், அங்கேயிருக்கின்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும் ஏதுவாக இருக்கும். எனவே இந்தக் கல்லூரியை அமைக்க அரசு முன்வருமா? மீண்டும் பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : தமிழகத்தில் சேலம் மாவட்டத்தில், நாமக்கல்லிலும், சென்னையிலும் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. மேலும் ஒரு கல்லூரி தேவையில்லை என அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 625. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.



1992 ஏப்ரல் 24]

625—

## நெல் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் ஆலை அமைத்தல்

*4324— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு ஊரகத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா விடையளிப்பாரா :

நெல் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் ஆலை தாராபுரத்தில் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான தாராபுரத்திலும், காங்கேயம், வெள்ளக்கோயில் ஆகிய பகுதிகளில் அரிசி ஆலைகள் அதிக அளவில் உள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட அரிசி ஆலைகள் நன்றாக செயல்பட்டு வருகின்றன. இந்த ஆலைகளிலிருந்து தவிடு பெருமளவில் கிடைக்கிறது. இதைத் தற்போது பெங்களூரிலிருந்து வியாபாரிகள் வந்து வாங்கிச் செல்கிறார்கள். தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் ஆலை ஒன்று அமைத்தால், அது சிறப்பாக செயல்பட வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அதைக் கனிவுடன் பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் அரிசி ஆலைகளிலிருந்து தயாரிக்கும் அரிசியிலிருந்து பிரித்து எடுக்கின்ற அந்தத் தவிடுகள் எண்ணெய் உற்பத்தி செய்வதற்குத் தகுந்த தரமுள்ளதாக இல்லை. எனவேதான் அந்தப் பகுதியிலே தவிட்டு எண்ணெய் தயாரிக்கக் கூடிய தொழிற்சாலையை நிறுவுவதற்கு வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை ராமசாமி

திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராபுரம், காங்கேயம் தொகுதிகளில் எல்லாம் உற்பத்தியாகின்ற தவிட்டிலே எண்ணெய் இல்லை என்ற செய்தியை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அங்கே உற்பத்தியாகின்ற நெல் தாராபுரத்தில் மட்டும் உபற்த்தியாவதில்லை தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு ஆகிற

மாவட்டங்களிலிருந்து அங்கே நெல் கொள்முதல் செய்துதான் அரைத்து உமியை எடுக்கிறார்கள். ஆகவே அதிலே எண்ணெய் இல்லை என்கின்ற கருத்தை மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே நவீன அரிசி ஆலைகளை நிறுவினால் அவற்றிலிருந்து, அந்த நவீன ஆலைகளின் மூலம் அரிசியிலிருந்து பிரித்து எடுக்கப்படுகின்ற அந்த தவிடுகள் எண்ணெய் வாய்ப்பு உள்ள தவிடுகளாக அமைகிறது. எனவே, அப்படிப்பட்ட நவீன அரிசி ஆலைகளை அமைக்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். அன்பழகன்

திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெல் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை தமிழகத்தில் எங்கெங்கு சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்குத் தனிக் கேள்வி போடவும். தாராபுரத்திலே ஆரம்பிப்பது பற்றியது இக் கேள்வி. நீங்கள் தமிழ்நாட்டிலே எங்கெங்கே இருக்கிறது என்று கேட்டால், அமைச்சர் எப்படிப் பதில் சொல்வார்கள்.

வினா எண். 626. திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர்.

626—

செங்கிப்பட்டி, பூதலூர் பகுதிகளில் தொழில்கள் தொடங்கி, வேலைவாய்ப்பளித்தல்.

* 5263—திரு. ப. கலியபெருமாள் :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவையாறு தொகுதியைச் சார்ந்த செங்கிப்பட்டி, பூதலூர் பகுதிகள் மானாவாரிப் பகுதியாகவும் தொழில் வளம் இல்லாமல் இருப்பதால் அப்பகுதியில் தொழில்கள் தொடங்கி அப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செங்கிப்பட்டி, பூதலூர் பகுதியில் தொழில்கள் அமைப்பது குறித்த கோரிக்கை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.





திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதியாகிய செங்கிப்பட்டி, பூதலூர் பகுதிகளில் இருந்து கோரிக்கை வரவில்லை என்று கூறுகிறார்கள். நானும் அந்தப் பகுதியிலே தொழில் தொடங்கவேண்டும் என்று அரசிடம் விண்ணப்பம் போட்டு இருக்கிறேன். அந்தப் பகுதியிலிருக்கின்ற பல கிராம மக்கள் மழைக் காலங்களில், 2, 3 மாதத்திற்கு கடலை, துவரை, விதைத்து, அந்த விவசாயம் முடிந்த பிறகு, அல்லது ஏரிகளில் மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கினால், அதிலே விவசாயம் செய்த, பிறகு அந்த ஏரிகளிலே தண்ணீர் குறைந்துவிட்டால், தாழ்வான பகுதியிலே இருக்கிற அந்தப் பகுதி மக்கள், வெளிப் பகுதிக்குச் சென்று வேலை தேடிச் செல்கிறார்கள். அப்படிப்பட்ட அந்தக் கிராமத்திற்கு, கிராம மக்களுக்கு ஏதாவது தொழில் செய்து வேலை வாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கிப்பட்டி கிராமத்தில் தொழிலகங்கள் இல்லை. ஆனால் பூதலூர் பகுதியில் சிட்கோ தொழில் நிறுவனத்தின் மூலம் 10 சிறு தொழில் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, இன்னும் 5 இடங்கள் காலியாக உள்ளன. ஒரு தொழில் கூடத்தில் மட்டும் சோடா, கலர் பானங்கள் தயாரிப்பு நடைபெறுகிறது. மற்றொரு மூன்றில், காப்பித்தூள், சாக்பீஸ் போன்ற சிறுதொழில் நடத்த ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவைகள் இயங்கவில்லை. எனவே, இதுபோன்ற தொழில் கூடங்கள் அமைக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகுந்த தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்தவேண்டும். அதற்கு அரசு சிறந்த முறையிலே உரிய, சலுகைகளை அளிக்கும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

612—

ஒட்டன்சத்திரத்தில் அரசு கலைக்கல்லூரி அமைத்தல்.

* 168—திரு. ஏ. டி. செல்லச்சாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒட்டன்சத்திரத்தில் ஒரு அரசு கலைக்கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், புதிய கல்லூரி எப்போது துவக்கப்படும்

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1992 ஏப்ரல் 24

541—

## மண்ணச்சநல்லூரில் அரசு தங்கும் விடுதி கட்டுதல்.

* 5393—திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூரில் அரசு தங்கும் விடுதி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதற்கான கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

1—

## அ. உடுக்குறியிடாத வினாக்கள்.

## (பத்தாம் பட்டியல்)

## திருப்புறம்பியம் அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு புதிய கட்டிட வசதி.

வினா எண். 2614—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கும்பகோணம் தாலுக்கா, திருப்புறம்பியம் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் போதிய கட்டிட வசதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டிடங்கள் கட்ட தமிழ்நாடு பாடநூல் நிறுவனத் திட்டத்தின் மூலம் நிதி வழங்க முன்வருமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் பள்ளிக் கட்டிடங்களுக்கென நிதி உதவி அளிக்க இயலாத நிலையில் தற்போது உள்ளது. எனினும், ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கை/இரண்டாம் பகுதித் திட்டத்தில் பள்ளிக் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. நிதிநிலைமைக்கு ஏற்ப, பள்ளிகளின தேவைக்கான முன்னுரிமையின் அடிப்படையில் கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளபட்டடும்.

---

* 10-4-1992 ஆம் தேதிக்கான பட்டியலில் இருந்து தள்ளிப்போடப்பட்டது.



1992 ஏப்ரல் 24]

2—

## மருத்துவர் சங்கத்திற்குக் கட்டிடம்.

வினா எண். 1704—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாவட்ட மருத்துவமனைகளில் மருத்துவர் சங்கத்திற்குக் கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

நிதி வசதியின்மை காரணமாக, மருத்துவர் சங்கத்திற்குக் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இல்லை.

3—

## அரசு கலைக் கல்லூரி மகளிருக்கு பேருந்து வசதி.

வினா எண். 3485—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை நகரில் உள்ள தருமபுரம் ஞானாம்பிகை அரசு மகளிர் கலைக்கல்லூரிக்கு புகைவண்டி நிலையத்திலிருந்து மகளிர் பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும் ?

விடை—

(அ) கோரிக்கை வழித்தடத்தின் நீளம் 4.5 கிலோ மீட்டர் ஆகும். கோரிக்கை வழித்தடத்தில் மயிலாடுதுறை ஜங்ஷனிலிருந்து பேருந்து நிலையம் வரை சோழன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் மூலம் தினசரி 96 நடைகள் இயக்கப்படுகின்றன.

மயிலாடுதுறை பேருந்து நிலையத்திலிருந்து மகளிர் கல்லூரி 0.5 கி.மீ. தொலைவில்தான் அமைந்துள்ளது. பேருந்து நிலையத்திலிருந்து கடைத்தெரு, மார்க்கெட் வழி சாலை மிகவும் குறுகலாகவும், நெரிசலாகவும் பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது.

எனவே, கோரிக்கையில் உள்ளவாறு புகைவண்டி நிலையத்தில் இருந்து ஞானாம்பிகை கலைக்கல்லூரிக்கு மகளிர் பேருந்து இயக்க இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1992 ஏப்ரல் 24

4—

## உதயத்தூர் சாலையை பழுதுபார்த்தல்.

வினா எண். 3673—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் தொகுதி, ராதாபுரத்திலிருந்து உதயத்தூர் செல்லும் சாலை பழுதுபார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் சாலையின் சரியான பெயர் உதயத்தூர் சாலையாகும். இச்சாலை வள்ளியூர் விஜயாபதி என்கின்ற அரசு மாவட்ட பெருஞ்சாலையில் கி.மீ. 20/0-ல் பிரிந்து செல்கிறது. இந்தச் சாலையின் நீளம் 2.4 கி.மீ. ஆகும். (அதாவது கி.மீ. 0/0—2/4) இச்சாலை நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பராமரிக்கப்படும் அரசு இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலை ஒரு தார் சாலையாகும். இச்சாலையை புதுப்பிக்க ரூ. 2.00 இலட்சம் தேவைப்படுகிறது. வரும் நிதியாண்டில் நிதி நிலையைப் பொறுத்து, தார் தளம் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

5—

## ஊராட்சிகளுக்கு தெருவிளக்கு வசதி.

வினா எண். 5672—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், பர்கூர் ஊராட்சிக்குச் சேர்ந்த காளேகவுடஹூர், கொள்ளே கவுடனூர், ஒட்டக்கஞ்சனூர் ஆகிய ஊர்களுக்கு தெரு மின் விளக்குப்போட கம்பம் அமைக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): பெரியார் மாவட்டம் பர்கூர் ஊராட்சியைச் சார்ந்த காளேகவுடஹூர், கொள்ளே கவுடனூர், ஒட்டக்கஞ்சனூர் ஆகிய ஊர்களுக்கு தெரு விளக்குகள் அமைக்கக் கோரியாதொரு விண்ணப்பமும் மின் வாரியத்திடம் நிலுவையில் இல்லை.



1992 ஏப்ரல் 24]

6—

## குடிநீர் வழங்க மோட்டார்களுக்கு மின் அழுத்தம் வசதி.

வினா எண். 5681—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், ஏ. பி. நாடானூர் ஊராட்சி மன்றத்தில் குடிநீர் வழங்கும் மோட்டார்கள் மின் அழுத்தம் குறைவின் காரணமாக சரியாக செயல்படாத குறைபாட்டை களைய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

ஏ. பி. நாடானூர் ஊராட்சி மன்ற குடிநீர் வழங்கும் மோட்டாருக்கு (5 குதிரை திறன் கொண்ட நீர்மூழ்கி மோட்டார் இணைக்கப்பட்டுள்ளது) பார்பான்குளம் மின்மாற்றி எண். 2-ல் இருந்து மின் இணைப்பு எண். ஏ. 78 மூலம் மின்சாரம் வழங்கப்படுகிறது. இந்த நீர்மூழ்கி மோட்டார் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள ஆற்றின் கரையிலிருந்து சுமார் 1,000 அடி தூரத்தில் ஆற்றின் நடுபாகத்தில் நீரினடியில் அமைக்கப்பட்டு உள்ளது. மின் இணைப்பு வழங்கப்பட்ட இடத்தில் மின் அழுத்தம் 460 வோல்ட் உள்ளது. இந்த மின் அழுத்தம் திருப்திகரமானது. ஆனால், ஏ. பி. நாடானூர் பஞ்சாயத்தால் மின் இணைப்புள்ள இடத்திலிருந்து மின் மோட்டாருக்கு இணைக்கப்பட்டுள்ள புதை கம்பியின் திறன் குறைவாக உள்ளதால், மோட்டாருக்கு 340 வோல்ட் மின் அழுத்தம் மட்டுமே உள்ளது. எனவே, ஏ. பி. நாடானூர் பஞ்சாயத்து தன் சொந்த செலவில் அமைத்துள்ள புதிய கம்பியை கூடுதல் திறன் கொண்டதாக மாற்றி அமைத்தால் மின் மோட்டாருக்கு திருப்திகரமான மின் அழுத்தம் கிடைக்கும்.

7—

## ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு வசதி.

வினா எண். 872—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், நாடியம், வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து

[1992 ஏப்ரல் 24

செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

8—

வினா எண். 874—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், நானத்திடல், வீடற்ற ஆதி திராவிடர் மக்களுக்கு புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

9—

வினா எண். 876—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், கட்டயன்காடு வீடற்ற ஆதி திராவிடர்களுக்கு புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

10—

வினா எண். 877—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், முனுமாக்காடு வீடற்ற ஆதி திராவிடர் மக்களுக்கு புதிய வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1992 ஏப்ரல் 24]

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யபடவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல் படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

11—

வினா எண். 884—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் மதன்பட்டவூர் வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

12—

வினா எண். 901—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் ஒட்டங்காடு நடுமனைக்காடு வீடற்ற ஆதி திராவிடர் மக்களுக்கு புதிய வீடு கட்டிக்கொடுக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

[1992 ஏப்ரல் 24

13—

வினா எண். 903—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் வீடு இல்லாத ஆதி திராவிட மக்களுக்கு புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

14—

**சோழகனூர் வயல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.**

வினா எண். 919—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் சோழகனூர் வயல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

திட்டம் ஏதும் இல்லை. சோழகனூர் வயல் குடியிருப்பு கழனிவாசல் ஊராட்சி சேதுபாவா சத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்தது ஆகும். இதன் மக்கட் தொகை 800 ஆகும். ஒரு கைப்பம்பு திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மறு ஆய்வின் படி இது பகுதியாக செயலாக்கப்பட்ட குடியிருப்பாக உள்ளது. இதன் மக்கட் தொகைக்கு இது போதுமானதாக இல்லை. இனி வரும் நிதியாண்டுகளில் மேல்நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கும் திட்டம் கருத்தில் கொள்ளப்படும்.

15—

வினா எண். 991—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:



92 ஏப்ரல் 24]

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்டு ஊராட்சி கோர வயல்காடு கிராமத்தில் மேல்நிலை நீர்த்க்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

ஆம் உள்ளது. கோர வயல் காடு குடியிருப்பு, ஒட்டங்டு ஊராட்சி, பேராவூரணி ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். ன் மக்கட் தொகை 890 ஆகும். மறு ஆய்வின்படி இக் யிருப்பு பகுதியாக குடிநீர் வசதி செயலாக்கபட்ட குடிப்பாகும். 1988-89 ஆம் ஆண்டு விரைவுபடுத்தப்பட்டத்தின் கீழ் ஒரு ஆழ் குழாய்க் கிணறு அமைத்து தரப்பட்டுளது. நடப்பு நிதியாண்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் ாட்டிகட்டித் தரும் பொருட்டு ஆயுட் காப்பீட்டுக் கழக யுதவியின் கீழ் 3.70 இலட்சங்களுக்கு மதிப்பீடு ஒப்புதல் றப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நீர் ஆதாரம் மைக்கப்பட்ட உடன் செயலாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

—

வினா எண். 1179—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடைிப்பாரா:

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரை ஆதி திரார் 2-வது வார்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட சிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை. ஏரிப்புறக்கரை ஆதி திராவிடர் காலனி, பட்டுக்ாட்டை ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். இதன் மக்கட் ாகை 2,000 ஆகும். மறு ஆய்வின் படி இக்குடியிருப்பு தியாக குடிநீர் வசதி செயலாக்கப்பட்ட கிராமம். விரைவுத்தப்பட்ட ஊரக குடிநீர்த் திட்டத்தின் கீழ், இக்கிராமத்தில் 000 லிட்டர் கொள்ளளவு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி டித்தரப்பட்டுள்ளது. ஓர் இந்தியா மார்க் 2 கைப்பம்பு டமும் உள்ளது. ஏரிப்புறக்கரை ஆதி திராவிடர் 2-வது ர்டு ஒரு பகுதியாகும். தற்பொழுது விஸ்தரிப்பு ஏதும் லாத காரணத்தால் மேலும் ஒரு நீர்த்தேக்கத் தொட்டி டித்தரும் செயற் குறிப்பு தற்போது ஏதுமில்லை.

—

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்.**

வினா எண். 1424—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடைிப்பாரா:

[1992 ஏப்ரல் 24

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தின் பார்த்திபனூர் ரெகுலேட்டரின் பின்புறம் இராமநாதபுரம் கண்மாய் வரை வைகை ஆற்றில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் எத்தனை ?

(ஆ) இவைகளில் செயல்படாத திட்டங்கள் எத்தனை ?

(இ) அதைச் சரிசெய்ய எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

விடை—

(அ) பார்த்திபனூர் ரெகுலேட்டரின் பின்புறம் இராம நாதபுரம் கண்மாய் வரை வைகை ஆற்றில் இராமநாதபுரம் நகராட்சி குடிநீர்த் திட்டம் மற்றும் பரமக்குடி நகராட்சி குடிநீர்த் திட்டம் என்ற இரண்டு நகரக் குடிநீர்த் திட்டங்களும், மேலப் பார்த்திபனூர் இலந்தைக்குளம், வேந்தோணி, கொளுந்துரை, பொட்டகவயல், சாத்தனூர், கே. கருங்குளம், ஏ. புதூர் மற்றும் மெய்யனேந்தல் ஆகிய ஒன்பது கிராமக் கூட்டுக் குடிநீர்த் திட்டங் களும் செயல்படுகின்றன.

(ஆ) இராமநாதபுரம் நகராட்சி குடிநீர்த் திட்டமும், ஏ.புதூர் கூட்டுக் குடிநீர்த் திட்டமும் செயல்படவில்லை.

(இ) இராமநாதபுரம் நகராட்சி குடிநீர்த் திட்டம் :

இராமநாதபுரம் நகராட்சிக்கு குடிநீர் வழங்க திருவாடானை பகுதியில் ஆறு ஆழ்துளைக் கிணறுகள் (Deep Borewells ) அமைக்க மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட் டுள்ளது. இராமநாதபுரம் நகராட்சி மதிப்பீட்டுத் தொகையைச் செலுத்தினால் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணி மேற் கொள்ளப்படும்.

ஏ. புதூர் :

இத்திட்டத்தின் மேம்பாட்டிற்காக சத்திரக்குடி அருகே ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டது. ஆனால் இதில் பெறப் பட்ட நீர் உப்புத் தன்மை கொண்டதாக உள்ளதால், மாற்று நீர் ஆதாரம் கண்டுபிடிக்க ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

18—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி விரிவுபடுத்துதல்.

வினா எண். 1572—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :



1992 ஏப்ரல் 24]

பட்டுக்கோட்டை ஒன்றியம், தாமரங்கோட்டை தெற் பாதியில் இருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பெரி தாக்கி தண்ணீர் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை. தாமரங்கோட்டை கிராமம், தாமரங்கோட்டை ஊராட்சி, பட்டுக்கோட்டை ஒன்றியத்தைச் சார்ந்தது ஆகும். இதன் மக்கட்தொகை 3,500 ஆகும். மறு ஆய்வின்படி இக் குடியிருப்பு முழுவதுமாக குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்ட குடியிருப்பாகும். 1985-86 ஆம் ஆண்டு இக்கிராமத்தில் ஆயுட் காப்பீட்டுக் கழக நிதி உதவியுடன் 60,000 லிட்டர் கொள்ளளவு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, செயலாக்கத்தில் உள்ளது. தற்போது வாரியத்திடம் விஸ்தரிப்புத் திட்டம் ஏதும் இல்லாத காரணத்தால் புதிதாக மேல்நிலைத் தொட்டி கட்டித் தர இயலாது.

19—

வினா எண் 1832—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அனந்த கோபாலபுரம் தெற்குத் தெருவிற்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை. அனந்தகோபாலபுரம் தெற்குத் தெருவிற்கு மக்கள் தொகை 1,310. இக்கிராமம் குடிநீர் பிரச்சினை உள்ள கிராமம். பகுதியளவு குடிநீர் வசதி பெற்றது. விரைவுபடுத்தப் பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 30,000 லிட்டர் கொள் ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 1981-82ஆம் வருடம் கட்டித்தரப்பட்டுள்ளது.

20—

வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல்.

வினா எண். 1925—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கழுகுப்புளிக்காட்டிற்கு வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இவ்வாண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவைகளின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் எல்லா மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே, ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. வானொலிப் பெட்டிகள் அந்தந்த ஊராட்சியே வாங்கிக்கொள்ளலாம்.

21—

வினா எண். 1974—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை (வ) ஆதிதிராவிடர் குடியிருப்பிற்கு வானொலி, தொலைக் காட்சிப் பெட்டிகள் அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இவ்வாண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவைகளின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் எல்லா மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. வானொலிப் பெட்டியை அந்தந்த ஊராட்சியே வாங்கிக்கொள்ளலாம்.

22—

## குடிநீர் வசதி.

வினா எண். 2582—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எந்தந்த பகுதியில் எவ்வளவு மழை பெய்துள்ளது என்று அளவடுத்து நிலத்தடி நீர் எவ்வாறு கிடைக்கிறது என்று ஆய்வு செய்து அதற்குத் தகுந்தாற்போல் ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கையும் ஆழமும் அமைகிற வகையில் குடிநீர் பஞ்சத்தைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?



(ஆ) கடந்த இரண்டு ஆண்டுகளாக மாவட்ட வாரியாக பெய்த மழையளவு என்ன ?

விடை—

(அ) ஒவ்வொரு ஆண்டும் பெய்யும் மழையளவையும். நிலநீர் மட்டத்தின் அளவையும் கணக்கில் கொண்டு வறட்சிக் காலத்தில் ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை அரசாங்கத்தால் முடிவு செய்யப்படுகிறது, ஆழ்துளைக் கிணறுகளின் ஆழம் விஞ்ஞான முறைப்படி முடிவு செய்யப்படுகிறது, இதே போன்று குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் மற்ற குடிநீர் திட்டங்களுக்கும் ஆண்டுதோறும் பெய்யும் மழையளவு, நிலத்தடி நீரின் அளவு, நிலத்தடி நீரின் மட்ட அளவு, நிலவியல் தன்மை, மக்கள் தொகை, திட்ட மதிப்பீடு ஆகியவற்றை ஆய்வு செய்தே ஆழ்துளை கிணறுகளின் எண்ணிக்கையும் அது அமைக்க கப்பட வேண்டிய ஆழமும் விஞ்ஞான முறைப்படி முடிவு செய்யப்படுகிறது,

(ஆ) கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மற்றும் 1991 ஜூலை வரை தமிழகத்தில் பெய்த மழையின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| வரிசை எண்ணும், மாவட்டத்தின் பெயரும், | 1989-ல் பெய்த மழை யளவு | 1990-ல் பெய்த மழை யளவு | 1991 ஜூலை வரை பெய்த மழையளவு |
|---|---|---|---|
| | மி.மீ. | மி.மீ. | மி.மீ. |
| (1) | (2) | (3) | (4) |
| 1 சென்னை .. .. | 1,459 | 1,242 | 397 |
| 2 செங்கல்பட்டு-எம்,ஜி,ஆர், | 935 | 1,316 | 289 |
| 3 வடஆற்காடு-அம்பேத்கார் .. | 763 | 828 | 215 |
| 4 திருவண்ணாமலை, சம்புவராயர் .. | .. | 868 | 182 |
| 5 தென் ஆற்காடு .. .. | 863 | 944 | 120 |
| 6 தர்மபுரி .. .. | 617 | 651 | 346 |
| 7 தஞ்சாவூர் .. .. | 829 | 982 | 157 |
| 8 திருச்சி .. .. .. | 606 | 597 | 141 |
| 9 புதுக்கோட்டை .. .. | 741 | 706 | 143 |
| 10 சேலம் .. .. .. | 915 | 600 | 258 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | கோயம்புத்தூர் .. .. | 1,272 | 1,165 | 419 |
| 12 | பெரியார் .. .. | 755 | 514 | 156 |
| 13 | நீலகிரி .. .. .. | 1,356 | 1,458 | 747 |
| 14 | திண்டுக்கல் அண்ணா .. | 960 | 864 | 255 |
| 15 | மதுரை .. .. | 893 | 873 | 232 |
| 16 | இராமநாதபுரம் .. | 833 | 953 | 223 |
| 17 | காமராஜர் .. .. | 949 | 1,044 | 189 |
| 18 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் .. .. .. | 907 | 1,152 | 207 |
| 19 | திருநெல்வேலி கட்டபொம்மன் | 820 | 822 | 459 |
| 20 | சிதம்பரனார் .. .. | 773 | 899 | 178 |
| 21 | கன்னியாகுமரி .. .. | 1,128 | 1,229 | 1,220 |

23—

கிராமங்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 2927—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், கோயில் வாழ்க்கை கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை, ஆண்டிமடம் ஒன்றியம், திருக்களப்பூர் ஊராட்சி கோயில் வாழ்க்கை (06—05—25—23—04) கிராமத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் 1983-ம் ஆண்டு முடிக்கப்பட்டு, ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் செயல்பட்டு வருகிறது.

24—

வினா எண். 2938—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :



திருச்சி மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம் உடையார் தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

ஆம். ஆனால் உடையார் தெரு கிராமத்திற்கு 20,000 லிட்டர் கொள்ளளவு நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த்திட்டம் ஆயுள் காப்பீட்டுக் கழக நிதியுதவின் கீழ் மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது, வரும் 1992-93 நிதியாண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

25—

வினா எண். 2942—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருச்சி மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம், கருக்கை காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை. பெரிய கருக்கை கிராமத்தின் பகுதியான காலனிக்கும் சேர்த்து இந்த நிதியாண்டில் ஒரு கையிறைப்பான் பொருத்தப்பட்டுள்ளது. அரசு விதிமுறைகளின்படி இந்த கிராமத்தின் மக்கட் தொகைக்கு ஒரு கையிறைப்பான் போதுமானது.

26—

சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 3068—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் அந்தோணியார்புரத்திற்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் அந்தோணியார்புரத்திற்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை. இங்கு

[1992 ஏப்ரல் 24

பகுதி குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது, வரும் நிதியாண்டுகளில் ஆன்டிவயல் கிராமத்தில் செயல்படுத்தப்பட உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து குழாய் நீட்டிப்பு செய்து கொடுக்கப்படும்,

27—

ஆயங்குளம் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 3610—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் தொகுதிக்குட்பட்ட முதுமொத்தன்மொழி பஞ்சாயத்தில் ஆயங்குளம் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இங்கு ஒரு ஆழ்குழாய்க் கிணறு மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

28—

வினா எண். 3618—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் தொகுதி, பெட்டைக்குளம் பஞ்சாயத்தில் பெருங்குளம் நீர்த்தேக்கத் தொட்டியைச் சரி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் தொகுதி பெட்டைக்குளம் கிராமத்தில் பெருங்குளம் நீர்த்தேக்கத் தொட்டி மோட்டார் ஸ்டார்ட்டர் சீர் செய்யப்பட்டு தற்போது சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

29—

கிராம அங்காடி நிர்வாகத்தை கிராமச் சங்கத்திற்கு ஒப்படைத்தல்

வினா எண். 505—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?



1992 ஏப்ரல் 24]

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் தொடக்க வேளாண்மை கிராம அங்காடி நிர்வாகத்தை அச்சங்க நிர்வாகத்திற்கே மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் தொடக்க வேளாண்மை கிராம அங்காடி நிர்வாகத்தை மேற்படி வங்கியின் கட்டுப்பாட்டிற்கு மாற்ற தஞ்சாவூர் மண்டல் இணைப்பதிவாளர் செயல்முறை ஆணை நாள் 9—8—1991-ன்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

30—

நலக் காப்பீட்டுத் திட்டம்.

வினா எண். 2801—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

"Well Insurance Scheme" திட்டத்தால் பயன் அடைந்தவர்கள் தமிழ் நாட்டில் எத்தனை பேர் ?

விடை—

தமிழ்நாட்டில் பிரதம நிலவள வங்கிகள் மூலம் கடன் பெற்று தோண்டப்படுவதற்கான "கிணறு காப்பீட்டுத் திட்டம்" ஏதும் செயல்பாட்டில் இல்லை. ஆனால், பிரதம நிலவள வங்கிகள் ஆகியவற்றிலிருந்து கடன் பெற்ற சிறு விவசாயிகள், நலிவுற்ற விவசாயிகள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி விவசாயிகள் கிணறுகள் தோண்டி அவை பொய்த்துப் போனால், மானியம் வழங்குவதற்கு பொய்த்தக் கிணறுகள் இழப்பீட்டுத் திட்டம் (Failed Well Compensation Fund Scheme) என்ற ஒரு திட்டம் 1990 லிருந்து அமுலில் இருந்து வருகிறது. மேலும், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கி "பொய்த்தக் கிணறுகள் நிதி" ஒன்று ஏற்படுத்தி உள்ளது. இந்த நிதியிலிருந்து 1991 ஆகஸ்ட் திங்கள் முடிய 3,192 பேருக்கு ரூ. 220.26 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

31—

தொழிலாளர் நல மைய நலங்களுக்குக் கட்டிட வசதி.

வினா எண். 8256—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தொழிலாளர் நல மையங்கள் சொந்தக் கட்டிடத்தில் இயங்குபவை எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) மேலும், எங்கெங்கு இந்த மையங்களுக்காக சொந்தக் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

(இ) எப்போது கட்டுமானப் பணி துவங்கும் ?

(ஈ) இவற்றிற்கான எஸ்டிமேட் செலவு எவ்வளவு ?

விடை—

(அ) ஒன்று (வால்பாறை).

(ஆ), (இ) மற்றும் (ஈ) : மதுரை ஆரப்பாளையத்தில் கட்டிடம் விலைக்கு வாங்கப்பட்டுள்ளது. இராசபாளையத்தில் ரூ. 5,95,000 மதிப்பீட்டில் கட்டிடம் கட்டும் பணி துவங்கப் படவுள்ளது. ஓசூர் மற்றும் மணலி புதுநகரில் கட்டிடங்கள் கட்ட நிலம் வாங்கப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறை கண் காணிப்புப் பொறியாளரிடமிருந்து வரைபடம் மற்றும் மதிப்பீடு பெற்றவுடன், வாரியத்தின் ஒப்புதலுடன் கட்டுமானப்பணி துவங்கப்படும்.

32—

## கரும்புச் சாலைத் திட்டம்

வினா எண். 1717—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் கரும்புச் சாலைத் திட்டத்தின் கீழ் உள்ள சாலைகள் எத்தனை ?

(ஆ) மேலும் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் கரும்புச் சாலைத் திட்டத்தின்கீழ் சாலைகள் போடப்படவில்லை.

(ஆ) வினா எழாது.

33—

## சத்துணவு மாவு உருண்டை வழங்குதல்

வினா எண். 4483—திரு. செ. து. வரதராசன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



(அ) 2 வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கும் சத்துணவு மாவு உருண்டை வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஏற்கெனவே இத்திட்டம் சில மாவட்டங்களில் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து இரண்டாவது திட்டத்தின் கீழ் 6 முதல் 36 மாதங்கள் வயதுள்ள குழந்தைகளுக்கும் மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் 'ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 6 முதல் 24 மாதங்கள் வயதுள்ள குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்து அளிக்கப்படுகிறது. ஊட்டச்சத்து திட்டத்தின் கீழ் சுமார் 2 இலட்சம் குழந்தைகளும் குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1.30 இலட்சம் குழந்தைகளும் பயன்பெறுகின்றனர்.

34—

## தரக்குறைவானப் பொருட்களால் அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தை கட்டுப்படுத்துதல்.

வினா எண். 5885—திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொடுவாய் சர்வோதய சங்கம் (கோயம்புத்தூர் மாவட்டம்) சத்துணவு மையங்களுக்கு வழங்கியப் பொருட்கள் தரக்குறைவாக இருந்ததால் பல கோடி ரூபாய் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) அதன் மேல் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) தரக்குறைவான விளையாட்டுப் பொருட்களை வழங்கியதால் அரசுக்கு ரூ. 40.00 இலட்சம் வீணாகியது.

(ஆ) தரக்குறைவான விளையாட்டுப் பொருட்களை அச்சங்கம் வழங்கியதால் அச்சங்கத்திடமிருந்து இனி பொருட்களை வாங்கக் கூடாது என அரசு ஆணையிட்டுள்ளது.

[1992 ஏப்ரல் 24

35—

மயானப் பாதை வசதி செய்தல்

வினா எண். 967—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், உடையநாடு ஆதி திராவிடர்களுக்கு மயானப் பாதை வசதி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

உடையநாடு ஆதி திராவிடர்களுக்கு மயானப்பாதை வசதி செய்வதற்கு நில ஆர்ஜித நடவடிக்கைகள் ஏற்கெனவே மேற் கொள்ளப்பட்டு உடையநாடு கிராமத்தில் புல எண். 154/6 மற்றும் பல புல எண்களிலும் கைவினிவயல் கிராம புல எண் 106/8லும் நில எடுப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலச் சொந்தக்காரர்கள் ஆதி திராவிடர்கள் ஆதலாலும் அவர்கள் சம்மதம் தர மறுப்பதாலும் நடவடிக்கை தாமதப்பட்டு வருகிறது. எனினும் சம்மதம் பெற்று நில ஆர்ஜிதம் நடவடிக்கைத் தொடர உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

36—

வினா எண். 1847—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங் கோட்டை (வ) ஊராட்சி புதுநகர் ஆதி திராவிடர் மக்களுக்கு மயானப் பாதையும் தகரக் கொட்டகையும் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

பாதரங்கோட்டை (வ) ஊராட்சி புதுநகர் ஆதி திராவிடர் களுக்கு மயானக்கரை சாலை வசதி உள்ளது. அந்த மயானச் சாலைக்கு சிவப்பு கப்பி போடவும், மயானத்திற்கு தகரக் கொட்டகை அமைக்கவும், வேலைகள் நிதி நிலைமைக்கேற்பவும் நிதி ஒதுக்கீட்டிற்குத் தக்கவாறும் எடுத்துச் செய்யப்படும்.

37—

வினா எண். 1863—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.



1992 ஏப்ரல் 24]

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம் பாதரங் கோட்டை (தெ) ஆதிதிராவிடர்களுக்கு மயானத்திற்குப் பாதை யும் தகரக் கொட்டகையும் அமைத்துத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

பாதரங்கோட்டை (தெ) ஆதிதிராவிடர்களுக்கு மயானக் கரை சாலை வசதி உள்ளது. அந்த மயானச் சாலைக்கு சிவப்பு கப்பி போடவும் மயானத்திற்கு தகரக் கொட்டகை அமைக்கவும் வேலைகள் நிதிநிலைமைக்கேற்பவும், நிதி ஒதுக்கீட்டிற்கு தக்கவாறும் எடுத்துச் செய்யப்படும்.

38—

வினா எண். 2537—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா::

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பின்ன வாசல் ஆதிதிராவிடர்களுக்கு மயானச்சாலை அமைக்கவும், தகரக் கொட்டகை கட்டித் தரவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

பின்னவாசல் கிராமத்தைச் சேர்ந்த கொல்லுக்காடு என்னுமிடத்தில் சுமார் 40 ஆதிதிராவிடர் குடும்பத்தினருக்கும் அப்பகுதியை அடுத்து நெல்லியடிக்காடு என்னும் கிராமத்தில் சுமார் 35 ஆதிதிராவிடர் குடும்பத்தினரும் வசிக்கிறார்கள். மொத்தம் உள்ள 75 ஆதிதிராவிடர் குடும்பத்தினரும் நெல்லி யடிக்காடு கிராமம் புல எண். 193–2ல் உள்ள இடத்தை மயானமாகப் பயன்படுத்தி வருகின்றனர். பின்னவாசல் கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு இதைத் தவிர வேறு மயானம் இல்லை. புல எண். 193–2ன் திட்டப் பரப்பு 0.03.5 ஹெக்டேர் புஞ்சை என வகைபாடு செய்யப்பட் டுள்ளது. இந்த இடத்தை மேற்குறிப்பிட்ட ஆதிதிராவிடர் குடும்பத்தினர் நீண்ட காலமாக மயானமாக பயன்படுத்தி வரு கின்றனர். குடியிருப்புப் பகுதியிலிருந்து சிகப்புக் கப்பிச் சாலை சி.எம்.பி. வாய்க்கால் கரை வரையிலும் செல்கிறது. வாய்க்கால் கரையிலேயே சென்றால் மேற்குறிப்பிட்ட மயானத்தை அடையலாம். இதன் தூரம் சுமார் 1 கி.மீ. இருக்கும். ஆனால் ஆதிதிராவிடர் குடும்பத்தினர் இந்தப் பாதையை பயன்படுத்தாமல் வயல்களின் வழியே சென்று வருகின்றனர். இதன் தூரம் சுமார் 112 கிலோ மீட்டர் இருக்கும். வயல்களில் தற்போது பாதையாகப் பயன்படுத்தி

[1992 ஏப்ரல் 24

வரும் பகுதியில் உள்ள நிலங்களில் உரிமையாளர்களில் இருவர் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களின் சம்மத மின்றி இப்பகுதியை நில ஆர்ஜிதம் செய்வதில் இடையூறுகள் ஏற்படும்.

குடியிருப்புப் பகுதியிலிருந்து மயானம் வரையில் நல்ல சாலை வசதி இருப்பதினால் அந்த சாலையையே பயன்படுத்த லாம். சாலை மற்றும் வாய்க்கால் கரை நல்ல நிலையில் உள்ளது.

ஆனால், தற்போது மயானமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் இடம் பட்டா புஞ்சை நிலமாக இருப்பதால் அதனை நில ஆர்ஜிதம் செய்து ஊராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும். அதன் பின்னர்தான் ஊராட்சி ஒன்றியத்தினர் அதில் தகரக் கொட்டகை அமைக்க இயலும். மேற்கண்ட இடத்தில் நில ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

39—

குளத்தை ஆழப்படுத்துதல்

வினா எண். 2708—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செங்க மங்கலம் ஆதிதிராவிடர்களின் வளையன் குளத்தை ஆழப்படுத்தி அகலப்படுத்தி சுத்தம் செய்து படித்துறை கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செங்க மங்கலம் ஆதிதிராவிடர்களின் வளையன்குளத்தை ஆழப்படுத்தி அகலப்படுத்தி சுத்தம் செய்து படித்துறை கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை. மேலும் மேற்படி பணி மேற்கொள்ள ஊராட்சிக்கு போதிய வசதி இல்லை. எதிர்வரும் ஆண்டுகளில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்ட ஊராட்சி பங்குத் தொகை ஒதுக்கீட்டில் இருந்து முன்னுரிமையின் அடிப்படையில் இவ் வேலையைச் செய்வது குறித்து பரிசீலிக்கப்படும். நிதி வசதி கிடைப்பின் வேலை மேற்கொள்ளப்படும்.

40—

ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள்.

வினா எண். 3728—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பரா:



1992 ஏப்ரல் 24]

(அ) ஆதிதிராவிடர் மக்கள் கடன் பெற்று வீடு கட்ட தாட்கோ நிறுவனம் மூலம் அரசு உதவி செய்யுமா ?

(ஆ) தொகுப்பு வீடுகள் பெற வழியில்லாத ஆதி திராவிட மக்கள் வீடு கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

(அ) ஆதி திராவிடர் மக்கள் கடன் பெற்று வீடு கட்ட தாட்கோ நிறுவனம் மூலம் அரசு உதவி செய்யும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை. 1988–89 ஆம் ஆண்டு வரை ஆதிதிராவிடர் மக்களுக்கு தாட்கோ மூலம் இலவசமாக வீடுகள் கட்டி வழங்கப்பட்டன. 1989–90 ஆம் ஆண்டு முதல் ஆதிதிராவிட மக்களுக்கு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மூலமாக முழு மானிய அடிப்படையில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்படுகின்றன.

(ஆ) தொகுப்பு வீடுகள் பெற வழியில்லாத ஆதி திராவிட மக்கள் வீடு கட்ட தாட்கோவிடம் திட்டம் ஏதுமில்லை.

41—

வேளங்கப்பட்டு காலனிக்கு மனைப்பட்டா வழங்கல்

வினா எண். 4153—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரி தொகுதியில் பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் வேளங்கப்பட்டு காலனிக்கு மனைப்பட்டா செய்து தரப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து முன்மொழிவு வரப்பெற்றதும், மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

42—

மீனவர்களுக்கு காலனி வீடு.

வினா எண். 6551—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா:

[1992 ஏப்ரல் 24

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் புதுப்பட்டினம் மீனவர்களுக்கு காலனி கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

43—

வினா எண். 6557 : திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சேதுபாவாசத்திரத்திலுள்ள பழைய மீனவர் காலனியை பழுது பார்த்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை. மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் கட்டி வழங்கப்பட்ட வீடுகளை நல்ல முறையில் பராமரித்துக் கொள்வதும், பழுதுபார்த்துக்கொள்வதும் பயனடைவோரின் கடமையாகும்.

44—

வினா எண். 6596— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் அடைக்கத்தேவன் மீனவர்கள் 50 பேருக்கு மேலும் 50 வீடுகள் கட்டித் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

45—

வினா எண். 6616— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் சின்ன மனை மீனவர்களுக்கு சர்வே எண். 110-ல் மீனவர் காலனி வீடுகள் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



1992 ஏப்ரல் 24]

விடை—

இல்லை.

46—

வினா எண் 6873— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் திருவத்தேவன் ஊராட்சி சுப்பம்மாள்சத்திரத்திற்கு மீனவர் காலனி கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

47—

வினா எண் 6910— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் குட்டத்தேவன் மீனவர் காலனிக்கு 150 வீடுகள் அனுமதிக்கப்பட்டும் 36 வீடுகள்தான் கட்டப்பட்டதால் மீதிப் பேருக்கும் காலனி வீடு கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை

இல்லை.

48—

வினா எண் 6943—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் ஊராட்சி புதுத் தெரு மீனவர்களுக்கு ''100'' காலனி வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்புகள் உள்ளதா?

விடை—

இல்லை.

49—

## கடற்கரை சாலையை தார் சாலையாக அமைத்தல்

வினா எண். 6953—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம், கழுமங்காடாவில் உள்ள கடற்கரை சாலையை தார் சாலையாக மாற்றித் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

50—

வினா எண் 6966—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மல்லிப்பட்டினம் முஸ்லீம் தெரு, ராமர் கோவில் தெருக்களில் செல்லும் கடற்கரை தார் சாலைகளை மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

## (பதிமூன்றாம் பட்டியல்)

1—

## மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

வினா எண். 3454—திருமதி அ.தி. சரஸ்வதி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சத்தியமங்கலம் தொகுதியில் உள்ள தாளவாடி ஒன்றிய குத்தியாயித்தூர், குன்றி, கூத்தம்பாளையம், மாக்கம்பாளையம் ஆகிய பகுதிகள் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ள அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்கள் மைய அரசின் முழு உதவியுடன் (90 சதவிகிதம் மானியம், 10 சதவிகிதம் கடன்) செயல்பட்டு



வருகிறது. சத்தியமங்கலம் தாலுக்கா இதுவரை மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மைய அரசால் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆகையால் பெரியார் மாவட்டத்தில் உள்ள 'சத்தியமங்கலம்' மற்றும் 'பவானி' தாலுக்காக்களை மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் கொண்டு வரும்படி முன் மொழிவு ஒன்று தமிழக அரசால் மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு மத்திய திட்டக் குழுவின் ஆய்வில் உள்ளது.

2—

## இராஜாமடத்தில் மாடு அடைக்கும் பவுண்டு அமைத்தல்.

வினா எண் 2777—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம் இராஜாமடத்தில் மாடு அடைக்கும் பவுண்டு ஒன்று அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

3—

## இராமநாதபுர மாவட்ட தரிசு நிலங்களை விளைநிலமாக்குதல்.

வினா எண் 2839—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தரிசு நிலங்கள் எத்தனை ஏக்கர் ?

(ஆ) இவற்றை விளைநிலமாக மாற்ற அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) 59006.11.5 ஹெக்டேர்.

(ஆ) எல்லா பட்டாதாரர்களையும் மேற்படி தரிசு நிலங்களை விளை நிலமாக மாற்றுவதற்கு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும்

[1992 ஏப்ரல் 24

மழையின் அளவை பொறுத்து விவசாயம் செய்யாத தரிசு நிலங்களின் அளவு கூடி குறைந்து கொண்டிருப்பதாலும் விவசாயத்துறையினரால் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளை விவசாய முறைகள் பரீட்சார்ந்த முறையில் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

4—

சிறையில் வைத்துள்ள இலங்கையைச் சேர்ந்தவர்களுக்கான நன்கொடை வசூல்.

வினா எண் 3233—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(a) Whether officials of the Revenue Department have been authorised to collect public contribution in Chengalput and Madurantagam areas to meet the expenses of Sri Lankans detained in Jails?

(b) The details thereof?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

5—

பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி அமைத்தல்.

வினா எண் 4376—டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அவினாசி தொகுதி, அன்னூரில் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ)

இல்லை,



1992 ஏப்ரல் 24]

6—

பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி அமைத்தல்.

வினா எண் 4965—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டத்தில் அத்தாணியில் மிகப் பிற்பட்டோர் நல மாணவர் இல்லம் ஒன்றைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், 1991-92-ல் ஆரம்பிக்க அரசு முயலுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ)

1991-92-ஆம் ஆண்டில் புதிய மாணவர் விடுதி திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

7—

பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி அமைத்தல்.

வினா எண். 5731—திரு. எம். எம் எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மயிலாடுதுறை நகரில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரான பள்ளி மாணவர்களுக்கு இலவச அரசு மாணவர் விடுதி துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது விடுதி துவங்கப்படும்?

விடை—

(அ) இல்லை,

(ஆ) வினாவுக்கு இடமில்லை,

பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி அமைத்தல்.

8—

வினா எண். 6168—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

[1992 ஏப்ரல் 24

(அ) போளூரில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

(அ) மற்றும் (ஆ)

தற்சமயம் இயலாது.

9—

குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரிக்கு சுற்றுச்சுவர்.

வினா எண் 1080—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரிக்குச் சுற்றுச்சுவர் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அமைத்துக் கொடுக்க அரசு முன் வருமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரியில் கிழக்கு, மேற்கு, வடக்கு ஆகிய பகுதிகளில் சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தெற்கு பகுதியில் சுற்றுச்சுவர் மீது முள்வேலி அமைப்பதற்கான கருத்துரு கல்லூரிக்கல்வி இயக்குநரிடமிருந்து பெறப்பட்டு தற்பொழுது அரசின் பரிசீலனையில் உள்ளது,

10—

கீழக்குறிச்சி நடுநிலைப்பள்ளிக்கு தளவாட சாமான்கள் வழங்கல்.

வினா எண் 1878— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மாவட்டம் மதுக்கூர் ஒன்றியம் கீழக் குறிச்சி நடுநிலைப் பள்ளிக்கு போதிய தளவாட சாமான்கள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



1992 ஏப்ரல் 24]

விடை—

தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு தளவாடங்கள் வழங்குவதற்கென அரசு, நிதி ஒதுக்கீடு ஏதும் வழங்குவதில்லை. பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் உதவியாலும் பள்ளி சீரமைப்பு மாநாடு மூலமும், பொதுமக்கள் நன்கொடை மூலமும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தளவாடச் சாமான்கள் வழங்கும் முறை நடைமுறையில் உள்ளது.

11—

நடுநிலைப் பள்ளிகளுக்கு உடற்கல்வி ஆசிரியர் நியமித்தல்.

வினா எண். 3415—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரும்பாலான நடுநிலைப் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அனைத்து நடுநிலைப் பள்ளிகளிலும் உடற்கல்வி ஆசிரியர்கள் நியமிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

(அ) அறியும். பணியிடங்கள் இல்லாததால். நிரப்பவில்லை.

(ஆ) அரசின் நிதிநிலை காரணமாக 1987—88ஆம் கல்வியாண்டிற்குப் பின்னர் நடுநிலைப் பள்ளிகட்கு கூடுதலாக புதிய உடற்கல்வியாசிரியர்கள் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படவில்லை. அரசின் நிதிநிலைமைக்கேற்ப பணியிடங்கள் வழங்கப்படும்போது நிரப்பப்படும்.

12—

கிளை நூலகத்திற்கு கட்டிட வசதி.

வினா எண். 4644—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் ஆலங்குளம் ஒன்றியத்திலுள்ள கீழ்க்கலங்கள் கிராமத்திலுள்ள கிளை நூலகத்திற்கு கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

[1992 ஏப்ரல் 24

விடை—

தற்போது இயலாது.

13—

**கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு ஜெனரேட்டர் வசதி.**

வினா எண். 734—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு ஒரு ஜெனரேட்டர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு ஜெனரேட்டர் வழங்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் பரிசீலனையில் இல்லை. அங்கு ரோட்டரிகிளப் மூலமாக அன்பளிப்பாக அளிக்கப்பட 6.5 கே.வி. ஜெனரேட்டர் ஒன்று உள்ளது.

14—

**நகரப் பேருந்தை மீண்டும் இயக்க நடவடிக்கை,**

வினா எண். 1574—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டையிலிருந்து ராசியன்காடு வழியாக சுந்தர நாயகிபுரம் வரை ஓடிக்கொண்டிருந்த நகரப் பேருந்தை மீண்டும் விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

பட்டுக்கோட்டை-நரசிங்கபுரம் (வழி) ராசியன்காடு. சுந்தரநாயகிபுரம் தடத்தின் நீளம் 16 கி.மீ. ஆகும். ராசியன்காடு பிரிவு சாலையில் இருந்து ராசியன்காடு. சுந்தர நாயகிபுரம் வழியாக நரசிங்கபுரம் செல்லும் சாலை 6 கி.மீ. தூரத்திற்கு குறுகலாகவும். பழுதடைந்த நிலையிலும் மற்றும் பேருந்து இயக்க தகுதியற்ற நிலையிலும் உள்ளது. மேலும் ராசியன்காடு கிராமத்தில் சாலையின் நடுவில் ஒரு மின்சார கம்பம் அமைந்துள்ளது. இந்நிலையில் கோரிக்கைத் தடத்தில் பேருந்து இயக்குவது தற்போது இயலாது.



1992 ஏப்ரல் 24]

15—

**நகரப் பேருந்தை மீண்டும் இயக்க நடவடிக்கை**

வினா எண். 1881—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம், ஒன்றியம், பாதரங்கோட்டை வரை தற்பொழுது வந்து கொண்டிருக்கும் சோழன் போக்குவரத்து நகரப் பேருந்தை பள்ளி மாணவர்களுக்கும் பயனளிக்க 8 சிங்கிளாக விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

பட்டுக்கோட்டை தடம் எண். 18-ஏ கீழ்க்கண்டவாறு பல் திசை வழித் தடங்களில் இயக்கப்பட்டு வருகின்றது :—

| | |
|---|---|
| பட்டுக்கோட்டை-பாதரங்கோட்டை .. ... | 4 நடைகள் |
| பட்டுக்கோட்டை-மதுக்கூர் (வழி) அதிராம் பட்டினம். | 4 நடைகள் |
| பட்டுக்கோட்டை-அதிராம்பட்டினம் ஷை .. | 6 நடைகள் |
| பட்டுக்கோட்டை-பாப்பாநாடு வழி கண்ணுகுடி | 4 நடைகள் |

எனவே பட்டுக்கோட்டை-பாதரங்கோட்டை தடத்தில் கூடுதல் நடைகள் இயக்க வேண்டும் எனில் மற்ற தடங்களில் தற்சமயம் இயக்கப்பட்டு வரும் நடைகளை குறைக்க வேண்டிய நிலை நேரிடும்,

அவ்வாறு குறைப்பதினால் அப்பகுதி பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் பிரச்சினை எழவும் கூடும். ஆகையால் பட்டுக்கோட்டை-பாதரங்கோட்டை தடத்தில் தற்சமயம் கூடுதல் நடைகள் இயக்க வாய்ப்பு இல்லை, தவிரவும் தற்பொழுது இயக்கப்படும் நடைகளே போதுமானதாக உள்ளது,

16—

**நகரப் பேருந்தை மீண்டும் இயக்க நடவடிக்கை**

வினா எண். 1945—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டை வழியாக ஓடுகின்ற நகரப் பேருந்துகளின் (சி.ஆர்.சி.) நேரத்தை ஆசிரியர்கள் மாணவர்கள் பயன் பெறுவதற்கு வசதியாக மாற்றித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1992 ஏப்ரல் 24

விடை—

பட்டுக்கோட்டை தடம் எண் 23 பல்திசை வழித்தடத்தில் பட்டுக்கோட்டை— அதம்பை (வழி) நடுவிக்கோட்டை 8 நடைகள் இயக்கப்படுகின்றன. அதம்பையில் இருந்து பட்டுக் கோட்டை பள்ளிக்குச் செல்லும் மாணவர்களுக்கு ஏற்ப தற்போதைய கால அட்டவணை உள்ளது, இக்கால அட்ட வணையினை இப்போது மாற்றினால் அதம்பை பகுதி மாணவர்களிடமிருந்து பிரச்சினை எழக்கூடும், எனவே நடுவிக்கோட்டை வழியாக இயக்கப்படும் பேருந்தின் கால அட்டவணையினை தற்போதைய சூழ்நிலையில் மாற்றி இயக்க இயலாது.

17—

நகரப் பேருந்தை மீண்டும் இயக்க நடவடிக்கை.

வினா எண் 1982—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம். திருவோணம் ஒன்றியம். வடக்கு அதம்பையிலிருந்து செல்லும் சாலையில் நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் ஒன்றியம் வடக்கு அதம்பையிலிருந்து செல்லும் சாலையில் அதம்பையிலிருந்து பாதரங்கோட்டை வரையிலான நான்கு கி.மீ. நீளமுள்ள சாலை பழுதடைந்த நிலையில் உள்ளது, இப்பகுதி பேருந்து போக்குவரத்திற்கு ஏற்றதாக இல்லை, எனவே இப்பகுதியில் நகரப் பேருந்து இயக்குவது இயலாது.

18—

நகரப் பேருந்தை மீண்டும் இயக்க நடவடிக்கை

வினா எண். 2284—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் பட்டுக் கோட்டையில் இருந்து பாலத்தளி வரையில் வருகின்ற நகரப் பேருந்தை மனவயல் சித்தாம்பாள்புரம் வரை நீட்டித்து நிரந்தர மாக்கித் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?



1992 ஏப்ரல் 24]

விடை—

கோரிக்கை வழித்தடத்தில் பாலத்தளி—சித்தாம்பாள்புரம் (வழி) மனவயல் 4 கி.மீ. தூரம் சாலை மிக குறுகலாகவும் பேருந்து இயக்கத்திற்கு தகுதியற்றதாகவும் உள்ளது. எனவே, இத்தடத்தில் பேருந்து இயக்குவது தற்போது இயலாது.

19—

முந்திரி காட்டுப் பகுதியாக உள்ள Reserve Forest-ஐ ஊராட்சிக்கு ஒப்படைத்தல்.

வினா எண் 3036—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பெரிய நாயகிபுரம் முந்திரி காட்டுப் பகுதியாக உள்ள Reserve Forest-ஐ மீண்டும் ஊராட்சிக்கு ஒப்படைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பெரிய நாயகிபுரம் முந்திரி காட்டுப் பகுதியாக உள்ள காப்புக் காட்டு பகுதியை மீண்டும் ஊராட்சிக்கு ஒப்படைக்க அரசிடம் செயற் குறிப்பு ஏதுமில்லை.

20—

ஏலத்தில் விடப்பட்ட பேருந்துகளை பயன்படுத்த உரிமம் வழங்கல்.

வினா எண் 3513—திரு. இரா நடேசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசு போக்குவரத்துக் கழகங்களில் இருந்து ஏலத்தில் விடப்படும் பேருந்துகளை லாரி அல்லது பஸ் ஆக பயன்படுத்த உரிமம் வழங்கப்படாதது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் லாரி, பஸ்களாக பயன்படுத்த உரிமம் வழங்க அரசு முன் வருமா ?

விடை—

(அ) அரசு போக்குவரத்துக் கழகங்களில் இருந்து ஏலத்தில் விடப்படும் பேருந்துகளை லாரி அல்லது பஸ் ஆக பயன்படுத்த உரிமம் வழங்கப்படுகிறது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை,

[1992 ஏப்ரல் 24

21—

ஆதமங்கலம் கிராமத்திற்கு பேருந்து வசதி.

வினா எண் 5401—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மங்களூர் தொகுதி திட்டக்குடியில் இருந்து ஆதமங்கலம் என்ற கிராமம் வரை தடம் எண் 255 என்ற பேருந்து விட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

திட்டக்குடியில் பணிமனை அமைப்பதற்கு முன்னர் எண் 255 விருத்தாசலம்—ஆத்தூர் பேருந்தின் மூலம் திட்டக்குடி—ஆதமங்கலம் தடத்தில் 5 முறைகள் இயக்கப்பட்டு வந்தன. திட்டக்குடியில் பணிமனை அமைக்கப்பட்ட பின்னர், தடம் எண் டி 4 நகரப் பேருந்துமூலம் திட்டக்குடி—ஆதமங்கலம் தடத்தில் நாளொன்றுக்கு 6 நடைகள் வீதம் முன்பு புறநகர் பேருந்து இயக்கப்பட்ட நேரத்திலேயே இயக்கப்பட்டு வருகிறது, எனவே, இப்பகுதிக்கு மேற்குறிப்பிட்டுள்ள நகரப் பேருந்து வசதியே போதுமானதாக கருதப்படுகிறது.

22—

Chief Conservator of Forests அலுவலகத்தை வேலூருக்கு மாற்ற நடவடிக்கை.

வினா எண் 5939—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சந்தனக் கட்டை திருட்டை முழுமையாக தடுக்கும் வகையில் " Chief Conservator of Forests அலுவலகத்தை வேலூருக்கு மாற்றும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

23—

நெசவாளர் குடும்பங்களுக்கு குடியிருப்பு வீடுகள் வசதி.

வினா எண் 3505—திரு. எஸ். எம். துரை : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :



1992 ஏப்ரல் 24]

தமிழ்நாடு முழுவதும் சுமார் 30 இலட்சம் மக்கள் தொகை கொண்ட நெசவாளர் குடும்பங்களுக்கு நடப்பு நிதி ஆண்டில் இரண்டாயிரம் குடியிருப்பு வீடுகள் கட்டித்தர திட்டமிட்டுள்ளதை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை,

24—

புதிய மின்சார ட்ரான்ஸ்பார்மர் அமைத்தல்,

வினா எண் 1854—திரு, ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வ) மேலக்கொள்ளுக்காட்டிற்கு மின்சாரம் வழங்க புதிய ட்ரான்ஸ்பார்மர் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மேலக்கொள்ளுக்காட்டிற்கு 2.5 கி. மீ. தூரத்தில் உள்ள பாதரங்கோட்டை என்ற பகுதியில் அமைந்துள்ள 63 கி.வே.ஆ. திறன் கொண்ட கொள்ளுக்காடு மின் பகிர்மானமாற்றி மூலம் மின்சக்தி சீராக வழங்கப்படுகிறது. விவசாய மின் இணைப்புகள் நான்கும், மேல் நிலை குடிநீர்த் தொட்டி இணைப்பு ஒன்றும், தொழில் மின் இணைப்பு ஒன்றும், தெரு விளக்குகள் முப்பதும், வீட்டு மின் இணைப்புகள் எழுபதும் இந்த மின் மாற்றியுடன் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 15 வீட்டு மின் இணைப்புகளும், 11 தெரு விளக்குகளும் மேலக்கொள்ளுக் காடு பகுதியைச் சேர்ந்தவை ஆகும். மேலக்கொள்ளுக் காட்டுப் பகுதியில் மின் அழுத்தம் இயல்பாக உள்ளதால், இங்கு புதிய மின் மாற்றி அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

25—

புதிய மின்சார ட்ரான்ஸ்பார்மர் அமைத்தல்.

வினா எண் 1866—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வ) யைச் சேர்ந்த கருப்பட்டித் தெருவிலுள்ள 'ட்ரான்ஸ்பார்மரை' மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1992 ஏப்ரல் 24

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங் கோட்டையைச் சேர்ந்த கருப்பட்டித் தெருவில் உள்ள 11 கிலோ வோல்ட், 63 கிலோ வோல்ட் ஆம்பியர் பளுக்கொண்ட மின் பகிர் மாற்றியில் (ட்ரான்ஸ்பார்மர்) தற்போது விவசாய பம்பு செட்டுகள் மூன்றும் மற்றும் 45 வீட்டு மின் இணைப்புகளும் இணைக்கப்பட்டு நன்றாக இயங்கி வருவதால் இந்த மின் பகிர் மாற்றியை மாற்ற வேண்டிய அவசியம் ஏதும் இல்லை.

26—

பைங்காட்டு ஏரியை ஆழப்படுத்துதல்.

வினா எண் 1929—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கழுகு புலிக்காடு பைங்காட்டு ஏரியை புல்டோசர் வைத்து தூர் எடுத்து ஆழப்படுத்தித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

27—

கழுகுப்புளிக்காடு குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு வசதி.

வினா எண் 1930—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கழுகுப் புலிக்காடு குடிசைகளுக்கு ஒற்றை விளக்குப் போட்டுத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கழுகுப் புலிக்காடு குடிசைகளுக்கு ஒரு விளக்கு திட்டத்தின்கீழ் இலவச மின் இணைப்பு கோரி இதுவரை விண்ணப்பம் ஏதும் வாரிய அலுவலகத்திற்கு வரவில்லை. அவ்வாறு வருமாயின் அவைகள் ஆய்வு செய்யப்பட்டு. குடிசை மின் இணைப்பு பெற தகுதிபெறும் விண்ணப்பங்களின் பதிவு வரிசை அடிப்படையில் அப்பகுதிக் கான ஆண்டு இலக்கீட்டிற்கு ஏற்ப மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.



1992 ஏப்ரல் 24]

28—

கா. உஞ்சிய விடுதியின் ட்ரான்ஸ்பார்மரை மாற்றி அமைத்தல்.

வினா எண் 2009—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், கா. உஞ்சிய விடுதிக்கு வழங்கப்படும் மின்சாரம் பற்றாக்குறையாக இருப்பதால் நம்பிவயலிலுள்ள ட்ரான்ஸ்பார்மரை மாற்றி புதிதாக அமைத்துத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், கா. உஞ்சிய விடுதிக்கு 11 கிலோ வோல்ட்/63 கிலோ வோல்ட் ஆம்பியர் பளு கொண்ட காட்டாத்தி–1 மின் பகிர் மாற்றியிலிருந்து கா. உஞ்சிய விடுதிக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. நம்பி வயலில் உள்ள மின் பகிர் மாற்றியிலிருந்து அல்ல. காட்டாத்தி–1 மின் பகிர்மாற்றி 33 தெரு விளக்குகளுக்கும், 6 விவசாய பம்பு செட்டுகளுக்கும், ஒரு மேல் நிலை தொட்டி மற்றும் 65 வீட்டு மின் இணைப்புகளுக்கும் போதுமான பளு திறனுடன் நன்கு இயங்கி வருவதால் தற்பொழுது கா. உஞ்சிய விடுதிக்கு மின்சாரம் வழங்கப்படும் மின் பகிர் மாற்றி (ட்ரான்ஸ்பார்மரை) யை மாற்றும் உத்தேசம் ஏதும் இல்லை.

29—

ஊராட்சிகளுக்கு தெரு விளக்கு வசதி.

வினா எண் 2149—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் பழைய நகரம் ஊராட்சி தொந்துப் புளிக்காட்டிற்கு தெரு விளக்கு விஸ்தரிப்பு கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

பழைய நகரம் ஊராட்சி தொந்துப் புளிக்காட்டிற்கு 15 (1.40 வாட் குழல் விளக்குகள்) தெரு விளக்குகள் பொருத்தி ஏற்கனவே மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. விளக்குகள் நன்றாக இயங்கி வருகின்றன. தொந்துப் புளிக்காட்டில் 25 கூடுதல் தெரு விளக்குகள் பொருத்தக் கோரி விண்ணப்பம் ஒன்று 9–7–1987-ல் பெறப்பட்டது. இந்த விண்ணப்பத்திற்கு முன்னால் 164 தெரு விளக்குகள் வேண்டி 7 விண்ணப்பங்கள் மின் வாரியத்தின் சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலகத்தில் நிலுவையிலுள்ளன. 4–10–1986-க்கு முன்னர் பெறப்பட்ட

விண்ணப்பங்களுக்கு பணிகள் தற்பொழுது மின் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1–9–1991 அன்று நிலுவையிலுள்ள எல்லா தெருவிளக்கு களுக்கான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு 31–3–1993க்குள் தெரு விளக்குகள் பொருத்தப்படும்.

30—

ஊராட்சிகளுக்கு தெரு விளக்கு வசதி.

வினா எண் 2186—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வாட்டாத்திக்கோட்டை ஊராட்சி, வழுதலை வட்டம் கிராமத்திற்கு தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

வாட்டாத்திக்கோட்டை ஊராட்சி, வழுதலை வட்டம் கிராமத்தில் நான்கு தெரு விளக்குகள் பொருத்தி ஏற்கனவே மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. வழுதலை வட்டம் உள்ளிட்ட வாட்டாத்திக்கோட்டை ஊராட்சியில் 15 கூடுதல் தெரு விளக்குகள் பொருத்தக் கோரி விண்ணப்பம் ஒன்று 6–5–1987ல் பெறப்பட்டுள்ளது. மேற்கூறிய விண்ணப்பத்திற்கு முன்னரே 222 தெரு விளக்குகள் வேண்டி 6 விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட மின் வாரியத்தின் பிரிவு அலுவலகத்தில் நிலுவையிலுள்ளது.

தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் 1–9–1991 அன்று நிலுவையிலுள்ள எல்லா தெரு விளக்குகளுக்கான விண்ணப்பங்களும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 31–3–1993-க்குள் இத் தெரு விளக்குகள் பொருத்தப்படும்.

31—

ஊராட்சிகளுக்கு தெரு விளக்கு வசதி.

வினா எண். 2339—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காயாவூர் ஆதி திராவிடர் தெருவிற்கு தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காயாவூர் ஆதி திராவிடர் தெருவிற்கு 10 தெரு விளக்குகள் பொருத்தி மின் வசதியளிக்கப்பட்டு விட்டது. மேலும் இப்பகுதிக்கு கூடுதலாக தெரு விள்க்கு பொருத்தக் கோரி விண்ணப்பம் ஏதும் மின் வாரிய அலுவலகத்திற்கு வரவில்லை.





32—

ஊராட்சிகளுக்கு தெரு விளக்கு வசதி.

வினா எண் 2761—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், முதல்சேரி கீழத் தெருவிற்கு தெரு விளக்கு விரிவு படுத்திக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

பட்டுக்கோட்டை ஒன்றியம், முதல்சேரி கிராமத்தில் ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள 22 தெரு விளக்குகள் நன்கு எரிந்து வருகின்றன. முதல்சேரி கிராமத்திற்கு கூடுதல் விளக்குகளுக்கான விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை.

33—

ஏரியை ஆழப்படுத்துதல்.

வினா எண் 2764—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், சேண்டாகோட்டையில் உள்ள அகரவயலில் உள்ள பெரிய ஏரியை புல்டோசர் வைத்து அகலப்படுத்தவும் ஆழப்படுத்தவும் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

34—

செயற் பொறியாளர் கோட்ட அலுவலகம் அமைத்தல்.

வினா எண் 3549—திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரத்தில் செயற் பொறியாளர் (பொதுப் பணித்துறை) கோட்ட அலுவலகம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இக் கருத்துருவின் மீது பரிசீலனைக்குப் பின்னர் முடிவெடுக்கப்படும்.

[1992 ஏப்ரல் 24

35—

ராதாபுரம் தொகுதியில் பழுதடைந்த சாலைகளை சரி செய்ய நடவடிக்கை.

வினா எண் 3670—திருமதி. ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் தொகுதி விஜயாபதியில் இருந்து வயிராவி கிணறு வழியாக கடற்கரை சாலையில் போய்ச் சேரும் சாலையை பழுது பார்க்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் சாலையானது கீழ்க்காணும் மூன்று அரசு இதர மாவட்ட சாலைகளாக அமைந்து உள்ளது :—

(1) விஜயாபதி—இடிந்தக்கரை சாலை கி.மீ. 0/0—2/2.

(2) இடிந்தகரை—வைராவி கிணறு சாலை கி.மீ. 0/0—2/0.

(3) திருச்செந்தூர்—கன்னியாகுமரி சாலை கி.மீ. 62/4-ல் இருந்து வயிராவி கிணறு சாலை கி.மீ. 0/0—1/0.

மேற்காணும் மூன்று அரசு இதர மாவட்ட சாலைகளில் வரிசை எண் 1 மற்றும் 2-ல் உள்ள சாலைகள் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் நன்கு பராமரிக்கப்படுகிறது. வ. எண் 3ல் உள்ள சாலையில் ரூ. 1·30 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணி நடப்பு நிதியாண்டிலேயே செய்துமுடிக்க தக்க நடவடிக்கை. எடுக்கப்பட்டுள்ளது.

36—

ராதாபுரம் தொகுதியில் பழுதடைந்த சாலைகளை சரி செய்ய நடவடிக்கை.

வினா எண் 3672—திருமதி. ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் தொகுதி நாவலடி—உவரி கடற்கரை சாலையை பழுது பார்க்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் சாலையானது திருச்செந்தூர்—கன்னியாகுமரி சாலையில் கி.மீ. 38/6—47/2 வரையுள்ள பகுதியாகும். இச் சாலை நெடுஞ்சாலைத் துறை



1992 ஏப்ரல் 24]

யின் மூலம் பராமரிக்கப்படும் பெரிய மாவட்ட சாலையாகும். இந்த சாலையில் கி.மீ. 47/2-ல் நாவலடி என்கிற கிராமமும் மற்றும் கி.மீ. 38/8-ல் நாடார் உவரி என்கின்ற கிராமமும் உள்ளன. தற்போது இச்சாலை தார் சாலையாக உள்ளது. இந்த சாலையில் கி.மீ. 42/0—47/0 வரை பழுதடைந்துள்ள பகுதிகளை ரூ. 5.28 லட்சம் மதிப்பீட்டில் சீர் செய்யப்பட உள்ளது. மேலும், கி.மீ. 38/6—42/0 வரையுள்ள சாலை பகுதிகளை சீர் செய்ய சுமார் ரூ. 4.50 லட்சம் தேவைப்படுகிறது. இந்தச் சாலைப் பகுதியை சீர் செய்ய 1992-93 ஆம் ஆண்டில் ஆண்டு பராமரிப்பு நிதியின் கீழ் எடுத்துச் செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

37—

கனியாம்பூண்டியில் குட்டை அமைத்தல்.

வினா எண். 4255—டாக்டர் மு. சினியம்மாள் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோயம்புத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம், கனியாம் பூண்டி க. ச. எண். 230/1 குட்டைஅமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது.

விடை—

மேற்கண்ட திட்டத்திற்கு 1989-90 ஆம் ஆண்டு விலை விகிதப்படி ஒரு மதிப்பீடு ரூ. 16.40 இலட்சங்களுக்கு பரிசீலிக்கப் பட்டது. ஆனால் பயன் செலவு விகிதம் 0.7 : 1 என்ற நிலையில் இத்திட்டம் குறித்த விவரப்படி இலாபகரமானதாக இல்லாததாலும், மாவட்ட ஆட்சித் தலைவர் இத்திட்டத்திற்கு ஒத்திசைவு வழங்காததாலும் கைவிடப்பட்டது.

38—

தேவர் மலை கிராமத்திற்கு தெரு விளக்கு வசதி.

வினா எண். 5658.—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், தேவர்மலை கிராமத்திற்கு தெரு விளக்கு இல்லாது உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தெரு விளக்கு அமைத்துக் கொடுக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பெரியார் மாவட்டம் தேவர்மலை கிராமத்தில் ஏற்கனவே ஐந்து (5) தெரு விளக்குகள் போடப்பட்டு எரியும் நிலையில் உள்ளன. 27—6—1987 அன்று மேலும் இப்பகுதியில் இரு கூடுதல் விளக்குகட்கான மறு செய்யப்பட்டு

உள்ளது. இவ்விளக்குகள் அரசின் சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. 1992-93 ஆம் ஆண்டில் மின் இணைப்பு இவ்விரு கூடுதல் தெரு விளக்குகளுக்கு வழங்கப்படும்.

39—

அந்தியூர் தொகுதியில் மின் விளக்கு வசதி.

வினா எண். 5676—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அந்தியூர் தொகுதியில் பர்கூர் மூலையூரில் மின் விளக்கு வசதி அமைத்துக் கொடுக்க அரசு ஆணை பிறப்பிக்குமா ?

விடை—

அந்தியூர் தொகுதியில் பர்கூர் மூலையூரில் ஒரு தெரு விளக்கு அமைக்கக் கோரி மின் வாரியத்திடம் விண்ணப்பம் வந்துள்ளது. இந்த ஒரு தெரு விளக்கிற்கு அரசின் தெரு விளக்குகளுக்கான சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1992-93 ஆம் ஆண்டில் மின்வசதி செய்து தரப்படும்.

40—

மேல்நிலைத் தொட்டி வசதி.

வினா எண். 671—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம் நாகரசம்பேட்டை ஊராட்சியில் மேல்நிலைத் தொட்டி கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை. திருவிடைமருதூர் ஒன்றியம், நாகரசம்பேட்டை ஊராட்சியில் மொத்தம் எட்டு குடியிருப்புகள் உள்ளன. இதன் மக்கட் தொகை 1,800. இது குடிநீர் பிரச்சனை உள்ள முழுமையாக குடிநீர் வசதி பெறாத கிராமம். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் விதிக்கு உட்பட்டு முன்னுரிமைப்படி வரும் நிதியாண்டுகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர ஆவன செயயப்படும்.

41—

வினா எண். 674—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:





தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் ஒன்றியம் திருச்சேறை ஊராட்சியில் மேல்நிலைத் தொட்டி அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

ஆம். உள்ளது. திருச்சேறை கிராமம் திருவிடைமருதூர் ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். மக்கட்தொகை 1,700 ஆகும். நடப்பு நிதியாண்டில் ஆயுட் காப்பீட்டுக் கழக நிதியுதவியுடன் ரூ. 3.71 இலட்சங்களுக்கு மின்விசைத் திட்டம் அனுமதி பெறப்பட்டுள்ளது. 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படலாம்.

42—

கப்பிச்சாலை வசதி.

வினா எண். 2650—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், சேண்டாக்கோட்டை ஊருக்குள் செல்லும் சாலையை மராமத்து செய்து கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், சேண்டாக்கோட்டை ஊருக்குள் செல்லும் சாலை 3 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இது தற்சமயம் கருங்கல் கப்பிச் சாலையாகத்தான் உள்ளது. இதனை மராமத்து செய்திட ரூ. 2.00 இலட்சம் செலவாகும். இதற்கு தற்சமயம் செயற் குறிப்பு ஏதுமில்லை.

43—

வினா எண். 2651—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், தொக்காளிக்காட்டிற்கும், அதிராம்பட்டினத்திற்கும் இடையில் உள்ள சாலையை மராமத்து செய்து சாலை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

[1992 ஏப்ரல் 24

விடை—

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், தொக்காளிக் காட்டிற்கும் அதிராம்பட்டினத்திற்கும் இடையில் உள்ள சாலை 5.4 கி.மீ. நீளமுடைய கருங்கல் கப்பிச் சாலையாகும். இச் சாலையில் அமைந்துள்ள பழுதடைந்த இரண்டு குழாய் பாலங்களை செப்பனிட்டு, தார்ச்சாலையாக மாற்றிட சுமார் ரூ. 10.00 இலட்சம் செலவாகும். இதற்கான செயற் குறிப்பு ஏதும் தற்சமயம் இல்லை.

44—

வினா எண். 2689—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் ஆற்றுக்கரை சாலையை செப்பனிட்டு கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், செங்கமங்கலம் ஆற்றங்கரை சாலை 1.2 கி.மீ. நீளமுள்ள கிப்புக் கப்பிச் சாலையாகும். இதனை கப்பிச் சாலையாக மாற்ற ரூ. 1 இலட்சம் செலவாகும். இதற்கு தற்சமயம் செயற் குறிப்பு ஏதுமில்லை.

45—

கப்பிச்சாலை வசதி.

வினா எண் 2692 திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் செங்கமங்கலம் கிழக்காடு செல்லும் ஆற்றுக்கரை சாலையை செப்பனிட்டு கப்பிச்சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் செங்கமங்கலம் கிழக்காடு செல்லும் ஆற்றுக்கரை சாலை 3.5 கிலோ மீட்டர் நீளமுள்ள மண் சாலையாகும். இதனை கப்பிச்சாலைாக மாற்றியமைக்க ரூ. 3.5 லட்சம் செலவாகும். தற்சமயம் இதற்கான திட்டம் ஏதுமில்லை.



1992 ஏப்ரல் 24]

46—

வினா எண். 2735 – திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பிள்ளையார் திடலில் தெற்கு மீனவர் காலனிக்கும் வடக்கு மீனவர் காலனிக்கும் செல்லும் சாலையை தார்ச்சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் பிள்ளையார் திடலில் தெற்கு மற்றும் வடக்கு மீனவர் காலனிக்குச் செல்லும் சாலையில் பேருந்து போக்குவரத்து இல்லாததால். இதனை தார்ச்சாலையாக மாற்ற தற்சமயம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

47—

வினா எண். 2744— திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், மாளியக்காடு ஊருக்குள் செல்லும் சாலையை தார்ச்சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், மாளியக்காடு ஊருக்குள் செல்லும் சாலை 3.00 கிலோமீட்டர் நீளமுடையது. இதில் 1 கிலோ மீட்டர் கருங்கல் சாலை, எஞ்சியுள்ள 2 கிலோ மீட்டர் செங்கப்பிச்சாலையாகும். இதனை தார்ச்சாலையாக மாற்றிட தற்சமயம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

48

கப்பிச்சாலை வசதி.

வினா எண் 2768—திரு ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கோட்டாகுடிக்கும், பள்ளிகொண்டானுக்கும் இடையில் உள்ள இணைப்புச் சாலையை பராமத்து செய்துகொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1992 ஏப்ரல் 24

விடை—

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கோட்டாக்குடிக்கும் பள்ளிகொண்டானுக்குப் இடையில் உள்ள இணைப்புச் சாலை 3.2 கிலோ மீட்டர் நீளமுடைய இனம் பிரிக்கப்படாத சாலையாகும். இச்சாலையில் குறுக்கே மகாராஜசமுத்திரம் ஆறு குறுக்கிடுகிறது. இவ்வாற்றில் தரைப்பாலம் அமைத்து மராமத்து செய்துதர ரூ. 4 இலட்சம் செலவாகும். தற்போது இதற்கான செயற் குறிப்பு ஏதுமில்லை.

49—

வினா எண் 2772—திரு ஆர். சிங்காரம்— மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், இராஜாமடத்திலிருந்து கீழத்தோட்டம் ஏரிப்புறக்கரை வழியாக அதிராம்பட்டினம் மெயின்சாலை வரை உள்ள கப்பிச்சாலையை செப்பனிட்டு தார்ச்சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், இராஜாமடத்திலிருந்து கீழத்தோட்டம் ஏரிப்புறக்கரை வழியாக அதிராம் பட்டினம் மெயின் சாலைவரை உள்ள சாலை 7.6 கிலோ மீட்டர் நீளமுடைய கருங்கல் ஜல்லி சாலையாகும். இதனைத் தார்ச் சாலையாக மாற்றிட சுமார் ரூ 12.50 இலட்சம் செலவாகும். இதற்கு தற்சமயம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

50—

வினா எண் 2781—திரு ஆர். சிங்காரம் ; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக் கோட்டை ஒன்றியம், தொக்காளிக்காட்டில் ஊருக்குள் செல்லும் சாலையை கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், தொக்கா க்காடு ஊருக்குள் செல்லும் சாலை, தற்போது கருங்கல் கப்பிச் சாலையாகத்தான் உள்ளது. எனவே இது பற்றிய செயற்குறிப்பு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் - வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு ;— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)



[1992 ஏப்ரல் 24]

(பன்னிரெண்டாம் பட்டியல்).

வாக்குச்சாவடி அமைத்தல்.

வினா எண், 2300—திரு, ஆர், சிங்காரம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம். பேராவூரணி இடையாத்தி (தெற்கு) ஆதிதிராவிடர் தெருவிலுள்ள பள்ளிக்கூடத்தில் வாக்குச்சாவடி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

'இல்லை',

2—

வரதட்சணைக் கொடுமையைத் தடுக்க அரசு நடவடிக்கை,

வினா எண். 3537—டாக்டர் கே. குமாரதாஸ் : மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கடந்த மூன்று மாதங்களில் வரதட்சணைக் கொடுமையால் இறந்தவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) இதைத் தடுக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) 20 (இருபது),

(ஆ), (1) வரதட்சணைக் கொடுமையினால் ஏற்படும் மரண வழக்குகளில், 3 ஆண்டிலிருந்து ஆயுள் தண்டனைவரை வழங்கத் தக்க வகையில் சட்டம் திருத்தப்பட்டு. தீவிரப்படுத்தப்பட்டுள்ளது,

(2) மாவட்டங்களிலும் மற்றும் சென்னை நகரிலும் புலனாய்வுத்துறை குற்றப்பிரிவு, செய்திகள் சேகரித்து, வழக்குத் தொடுத்து நீதி மன்றத்தில் வழக்குகள் முடியும்வரை கண்காணித்து வருகிறது,

(3) பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் பெண்களுக்கான இயக்ககங்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள்மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படுகிறது,

(4) பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் கொடுமைகள் குறித்த வழக்குகளை புலனாய்வு செய்து நீதிமன்ற நடவடிக்கையெடுப்பதில் உதவிட ஒவ்வொரு மாவட்டத்திலும். சென்னை நகரிலும் ஆலோசனைக் குழுக்களை அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

[1992 ஏப்ரல் 24

(5) வரதட்சணைக் கொடுமைகள் பற்றிய மனுக்களை விசாரிப்பதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும். ஒரு ஆய்வாளர்/ஒரு உதவி ஆய்வாளர் மற்றும் 2 அல்லது 3 தலைமைக் காவலர்கள் அடங்கிய தனிப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது,

(6) வரதட்சணைக் கொடுமைகள் மரண வழக்குகள் கோட்ட வருவாய் அலுவலர்/உதவி ஆட்சியர் அளவில் விசாரிக்கப்படுகிறது, இரு மருத்துவர்கள் கொண்ட குழு பிரேத பரிசோதனைகளை செய்கிறது,

(7) திருமணமான 7 ஆண்டுகளுக்குள் ஐய்யப்பாடான முறையில் இறக்கும் ஒவ்வொரு பெண்ணின் வழக்கும் காவல்துறை துணை கண்காணிப்பாளர் பதவி நிலைக்குக் குறையாத அலுவலர் ஒருவரால் விரிவான புலனாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

3—

<u>ஆட்டையாம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிக்கருகில் உள்ள மயான நிலத்தின் ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்தல்,</u>

<u>வினா எண், 4288—திரு, க, அர்ச்சுனன் :</u> மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், ஆட்டையாம்பட்டி பேரூராட்சிகளில் அரசு உயர்நிலைப பள்ளிக்கு அருகில் உள்ள மயான நிலத்தை சிலர் ஆக்கிரமித்து கொண்டிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) அவர்களை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

விடை—

(அ) ஆம்,

(ஆ) சேலம் மாவட்டம், சேலம் வட்டம், ஆட்டையாம்பட்டி கிராமம். அரசினர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு அருகில் ச.நெ. 4215 ஏ-ல் 2.65,0 ஹெக்டேர் பரப்புள்ள நிலம் கல்லாங்குத்து புறம்போக்கு என் நிலவகைப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது, இந்த நிலத்தின் ஒரு பகுதியில் சுமார் 0.50 ஏக்கர் நிலத்தை தான் மயானமாக மேற்படி கிராம மக்கள் உபயோகித்து வருகிறார்கள், மீதி ஒரு பகுதியில் தாழ்த்தப்பட்ட மற்றும் இதர வகுப்பினர்கள் (81 குடும்பத்தினர்) சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலாக கூரை வீடுகள் மற்றும் வில்லை வீடுகள் கட்டி குடியிருந்து வருகிறார்கள், இந்த மயானத்தை மேற்படி குடியிருப்புகளில் உள்ளவர்களும். இதர பொதுமக்களும் பயன்படுத்தி வருகின்றனர், மேற்படி ஆக்கிரமிப்புதாரர்கள் 81 குடும்பங்களும், பாறைகள் அடங்கிய பகுதியில்தான் வீடுகள்



1992 ஏப்ரல் 24]

கட்டி குடியிருந்து வருகின்றனர், இவர்களை அப்புறப்படுத்தினாலும். இந்த இடத்தை மயானமாகப் பயன்படுத்த இயலாது, எனவே அவர்களை அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் தற்போது அரசுக்கு இல்லை.

4—

<u>பனை ஏறும் தொழில் பிரிவினரை பிற்படுத்தப்பட்டவர் பட்டியலில் சேர்த்தல்,</u>

வினா எண், 67—<u>திருமதி ரமணி நல்லதம்பி</u> : மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

"பனை ஏறும் தொழில் புரியும் பிரிவினரை மிகவும் பிற்படுத்தப்பட்டவர் பட்டியலில் சேர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?"

விடை—

தற்பொழுது இல்லை.

5—

<u>சுந்தம்பட்டி கிராம நூலகத்திற்கு புதிய கட்டிட வசதி.</u>

வினா எண். 6356— <u>திரு. சி. சுவாமிநாதன்</u> : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை தொகுதியில் கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தில் சுந்தம்பட்டி கிராமத்தில் நூலகம் அமைப்பதற்கு அனுமதி அளித்தும் அதற்கு கட்டிடம் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் எப்போது புதிய கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் ?

விடை—

(அ) சுந்தம்பட்டி கிராமத்தில் வாடகையின்றி இலவசமாக அளிக்கப்பட்ட கட்டிடத்தில் பகுதிநேர நூலகம் ஒன்று செயல்பட்டு வருகிறது என்பதை அரசு அறியும்.

(ஆ) சொந்தக் கட்டிடம் கட்ட தற்போது இயலாது.

6—

<u>காசநோய் மருத்துவமனைகள்.</u>

வினா எண். 2270.—<u>டாக்டர் எஸ். சுந்தரராஜ்</u> : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 24

(அ) தமிழ்நாட்டில் உள்ள டி.பி. சானிடோரியம் எத்தனை ?

(ஆ) அதில் உள்ள படுக்கைகள் எத்தனை ?

விடை—

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் எட்டு அரசு காசநோய் சானிடோரியங்களும் இரண்டு தனியார் காசநோய் சானிடோரியங்களும் இயங்கி வருகின்றன.

(ஆ) அதில் உள்ள படுக்கைகள் பற்றிய விவரம் வருமாறு ; —

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணித்துறை இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ளவை.

| | | |
|---|---|---|
| 1. | அரசு காசநோய் சானிடோரியம், பெண்ணத்தூர், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம். | 142 |
| 2. | அரசு காச நோய் சானிடோரியம் கேப்பர் ஹில்ஸ், தென் ஆற்காடு மாவட்டம் | 80 |
| 3. | அரசு காசநோய் சானிடோரியம், சோமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் | 50 |
| 4. | அரசு காசநோய் சானிடோரியம், திருச்சிராப்பள்ளி | 103 |
| 5. | அரசு காசநோய் மருத்துவமனை, நாகர்கோயில் | 400 |

மருத்துவக் கல்லூரி இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ளவை ;

| | | |
|---|---|---|
| 6. | அரசினர் மார்பு நோய்கள் மருத்துவமனை, தாம்பரம், சென்னை | 776 |
| 7. | அரசினர் மார்பு நோய்கள் மருத்துவமனை, ஓட்டேரி, சென்னை | 222 |
| 8. | அரசினர் மார்பு நோய்கள் மருத்துவமனை, தோப்பூர், மதுரை | 183 |



1992 ஏப்ரல் 24]

தனியார் டி.பி. சானிடோரியங்கள் ;

| | | |
|---|---|---|
| 1. | மகாத்மா காந்தி நினைவு காசநோய் சானிடோரியம், செங்கிப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம் | 314 |
| 2. | இராமதிக்கம் டி.பி. சானிடோரியம், பெருந்துறை, பெரியார் மாவட்டம் | 360 |

7—

நகர பேருந்து வசதி.

வினா எண். 2983— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பட்டங்காடு வழியாக நகரப் பேருந்து விட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

பேராவூரணி பெருமகளூர் செல்லும் பிரதான சாலையில் இருந்து 2 கி.மீ. தூரத்தில் பட்டங்காடு கிராமம் அமைந்துள்ளது. பட்டங்காடு செல்லும் சாலை பழுதடைந்து பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. மேலும் பிரதான சாலையில் இருந்து பேருந்து 2 கி.மீ. தூரம் உள்ளே சென்று திரும்பி வந்தால் நேர்வழிப் பயணிகளுக்கு வசதிக் குறைவும், கூடுதல் பயணக் கட்டணம் வசூலிக்கவும் நேரிடும். எனவே பட்டங்காடு வழியாக பேருந்து இயக்குவது உகந்தது அல்ல.

8—

இராமநாதபுரத்திற்கு வன அலுவலகம் மாற்றுதல்.

வினா எண். 3548— திரு. மு. தென்னவன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக் விடையளிப்பாரா :

(அ) சிவகங்கையை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் இராமநாதபுரம் மாவட்ட வன அலுவலகம், இராமநாதபுரத்திற்கு கொண்டு வரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) இது பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்பொழுது இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[1992 ஏப்ரல் 24

9—

மின்சார வாரிய கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம் மாற்றுதல்.

வினா எண். 1697—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மின்சார வாரிய கண்காணிப்புப் பொறியாளர் [Superintending Engineer Tamil Nadu Electricity Board] அலுவலகம் பரமக்குடிக்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மதுரையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்ட மேற்பார்வைப் பொறியாளர், இராமநாதபுரம் மின்பகிர்மான வட்ட அலுவலகம் அண்மையில் சிவகங்கைக்கு மாற்றப்பட்டு 10–9–1991 முதல் சிவகங்கையை புதிய தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. எனவே, அந்த அலுவலகத்தை பரமக்குடிக்கு மாற்றும் ஏற்பாட்டிற்கு இடமில்லை.

10—

இலவச மின்விளக்கு வசதி.

வினா எண். 1736—திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஒரு வீட்டிற்கு ஒரு இலவச விளக்கு திட்டம் நாமக்கல் பகுதி மக்களுக்கு கிடைக்கும்படி செய்வதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்பு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராம பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட கீழ்க்கண்ட குடிசை வீடுகளுக்கு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1. 200 சதுர அடிக்கு மேற்படாத, மண் சுவற்றால் ஆன கூரை வேய்ந்த குடிசைகள்.

2. அரசு திட்டங்களான என்.ஆர்.இ.பி./ ஆர். எல். இ. ஜி.பி./தாட்கோ/ ஜவகர் வேலை வாய்ப்பு திட்டம் மற்றும் காமராசர் ஆதிதிராவிடர் வீட்டு வசதி திட்டங்களின் கீழ் கட்டப்படும் சிறிய வீடுகள்.



1992 ஏப்ரல் 24]

இத்திட்டத்தின் கீழ் நாமக்கல் கிராம பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட பகுதி மக்களும் தொடர்ந்து பயன் அடைந்து வருகின்றனர்.

11—

ஆதிதிராவிடர் காலனிகளுக்கு ஒரு விளக்கு வசதி

வினா எண். 1862.—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (தெற்கு) ஆதிதிராவிடர் காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்கு இணைப்புத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (தெற்கு) ஆதிதிராவிடர் காலனி வீடுகளுக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்பு கோரி இது வரை விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்திற்கு வரவில்லை. அவ்வாறு வருமாயின் தகுதிபெறும் குடிசைகளுக்கு விண்ணப்பங்களின் பதிவு வரிசை அடிப்படையில் அப்பகுதிக்கான ஆண்டு இலக்கீட்டிற்கேற்ப மின்வசதி வழங்க ஆவன செய்யப்படும்.

12—

தெருவிளக்கு வசதி அமைத்தல்.

வினா எண். 1923—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம் கழுகுப்புளிக்காடு கீழ்பகுதி மக்களுக்கு தெருவிளக்கு விஸ்தரித்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம் கழுகுப்புளிக்காடு கீழ்பகுதியில் 45 தெருவிளக்குகள் பொருத்தக்கோரி விண்ணப்பம் ஒன்று மின்வாரிய அலுவலகத்தில் நிலுவையில் உள்ளது. அதற்கான விஸ்தரிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. மேற்படி விஸ்தரிப்பு வேலைகள் முடிந்தவுடன் இப்பகுதிக்கான ஆண்டு இலக்கீட்டிற்கேற்ப 31–3–1992–க்குள் மின் வசதி வழங்க ஆவன செய்யப்படும்.

[1992 ஏப்ரல் 24

13—

## ஒரு விளக்குத் திட்டம்.

வினா எண். 1936—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் நடுவிக்கோட்டையைச் சேர்ந்த செக்கடிக்கொல்லை குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு போட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டையைச் சேர்ந்த செக்கடிக்கொல்லை பகுதி குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்பு கோரி விண்ணப்பம் ஏதும் இதுவரை மின்வாரிய அலுவலகத்திற்கு வரவில்லை. விண்ணப்பங்கள் வரப்பெறுமாயின் ஒரு விளக்கு திட்டதில் தகுதி பெறும் குடிசைகளுக்கு பதிவு வரிசை அடிப்படையில் அப்பகுதிக்கான ஆண்டு இலக்கீட்டிற்கு ஏற்ப மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

14—

## ஒரு விளக்குத் திட்டம்.

வினா எண். 1938—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கொண்டிக்குளத்திலுள்ள குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு போட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கொண்டிக்குளம் பகுதிக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்பு கோரி இதுவரை விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்திற்கு வரவில்லை. விண்ணப்பங்கள் வரப்பெறுமாயின் ஒரு விளக்கு திட்டத்தில் தகுதிபெறும் குடிசைகளுக்கு பதிவு வரிசை அடிப்படையில் அப்பகுதிக்கான ஆண்டு இலக்கீட்டிற்கு ஏற்ப மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.



1992 ஏப்ரல் 24]

15—

வினா எண். 1980—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை தெற்கைச் சேர்ந்த நேதாஜி நகருக்கு குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை தெற்கு நேதாஜி நகரில், ' ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு ' திட்டத்தின் கீழ் இலவச மின்சாரம் கோரி விண்ணப்பங்கள் ஏதும் மின் வாரிய அலுவலகத்தில் தற்போது நிலுவையில் இல்லை. அவ்வாறு குடிசை விண்ணப்பங்கள் வருமாயின் அவைகள் முறையாக பதிவு செய்யப்பட்டு இப்பகுதிக்கு நிர்ணயிக்கப்பட்ட வருடாந்திர இலக்கீட்டிற்கு ஏற்ப விண்ணப்பங்கள் பதிவு வரிசையின்படி ஒற்றை விளக்குகள் பொருத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

16—

## தெரு விளக்கை விஸ்தரித்தல்.

வினா எண். 1989—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை தெற்கு நேதாஜி நகருக்கு தெருவிளக்கு விஸ்தரித்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

17—

## தெரு விளக்கு அமைத்தல்.

வினா எண். 2150—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், களத்தூர் ஊராட்சி, சித்துக்காடு முனியாண்டித் தெருவிற்கு தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1992 ஏப்ரல் 24

விடை—

சித்துக்காடு கிராமத்திற்கு 64(1X40 வாட் குழல் விளக்குகள்) ஏற்கனவே பொருத்தி மின்வசதி அளிக்கப்பட்டுவிட்டது. விளக்குகள் நன்றாக இயங்கிவருகின்றன. மேற்குறிப்பிட்டபகுதிக்கு 16 கூடுதல் தெரு விளக்குகள் கோரி 8-4-1988-ல் விண்ணப்பம் ஒன்று பெறப்பட்டுள்ளது. இந்த விண்ணப்பத்திற்கு முன்னால் சம்பந்தப்பட்ட மின்வாரியத்தின் பிரிவு அலுவலகத்தில் 265 தெரு விளக்குகள் வேண்டி 8 விண்ணப்பங்கள் நிலுவையிலுள்ளன. 7-6-1986 வரை பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1-9-1991 அன்று நிலுவையிலுள்ள எல்லா தெரு விளக்குகளுக்குமான விண்ணப்பங்களும் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 31-3-1993-க்குள் இத் தெரு விளக்குகள் பொருத்தப்படும்.

18—

வினா எண். 2151— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஊமத்தநாடு ஊராட்சி, பெத்தனாட்சி வயல் கிராமத்திற்கும் பாடுவாங்கொல்லை கிராமத்திற்கும் தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மேற்குறிப்பிட்ட பகுதியில் 10 (1X40 வாட் குழல் விளக்குகள்) தெரு விளக்குகள் வேண்டி ஒரு விண்ணப்பம் 28-7-1989 அன்று மின்வாரிய அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது. 1980 அக்டோபர் மாதத்திற்கு முன்னர் பெறப்பட்ட விண்ணப்பங்களுக்குதான் தற்போது பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலகத்தில் 274 தெரு விளக்குகள் பொருத்தக்கோரி 24 விண்ணப்பங்கள் இதற்கு முன்னரே நிலுவையிலுள்ளன.

தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் 1-9-1991 அன்று நிலுவையிலுள்ள எல்லா தெரு விளக்குகளுக்கான விண்ணப்பங்களும் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு 31-3-1993-க்குள் இத் தெரு விளக்குகள் பொருத்தப்படும்.



1992 ஏப்ரல் 24]

19—

வினா எண் 2152—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ரெண்டாம்புளிக்காடு ஊராட்சி, நவக்கொல்லை காலனிக்கு புதிய தெரு விளக்கும் நாணத்திடல் ரெண்டாம்புளிக்காடு (மே) காட்டாற்றுக்கரை முத்திரையர் தெருவிற்கும் தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

நாணத்திடல் கிராமத்தில் 4 தெரு விளக்குகள் பொருத்தி ஏற்கனவே மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. நவக்கொல்லை காலனியில் தெரு விளக்கு ஏதும் இல்லை. மேற்குறிப்பிட்ட இரு பகுதிகளுக்கும் தெரு விளக்குகள் கோரி விண்ணப்பங்கள் ஏதும் சம்பந்தப்பட்ட மின்வாரிய பிரிவு அலுவலகத்தில் நிலுவையிலில்லை. அவ்வாறு விண்ணப்பங்கள் வருமாயின் அவைகள் முறையாக பதிவு செய்யப்பட்டு விண்ணப்பங்கள் பதிவு வரிசை அடிப்படையின்கீழ் இலக்கீட்டிற்கு ஏற்ப மின் வசதி வழங்க ஆவன செய்யப்படும்.

20—

வினா எண் 2153—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கட்டயன்காடு ஊராட்சியைச் சேர்ந்த நடுவிக்குறிச்சி (தெ) ஆதி திராவிடர் தெருவிற்கும் அம்பாள்புரத்திற்கும் புதிய தெருவிளக்கு அமைத்துக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கட்டயன்காடு ஊராட்சியைச் சார்ந்த நடுவிக்குறிச்சி (தெற்கு) கிராமத்தில் 14 தெரு விளக்குகள் ஏற்கனவே பொருத்தப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகிறது. அதே கட்டயங்காடு ஊராட்சியைச் சேர்ந்த உக்கடை அம்பாள்புரத்தில் 24 தெரு விளக்குகள் ஏற்கனவே பொருத்தப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

கட்டயங்காடு ஊராட்சியில் நடுவிக்குறிச்சி பகுதிக்கு 14 கூடுதல் தெரு விளக்குகளுக்கும் உக்கடை அம்பாள்புரத்திற்கு 19 கூடுதல் தெரு விளக்குகளுக்கும் மின் இணைப்பு கோரி 16-12-89ல்

[1992 ஏப்ரல் 24

ஒரு விண்ணப்பம் மின்வாரிய அலுவலகத்தில் பெறப்பட்டது. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1—9—1991 வரை நிலுவையிலுள்ள எல்லா தெரு விளக்குகளுக்கான விண்ணப்பங்களும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 31—3—1993-க்குள் இத் தெரு விளக்குகள் பொருத்தப்படும்.

21—

வினா எண் 2154—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி பூமுடிக்காட்டிற்கு தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

புதுப்பட்டினம் ஊராட்சிக்கு ஏற்கனவே மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. பூமுடிக்காட்டிற்கு 13 தெரு விளக்குகள் (1×40 வாட் குழல் விளக்குகள்) பொருத்தக் கோரி 28-5-1989 அன்று ஒரு விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. இந்த விண்ணப்பத்திற்கு முன்னால் 274 தெரு விளக்குகள் பொருத்தக்கோரி 24 விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட மின் வாரியத்தின் பிரிவு அலுவலகத்தில் நிலுவையிலுள்ளது.

தன்னிறைவு திட்டத்தின்கீழ் 1—9—1991 அன்று நிலுவையிலுள்ள எல்லா தெரு விளக்குகளுக்கான விண்ணப்பங்களும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 31—3—1993-க்குள் இத் தெரு விளக்குகள் பொருத்தப்படும்.

22—

வினா எண். 2156—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் நாடியம் ஊராட்சி சித்தக்காட்டிற்கும் தண்டாமரைக்காட்டிற்கும் தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

நாடியம் ஊராட்சி சித்துக்காட்டிற்கும் தண்டாமரைக் காட்டிற்கும் 2 தெரு விளக்குகள் பொருத்தி ஏற்கனவே மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. விளக்குகள் நன்றாக இயங்கி வரு-



1992 ஏப்ரல் 24]

கின்றன. மேற்கூறிய கிராமத்திற்கு கூடுதல் தெரு விளக்குகள் பொருத்த கோரி விண்ணப்பம் ஏதும் மினவாரியத்தில் தற்பொழுது நிலுவையில் இல்லை.

23—

வினா எண். 2157—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் குளக்குடி ஊராட்சி பூலாங்கொல்லைக்கும், குளக்குடி 1 வது வார்டு மாந்தோப்பிற்கும் தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

குளக்குடி ஊராட்சி பூலாங்கொல்லைக்கு 10 (1×40 வாட் குழல் விளக்குகள்) தெரு விளக்குகள் பொருத்தி ஏற்கனவே மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. விளக்குகள் நன்றாக இயங்கி வருகின்றன. மேற்குறிப்பிட்ட பகுதியில், 12 கூடுதல் தெரு விளக்குகள் பொருத்தக்கோரி 3–4–1990 அன்று ஒரு விண்ணப்பம் பெறப்பட்டது. இதற்கு முன்னால் 246 தெரு விளக்குகள் வேண்டி 13 விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட மின் வாரியத்தின் பிரிவு அலுவலகத்தில் நிலுவையிலுள்ளன. 4–10–1986-க்கு முன்னர் பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு பணிகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1–9–1991-ஆம் தேதி வரை நிலுவையிலுள்ள எல்லா தெரு விளக்குகளுக்கான விண்ணப்பங்களும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 31–3–1993க்குள் இத்தெரு விளக்குகள் பொருத்தப்படும்.

24—

## தெரு விளக்கிற்கு மின் இணைப்பு.

வினா எண். 215—திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கழனிவாசல் ஊராட்சி சின்ன கழனிவாசலுக்கு நாட்டாணிக கோட்டையிலிருந்து தெரு விளக்கு மின் இணைப்புக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

சின்ன கழனி வாசல் கிராமத்தில் ஏற்கனவே கழனிவாசல் 1 மின் பகிர் மாற்றி என்ற பெயரில் 63 கிலோ வோட் ஆ. பளு கொண்ட பகிர்மாற்றி ஒன்று இயங்கி வருகிறது. இந்த பகிர் மாற்றியில் 9 தெரு விளக்குகள் இணைக்கப்பட்டுள்ளன. இப் பகுதியில் மின் அழுத்தம் நல்ல நிலைமையில் உள்ளது. நாட்டானிக்கோட்டை மின் மாற்றியிலிருந்து இப்பகுதிக்கு மின்சாரம் விஸ்தரிப்பு செய்தால் மின் அழுத்தக் குறைவு ஏற் படும். ஆகவே, நாட்டானிக்கோட்டையில் இருந்து சின்ன கழனிவாசலுக்கு தெரு விளக்கு மின் இணைப்புக் கொடுக்கும் திட்டம் ஏதும் இல்லை.

25—

## தெருவிளக்கு அமைத்தல்.

வினா எண் 2159—திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கெங்காதரபுரம் ஊராட்சி கோட்டைக்காடு ஆதி திராவிடர் களுக்கு தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

கங்காதரபுரம் ஊராட்சி கோட்டைக்காடு கிராமத்தில் 7 தெரு விளக்குகள் பொருத்தி ஏற்கனவே மின் வசதி அளிக்கப் பட்டுள்ளது. அவை நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

மேற்குறிப்பிட்ட கிராமத்தில் 15 கூடுதல் தெரு விளக்கு கள் பொருத்த வேண்டி விண்ணப்பம் ஒன்று 10-6-1987-ல் பெறப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் 26-8-1986 முதல் 224 தெரு விளக்குகள் பொருத்தக் கோரி 16 விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட மின் வாரியத்தின் பிரிவு அலுவலகத்தில் நிலுவை யிலுள்ளன.

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1-9-1991 அன்று நிலுவை யிலுள்ள எல்லா தெரு விளக்குகளுக்கான விண்ணப்பங்களும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 31-3-1993-க்குள் இத் தெரு விளக்குகள் பொருத்தப்படும்.

26—

வினா எண் 2161—திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :



தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இராவுத்தன் வயல் ஊராட்சி கொண்ணக்காட்டிற்கு தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இராவுத்தன்வயல் ஊராட்சிக்கு 20 தெரு விளக்குகள் பொருத்தி ஏற்கனவே மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. விளக்கு கள் நன்றாக இயங்கி வருகின்றன. மேற்குறிப்பிட்ட பகுதி யில் 20 கூடுதல் தெரு விளக்குகள் பொருத்தக் கோரி 15-10-86ல் விண்ணப்பம் ஒன்று பெறப்பட்டுள்ளது. இந்த விண்ணப்பத் திற்கு முன்னால் 30 தெரு விளக்குகள் பொருத்தக்கோரி 2 விண்ணப்பங்கள் 26-8-1986 முதல் சம்பந்தப்பட்ட மின் வாரிய பிரிவு அலுவலகத்தில் நிலுவையிலுள்ளன.

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1-9-1991 அன்று நிலுவை யிலுள்ள எல்லா தெரு விளக்குகளுக்கான விண்ணப்பங்களும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 31-3-1993 க்குள் இத்தெரு விளக்குகள் பொருத்தப்படும்.

27—

## மின்துறை உதவி செயற் பொறியாளர் அலுவலகம் அமைத்தல்.

வினா எண் 3760—திரு. செ. ஆறுமுகம் ; மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வானூர் தொகுதியில் வானூர் வட்டத்தில் அங்கு மின் துறை உதவி செயற் பொறியாளர் அலுவலகம் ஒன்று அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எந்த ஆண்டு முதல் செயல்படத் தொடங்கும் ?

விடை—

(அ) வானூர் தொகுதியில் வானூர் வட்டத்தில் வானூரு க்கு அருகில் உள்ள திருச்சிற்றம்பலம் என்ற ஊரில் மின்துறை உதவி செயற் பொறியாளர் அலுவலகம் ஒன்றை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) தற்போது கடலூர் மின் பகிர்மான வட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வில்லியனூர் துணை மின் நிலையத்தில் இந்த நிதியாண்டில் (1991-92) இறுதிக்குள் பாண்டிச்சேரி

[1992 ஏப்ரல் 24

எ டட ஒப்படைக்கப்படும். அதேநேரத்தில் மின் வாரிய செயற்பொறியாளர் அலுவலகமும் திருச்சிற்றம்பலம் ற ஊரில் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

28—

## சாலை பழுதுபார்த்தல்.

வினா எண். 3847—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ராதாபுரம் தொகுதிக்குளம், நம்பியூந்து சாலையைப் பழுதுபார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

குறிப்பிட்ட சாலை வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சாலையாகும். இச் சாலையினை மேம்படுத்துவதற்கு திட்ட வேலையை 1992-93-ம் வருடம் ஜவகர் வேலைவாய்ப்பு திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும்.

29—

வினா எண். 3848—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் தொகுதி தெற்கு வள்ளியூர் ராதாபுரம் சாலையுடன் சேரும் சாலையைப் பழுதுபார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இச் சாலை தற்போது தார் நொடிகள் போடப்பட்டு பேருந்து வாகனப் போக்குவரத்திற்கு ஏற்றமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இச் சாலையில் தார் தளம் ரூ. 2.50 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட வேண்டும். வரும் நிதியாண்டில் நிதிநிலையைப் பொறுத்து, தார் தளம் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

30—

## வேலை வாய்ப்பு அலுவலகத்தில் காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

வினா எண். 46—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



1992 ஏப்ரல் 24]

(அ) ராதாபுரம் தொகுதி, மக்கள் நலப் பணியாளர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் காத்திருப்போர் பட்டியலின் அடிப்படையில் நியமனம் செய்யப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், காத்திருப்போர் பட்டியலில் முன்னுரிமையில் உள்ளோருக்கு வாய்ப்பு வழங்கப்படுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : மக்கள் நலப் பணியாளர் பதவிகள் தற்போது நீக்கப்பட்டு விட்டதால், இக் கேள்விக்கு இடமில்லை.

31—

## பேருந்து நிலையத்தில் செப்டிக் டாங்க் வசதி.

வினா எண். 357—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வேலூர் நகராட்சி பேருந்து நிலைய வளாகத்திற்குள் சுகாதாரக்கேடான சூழ்நிலை உருவாவதற்குக் காரணமான செப்டிக் டேங்கினை சரி செய்ய அரசு உடனே ஆவன செய்யுமா?

(ஆ) அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) வேலூர் பேருந்து நிலைய வளாகத்திற்குள் சுகாதாரக்கேடான சூழ்நிலைக்குக் காரணமான கழிப்பிட செப்டிக் டேங்க் ரூ: 45,000 செலவில் 3-8-1991 தேதியில் சரி செய்யப்பட்டுவிட்டது.

சென்னை-600 009. 183182

32—

## போர்வெல் சுத்தம் செய்தல்.

வினா எண். 1861—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம் பாதரங்கோட்டை (தெ) ஆதிதிராவிடர் தெருவிலுள்ள போர்வெல்லில் குடிப்பதற்கேற்ற தண்ணீர் வராததால் அதை சுத்தம் செய்துதர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தற்சமயம் இந்த ஆழ்குழாய் கிணற்றில் தேவையான அளவு நல்ல தண்ணீர் கிடைக்கிறது.

33—

விடுதிகளுக்கு சாக்கடை வசதி.

வினா எண். 553—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியப் பகுதிகளிலும் அம்மாப்பேட்டை ஒன்றியப் பகுதிகளிலும் கட்டப்பட்ட விடுதிகளுக்கு சாக்கடை மற்றும் சாலை அமைத்துக் கொடுக்காமல் விடப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) அந்தியூர் மற்றும் அம்மாப்பேட்டை ஒன்றியப் பகுதிகளில் தொகுப்பு வீடுகள் அமைந்துள்ள இடங்களில் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களில் போதிய நிதி வசதி இல்லாமையால் சாலை மற்றும் வடிகால் வசதி செய்ய இயலாத நிலை உள்ளது.

(ஆ) ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் நடப்பு ஆண்டின் ஒதுக்கீட்டைப் பொறுத்து மேற்கண்ட பணிகளை ஒவ்வொரு கட்டமாக எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

34—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 855—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி, ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சியைச் சேர்ந்த நரியங்காட்டில் மேல் நிலைத் தொட்டி அமைப்பதற்கு அரசின் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

ஆம் உள்ளது. நரியங்காடு குடியிருப்பு திருச்சிற்றம்பலம் ஊராட்சி பேராவூரணி ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். இதன் மக்கட் தொகை 950 ஆகும். நடப்பு நிதியாண்டில் ஆயுட்-



காப்பீட்டுக் கழக நிதி உதவியுடன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு அனுமதி பெறப்பட்டு உள்ளது.

35—

வினா எண். 912—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ரெண்டாம்புளிக்காட்டில் கடற்கரைக்கு தண்ணீர் சப்ளை செய்யும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மோட்டாரை அதிக சக்தியுள்ள மோட்டாராக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

ஆம் உள்ளது. ரெண்டாம்புளிக்காடு கிராமத்தில் கடலோரப் பகுதிக்காக கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு நீர் ஆதாரம் அமைக்கப்பட்டு 7.5 குதிரை சக்தி திறன் கொண்ட (ஜெட் விசை) மின் இறைப்பான் மூலம் நீர் இறைக்கப்படுகிறது. மேலும் 7.5 குதிரை சக்தி இறைப்பான் பொருத்தத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

36—

வினா எண். 913—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம், மருங்கப்பள்ளம் 1-வது வார்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை. மருங்கப்பள்ளம் குடியிருப்பு மருங்கப்பள்ளம் ஊராட்சி, சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். இதன் மக்கட் தொகை 1,500 ஆகும். மறு ஆய்வின் படி இக்குடியிருப்பு பகுதியாக செயலாக்கப்பட்ட குடியிருப்பாக வகைப்படுத்தப்பட்டு இருக்கிறது. ஒரு மின்விசை பம்பு திட்டம் குறைந்தபட்சம் தேவைத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்டு உள்ளது. இப்போதைய மக்கட் தொகைக்கு இது போதுமானதாக இல்லை. இனி வரும் நிதியாண்டில் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கும் திட்டம் உருவாக்கப்படும்.

37—

வினா எண் 916—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கோட்டைக்காடு ஆதிதிராவிடர் தெருவுக்கு மேல்நிலைத் தொட்டி கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை. கோட்டைக்காடு கிராமம், கங்காதபுரம் ஊராட்சி சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். இதன் மக்கள் தொகை 1000 ஆகும். தற்போது ஒரு இந்தியா மார்க் 2 கைப் பம்பு திட்டம் உள்ளது. மறு ஆய்வின்படி இது பகுதியாக குடிநீர் வசதி செயலாக்கப்பட்ட கிராமம். இது போதுமானதாக இல்லை. வரும் நிதியாண்டுகளில் மேல் நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கும் திட்டம் கருத்தில் கொள்ளப்படும்.

38—

ஆண்டாங்கொல்லைக்கு போர்வெல் வசதி.

வினா எண் 1892—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (தெ) ஊராட்சி ஆண்டங்கொல்லைக்கு ஒரு போர்வெல் போட்டுத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இக்குடியிருப்பிற்கு ஒரு ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டு உள்ளது. எனவே, வேறு செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

39—

ஆதி திராவிடர்களுக்கு புதிய காலனி வீடுகள்.

வினா எண். 2204—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :





தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி தெற்கு ஆதி திராவிடர்களுக்கு புதிய காலனி வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

40—

ஆதிதிராவிடர் காலனிக்கு தொலைக்காட்சி பெட்டி வழங்கல்.

வினா எண் 2726—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், அம்மையாண்டி ஆதி திராவிடர் காலனிக்கு தொலைக்காட்சிப் பெட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இவ்வாண்டில் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவைகளின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விபரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் எல்லா மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளை தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்புக்கு தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

41—

வினா எண். 2727—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் ஆதி திராவிடர்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இவ்வாண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப்பட்டியல்கள் அவைகளின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விபரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் எல்லா மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்புக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

42—

வினா எண். 2860—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், மகிழங்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த மாதா கோவில் தெருவில் இருந்து அதிராம்பட்டினம் சாலை வரை செல்லும் சாலையை மராமத்துச் செய்து கப்பிச்சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், மகிழங்கோட்டை மாதாகோவில் தெருவிலிருந்து முத்துப்பேட்டை மீமிசல் சாலை வரை 3 கி.மீ. நீளமுடைய மண் சாலை. இதில் இடையே 3 குழாய் பாலங்கள் அமைத்து, கப்பிச்சாலை அமைக்க ரூ. 3.5 இலட்சம் செலவாகும். தற்போது இதற்கான செயற் குறிப்பு ஏதுமில்லை.

43—

மண்சாலையை கப்பிச்சாலையாக மாற்றுதல்

வினா எண் 2861—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், மகிழங்கோட்டை ஊராட்சி கூடலிவயல் மேலக்குடியில் இருந்து அக்கினி ஆற்றுப்பாலம் வரை செல்லும் மண் சாலையை மராமத்து செய்து கப்பிச்சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?



விடை—

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், மகிழங்கோட்டை ஊராட்சி கூடலிவயல் மேலக்குடியிலிருந்து அக்கினி ஆற்றுப் பாலம் வரை செல்லும் சாலை 2 கி.மீ நீளமுள்ள இனம் பிரிக்கப்படாத சாலை. இச்சாலையில் 2 சிறு பாலங்களும் ஒரு குழாய் பாலமும் அமைத்து சாலையை மேம்பாடு செய்திட ரூ 5.00 இலட்சம் செலவாகும். இதனைச்செய்திட தற்சமயம் செயற் குறிப்பு எதுவுமில்லை.

44—

வினா எண். 2869—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் மழவேனிற்காடு ஊராட்சியைச் சேர்ந்த நடுவிக்காடுதனில் இருந்து புதுக்கோட்டை உள்ளூர் செல்லும் சாலையைக் கப்பிச் சாலையாக மாற்றிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் மழவேனிற்காடு ஊராட்சியைச் சேர்ந்த நடுவிக்காட்டிலிருந்து புதுக்கோட்டை உள்ளூர் செல்லும் சாலை 1.6 கி.மீ. நீளமுள்ள இனம் பிரிக்கப் படாத மண் சாலையாகும். இதனை செங்கப்பிச் சாலையாக மாற்றிட சுமார் ரூபாய் 0.90 இலட்சம் செலவாகும். இதனை செய்வதற்கு தற்சமயம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

45—

உணவுப் பண்டங்களின் விலைப்பட்டியல் பார்வைக்கு வைத்தல்

வினா எண். 5627—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

உணவு பண்டங்கள் விற்பனை செய்யும் கடைகளில் விலைப் பட்டியலை பொது மக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும் என்கிற ஆணையை மீறுபவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யும் கடைகளில் (உணவகங்களில்) விலைப் பட்டியலை பொது மக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும் என தற்சமயம் குறிப்பான அரசு ஆணைகளோ அல்லது கட்டுப்பாட்டு ஆணைகளோ நடைமுறையில் இல்லை.

[1992 ஏப்ரல் 24

46—

**தேயிலைத் தோட்ட தொழிலாளர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்.**

வினா எண். 5801—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம் தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் விளையாட்டுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தோட்டத் தொழிலாளர்களுக்கென தனியாக விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதில்லை. ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட அளவிலும் மற்றும் மண்டல அளவிலும், இறுதியில் மாநில அளவிலும் தொழிலாளர்களுக்கென விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் நடத்தி வருகிறது. இந்தப் போட்டிகளில் தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிக்கு சந்தா செலுத்தும் எல்லாத் தொழிலாளர்களும் கலந்து கொள்ளலாம். தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிச் சட்டம் மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் பொருந்துமாதலால் அவர்களும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

47—

**வேளாண்மை வளர்ச்சிக்கு புதிய துறைகள் அமைத்தல்.**

வினா எண். 4414—திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வேளாண்மைத் துறையில் வேளாண்மை வளர்ச்சி அலுவலரின் கட்டுப்பாட்டின்கீழ் தோட்டக்கலை மற்றும் எண்ணெய் வித்துத் துறைகளைக் கொண்டு வரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

வேளாண்மைத் துறையில் வேளாண்மை வளர்ச்சி அலுவலரின் கட்டுப்பாட்டின் கீழ் தோட்டக்கலைத் துறையை கொண்டுவரும் திட்டம் குறித்த செயற்குறிப்பு ஏதும் இப்போது அரசின் ஆய்வில் இல்லை.

எண்ணெய் வித்துத் துறை மட்டும் 1—4—1991 முதல் வேளாண்மை இயக்குநரின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.



1992 ஏப்ரல் 24]

48—

**மரம் வளர்க்க அனுமதி வழங்கல்.**

வினா எண் 6109—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

புதுவீடுகள் கட்ட அனுமதியளிக்கும்போது கட்டாயமாக மரங்களை வளர்க்க வேண்டும் என்கிற நிபந்தனை விதித்து அனுமதி வழங்க அரசு முன்வருமா ?

விடை—

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் வளர்ச்சி கட்டுப்பாட்டு விதி 23 (சி)-யின்படி சென்னைப் பெருநகர் வளர்ச்சி பகுதியில் புது வீடுகள் கட்ட திட்ட அனுமதி வழங்கும்போது புதிதாக மரங்களை நடுவதற்கும் ஏற்கனவே மனையிலுள்ள மரங்களை பாதுகாக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. சாதாரண வகை கட்டிடங்கள் கட்ட திட்ட அனுமதி வழங்கும்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் ஏற்கனவே கீழ்க்கண்ட நிபந்தனை சேர்க்கப்பட்டுள்ளது. ''மனையில் கட்டிடத்தை சுற்றிலும் உள்ள திறவிடங்களில் இயன்ற அளவிற்கு மரங்கள் நடப்பட வேண்டும். மேலும் மனையில் உள்ள மரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்''.

49—

**குழந்தைகள் காப்பகம் அமைத்தல்.**

வினா எண். 5358—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குழந்தைகள் காப்பகங்கள் குழந்தைகளின் எண்ணிக்கை அடிப்படையில் துவங்கப்படுகின்றதா ?

(ஆ) ஆம் எனில், வேதாரண்யம் பகுதியில் குழந்தைகள் காப்பகங்கள் மேலும் அமைக்க அரசு முன்வருமா ?

விடை—

(அ) ஆம். 2 வயது முதல் 5 வயது வரை உள்ள சுமார் 70 குழந்தைகளுக்கு மேல் இருந்தால், அந்தப் பகுதியில் குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்தலாம்.

(ஆ) தற்போதுள்ள நிதி நிலவரப்படி கூடுதலாக மையங்கள் துவங்க இயலாது.

1992 ஏப்ரல் 24]

50—

## கயிறு வாரியம்.

வினா எண். 3808—திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மைய அரசின் கீழ் உள்ள கயிறு வாரியத்திலிருந்து (Coir Board) மாதிரிக் கயிறு கிராமத் திட்டத்திற்காகத் தமிழக அரசுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 3 இலட்சம் செலவழிக்கப்படாமலே உள்ளதா ?

விடை—

வினாவில் குறிப்பிட்டுள்ளபடி ரூ. 3 இலட்சம் கயிறு வாரியத்தால் அரசுக்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை. 1989-90 நிதியாண்டில் கயிறு வாரியம், கொச்சி, ரூ. 2.26 இலட்சத்தினை மாதிரி கயிறு கிராமத் திட்டத்தின் கீழ் தாமரைக்குளம் கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கத்திற்கு 100 விழுக்காடு மானியமாக வழங்கியது. இந்நிதியிலிருந்து ரூ. 2.05 இலட்சத்தினை 10 வீடுகள், இரண்டு இராட்டைத் தொழிற்கூடங்கள் சமுதாயக் கிணறு போன்றவை அமைப்பதற்காக, தொழில் மற்றும் வணிக இயக்ககத்தின் கீழ் இயங்கும் கட்டுமானப் பிரிவில் பிணையத் தொகையாக செலுத்தப்பட்டுள்ளது.



1992 ஏப்ரல் 24]

## (பதினொன்றாம் பட்டியல்)

1—

## அந்தியூர் நகரில் மிகப்பிற்பட்டோர் அரசு பெண்கள் இல்லம் திறக்க நடவடிக்கை.

வினா எண். 4961—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அந்தியூர் தொகுதியில் அந்தியூர் நகரில் மிகப்பிற்பட்டோர் அரசு பெண்கள் இல்லம் 1991-92—ல் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

தற்போது இயலாது.

2—

## தொழிற் கல்வி புகுத்தல்.

வினா எண். 1594—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாணவர்களுக்கு ஆரம்ப முதல் தொழிற் கல்வி புகுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

1 முதல் 12 வரை உள்ள வகுப்புக்களுக்கான பொது பாடத்திட்டத்தோடு 1 முதல் 8 வகுப்பு வரை வாழ்க்கைக் கல்வித் திட்டத்தினையும், 9 மற்றும் 10 வகுப்பு ஆகியவற்றில் முன் தொழிற் கல்வித் (Pre-Vocational Skill) திட்டமும், 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் தொழில் கல்விப் பாடப் பிரிவுகளும் (Vocational Stream) ஏற்கனவே நடைபெற்று வருகின்றன.

3—

## திருப்புறம்பியம் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியர் நியமனம் செய்தல்.

வினா எண். 2613—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கும்பகோணம் தாலுக்கா திருப்புறம்பியம் அரசினர் உயர்நிலைப்பள்ளியில் தலைமையாசிரியர் நியமனம் செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[1992 ஏப்ரல் 24

விடை—

(அ) மற்றும் (ஆ) திருப்புறம்பியம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு தலைமையாசிரியர் பணியிடம் 26—11—1991-ல் நியமனம் செய்யப்பட்டு, அன்னார் 2—12—1991 பிற்பகல் தலைமையாசிரியராக பணியேற்றுள்ளார்.

4—

தொடக்கப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்குதல்.

வினா எண். 3021—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் சம்பைபட்டினம் தொடக்கப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்றித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

5—

நூல் நிலையம் அமைத்தல்.

வினா எண். 3039—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் முடக்கிக்காட்டில் ஒரு நூல் நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தற்போது இல்லை.

6—

நடமாடும் மருந்தகப் பிரிவு.

வினா எண். 1675.—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

நடமாடும் மருந்தகப் பிரிவு (Mobile Dispensary Unit) அனைத்து மாவட்ட மருத்துவமனைகளுக்கும் கொடுக்கப் பட்டுள்ளதா ?



1992 ஏப்ரல் 24]

விடை—

தற்போது தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட மாவட்டங்களில் நடமாடும் மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன :—

| | |
|---|---|
| **தர்மபுரி மாவட்டம் :** | |
| 1. தருமபுரி. | |
| 2. ஒசூர். | |
| 3. அரூர் | 3 |
| **திண்டுக்கல் அண்ணா மாவட்டம் :** | |
| 4. திண்டுக்கல். | |
| 5. கோடைக்கானல் | 2 |
| **நீலகிரி மாவட்டம் :** | |
| 6. உதகமண்டலம் I | |
| 7. உதகமண்டலம் II | |
| 8. கூடலூர் | |
| 9. கோத்தகிரி | 4 |
| **நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம் :** | |
| 10. அம்பாசமுத்திரம் | 1 |
| **தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் :** | |
| 11. சென்னை | 1 |
| 12. மதுரை | 1 |
| 13. சேலம் | 1 |
| 14. திருச்சி | 1 |
| 15. கோயம்புத்தூர் | 2 |
| மொத்தம் | 16 |

[1992 ஏப்ரல் 24.

7—

## கறம்பக்குடி ஒன்றியத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

வினா எண். 2090— திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி ஒன்றியத்தில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன?

(ஆ) மேலும் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் கறம்பக்குடி ஒன்றியத்தில் கீழ்க்கண்ட 6 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன.

1. மலையூர்.
2. இரகுநாதபுரம்.
3. கோட்டைக்காடு.
4. கறம்பக்குடி.
5. வணக்கன்காடு.
6. பாப்பாரப்பட்டி.

(ஆ) மேலும் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

8—

## நகரப் பேருந்து விடுதல்.

வினா எண். 2523—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் பேராவூரணியிலிருந்து அறந்தாங்கி வரை சானாக்கரை கீரமங்கலம் வழியாக ஒரு நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



1992 ஏப்ரல் 24]

விடை—

பேராவூரணி—அறந்தாங்கி (வழி) சானாக்கரை, கீரமங்கலம் வழித்தடத்தின் நீளம் 31.5 கி. மீட்டராகும். மேற்படி வழித் தடத்தில் பேருந்து இயங்காத பகுதியே கிடையாது. வழித்தட நீளம் 30 கி. மீட்டருக்கு அதிகம் உள்ளதால், நகரப் பேருந்து இயக்கிட சாத்தியமில்லை.

9—

## நகரப் பேருந்து விடுதல்

வினா எண். 4717—திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

உடுமலை —கல்லாபுரம், ருத்திரபாளையம் நகரப் பேருந்து வழித்தட எண், 9சி, போக்குவரத்து ஏராளமாக உள்ளதால், எதிர்புறமாக மற்றும் ஒரு பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

பொதுமக்களின் கோரிக்கைக்கிணங்க 22—1—1992 முதல் உடுமலை—கல்லாபுரம் 9—சி வழித்தடத்தில் கூடுதலாக ஒரு நகரப் பேருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இத்தடத்தில் கூடுதலாக 8 நடைகள் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன.

10—

## கடத்தலில் கைப்பற்றிய சந்தனக் கட்டைகளின் அளவு

வினா எண். 6119—திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் 1991 ஆம் ஆண்டில் மட்டும் கடத்தலில் கைப்பற்றிய சந்தனக் கட்டைகளின் அளவு எத்தனை டன்கள் ?

(ஆ) அவைகளின் மதிப்பு என்ன ?

விடை—

(அ) 251 டன்கள்.

(ஆ) சுமார் ரூ. 439 இலட்சம்.

[1992 ஏப்ரல் 24

11—

வீட்டுக்கு ஒரு விளக்குத் திட்டம்.

வினா எண். 48—திருமதி ரமணி நல்லதம்பி, திரு. க. பழனிசாமி, திரு. அ. தேவராஜ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மிகவும் பிற்பட்டவர்களுக்கும் கட்டிக் கொடுக்கப்பட்ட அரசு இல்லங்களுக்கு வீட்டுக்கு ஒரு விளக்குத் திட்டம் செயல்படுத்தப்படுமா ?

விடை—

தற்போதுள்ள அரசு ஆணைகளின்படி தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் கீழ்க்கண்ட அரசு திட்டத்தின் கீழ் கிராம பஞ்சாயத்து எல்லைக்குள் கட்டிக் கொடுக்கப்படும் சிறிய தொகுப்பு வீடுகளுக்கு, ஒரு குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்பு திட்டம் ஏற்கனவே தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1. தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டம்.

2. 'தாட்கோ' மற்றும் காமராசர் ஆதி திராவிடர் வீட்டுவசதி திட்டம்.

3. ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டம்.

12—

தார் சாலை அமைத்தல்.

வினா எண். 847—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அந்தியூர் ஒன்றியம், பர்கூர் ரோடு பிரிவிலிருந்து வட்டக்காடு வழியாக காக்காயனூர் பாரஸ்டு லைன் வரையுள்ள ரோட்டினை தார் சாலையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

தற்போது திட்டம் ஏதுமில்லை.



1992 ஏப்ரல் 24]

13—

சி.எம்.பி. ஆற்றுக்கரையில் வண்டிமாடு ஓட்டிச்செல்ல அனுமதி அளித்தல்.

வினா எண். 2169—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் இடையாத்தியிலுள்ள சி.எம்.பி. ஆற்றுக்கரையில் விவசாயத்திற்கு வண்டிமாடு ஓட்டிச் செல்ல நிரந்தர அனுமதி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

14—

இடையாத்திக் குளக்கரையை தார் எடுத்து ஆழப்படுத்தல்.

வினா எண். 2171—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் இடையாத்திக் குளக்கரையை பலப்படுத்தி தூர் எடுத்து ஆழப்படுத்திக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

15—

தெரு விளக்கு அமைத்தல்.

வினா எண். 2188—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பாலத்தளி ஊராட்சியைச் சேர்ந்த வைரவன் காலனிக்கு தெரு விளக்கு அமைக்கவும், மணவயல் காந்திநகர் ஆதி திராவிடர்களுக்கு தெரு விளக்கு விஸ்தரிப்பு கொடுக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1992 ஏப்ரல் 24

விடை—

வைரவன் காலனிக்கு 4 (1X40 வாட் குழல் விளக்குகள்) தெரு விளக்குகள் பொருத்தப்பட்டு ஏற்கனவே மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. மணவயல் காலனியிலும் மூன்று (1X40 வாட் குழல் விளக்குகள்) தெரு விளக்குகள் பொருத்தப்பட்டு மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பகுதியில் 6 தெரு விளக்குகள் பொருத்தக் கோரி 25–6–1986-ல் மின் வாரியத்தால் விண்ணப்பம் ஒன்று பெறப்பட்டுள்ளது. இந்தப் பகுதிக்கு 6 கம்பங்கள் ஏற்கனவே நடப்பட்டுள்ளன. மின் கம்பிகள் பெறப்பட்டவுடன் பணி முடிக்கப்பெறும். 31—3—1992க்குள் இப்பணியினை முடிக்க இயலும்.

16—

வினா எண். 2190—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வலப்பிரமன்காடு (வ) பகுதியில் தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

வலப்பிரமன்காடு (வ) கிராமத்திற்கு ஏற்கனவே மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. வலப்பிரமன்காட்டிற்கு கூடுதல் தெரு விளக்குகள் கோரி விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்தில் தற்போது நிலுவையில் இல்லை.

17—

வினா எண். 2191—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், மாவடுகுறிச்சி ஊராட்சியைச் சேர்ந்த கீழக்காட்டிற்கு தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாவடுகுறிச்சி கீழக்காடு கிராமத்திற்கு 20 தெரு விளக்குகள் பொருத்தி ஏற்கனவே மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. விளக்குகள் நல்ல நிலைமையில் இயங்கி வருகின்றன. மேற்படி கிராமத்தில் 22 கூடுதல் தெரு விளக்குகள் பொருத்தக் கோரி விண்ணப்பம் ஒன்று 21—10—1988-ல் பெறப்பட்டுள்ளது. இவ்விண்ணப்பத்திற்கு முன்னர் 26—8—1986 முதல் 50 தெரு விளக்குகள் பொருத்தக் கோரி மூன்று விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட மின் வாரியத்தின் பிரிவு அலுவலகத்தில் நிலுவையிலுள்ளன.



1992 ஏப்ரல் 24]

தன்னிறைவு திட்டத்தின் கீழ் 1—9—1991 அன்று நிலுவையிலுள்ள எல்லா தெரு விளக்குகளுக்கான விண்ணப்பங்களும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 31—3—1992-க்குள் இத்தெரு விளக்குகள் பொருத்தப்படும்.

18—

## தெரு விளக்கு திட்டம்.

வினா எண். 2224 திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி ஊராட்சி வேளாம்பட்டி (மே) குறவன் கொல்லை குடிசைகளுக்கு ஒற்றை விளக்குப் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உளளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி ஊராட்சி, வேலாம்பட்டி (மேற்கு) குறவன் கொல்லைக்கு ' ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு ' திட்டத்தின் கீழ் இலவச மின்சாரம் கோரி விண்ணப்பங்கள் ஏதும் நிலுவையில் இல்லை. அவ்வாறு விண்ணப்பங்கள் வருமாயின் அவைகள் முறையாக பதிவு செய்யப்பட்டு இப்பகுதிக்கு நிர்ணயிக்கப்பட்ட ஆண்டு இலக்கீட்டிற்கு ஏற்ப விண்ணப்பங்களின் பதிவு வரிசையின்படி ஒற்றை விளக்குகள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

19—

## ஆதிதிராவிட காலனிக்கு மின் இணைப்பு.

வினா எண். 2233 டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி மின்கோட்டத்தில் ஆதிதிராவிட காலனிகளுக்கு மின் இணைப்பு வேண்டி வந்துள்ள கோரிக்கைகள் எத்தனை ?

(ஆ) 1990–91—ல் எத்தனை ஆதிதிராவிட காலனிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) 7—8—1986 முதல் 1—11—1990 வரை 322 தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு வேண்டி 41 விண்ணப்பங்கள் மின்வாரியத்திற்கு வந்துள்ளன.

(ஆ) பரமக்குடி மின் கோட்டத்தில், 1990—91-ல் ஆதி திராவிடர் காலனிகளுக்கு தெரு விளக்குகள் பொருத்தி மின் இணைப்பு ஏதும் கொடுக்கப்படவில்லை. நிலுவையிலுள்ள தெரு விளக்குகளுக்கு 1992—93-ல் செயல்படவுள்ள அரசு சிறப்பு தன்னிறைவு செயல் திட்டத்தின் கீழ் மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

20—

பின்னவாசல் பெரிய ஏரியை ஆழப்படுத்தல்.

வினா எண். 2282— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் பின்னவாசல் பெரிய ஏரியை புல்டோசர் வைத்து ஆழப்படுத்தி, அகலப்படுத்தி கரையை உயர்த்தி பராமரிக்க உலக வங்கி கடன் திட்டத்தில் சேர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

காவிரி மேட்டூர் திட்டப் பாசன ஏரிகள் எல்லாவற்றையும் உலக வங்கி உதவியுடன் நவீனப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் செயல்படுத்தும்போது பின்னவாசல் பெரிய ஏரியும் நவீனப்படுத்தப்படும்.

21—

ஒரு விளக்கு திட்டம்.

வினா எண். 2297— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் மணவயல் காந்திநகர் ஆதி திராவிடர்கள் குடிசை வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், மணவயல் காந்திநகர் ஆதிதிராவிடர் குடிசை வீடுகளுக்கு ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் இலவச மின்சார இணைப்பு கோரி விண்ணப்பங்கள் ஏதும் தற்பொழுது மின்வாரிய அலுவலகத்தில் நிலுவையில் இல்லை. அவ்வாறு விண்ணப்பங்கள் வருமாயின் அவ்விண்ணப்பங்களின் பதிவு வரிசை அடிப்படையில் தகுதிப் பெறும் குடிசைகளுக்கு அப்பகுதிக்கான ஆண்டு இலக்கிட்டிற்சேற்ப மின் வசதியளிக்க ஆவன செய்யப்படும்.



22—

பாசன வாய்க்கால் பழுதுபார்த்தல்.

வினா எண். 2318— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் இடையாத்தி கிழக்கில் பாசன வாய்க்கால் எண். 98, 99, 100 ஆகிய குமிழ்களை பழுது பார்த்துகொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

23—

பில்லங்குழியிலுள்ள ஏரியை ஆழப்படுத்தல்.

வினா எண். 2333— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் கழுகுப்பிழிக்காடு ஊராட்சி பில்லங்குழியில் உள்ள நி. 200—ஏரியை புல்டோசர் வைத்து ஆழப்படுத்தி பராமரிப்பு செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

24—

தார்சாலை அமைத்தல்.

வினா எண். 4648— திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியத்திலுள்ள அண்ணாமலைப்புதூர்—மேலமருதப்பபுரம் சாலையை தார்சாலையாக அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் சாலையானது அண்ணாமலைபுதூர் சாலையாகும். கி.மீ. 0/0-2/6. இச்சாலை ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் பராமரிக்கப்படும் கற்சாலையாகும். இந்த சாலையை தார் சாலையாக மேம்பாடு செய்ய சுமார் ரூ. 2.60 லட்சம் தேவைப்படும். 8-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் பராமரிக்கப்படும் சாலைகளில் சாலை மேம்பாடு மற்றும் பாலப் பணிகள் நெடுஞ்சாலைத் துறையில் பகுதி—2 திட்டத்தில் எடுத்துச் செய்ய வழிவகை செய்யப்படவில்லை. எனவே இந்த பணியினை பகுதி—2 திட்டத்தில் எடுத்துச் செய்ய வாய்ப்பில்லை.

25—

சென்னை குடிசைப் பகுதிகளுக்கு ஒரு விளக்குத் திட்டம்.

வினா எண். 5057—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராமப்புறத்தில் ரூபாய் 10 மட்டும் கட்டணம் செலுத்தினால் வழங்கப்படும் இலவச மின்சார ஒரு விளக்குத் திட்டம் சென்னையிலுள்ள குடிசைப்பகுதிகளுக்கும் கொண்டு வரப்படுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதி ஆண்டு அது அமல்படுத்தபடுமா?

விடை—

(அ) ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு எனும் இலவச மின் இணைப்பு திட்டத்தை சென்னையிலுள்ள குடிசைப் பகுதிகளுக்கு கொண்டு வர திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

26—

தெரு விளக்கு வசதி செய்தல்.

வினா எண். 5410—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

மங்களூர் ஒன்றியத்தை சேர்ந்த பெருமளை கிராமத்தில் தெரு விளக்குகள் அமைத்து மின்சார வசதி செய்து அரசு ஆவன செய்யுமா?



விடை—

மங்களூர் வட்டாரத்தைச சேர்ந்த பெருமளை கிராமத்தில் 23 தெரு விளக்குகள் அமைக்க மனு பெறப்பட்டுள்ளது. இத்தெருவிளக்குகள் யாவும் அரசின் தெரு விளக்குகளுக்கான சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தில் (1991–92) சேர்க்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட வட்டார அலுவலர் (Block Development Officer) அவர்களிடமிருந்து இத்திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை பெறப்பட்டதும் இந்த 23 தெருவிளக்குகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

27—

சென்னை அரசினர் தோட்ட வளாகத்திற்குள் குடியிருப்புகள்.

வினா எண் 5548—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை அரசினர் தோட்ட வளாகத்திற்குள் உள்ள குடியிருப்புகள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இவை யார் யாருக்கு குடியிருப்புக்கு தருவதற்கென உள்ள அரசின் நெறிமுறைகள் என்ன?

(இ) இவற்றில் குடியிருந்த சட்டமன்ற உறுப்பினர்களில் எவ்வளவு பேர்கள் வாடகை நிலுவை வைத்துள்ளனர்?

(ஈ) அவற்றினை வசூலிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) சென்னை அரசினர் தோட்ட வளாகத்திலுள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை—209.

(ஆ) இக்குடியிருப்புகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும்—அவர்களின் ஊதியத்தின் அடிப்படையிலும், முதுநிலைப் பட்டியலின்படியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன.

(இ) இவற்றில் குடியிருந்த சட்டமன்ற உறுப்பினர்களில் 26 உறுப்பினர்கள் வாடகை நிலுவை வைத்துள்ளனர்.

(ஈ) சட்டப்பேரவை துணைச் செயலர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களின் வாடகை நிலுவைத் தொகையை உறுப்பினர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்து இவ்

விவரங்களை தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) அவர்களுக்கு தெரிவித்து வருகிறார். இது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து அவ்வப்பொழுது அரசுக்கு தெரிவிக்க வேண்டுமென்று தலைமைப் பொறியாளர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

28—

பெண்கள், விதவைகளுக்கு பஞ்சாயத்து அலுவலகங்களில் காலியாக உள்ள பணியிடங்களில் முன்னுரிமை வழங்கல்.

வினா எண். 42—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பஞ்சாயத்து அலுவலங்களில் காலியாக உள்ள பணியிடங்களில் பெண்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிந்து இருப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படுமா?

விடை—

பொதுத் துறையில் ஏற்படும் காலியிடங்களை வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்குத் தெரிவித்து, அலுவலகங்களால் பரிந்துரை செய்யப்படும் மனுதாரர்களின் மூலமாக நிரப்பப்பட வேண்டுமென்று 5–7–1971 நாளிட்ட தொழிலாளர் துறை, அரசு ஆணை (நிலை) எண் 790-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பெண்களுக்கு அரசுப் பணிகளில் 30 சதவீதம் காலியிடங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென்று 17–2–1989 நாளிட்ட பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, அரசு ஆணை எண் 89-ல் வெளியிடப்பட்ட ஆணை உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் பொருந்தும். ஆதரவற்ற விதவைகளுக்கு அரசு பணியில் பணியிடங்கள் உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் அரசு உதவி பெறும் நிறுவனங்கள் ஆகியவைகளில் எந்த ஒரு பணியிடத்திற்கும் கல்வி மற்றும் பிற தகுதிகள் இருந்தால் அவர்களுக்கு வேலை வாய்ப்பில் தனி சலுகை அளிக்கலாமென 8–3–1984 நாளிட்ட பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அரசாணை (நிலை) எண் 225-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கு இது போன்ற முன்னுரிமை வழங்க அரசாணைகள் தற்போது இல்லை.

29—

சாலை மராமத்து செய்தல்.

வினா எண். 1983—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :



தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம் அதம்பை (தெ)-ஐச் சேர்ந்த திருவள்ளுவர் நகர், நடுவிக் கோட்டை வரை அதம்பை (தெ) வழியாக செல்லும் சாலையை மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

திருவோணம் ஊராட்சி ஒன்றியம் அதம்பை தெற்கைச் சேர்ந்த திருவள்ளுவர் நகரிலிருந்து கி.மீ. 0/0-0/4 வரை மண் சாலை அமைக்கப்பட்டுள்ளது. நடுவிக்கோட்டையிலிருந்து அதம்பை (தெற்கு) வரை பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த இடமாகும். இதனை சிகப்புக் கப்பிச் சாலையாக மாற்றிட போதுமான நிதிவசதி இல்லாததால் இதை அமைக்க தற்சமயம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

30—

தொலைக்காட்சிப் பெட்டி வைக்க கட்டிடம்.

வினா எண். 2531—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்குப் விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் படப்பனார் வயலில் தொலைக்காட்சி வைக்க கட்டிடம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

ஒவ்வொரு ஊராட்சி மற்றும் அதன் குடியிருப்பிற்கென்று தொலைக்காட்சிப் பெட்டி வைக்க, கட்டிடம் கட்டித்தர தனித்தனியான செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

31—

பின்னவாசல் ஆதிதிராவிடர்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்கல்.

வினா எண். 2541—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் பின்னவாசல் ஆதிதிராவிடர்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டி அமைத்துத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

[1992 ஏப்ரல் 24

விடை—

இவ்வாண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப்பட்டியல்கள், அவைகளின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன, இப்புள்ளி விவரங்களின் படி விகிதாச்சார அடிப்படையில் எல்லா மாவட்டங்களுக்கும் தொலைக் காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்புக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

32—

## கூட்டுறவு துணைப்பதிவாளர் அலுவலகம் அமைத்தல்,

வினா எண். 1694—டாக்டர் எஸ், சுந்தரராஜ்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி வருவாய் கோட்டத்திற்கு கூட்டுறவுத் துணைப்பதிவாளர் அலுவலகம் (Deputy Registrar of Co-operative Societies) அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ)—பரமக்குடியில் ஒரு கூட்டுறவுத் துறை துணைப்பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்துவதற்காக 27–12–1991 அன்று தக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

33—

## வலப்பிரமன் காட்டில் பகுதி நேர அங்காடி தொடங்கல்,

வினா எண். 2544—திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வலப்பிரமன் காட்டில் அங்காடி இல்லாததால் சொர்ணக்காட்டிலுள்ள அங்காடியை பிரித்து வலப்பிரமன்காட்டில் பகுதி நேர அங்காடி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



1992 ஏப்ரல் 24]

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வலப்பிரமன் காடு கிராமம் சொர்ணக்காட்டில் அமைந்துள்ள அங்காடியிலிருந்து 2 கிலோ மீட்டர் தூரமே உள்ளதால் தற்போதுள்ள அரசு ஆணைகளின்படி வலப்பிரமன்காட்டில் பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை,

34—

## மழவேனிற்காட்டில் கிராம அங்காடி அமைத்தல்

வினா எண். 2636—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், மழவேனிற்காட்டிற்கு ஒரு கிராம அங்காடி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டிணம் நகரத்தை ஒட்டி அமைந்துள்ள மழவேனிற்காடு குக்கிராமத்தில் 193 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாலும், தற்போது அத்தியாவசியப் பண்டங்கள் பெற்றுவரும் அதிராம்பட்டிணம் எண். 7 அங்காடிக்கும், இந்தக் கிராமத்திற்கும் இடைப்பட்ட தூரம் 1½ கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதாலும், குடும்ப அட்டைகள் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதாலும், மழவேனிற்காடு குக்கிராமத்தில் ஒரு நியாயவிலைக் கடை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை,

35—

## பகுதி நேர அமுதம் அங்காடியை முழுநேர அங்காடியாக மாற்றல்

வினா எண். 3171—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அழகியநாயகிபுரம் ஊராட்சி கரிசவயலில் இயங்கும் பகுதி நேர அமுதம் அங்காடியை முழுநேர அங்காடியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1992 ஏப்ரல் 24

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அழகிய நாயகிபுரம் ஊராட்சி கரிசவயலில் இயங்கும் பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேர கடையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

36—

வினா எண். 3175—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஏனாதிகரம் பையில் உள்ள பகுதிநேர அமுதம் அங்காடியை முழுநேர அங்காடியாக மாற்றி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தற்போது இயங்கிவரும் ஏனாதிகரம்பை பகுதிநேர அங்காடியில் 296 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டு, வாரத்தில் மூன்று நாட்கள், பொதுமக்களுக்கு எவ்வித இடையூறுமின்றி முறையாக இயங்கி வருவதால் இதனை முழுநேர அங்காடியாக மாற்றுவது பொருளாதார அடிப்படையில் சாத்தியமில்லை. எனவே, இதனை முழுநேர அங்காடியாக்க அவசியமில்லை.

37—

## தொழிலாளர் நல வாரியத்தின் கீழ் இயங்கும் நூல் நிலையங்கள்.

வினா எண். 8260—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தொழிலாளர் நல வாரியத்தின்கீழ் எங்கெங்கு தொழிலாளர்களுக்கு நூல் நிலையம் மாவட்ட வாரியாக உள்ளன?

(ஆ) 1988–89-க்கு பிறகு அவற்றில் ஏதேனும் மூடப்பட்டு விட்டனவா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின்கீழ் தொழிலாளர்களுக்கென 13 இடங்களில் நடைபெற்று வரும் நூல் நிலையங்களின் பட்டியல் மாவட்ட வாரியாக கொடுக்கப்பட்டுள்ளது.



1992 ஏப்ரல் 24]

## மாவட்ட வாரியாக தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின்கீழ் இயங்கி வரும் நூல் நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | செம்பியம் | .. | செங்கல்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டம். |
| 2. | தண்டையார்பேட்டை | .. | செங்கல்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டம். |
| 3. | விழுப்புரம் | — | தென்னார்காடு மாவட்டம். |
| 4. | மதுரை | .. | மதுரை மாவட்டம். |
| 5. | ஈரோடு | — | பெரியார் மாவட்டம். |
| 6. | மேட்டூர் அணை | .. | சேலம் மாவட்டம். |
| 7. | திருநெல்வேலி(பேட்டை) | — | திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம். |
| 8. | தச்சநல்லூர் | .. | திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம். |
| 9. | ஒண்டிப்புதூர் | .. | கோயம்புத்தூர் மாவட்டம். |
| 10. | திருச்சி-10 | — | திருச்சி மாவட்டம். |
| 11. | எண்ணூர் | — | செங்கல்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டம். |
| 12. | தாராபுரம் | — | பெரியார் மாவட்டம். |
| 13. | வடலூர் | — | தென்னாற்காடு மாவட்டம். |

(ஆ) மற்றும் (இ) நாகர்கோவில் மற்றும் விக்கிரமசிங்கபுரத்தில் இயங்கிய நூல் நிலையங்கள் போதிய வாசகர்கள் வருகையின்மையால் முறையே 1—12—1989 மற்றும் 1—8—1989 ஆகிய தேதிகளில் மூடப்பட்டன.

38—

## புகையிலை விளைச்சலை அதிகரிக்க நடவடிக்கை

வினா எண். 3236—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இம்மாநிலத்தில் மாவட்ட வாரியாக புகையிலை சாகுபடி செய்யும் பரப்பளவு எவ்வளவு?

[1992 ஏப்ரல் 24

(ஆ) ஓராண்டுக்கு புகையிலைச் சாகுபடி செய்த அளவு எவ்வளவு?

(இ) புகையிலை விளைச்சலை மற்றும் பயிரிடும் பரப்பளவை அதிகரிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் விவரங்கள் என்ன?

விடை— (அ)

| வரிசை எண். | மாவட்டம். | பரப்பளவு. (ஹெக்டேர்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | வட ஆற்காடு—அம்பேத்கார் .. | 9 |
| 2. | திருவண்ணாமலை—சம்புவராயர் | |
| 3. | சேலம் .. .. | 269 |
| 4. | கோயம்புத்தூர் .. .. | 1,666 |
| 5. | பெரியார் .. .. | 4,927 |
| 6. | திருச்சிராப்பள்ளி .. .. | 12 |
| 7. | தஞ்சாவூர் .. .. | 350 |
| 8. | மதுரை .. .. | 52 |
| 9. | திண்டுக்கல்—அண்ணா .. .. | 2,003 |
| 10. | திருநெல்வேலி—கட்டபொம்மன் .. | 70 |
| | மொத்தம் .. | 9,358 |

(ஆ) 11,860 மெட்ரிக் டன்.

(இ) உலகம் முழுவதும் புகையிலை புகைப்பதற்கு எதிராக இயக்கம் நடைபெற்று வருவதால் மத்திய அரசு புகையிலைக்கு மாற்று வணிக பயிர் சாகுபடி செய்ய அறிவுறுத்தியுள்ளது. புகையிலையினால் செய்யப்படும் பொருட்கள் உபயோகிப்பவர்களுக்கு புற்று நோய் வரும் ஆபத்து ஏற்படுவதால் அரசு ஏற்கெனவே புகையிலை சாகுபடியை குறைக்க அறிவுறுத்தியுள்ளது. மேற்கண்ட சூழ்நிலையில் வேளாண்மை துறையினால் புகையிலை அபிவிருத்திக்கு அளிக்கப்பட்டு வந்த நிதி உதவி நிறுத்தப்பட்டது. இருப்பினும், தற்பொழுது புகையிலை பயிரிடப்படும் பரப்பளவில் தேர்ந்த உழவியல் பயிர் பாதுகாப்புமுறை மற்றும் உரமிடுதல் ஆகிய நடவடிக்கைகளில் தகுந்த முறையில் மேற்கொள்ளப்படுகிறது.



1992 ஏப்ரல் 24]

39—

வீட்டுவசதி வாரியத்தால் அரசு ஊழியர்களுக்கு கட்டித் தரப்பட்டுள்ள வீடுகளின் வாடகையை உயர்த்தல்.

வினா எண். 4077—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வீட்டுவசதி வாரியத்தால் அரசு ஊழியர்களுக்கு எத்தனை வகையான வீடுகள் கட்டித் தரப்படுகின்றன?

(ஆ) அவற்றிற்கான வாடகை விவரமென்ன?

(இ) இவ்வாடகையை உயர்த்துவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறதா?

விடை—

(அ) மற்றும் (ஆ)

அரசு ஊழியர்களின் சம்பள விகிதத்திற்கேற்ப அவர்களுக்கு 6 வகையான வீடுகள் கட்டித் தரப்படுகின்றன.

| அடிப்படை சம்பளம் | தகுதி 1-அ தகுதி 1-ஆ | தகுதி-2 | தகுதி-3 | மற்ற பகுதிகள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| ரூ. 950–1,799 | 3%+ வீட்டு வாடகை படி. | 3%+ வீட்டு வாடகை படி. | 2%+ வீட்டு வாடகை படி. | 2%+ வீட்டு வாடகை படி. |
| ரூ. 1,800—2,999 | 5%+ வீட்டு வாடகை படி | 4%+ வீட்டு வாடகை படி | 4%+ வீட்டு வாடகை படி | 3%+ வீட்டு வாடகை படி |
| ரூ. 3,000— மற்றும் அதற்கு மேல். | 8% வீட்டு வாடகை படி. | 8% வீட்டு வாடகை படி. | 8% வீட்டு வாடகை படி. | 6% வீட்டு வாடகை படி. |

(இ) தற்போது இல்லை.

40—

பாலர் பள்ளி அமைத்தல்.

வினா எண். 2209—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

[1992 ஏப்ரல் 24

தஞ்சாவூர் வட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி ஊராட்சி வேளார் தெருவில் ஒரு பாலர் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தற்சமயம் இல்லை.

41—

அமைப்பாளர்களே காய்கறிகளை வாங்கி சத்துணவுக் கூடங்களுக்கு விநியோகித்தல்.

வினா எண். 5911—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு முழுவதும் அமைப்பாளர்களே காய்கறிகளை வாங்கி சத்துணவுக் கூடங்களுக்கு விநியோகிக்க வேண்டும் என்ற அரசு உத்தரவு இருந்தும் சில மாவட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் காய்கறி வாங்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தமிழகம் முழுவதும் ஒரே முறையைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) சத்துணவுத் திட்டத்திற்குத் தேவைப்படும் காய்கறிகளை வெளி மார்க்கெட்டில் வாங்கிக் கொள்ளலாம் என்று 5–4–1988 நாளிட்ட பொது (முகுசதி) துறையின் 591, ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆயினும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வாங்கப்படும் காய்கறிகள் தரத்தில் சிறந்தவையாகவும், விலை நியாயமானதாகவும் இருப்பின் கூட்டுறவுச் சங்கங்களில் காய்கறிகள் வாங்குவதற்குத் தடையேதும் இல்லை எனவும் இந்த ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அரசு கடித எண். 2418/சதி 1, நாள் 26–2–1991-ல் சத்துணவு மையங்கள் காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் அருகில் இருந்தால் அரசாணை எண் 591-ன் அடிப்படையில் சத்துணவு அமைப்பாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து காய்கறிகளை வாங்குவதற்கு முன்னுரிமை அளிக்கலாம் என்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக சத்துணவு மையங்களுக்குத் தேவையான காய்கறிகளைக் கூட்டுறவுச் சங்கங்கள், அல்லது வெளிச் சந்தை எங்கு வேண்டுமானாலும், தரம், விலை ஆகியவற்றைப் பொறுத்து வாங்கிக் கொள்ளலாம்.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.



1992 ஏப்ரல் 24]

42—

சத்துணவு அமைப்பாளர்களின் பணியினைக் கண்காணிக்கும் பொறுப்பினை தலைமை ஆசிரியருக்கு வழங்கல்.

வினா எண். 8241—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சத்துணவு அமைப்பாளர்களின் பணியினை கண்காணிக்கும் பொறுப்பினை அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியருக்கு வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ)

இல்லை.

43—

ஆதி திராவிடர்களுக்குச் சமுதாயக் கூடம் அமைத்தல்.

வினா எண். 1966—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை (வ) ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக் கூடம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

44—

பள்ளிக்குச் செல்ல குறுக்குச் சாலை அமைத்தல்.

வினா எண். 2362—திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பூவாளூர் கிழக்கு ஆதி திராவிடர் தெருவிலிருந்து பள்ளிக்குச் செல்ல குறுக்குச் சாலை அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1992 ஏப்ரல் 24

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் 'பூவாளூர் கிராமத்தில் புல எண். 131, 132 மற்றும் 134 ஆகிய நத்தம் பகுதிகளில் பூவாளூர் கிழக்கு ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதி உள்ளது. இதில் புல எண் 134-ல் பூவாளூர் கிழக்கு ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி உள்ளது. இதற்கு பாதை வசதி உள்ளது.

இது தவிர பூவாளூர் கிராமத்தில் புல எண் 77-ல் கிழக்குப் பகுதியிலும் 79, 80 மற்றும் 81/8பி ஆகியவற்றில் மேற்குப் பகுதியிலும் ஆதி திராவிடர் குடியிருப்பு உள்ளது. இப்பகுதிக்கு ஆரம்பப்பள்ளிக்கூடம் புல எண் 77-ல் பூவாளூர் மேற்குப் பகுதியில் உள்ளது. இப் பள்ளிக்கு சுமார் 4 பர்லாங் தூரம் புல எண் 79, 80 மற்றும் 81/8பி உள்ள ஊராட்சி சாலை வழியாக செல்ல வேண்டும். எனவே, புல எண் 78/2, 3, 60 பி ஆகிய நஞ்சை நிலங்களில் 6 சென்ட் பரப்பிற்கு சுமார் 50 மீட்டர் நீளம் குறுக்குச் சாலை வசதிக்கு நில எடுப்பு செய்தால் புல எண் 77 நத்தத்தில் உள்ள பூவாளூர் மேற்கு ஆரம்பப் பள்ளியை அடைந்து விடலாம். இந்நிலை எடுப்பு பாகத் திற்கு இழப்பீட்டுத் தொகையாக உத்தேசமாக ரூ. 2,500 மதிப்பீடு ஆகும். இந்த இனத்தில் நில எடுப்பு சட்டத்தின் படி நில எடுப்பு செய்வதற்கு பிரிவு 4(1) முன்மொழிவு களைப் பட்டுக்கோட்டை ஆதி திராவிடர் நல தனி வட்டாட்சி யரிடம் இருந்து பெறப்பட்ட பின் அரசுக்கு அனுப்புவதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

45—

பழுதடைந்த காலனியைப் பழுதுபார்த்தல்.

வினா எண். 2752—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் பழைய முதல்சேரியில் உள்ள ஆதி திராவிடர்களின் பழு தடைந்த காலனியைப் புதுப்பித்துத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

அரசு ஆணையின்படி ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியினர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் பய னாளிகள் தாங்களாகவே சொந்தச் செலவில் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பயனாளி களுக்கு வீடுகள் ஒதுக்கும் போதே தெளிவுபட எடுத்துக்



1992 ஏப்ரல் 24]

கூறப்பட்டு உடன்பாட்டு பத்திரத்தில் அவர்களின் இசைவும் பெறப்படுகிறது. இலவசமாகக் கொடுக்கப்பட்ட வீடு களைப் பழுது பார்ப்பதையும் அரசே மேற்கொண்டால் புதிய வீடுகள் கட்டி வழங்க நிதி வசதி இல்லாமல் போய் விடும் என்பதால் பழுது பார்க்கும் பணிகளையும் அரசே மேற்கொள்வதற்கான திட்டம் ஏதும் இல்லை.

46—

கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் அமைத்தல்.

வினா எண். 2758—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கோட்டாகுடியில் கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் ஒன்று அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

47—

ஆதி திராவிடர்களின் பழுதடைந்த வீடுகளைப் பழுது பார்த்தல்.

வினா எண். 2988—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா விற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குப்பத்தேவன் ஆதிதிராவிடர்களின் பழுதடைந்த வீடுகளைப் பழுதுபார்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

அரசு ஆணைப்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி யினர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை பய னாளிகள் தாங்களாகவே சொந்தச் செலவில் பராமரிக் கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பய னாளிகளுக்கு வீடுகள் ஒதுக்கும் போதே தெளிவுபட எடுத் துக் கூறப்பட்டு உடன்பாட்டு பத்திரத்தில் அவர்களின் இசை வும் பெறப்படுகிறது. இலவசமாக கொடுக்கப்பட்ட வீடு

களைப் பழுது பார்ப்பதையும் அரசே மேற்கொண்டால், புதிய வீடுகள் கட்டி ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கு வழங்க நிதி வசதி இல்லாமல் போய்விடும் என்பதால் பழுது பார்க்கும் பணிகளையும் அரசே மேற்கொள்வதற்கான திட்டம் ஏதும் இல்லை.

48—

மீனவர்களுக்கு அடையாள அட்டை வழங்க காலதாமதம் ஆவதைத் தவிர்க்க நடவடிக்கை.

வினா எண். 3023—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீன்ளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழுமங்கடா மீனவர்களுக்கு மீன் துறை அடையாள அட்டை வழங்க மிகவும் காலதாமதம் ஆவதை தவிர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தஞ்சாவூர் மாவட்ட சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கழுமங்கடா மீனவ கிராமத்தை சார்ந்த மீனவர்கள் அனைவருக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுவிட்டன.

49—

மீனவர்களுக்கு காலனி வீடுகள்.

வினா எண். 6626—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சியைச் சேர்ந்த வெளிவயல் மீனவர்களுக்கு மீனவர் காலனி கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.



50—

வினா எண். 6952—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம், ஒன்றியம், கழுமங்கடா மீனவர்களுக்கு மீனவர் காலனி கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிப்பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

முற்பகல் 10-35

## 3. கவன ஈர்ப்பு.

### (அ) அரியலூர் தொகுதி வேப்பங்குழி கிராமத்தில் விஷக்காய்ச்சல் பரவியுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. டாக்டர் சு. மணிமேகலை அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் சு. மணிமேகலை.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''அரியலூர் தொகுதி திருமானூர் ஒன்றியம் வேப்பங்குழி கிராமத்தில் விஷக்காய்ச்சல் பரவியுள்ளது குறித்து'' மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டு இருக்கிறது.

### விவர அறிக்கை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமானூர் ஒன்றியத்தைச் சேர்ந்த வேப்பங்குழி என்ற கிராமத்தில் மார்ச் மாதம் 20ஆம் தேதியிலிருந்து விஷக்காய்ச்சல் பரவத் தொடங்கியது. இவ்விஷக்காய்ச்சலினால் 45 நபர்கள் பாதிக்கப்பட்டனர். பாதிக்கப்பட்ட 5 நோயாளிகள் அரியலூர் அரசு மருத்துவமனையிலும், 6 நோயாளிகள் திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவமனையிலும் மற்றும் ஒரே ஒரு நபர் மட்டும் தனியார் மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். அக்கிராமத்தில் மரணமடைந்த ஓர் பெண் சிறுநீரகச் சம்பந்தப்பட்ட நோயின் காரணமாகத்தான் மரணமடைந்ததாக தகவல் வந்திருக்கிறது. பாதிக்கப்பட்ட 45 நபர்களில், 35 நபர்களுக்கு இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டு, அதன் முடிவுகள் விரைவில் எதிர்பார்க்கப்படுகின்றன. மேலும், இக்கிராமத்தின் குடிநீர் பரிசோதனைக்காக எடுக்கப்பட்டு கிண்டியிலுள்ள முதன்மை நீர் பகுப்பாய்வாளர்



அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதன் முடிவும் விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. இக்கிராமத்தில் உள்ள குடிநீர் கிணறு தினந்தோறும் பிளீச்சிங் பவுடர் மூலம் கிருமி நீக்கம் செய்யப்பட்டு வருகிறது. இந்நோய் மேலும் பரவா வண்ணம் சுகாதார அதிகாரிகளால் தேவையான கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மார்ச் மாதம் 27ஆம் தேதிக்குப் பிறகு, இந்நோயினால் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. இக்கிராமம் தீவிர கண்காணிப்பில் உள்ளது. நிலைமையும் கட்டுக்குள் உள்ளது.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனவரி மாதம் முதலே அந்தப் பகுதியிலே விஷ ஜுரம் உள்ளது. மார்ச் 27-க்குப் பிறகு இந்நோயால் எந்தவித பாதிப்பும் இல்லை என்று அவை அறிக்கையில் உள்ளது. ஆனால், மார்ச் மாதம் 28ஆம் தேதி நானே அந்தக் கிராமத்திற்குச் சென்று பார்த்தேன். பேஷண்ட்சையும் பரிசோதனை செய்தேன். நாகராஜன் என்ற ஒரு நபர் இன்னும் அந்த விஷ ஜுரத்தால் மிகவும் பாதிக்கப்பட்டு, அதாவது '' ஸ்டிப் ஜாய்ண்ட் '', '' ஸ்டிப் நெக் '' எல்லாம் உள்ளது. இன்னும் வேறு பல பேஷண்டுகளும் உள்ளனர். நமது கழகச் செயலாளரே அங்கே இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். ஆகவே, '' aided existence '' டெங்கு ஜுரம் போன்ற சிஸ்டம்ஸ் உள்ளது. அதாவது '' Break bone fever '' என்று சொல்வார்கள். அடுத்து, அந்தக் கிராமத்தில் ஒரு பெண் இறந்து விட்டது சிறுநீரகம் சம்பந்தப்பட்ட நோய் காரணமாகத்தான் என்று அறிக்கையில் உள்ளது. ஆனால், டெங்கு பீவர், சில சமயங்களிலே '' ஹெமரேஜ் சிம்டம்தோடு '' கூடியே இருக்கும். ஆகவே, டெங்கு பீவர் இல்லை என்பதை நிரூபிக்கும் வகையில், '' வைரஸ் கல்ச்சர் '' செய்யவும், '' மஸ்கிட்டோ ஐடென்டிபிகேஷன் '' அதாவது '' லார்வா டெஸ்ட் '' செய்யவும் அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ? ஏனெனில் இந்த ஜுரம் 1965ஆம் ஆண்டு, மற்றும் 1985ஆம் ஆண்டு ஆகிய இரண்டு ஆண்டுகளில் வந்து, ஆயிரக்கணக்கான மக்கள் சென்னையில் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே, வேப்பங்குழி கிராமத்தில் ஜனவரி மாதத்தில் தொடர்ந்து காணப்பட்ட விஷ ஜுரம், என்ன ஜுரம் ? வைரஸ் ஜுரமாக இருந்தால், என்ன வைரஸ் ? என்ன வகை கொசுக்களினால் பரவுகிறது. அந்தக் கிராமத்தில் என்ன வகை கொசுக்கள் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது, என்பதை அறிய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு குடிதண்ணீரால் அந்த ஜுரம் பரவியிருக்குமா என்று கருதி, அந்தத் தண்ணீர் பரிசோதிக்கப்பட்டது. குடிதண்ணீரிலே, கிடைத்த தகவலின்படி, குளோரின்

போதிய அளவிற்கு இல்லை என்று சொல்லி ஒரு தகவல் கொடுக்கப்பட்டு இருக்கிறது. எனவே, மேல்நிலைத் தொட்டி கட்டி, பாதுகாப்பான குடிநீரைக் கொடுத்தால், இந்தப் பிரச்சினை தீரும் என்று ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. கிங் இன்ஸ்டிட்யூட்டில் ரத்தப் பரிசோதனைக்காக கொடுக்கப்பட்டதனுடைய முடிவு இன்னும் தெரியாமல் இருக்கிறது. அதையும் கேட்டு வாங்கி, உரிய நடவடிக்கையை மேற்கொள்ளலாம். எனவே, இது கொசுவின் மூலமாக வருகிறதா, வேறு என்ன காரணத்தால் வருகிறது, என்ன விதமான நோய் என்பதை மீண்டும் ஒரு முறை, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு தெரிவித்து, விரிவான ஆய்வைத் துறை மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் திருச்சியைச் சுற்றித்தான் இந்த நோய்கள் அதிகமாக வந்து கொண்டிருப்பதாக ஒவ்வொரு முறையும் தகவல் வந்துகொண்டிருக்கிறது.

ஏற்கெனவே அந்த தகவல் எனக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் மூளைக்காய்ச்சல்கூட அந்தப் பகுதியிலேதான், அதிகமாகப் பரவுவதாக சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக பன்றிகள் மூலமாக வருவதாக நமக்குச் சொன்னாலும்கூட, சில பறவைகள் மூலமாக வருகிறது. அங்கே சில பறவைகள் எல்லாம் வந்து செல்கிறது என்றெல்லாம் சொல்லி, எனக்கு குறிப்பு வந்திருக்கிறது. எனவே, அதைப்பற்றி தீவிரமாக ஆய்வு செய்வதற்கான ஏற்பாடுகள் ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கிறது. இதையும் அதோடு சேர்த்து ஆய்வு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

முற்பகல் 10-40

டாக்டர் சு. மணிமேகலை ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் அந்தப் பகுதியில் விஷ ஜுரத்தால் பல பேஷண்ட்ஸ் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். ஆகவே தற்காலிகமாக அந்த பேஷண்டுகளுக்கு டிரீட்மெண்டு அளிப்பதற்கு அருகாமையிலே ஒரு கிலோமீட்டர் தூரத்திலே ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் உள்ளது. அங்கே இரண்டு டாக்டர்கள் உள்ளார்கள். ஆனால் அவர்கள் அந்த கிராமத்திற்கு வருவதில்லை. ஏ.என்.எம். அவர்களை அனுப்பி சூபர்வைஸ் பண்ணச் செய்கிறார்கள். ஸ்டிஃப் ஜாயிண்ட், ஸ்டிஃப் நெக் எல்லாம் உள்ள பேஷண்ட்ஸ் அங்கேயிருக்கிறார்கள். அவர்களுக்கு குளுகோஸ் டிரிப் போடுவதற்கு உரிய நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட அந்த கிராமத்திற்கு மருத்துவர்கள் சென்று பார்க்கவேண்டுமென்று அரசாங்கம்



உத்தரவிடலாம். ஆனால் தேவையான மருத்துவ சிகிச்சையை செய்துகொள்வதற்கு அவர்கள் பக்கத்திலேயிருக்கின்ற அந்த மருத்துவ மனைக்கு வரவேண்டும். டிரிப் போடுவதற்கு எல்லாம் அந்த மருத்துவ மனைக்கு வந்தால்தான் சரியாக இருக்குமென்று நான் கருதுகிறேன். எனவே பரிசோதனைக்காக வேண்டுமானால் அந்த மருத்துவ அதிகாரிகள் அங்கே வந்து பார்த்துச் செல்லலாம். ஆனால் அதிலே பயன் இருக்குமா என்று எனக்குத் தெரியவில்லை. எனவே யாருக்கு எல்லாம் இந்த காய்ச்சல் பரவியிருக்கிறதோ, அவர்கள் அந்த மருத்துவ மனைக்கு வந்தால் தான் சரியாக இருக்கும். இருந்தாலும் அந்தப் பகுதியினுடைய டி.டி., ஜே.டி.-க்களுக்கு உடனடியாக தகவல் கொடுக்கப்பட்டு அதன் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (ஆ) குளித்தலையில் சாக்கடை நீர்த்தேக்கத்தால் ஏற்படும் பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. அ. பாப்பா சுந்தரம், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. அ. பாப்பா சுந்தரம்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' குளித்தலை பேரூராட்சியில் சாக்கடை நீர் தேங்கி இருப்பதால் ஏற்படும் பாதிப்பு குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் விளக்கக் குறிப்பு ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

### விளக்கக் குறிப்பு.

திருச்சி மாவட்டம், குளித்தலை பேரூராட்சிப் பகுதியில் குறைவன்கன்னாறு, பள்ளிவாசல் கண்ணாறு மற்றும் மச்சவாய்க்கால், ஆகிய மூன்று பாசன வாய்க்கால்கள் உள்ளன.

2. மேற்கண்ட மூன்று பாசன வாய்க்கால்களில் பாசன தண்ணீருடன் சாக்கடை கழிவு நீரும் செல்லுகின்றது. சாக்கடை நீர் செல்லுவதால் வாய்க்காலின் இருகரைகளிலும் மண் சரிந்து வாய்க்காலை மூடிவிடுவதால் சாக்கடை நீர் தேங்கிவிடுகின்றது. துப்புரவு பணியாளர்களைக் கொண்டு அவ்வப்போது சுத்தம் செய்யப்படுகின்றது. சாக்கடை நீரும், பாசன நீரும் சேர்ந்து விவசாயத்திற்கு பயன்பட்டு வருகிறது. சாக்கடை நீர் தேங்காமல் சீராக வடிவு செய்ய, மேற்கண்ட மூன்று வாய்க்கால்களுக்கு இருபுறமும் கருங்கல் சுவர் கட்டி, அடித்தளம் காங்கிரீட் அமைக்கப்பட வேண்டும். இதைத் தவிர சாக்கடை நீர் வடிவு செய்ய வேறு மார்க்கம் இல்லை. எனவே பாசன வாய்க்கால்களில் கழிவுநீர்கள் கலக்காமல் கழிவுநீர்ச் சாக்கடைகள் கட்டும் பணி குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலமாக மேற்கொள்ள பரிசீலனையில் உள்ளது. இருப்பினும் பேரூராட்சிப் பணியாளர்களைக் கொண்டு கழிவுநீர் தேங்கியுள்ள பகுதிகளில் மருந்தடிக்க ஏற்பாடு செய்யப்படும். இதனால் கொசுத் தொல்லை ஓரளவு கட்டுப்பாட்டுடன் இருக்கும். குடிநீர்க் குழாய்களில் எந்த இடத்திலும் சாக்கடை நீர் கலக்கவில்லை.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கக் குறிப்பிலே பாசன வாய்க்காலோடு சாக்கடை நீரும் கலந்து விடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். பாசன வாய்க்காலில் இந்த சாக்கடை நீர் கலந்து இருப்பதால் பாசன வாய்க்கால் நகர மையங்களிலே செல்வதால் வாய்க்காலின் இரு கரைகளிலும் மண் அரித்து அந்த சாக்கடை தூர்ந்துவிடுகிறது. அந்த சாக்கடை நீர்தூர்ந்துவிடுகின்ற காரணத்தால் அந்தக் கண்மாய்களில் எல்லாம் நீர் நிரம்பி ஊருக்குள்ளே அந்த சாக்கடை நீரும், இந்த நீரும் புகுந்துவிடுகிறது. குறிப்பாக பள்ளிவாசல், சிங்காரத்தோப்பு என்கின்ற தெருக்களில் எல்லாம் சாக்கடை நீரும், இந்த நீரும் தேங்கி நிற்கிறது. அங்கே குடிதண்ணீருக்காக போடப்பட்டிருக்கின்ற போர் பைப்புகளில் கூட இந்த சாக்கடை நீர் தேங்கி விடுகின்ற காரணத்தால் குடிநீர் எடுக்கமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதைப் போக்குவதற்கு அமைச்சரவர்கள் ஒரு நல்ல சாக்கடை தனியாக அமைத்துக் கொடுப்பாரா அல்லது இந்த கண்மாய்களை சரிசெய்து கொடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகுதிருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் குளித்தலை பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்துவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். அவ்வாறு நகராட்சியாக தரம் உயர்த்தப்படும்போது, நகர்ப்புற வளர்ச்சி நிதி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற்று இது போன்ற திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, இப்பகுதியிலுள்ள மூன்று பாசன வாய்க்கால்களுக்கு இருபுறமும் கருங்கல் சுவர் கட்டி, அடித்தளம் கான்கிரீட் அமைப்பதற்கான நடவடிக்கை எடுத்து, மேற்கூறிய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியாக ஆக்குவதாகச் சொல்லி இருக்கிறார்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். அதற்காக எங்களது இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த நகராட்சி அமைப்பிடம் மூன்று ஆண்டுகளாகவே இந்த சாக்கடை நீர் மிகவும் மோசமான நிலையில் தேங்கி அங்கே கொசுக்கள்—இப்போது சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது போல்—மூலம் பன்றிகளிலிருந்து மூளைக் காய்ச்சல் ஏற்படுவதற்கு குளித்தலையில் வழிவகை இருக்கிறது. ஆகவே, நீர்தேங்காமல் உடனடியாக செய்து, ஸ்லம் போர்டு மூலமாக, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக, அவர்கள் ஏதாவது ஏற்பாடு செய்வார்களா? நான் சென்ற ஆண்டிலே சட்டமன்ற எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த காரணத்தினால், அன்று நான் கேட்டும், குளித்தலைக்குத் தராமல் அரசாணை எண் 104, நாள்: 21-1-1991-ன்கீழ் அங்கே லால்குடி பேரூராட்சிக்கு அந்த நிதியைத் தந்தார்களே தவிர, குளித்தலை பேரூராட்சிக்குத் தரவில்லை. ஆகவே, இந்த ஆணையின்படி இந்த ஆண்டிலாவது குளித்தலை பேரூராட்சிக்குத் தந்து உதவும்படி நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதைச் செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சரோடு கலந்து பேசி இதுபற்றி விரைவான நடவடிக்கை எடுக்க அரசு பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கி. தருமலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர். (குறுக்கீடு)

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நான் ஒன்று கொடுத்திருக்கிறேன். அது என்ன ஆயிற்று ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. திரு. கி. தருமலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக இந்திய தணிக்கைத் துறை தலைவரின் 1973-74 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (சிவில்) வீராணம் முதலிய குடிநீர் வழங்கும் திட்டங்கள் குறித்த பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழு 1986–87-ல் அளித்த 46-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் 52-வது அறிக்கை.

மற்றும் தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியத்தின் செயல்பாடு குறித்த பொது நிறுவனங்கள் குழு 1991–92 இல் அளித்த 8-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் 53-வது அறிக்கை,

மற்றும் தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியத்தின் 1981–82 ஆம் ஆண்டு முதல் 1984–85 ஆம் ஆண்டு வரையிலான கணக்குகளின் தணிக்கை அறிக்கைகள் மீதான குழுவின் 54-வது அறிக்கை.

மற்றும் 1980–81 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கை மீதான பொது நிறுவனங்கள் குழு 1991–92 இல் அளித்த முதலாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய குழுவின் 55-வது அறிக்கை ஆகியவற்றை பேரவைக்கு அளிக்கிறேன்.

## (ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட விதிகள் ஆய்வு குழுவின் அறிக்கைகளை அளித்தல். மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, பேரவைத்துணைத் தலைவர் மற்றும் தலைவர், சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

பேராசிரியர் க. பொன்னுசாமி: (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1991–92 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 6-வது மற்றும் 7-வது அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்,



## (இ) மனுக்கள் குழு,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கா. ப. பட்டாபிராமன், மனுக்கள் குழுவின் தலைவர்,

திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 9-வது, 10-வது மற்றும் 11-வது அறிக்கைகளை இப் பேரவைக்கு அளிக்கிறேன். போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்கு பதிலாக படி எடுத்த பிரதிகள் சட்ட மன்ற நூலகத்தில் உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப் பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைக்கப் பெற்றவுடன் அறிக்கைகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க (ஆம்).

மறுப்போர் இல்லை என்க (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க (ஆம்).

மறுப்போர் இல்லை என்க (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன் . . (குறுக்கீடு).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.





முற்பகல் 10-50

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் அறிமுகம் செய்வதை. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது பேசுங்கள். நங்கள் ஓட்டெடுப்புக்கு விட்டு அது நிறைவேற்றப்பட்ட பிறகு இப்பொழுது எழுந்து நின்று பேசினீர்கள் என்றால் என்ன அர்த்தம்? நீங்கள் இன்ட்ரடக்ஷன் ஸ்டேஜிலே எதிர்க்கிறேன் என்று அப்போது சொல்ல வேண்டும். அப்போது தூங்கிக் கொண்டிருந்தால் என்ன பண்ணுவது? சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்கிறபோது 'அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்'' என்று அமைச்சர்கள் கூறுகிறார்களே, அப்போது நீங்கள் எழுந்து 'அறிமுகம் செய்வதையே நான் எதிர்க்கிறேன்' என்று சொல்லலாம். அப்படிச் சொல்லவில்லை நீங்கள். ஓட்டெடுப்புக்கு விட்ட பிறகு எழுந்து நிற்கிறீர்கள். ஓட்டெடுப்புக்கு விடப்பட்டு நிறைவேற்றிய தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறேன் என்றால் என்ன அர்த்தம்? அப்போது நீங்கள் சொல்லவில்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை. இங்கே கேளுங்கள். விதிகளை நீங்கள் படிக்க வேண்டும். நீங்கள் எதுவுமே தெரியாமல், விதியும் தெரியாமல் எதுவும் தெரியாமல் 'எதிர்க்கிறேன்' என்கிறீர்கள். அமைச்சர் அவர்கள் பேரவையின் அனுமதியைக்கோருகிறேன் என்கிறார், அப்போதுதான் உறுப்பினர்களுக்கு அந்த வாய்ப்பு. நீங்கள் எழுந்து 'இப்படி அறிமுகம் செய்வதை எதிர்க்கிறேன்' என்று சொல்லலாம். அப்போது நீங்கள் பேசாமல் இருந்தீர்கள். ஓட்டெடுப்புக்கு விட்டேன். அப்போது நீங்கள் அறிமுகம் செய்வதை எதிர்க்கிறேன் என்று சொல்லாவிட்டாலும் கூட, 'மறுப்போர் இல்லை என்க' என்று சொன்ன நேரத்திலாவது நீங்கள் இல்லை என்று குரல் கொடுத்து இருக்கலாம். அந்த நேரத்தையும் தவற விட்டுவிட்டீர்கள். மாண்புமிகு நிதியமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்கிறேன் என்றவுடனே யாரும் எதிர்க்கவில்லை என்ற அளவுக்கு ஓட்டுக்குப் போய்விட்டார். அதற்கு முன்னாலே நீங்கள் எதிர்க்கிறேன் என்று சொல்லியிருக்கலாம். இப்போது ஒன்றும் கெட்டுப்போய்விடவில்லை. நீங்கள் பேசின பேச்சிலிருந்தே நீங்கள் எதிர்க்கிறீர்கள் என்று ஆகியிருக்கிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து இது ஆய்வுக்கு வரப்போகிறது. ஆய்வுக்கு வருகின்ற நேரத்தில் உங்களுடைய மேலான கருத்துக்களை இதிலே சொல்லலாம். (குறுக்கீடு) இன்ரடக்ஷன் ஸ்டேஜில் நீங்கள் அப்ஜெக்ட்ன் பண்ணுகிற நேரம்

கடந்துவிட்டது என்கிறேன். அந்த நேரத்தில் நீங்கள் செய்ய வில்லை. (குறுக்கீடு) இங்கே கேளுங்கள். விதி என்னவென்று கேட்டீர்கள் என்றால் அவையினுடைய அனுமதியை அமைச்சர் கோருகிறார், அப்போது இதை நீங்கள் இன்டரடியூஸ் பண்ணுவதே தவறு, இதிலே டெக்னிககலாக தவறு இருக்கிறது என்று நீங்கள் சொல்லலாம். அப்போது நீங்கள் சொல்லவில்லை. அதற்கு அடுத்து ஓட்டெடுப்புக்கு விட்டதற்குப் பிறகு, நிறைவேறியதற்குப் பிறகு, அவையினுடைய கட்டளையை அமைச்சர் நிறைவேற்று கிறார். அவை நிறைவேற்றியதை 'அறிமுகம் செய்கிறேன்' என்று சொல்கிறார், அந்த நேரத்திலே இது வராது. (குறுக்கீடு) அறிமுகப் படுத்துவது எனபது அவையினுடைய கட்டளையை அமைச்சர் நிறைவேற்றுகிறார் என்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் விதியே தெரி யாமல் அறிமுகம் என்று சொல்கிறபோதெல்லாம் நீங்கள் எதிர்க்கவேண்டும் என்று அல்ல. அவர் இரண்டாவதாக அறிமுகம் செய்தது, அவை நிறைவேற்றிய தீர்மானத்தை, அவையினுடைய கட்டளையை, அதை இங்கே செயல்படுத்து கிறார். அந்த நேரத்திலே நீங்கள் எதிர்ப்பது அவையை அவமதிக்கிற குற்றத்திற்கு ஆளாவீர்கள் என்பதாகும். (குறுக்கீடு) இல்லை. உங்களுக்கு அந்த வாய்ப்பு உண்டு. எதிர்க்கின்ற வாய்ப்பு உண்டு. நான் உங்களுக்கு ஒரு விதியை சொல்கிறேன். அதாவது அமைச்சர் அவர்கள் முதலில் எழுந்து— இதிலே விதி இருக்கிறது—இதை ஒரே வரியிலே அறிமுகம் செய்தாகிவிட்டது என்று சொல்லிவிட்டு நாம் போகலாம். இதிலே ஒவ்வொன்றுக்கும் ஓட்டெடுப்பிற்கு விட்டு ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன் என்று சொல்லி, அதற்கு அடுத்து இரண்டாவதாக ஏற்போரே அதிகம் என்று நான் உறுதிப் படுத்திய அந்த நேரத்திலாவது இல்லை இல்லை நாங்கள் எதிர்க்கிறோம், நாங்கள்தான் அதிகம் என்று நீங்கள் சொல்லி வேண்டுமானால் டிவிஷன் கூடக் கேட்கலாம். (குறுக் கிடு) இல்லை, இல்லை. உங்களுக்கு அந்த அளவுக்கு வாய்ப்பு இருந்தால் நீங்கள் அந்த நேரத்திலே எல்லாம்கூட டிவிஷன் கேட்கலாம் என்பதற்காகத்தான் அந்த வார்த்தை எல்லாம் இருக்கிறது. நேரம் தவறி வந்து எதிர்க்கிறேன் என்கிறீர்கள். (குறுக்கீடு) அவர் அறிமுகப்படுத்தி அவையினுடைய கட்டளையை நிறைவேற்றுகின்ற கால கட்டத்திலே கூடாது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன், என்கிறபோது, உறுப்பினர்கள் அதை நான் எதிர்க்கிறேன் என்று சொல்லலாம். எதிர்க்கிறேன் என்று சொல்கிறபோதுகூட அமைச்சர் வேண்டுமானால் அதற்குப் பதில் சொல்லலாம். சொல்லாமலும் இருந்துவிடலாம். சட்டத்தை அறிமுகம் செய்கிறேன் என்று சொல்கிறபோது நீங்கள் எதிர்க்கிறேன் என்று சொல்லலாம். எதிர்க்கிறேன் என்று



சொல்வதற்கு அமைச்சர் அதற்கு விளக்கம் வேண்டுமானாலும் சொல்லலாம். சொல்லாமலும் இருக்கலாம். இங்கே சொல்ல வில்லை அவ்வளவு தான்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவகாரத்தை நீட்ட வேண்டிய அவசியம் இல்லை. வாய்ப்பை அவர்கள் தவறவிட்டுவிட்டார் கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியானால் நீங்கள் பேசாமல் இருந்திருக்கவேண்டும். நங்கள் இரண்டாவது பேசியதனாலேதான் இந்த வம்பே.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறேன் என்று சொல்லி அது பதிவாகவில்லையே தவிர மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்க்கிற வர்கள் என்பது நாட்டுக்குத் தெரிந்துவிட்டது. ஆகவே, விவாதம் வருகின்றபோது உங்களுடைய கருத்துக்களை நன்றாகச் சொல்லலாம். (சிரிப்பு).

முற்பகல் 10-55

திரு. ஜி. பழனிசாமி : தலைவர் அவர்களே, சொல்வோம். சொல்லியாகிவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொன்னீர்கள். எப்போது சொன்னீர்கள்? (குறுக்கீடு).

* திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொன்னது பதிவா காவிட்டாலும் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டது போல அவர்கள் எதிர்த்தார்கள் என்பதை அவை முன்னவர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அது பதிவாகியிருக்கிறது. அத்தோடு திருப்தி அடைந்து ஆய் வுக்கு எடுத்துக்கொள்கிற நேரத்தில் தாராளமாக எதிர்த்துப் பேசலாம். அதுதான் முறை. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழபபத்திற்கு இடம் இல்லாமல் லோக் சபாவில் இருக்கிற விதி மாதிரி " A Member can oppose the Bill at the stage of introducton, provided he gives it in writing to the speaker " என்று நாம் கூட வைத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. இல்லை மாண்புமிகு அமைச்சர் அவாகள சொல்லுவது போல் அல்ல. திரு. பழனி சாமி, அமைச்சர் சொல்லுவது போல் அல்ல. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பில்லை இண்டர்டியூஸ் செய்வதற்கு "If a motion for leave to introduce a Bill is opposed, the Speaker, after permitting, if he thinks fit a brief statement from the member who moves and from a member who opposes the motion, may without further debate, put the question thereon." என்றுதான் இருக்கிறது. நீங்கள் அந்த நேரத்தில் எழுந்து நான் எதிர்க்கிறேன் என்று சொல்லிவிட்டால் அப்போது உங்களுக்கு நான் வாய்ப்பே கூடக் கொடுக்கலாம். இல்லை கொடுக்காமல்கூட இருக்கலாம். அது வேறு. எதிர்க்கிறேன் என்று சொல்லுகிற அந்த நேரத்தை நீங்கள் தவற விட்டு விட்டீர்கள். (குறுக்கிடு) தவற விட்டு விட்டு (மேசையைத் தட்டும் ஒலி) நேரம் தவறிய பிறகு ஏதோ ஒரு சிந்தனையில் (குறுக்கீடு) எழுந்து இப்போது நான் எதிர்க்கிறேன் என்று சொன்னால் எப்படி? நீங்கள் இரண்டாவது எதிர்த்தது எதை எதிர்த்தீர்கள் என்றால் (குறுக்கடு) ஓட்டு எடுப்பு விட்டதற்குப் பிறகு, அந்தத் தீர்மானம் நிறைவேற்றியதற்குப் பிறகு இந்த அவையிலே முடிவு எடுத்ததற்குப் பிறகு, இந்த அவையினுடைய முடிவைச் செயற்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழுந்து நிற்கிற நேரத்தில் அதை எதிர்க்கிறேன் என்று சொல்வது என்ன அர்த்தத்தைக் கொடுக்கும் என்று சொன்னால் அவையினுடைய தீர்மானத்தை நிறைவேற்ற முன் வந்த அமைச்சரை எதிர்க்கிறீர்கள் என்றுதான் வரும். எனவே, அது இரண்டாவது வருவது முறையல்ல. நீங்கள் பேசுகிற போது பேசிக் கொள்ளுங்கள்.

## (இ) நிலக் கொடை வேள்வி (பூதான யக்ஞ) (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான யக்ஞ) (திருத்த) சட்ட முன் வடிவு. இதனைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான யக்ஞ) (திருத்த) சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தம்புசாமி இப்போது நீங்கள் செய்யலாம். (சிரிப்பு).

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க: (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்..

ஏற்போரே அதிகம்; தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஈ) சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; 1992 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மறறும் அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு. இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு கல்வி அமைச்சர் அனுமதி கோருவார்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

டி2 53-113—20

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**(உ) சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1992.**

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : 1992 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு. இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு கல்வி அமைச்சர் அனுமதி கோருவார்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(ஊ) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1992.**

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன் வடிவு. இதனைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு கல்வி அமைச்சர் அனுமதி கோருவார்.



<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

முற்பகல் 11.00

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(எ) ஏற்பு பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1992.**

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்பு பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, இதனைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு கல்வி அமைச்சர் அனுமதி கோருவார்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்புப்பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்).

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஏ) பல்கலைக் கழகங்களுக்கான சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ் நாடு பல்கலைக் கழகங்களுக்கான சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு. இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு கல்வி அமைச்சர் அனுமதி கோருவார்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்களுக் கான சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்." எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்).

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.





(ஐ) மாநில உயர்கல்வி மன்றச் சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ் நாடு மாநில உயர்கல்வி மன்றச் சட்டமுன்வடிவு. இதனைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு கல்வி அமைச்சர் அனுமதி கோருவார்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி யளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்).

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. அறிவிப்புகள்.

(அ) மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, 1992 (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறி விப்பு. 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவைப் பேர வையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### (ஓ) மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்) வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஔ) இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





''1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஔ). வன (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வன (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வன (திருத்த) சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

### (ஆ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1983-84 மற்றும் 1984-85 (ஆ.செ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1983-84 மற்றும் 1984-85 ஆகிய ஆண்டுகளின் மிகைச்செலவிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்திகள் வரப்பெற்றுள்ளன :

"In pursuance of Clause I of Article 205 read with Clause 3 of Article 203 of the constitution of India, I Bhishma Narain Singh, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly to make grants for the demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 1983-84 in excess of the amount authorised or granted for those services and purposes and for that matter."

"In pursuance of Clause of Article 205 read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, Bhishma Narain Singh, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legielative Assembly to make grants for the demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 1984-85 in excess of the amount authorised or granted for those services and purposes and for that matter."

## 7. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1983-84—வாக்கெடுப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1983-84 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். மாண்புமிகு நிதியமைச்சர்.

முற்பகல் 11-50

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"1983-84-ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 22-4-1992- ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1983-84—ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுக்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."
என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்படுகிறது.

### நிறைவேற்றப்பட்ட 1983-84-ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்.

| | கோரிக்கை. | (ரூபாய்) |
|---|---|---|
| 4 | பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் .. .. | 9,82,901 |
| 36 | பாசனம் .. .. .. .. | 2,91,53,461 |
| 37 | பொதுப் பணிகள்—கட்டிடங்கள் .. | 90,88,882 |
| 39 | சாலைகளும் பாலங்களும் .. .. | 57,62,942 |
| 41 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு .. .. .. .. | 86,98,547 |
| 42 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் .. .. .. | 2,77,90,563 |
| 46 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. .. | 85,92,971 |
| | பெருமொத்தம் .. | 9,00,70,267 |

## 8. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1984-85 வாக்கெடுப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1984-85-ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1984-85-ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 22—4—1992-ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே கோரப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1984-85-ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுக்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''
என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

நிறைவேற்றப்பட்ட 1984-85-ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| | கோரிக்கை | (ரூபாய்) |
|---|---|---|
| 5 | முத்திரைத் தாள்கள்—நிருவாகம் | 2,78,565 |
| 11 | மாவட்ட நிருவாகம் | 93,14,785 |
| 13 | நீதி நிருவாகம் | 12,58,139 |
| 32 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் முதலியோர் நலன் | 25,61,026 |
| 37 | பொதுப் பணிகள்—கட்டிடங்கள் | 1,51,11,910 |
| 40 | சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்கு வரத்தும் | 21,13,763 |
| 42 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் | 5,15,39,789 |
| 36 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 1,15,93,240 |
| 47 | செய்தி—திரைப்படத் தொழில் நுட்பவியல் | 17,27,686 |
| 50 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 9,76,475 |
| 55 | காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 10,67,124 |
| | பெரு மொத்தம்.. | 9,75,42,502 |



6. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(இ) நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு, 1992.(அ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992—ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) — தொடர்ச்சி.

(அ) நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992—ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

''1992—ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''
எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

### (ஈ) நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு, 1992 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 5. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)–தொடர்ச்சி.

### (ஆஆ) நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

''1992–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''
எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



## 9. சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்).

### நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவு, ஆய்வு செய்தல். 1992–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1992). மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1992) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''
எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-10.

## 10. விதி 110-ன்கீழ் கல்வி அமைச்சரின் அறிக்கை.

### முன்னாள் தி.மு.க. ஆட்சியின்போது சென்னைப்பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற அத்துமீறல்கள் மற்றும் முறைகேடுகள் குறித்து விசாரிப்பதற்காக கமிஷன் நியமிக்க அரசு எடுத்துள்ள முடிவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னர், பேரவை விதி 110-இன்கீழ் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கையை வைக்க அனுமதி கோரியுள்ளார். அவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

*மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-ல் ஆட்சிக்கு வந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி, தன்னுடைய இரண்டாண்டு கால ஆட்சியில் சென்னைப் பல்கலைக் கழகத்தை, தனது கைப்பாவையாக ஆக்கிக் கொண்டு நடத்திய அந்து மீறல்கள், ஊழல்கள் பற்றி விசாரித்து அறிந்து, மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது என்பதை நாங்கள் உணர்கிறோம். பல்கலைக் கழக விதிகளுக்கு முரணாக முன்னாள் முதல்வர் கருணாநிதி, ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை முன்கூட்டியே தேர்ந்தெடுத்து, அவரை சிண்டிகேட் மூலம் பதிவாளராக பல்கலைக்கழகத்தின் மீது திணித்து, பல்கலைக் கழகத்தை தி.மு.க. கைப்பற்றியது. இது பல்கலைக்கழகத்தின் தன்னாட்சி உரிமையைப் பறிப்பதற்கு ஒப்பாகும். நடைமுறையில்

உள்ள விதிமுறைகளுக்கு நேர் முரணானது. பிறகு, தனக்கு வேண்டிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களான ஊழியர்களையே முக்கியமான பொறுப்புகளுக்கு தி.மு.க. அரசு மாற்றியது ; நியமித்தது. முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு வேண்டிய பேராசிரியர் ஒருவருக்கு குறுகிய இடைவெளியில் இரண்டு பதவி உயர்வுகள், விதிகளுக்கு முரணாக சம்பள உயர்வுகள் தி.மு.க. அரசு கொடுத்துள்ளது. அவர்தான் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதிக்கும், பதிவாளருக்கும் இடையே இணைப்புப் பாலமாக இருந்து முன்னாள் முதலமைச்சரின் உத்தரவுகளாக வர உதவி வந்தவர். அவருக்கு வேண்டிய ஒருவருக்கு துறைத் தலைவர் பதவி தர வயது வந்தோர் கல்விக்கான துறையை பல்கலைக்கழக மானியக் குழுவின் யோசனைகளுக்கும், விதிகளுக்கும் மாறாக இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. தி.மு.க. சிண்டிகேட் உறுப்பினரான ரகுமான்கான், காஞ்சனா கமலநாதன் ஆகியோர், கூடுதல் பிரிவுகள் வழங்கும் குழு, கட்டிடக் குழு போன்ற முக்கியக் குழுக்களில் திணிக்கப்பட்டனர். ஆங்கிலத்தில் அடிப்படைப் பட்டம் பெற்ற ஒருவரை, தமிழ்த்துறைத்தலைவராக நியமித்தனர். ஐ.ஏ.எஸ். அதிகாரியை பதிவாளராக நியமித்ததை அன்றிருந்த துணை வேந்தர் எதிர்த்தார். இறுதியில், அவர் பதவி துறக்க வேண்டிய நிலையை முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி உருவாக்கினார். மார்க்குகளைத் திருத்தியதாக உள்ள புகாருக்கு வேண்டியவரான ஒருவரை சிண்டிகேட் பதவி நீக்கம் செய்திருந்தது. முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் உத்தரவின் பேரில், மறுபடியும் அவர் பதவியில் அமர்த்தப்பட்டிருக்கிறார். வரலாற்றுத் துறையில் தகுதி இல்லாத ஒருவரை முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு வேண்டிய ஒருவர் என்ற காரணத்திற்கா துறைத் தலைமை தரப்பட்டிருக்கிறது. தி.மு.க. வினரின் அச்சுறுத்தலின்பேரில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர் சங்கத் தலைவர்களை பல்கலைக் கழகம் தொடர்ந்து தொல்லைகளுக்கு ஆளாக்கி வந்தது.

கோடம்பாக்கம் மீனாட்சி கல்லூரிக்கு தன்னாட்சி உரிமைதர எல்லாத்தகுதிகள் இருந்தும், எல்லாக் குழுக்களும் பரிந்துரைத்தும், முன்னாள் முதல்வர் கருணாநிதியின் உத்தரவின் பேரில், வாய் மூலம் தரப்பட்ட அனுமதி திரும்பப்பெறப்பட்டது. தாழ்த்தப் பட்ட வகுப்பினரின் காவலர் என்று பறைசாற்றிக் கொள்ளும் முன்னாள் முதல்வர் அவர்கள், அவர்களுக்குரிய பதவிகளைக்கூட கொடுக்க மறுத்து அந்தப் பதவிகளை தனக்கு வேண்டியவர்களைக் கொண்டு நிரப்பினார். இப்படி பல்கலைக்கழகத்தையே ஊழல் சாம்ராஜ்யமாக இரண்டாண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதியும், அவரது ஆட்களும், அவரது நேரடிப் பார்வையில் நடத்திவந்த இவற்றை, தீர விசாரிக்க (மேசையைத் தட்டும் ஒலி), மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு முடிவு செய்திருக்கிறது. இதற்காக, ஓய்வுபெற்ற முன்னாள் நீதிபதி அல்லது உச்ச நீதி மன்ற நீதிபதி அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)





திரு. வி. தண்டாயுதபாணி : 'டைம் லிமிட்'

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 110-லே வேண்டாம் (குறுக்கீடு) டைம் லிமிட் இவ்வளவுதான் என்பதை அறிவிக்கும் போது அறிவிப்பார்கள். இப்போது, அவைக்கு அந்தச் செய்தியைத் தெரிவித்திருக்கிறார்கள், அதாவது ஓய்வு பெற்ற முன்னாள் நீதிபதி அல்லது உச்ச நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு விசாரிப்போம் என்கிற செய்தியை அறிவித்திருக்கிறார்கள். மற்ற விவரங்கள் எல்லாம் அடுத்துவரும்.

## 9. சட்ட முன் வடிவு [ஆய்வு செய்தல்]—தொடர்ச்சி.

## நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு, 1992—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிதி ஒதுக்கச் சட்டமுன் வடிவின் மீது விவாதம். திரு.எஸ். டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992, நிதியொதுக்க மசோதாவின் மீது, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக்கூற விரும்புகிறேன். வருகிற 30-ஆம் தேதி, என்னுடைய தொகுதியான வாகை குளத்தில், மத்திய அரசால் அமைக்கப் பட்டுள்ள விமான நிலையத்தை, துவக்குகின்ற அந்த விழாவிலே கலந்துகொண்டு, துவக்கி வைப்பதற்கு வருகை தரவிருக்கிற தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுக்கு சிதம்பரனார் மாவட்டத்தினுடைய மக்களின் சார்பாகவும்,எனது தொகுதி மக்களின் சார்பாகவும் மிகுந்த மகிழ்ச்சியையும், வரவேற்பையும் இந்த நேரத்திலே முதன்முதலாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-15

இந்த அரசு பொறுப்பேற்ற 10 மாத காலத்திற்குள் ஏழை மக்களுடைய நல்வாழ்விற்காகவும், கிராமப்புறத்தினுடைய முன்னேற்றத்திற்காகவும் பல மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களைத் தீட்டி, செயலாற்றி வருகின்றது. அதற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். என்ன நோக்கத்திற்காக இந்த அரசு திட்டங்களைத் தீட்டி, செயலாற்றி வருகின்றதோ அந்தத் திட்டங்கள் முழுமையாக மக்களுக்குப் போய்ச் சேர்ந்தால்தான் அந்தத் திட்டங்கள் வெற்றி பெற்றதாகக் கருத முடியும். திட்டங்களைத் தீட்டுகின்ற பொறுப்பு அரசினுடைய கையிலே இருந்தாலும்கூட, அந்தத் திட்டங்களை செயலாக்குகின்ற பொறுப்பு அதிகாரிகளுடைய கையிலே இருக்கின்ற காரணத்தால் அதிகாரிகள் செய்கிற தவறுகள் காரணமாகத் திட்டங்கள் முழுமையாக வெற்றி பெறுவதில்லை. ஆகவே, தவறு செய்கிற அதிகாரிகளைக் கண்காணிப்பதற்கு மாவட்ட அளவிலே சட்டமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒரு கண்காணிப்புக் குழுவை நியமிக்க வேண்டுமென்று அரசை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

கடநத இரண்டு தினங்களுக்கு முன்பாக, கடுமையான நிதி நிலை நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில்கூட, 60 கோடி ரூபாய் இழப்பையும் பொருட்படுத்தாமல், ரேஷன் அரிசியினுடைய விலையைக் குறைத்தமைக்கு, தமிழகத்தின் முதல்வர் அவர்களுக்கு எங்களது நன்றியினைக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அரசின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றைய தினத்திலே ஒரு மாதத்திற்கு ரேஷன் கடையிலே 12 கிலோ அரிசிதான் விநியோகிக்கப்படுகிறது. ஆனால் சராசரியாக 5 நபர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு, ஒரு மாதத்திற்கு 60 கிலோ அரிசி தேவைப்படுகிறது. எஞ்சியுள்ள அரிசியை ஏழை எளிய மக்கள் வெளி மார்க்கெட்டிலிருந்து வாங்க வேண்டிய நிலைமை இருந்து வருகிறது. வெளி மார்க்கெட்டிலே சென்றால், ஒரு கிலோ அரிசியின் விலை ஆறு ரூபாயிலிருந்து பத்து ரூபாய் வரை விற்றுக் கொண்டிருக்கிறது. அரிசியின் விலையைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த அரசு தீவிரமாக நடவடிக்கை எடுப்பதன் மூலமாகத் தான், அரிசியை வைத்துக்கொண்டு அரசியல் லாபம் தேடிக் கொண்டிருக்கிற சில மக்கள் விரோத சக்திகளுடைய கையிலிருந்து இந்த அரசைக் காப்பாற்ற முடியும் என்பதை இந்த நேரந்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில், தமிழகம் தன்னிறைவு பெறவேண்டுமென்று நாம் எவ்வளவோ முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். விவசாயத்திற்காக, விவசாயிகளின் நலனுக்காக, இலவச மின்சாரம், மானியத்தோடு உரங்கள், மானியத்தோடு விதைகள், குறைந்த வட்டியிலே கடன்கள், இவைகளைக் கொடுத்தாலும் கூட, நீர் வளத்தைப் பெருக்காவிட்டால், உணவு உற்பத்தியிலே நாம் முன்னேற முடியாது. கடந்த 20 ஆண்டு காலத்திற்கு முன்னதாக உணவு உற்பத்தியிலே தமிழகம் எந்த நிலையிலே இருந்ததோ அதே நிலையிலேதான் இப்பொழுதும் இருந்துகொண்டிருக்கிறது என்பதை உணவியல் வல்லுநர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மணிமுத்தாறு அணை கட்டியபிறகு, கடந்த 20 ஆண்டு காலத்திலே ஏதாவது புதிய அணைக்கட்டு கட்டப்பட்டிருக்கிறதா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, நீர் வளத்தைப் பெருக்குவதற்கு கடந்த 30 ஆண்டுகளாக எந்தவித முயற்சிகளும் கடந்த கால அரசுகளால் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இப்போதுகூட, தமிழகத்திலே இருக்கின்ற அணைக்கட்டுகளில் இருக்கின்ற தண்ணீரைச் சேமித்து வைப்பதற்கு எந்த அளவுக்கு இருக்கின்றதோ அந்த அளவுக்குச் சமமாக மழைக் காலங்களிலே கடலிலே போய்ச் சேருகின்ற தண்ணீரைச் சேர்த்து வைந்தால் நிச்சயமாகத் உணவு உற்பத்தியிலே தமிழகம் தன்னிறைவு பெறுவதற்கான நிலைமையை நாம் உருவாக்க முடியும். புதிய அணைக்கட்டுகளைக் கட்ட வேண்டும். தற்போது இருக்கின்ற குளங்களை மராமத்து செய்து, சிறிய சிறிய அணைகட்டுவதன் மூலமாக, உணவு உற்பத்தியைப்





பெருக்க முடியும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். கடந்த 10 மாத காலத்திற்குள் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களின் முயற்சியின் காரணமாக பின்னி, ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் போன்ற தொழிற்சாலைகள் இன்றைய தினத்திலே திறக்கப்பட்டிருக்கின்றன. மால்கோ தொழிற்சாலையையும் கூடத் திறப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை இந்த அரசு எடுத்து வருகிறது. அதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

அதேபோன்று மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில்லில் பணியாற்றுகிற 2,500 தொழிலாளர்கள் மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில் எப்போது திறக்கப்படும் என்பதை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். நிச்சயமாக தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில்லைத் திறப்பார்கள் என்ற நம்பிக்கையோடு அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் தவறான தகவலை அரசுக்கு சிலர் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இன்றையதினம் மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில்லில் 130 தொழிலாளர்கள்தான் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் எஞ்சியுள்ள தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மில்லை மறுபடியும் திறப்பதற்கு, முழுமையாக இயங்கச் செய்வதற்கு 6 கோடி ரூபாய் அரசு முதலீடு செய்தாலே போதும் என்பதைத் தொழிற்சங்கத்தினுடைய தலைவர்கள் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்து அவர்களிடத்திலே கலந்து பேசி மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில்லை உடனடியாகத் திறப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு பக்கம் மூடிய ஆலைகளை அரசு திறந்துகொண்டிருக்கிறது. மறுபக்கம் தமிழகத்தில் தற்போது இயங்கிக் கொண்டிருந்த 34 கார்ப்பரேட் தொழிற்சாலைகளில் 23 தொழிற்சாலைகள் இன்றையதினம் மூடப்பட்டு இருக்கின்றன. 11 தொழிற்சாலைகள் மூடப்படக்கூடிய அபாய நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன, இதற்கெல்லாம் என்ன காரணம் என்று ஆராய்ந்து பார்த்தால் கார்பரேட் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருளான சார்கோல் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது, ஆனால் வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. வெளி மாநிலங்கள் தடை செய்திருக்கின்றன. ஆகவே, மூலப்பொருளான சார்கோல் இன்றையதினம் கார்பரேட் தொழிற்சாலைகளுக்குக் கிடைப்பதில் தடங்கல் இருந்துகொண்டிருக்கிறது.

அண்டை மாநிலமான கேரளா மாநிலத்திலும் இந்தத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இந்தத் தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் இது முழுக்க முழுக்க மின்சாரத்தை நம்பித்தான் இயங்கிக்கொண்டிருக்கிறது. இன்டென்ஸிவ் பவர் ப்ளான்ட்-ஆக அது இயங்கிக்கொண்டிருக்கின்ற காரணத்தால் இத்தொழிற்சாலைகள் 67 சதவீதம் மின்சாரத்தோடு இயங்கிக்கொண்டிருக்கின்றன. அண்டை மாநிலமான கேரள மாநிலத்தில் யூனிட் ஒன்றுக்கு 71½ பைசா என்ற அளவுக்கு மின்சாரத்தை வினியோகம் செய்துகொண்டிருக்கிறார்கள். பாண்டிச்சேரியில் 89 பைசாவுக்கு வினியோகம் செய்யப்படுகிறது. ஆனால் நமது தமிழகத்தில் ஒரு ரூபாய் 61 பைசாவிற்கு ஒரு யூனிட் மின்சாரத்திற்கு நாம் வசூல் செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே, இங்கேயுள்ள தொழிற்சாலைகள் ஒரு டன் உற்பத்தி செய்வதற்கும் கேரள மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகள் ஒரு டன் உற்பத்தி செய்வதற்கும் உள்ள வித்தியாசம் 700 ரூபாய். ஆகவே தமிழகத்தில் இருக்கின்ற கெமிக்கல் தொழிற்சாலைகளுக்கு வெளி மாநிலத்திலிருந்து கார்பரேட் இறக்குமதி செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே வியாபார ரீதியில் தமிழகத்தில் இருக்கின்ற கார்பரேட் தொழிற்சாலைகள் அவர்களோடு போட்டி போட முடியவில்லை. ஆகவே மூடப்படுகின்ற நிலைமையில் இருந்துகொண்டிருக்கிற கார்பரேட் தொழிற்சாலைகள் தொடர்ந்து இயங்குவதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லை மாவட்டம் இரண்டாகப் பிரிந்தபிறகு சிதம்பரனார் மாவட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அந்த மாவட்டம் ஆரம்பிக்கப்பட்டு 6 ஆண்டுக்காலம் ஆகியும் கூட இதுவரையில் கட்டிடங்கள் கட்டப்படவில்லை. கேட்டால் வருவாய்த்துறை அதிகாரிகள் நில ஆர்ஜிதம் செய்யவில்லை என்று சொல்லுகிறார்கள். நான் கேட்கிறேன். வியாபார நோக்கத்தோடு வருவாய்த்துறை அதிகாரிகள் செயல்பட்டால் எப்படி நில ஆர்ஜிதம் செய்ய முடியும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது அது தனியார் கட்டிடத்தில் இயங்கிவருகிறது. அவர்கள் மூலமாக அங்கே இருக்கின்ற வருவாய்த்துறை அதிகாரிகள் இலாபம் எதிர்பார்க்கிறார்களா என்பதை இந்த நேரத்தில் அரசு சிந்தித்துப் பார்த்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாமிரபரணி பாசனக் குளங்களில் 42,000 ஏக்கர் ஆயக்கட்டுகள் நெல்லை - கட்டபொம்மன் மாவட்டத்தில் இருந்துகொண்டிருக்கின்றன. சிதம்பரனார் மாவட்டத்தில் 46,000 ஏக்கர் ஆயக்கட்டுகள் இருக்கின்றன. நெல்லை மாவட்டத்திலிருந்து சிதம்பரனார் மாவட்டம் பிரிந்தபிறகு மணிமுத்தாறு அணைக்கட்டு, பாபநாசம் அணைக்கட்டு ஆகிய அணைக்





முற்பகல் 11.25

கட்டுகள் நெல்லை - கட்டபொம்மன் மாவட்டத்தில் இருக்கின்ற காரணத்தால் தண்ணீர் திறக்கின்ற அதிகாரங்கள் நெல்லை மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

சிதம்பரனார் மாவட்டத்தினுடைய விவசாயிகள் தங்களுடைய விவசாயத்திற்குத் தண்ணீர் தரவேண்டும் என்று சிதம்பரனார் மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே அணுகுகின்ற நேரத்திலே சிதம்பரனார் மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் நெல்லை மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே கைகட்டி கையேந்தி நிற்கக்கூடிய நிலைமை இன்றையதினத்திலே இருந்துகொண்டிருக்கிறது, ஆகவே இந்த நிலைமையை மாற்றுவதற்கு தாமிரபரணி கோட்டத்திலே இருக்கின்ற செயற்பொறியாளர்களுக்கு முழுமையான அதிகாரத்தை வழங்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பேய்க் குளம், குட்டைக்குளம், ஓரம்பள்ளம் குளம் ஆகிய குளங்களிலே 2700 ஏக்கர் ஆயக்கட்டிலே தற்போது பயிரிடப்படுகின்ற 27 லட்சம் வாழைப் பயிர்கள் இன்றையதினத்திலே மகசூல் கொடுக்கின்ற இந்த நேரத்திலே கருகிய நிலையிலே இருந்துகொண்டிருக்கின்றன, ஆகவே அந்த வாழைப்பயிர்களைக் காப்பாற்றுவதற்கு தண்ணீர் உடனடியாக கொடுப்பதற்கு இந்த அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று வாகைக்குளம் விமான நிலையத்திற்கு இன்றையதினத்திலே தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் தொடங்கி வைப்பதற்காக விமான நிலையத்திற்கு வருகைபுரிய இருக்கிறார்கள். விமான நிலையத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு ஸ்ரீவைகுண்டத்தியிலேயிருந்து தாமிரபரணி தண்ணீர், சாயல்புரம் நகரப் பஞ்சாயத்து, பெருங்குளம் நகரப் பஞ்சாயத்து வழியாக, தூத்துக்குடியில் அமைய இருக்கின்ற மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவருடைய வளாகத்திற்கு கொண்டு செல்கின்ற இந்தத் திட்டத்திலே அது சேர்க்கப்பட்டிருக்கின்றது. இந்தத திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 5½ கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் டெக்னிக்கல் சேங்க்ஸன் எல்லாம் இன்றையதினத்லே வழங்கியிருக்கிறது, ஆகவே அரசைப் பொறுத்தமட்டிலே உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்த இந்த முதல்வர் அவர்களுடைய திருககரங்களாலே அதன் அடிக்கல் நாட்டுவதற்கு வேண்டிய நடவக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரனார் மாவட்டத்தைப் பொறுத்த மட்டிலே நல்லை மாவட்டத்திலேயிருந்து பிரிக்கப்பட்ட பிறகு ஏதோ தம்பரனார் மாவட்டம் அதிக வளம் உடைய மாவட்டமாக,

[திரு. எஸ். டேனியல்ராஜ்] [1992 ஏப்ரல் 24

நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கருதிக்கொண்டிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். நெல்லை மாவட்டம் என்றாலே வறட்சி மாவட்டம் என்று அறிவிக்கிறார்கள் ஆனால் சிதம்பரனார் மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலே ஏதோ வளமையான மாவட்டம் என்று சொல்லிக்கொண்டு அதை வறட்சி மாவட்டமாக அறிவிப்பது கிடையாது. ஓட்டப்பிடாரம் தொகுதியை எடுத்துக்கொண்டால் அதே போன்று விளாத்திக்குளம் தொகுதியை எடுத்துக்கொண்டால், அதே போன்று ஸ்ரீவைகுண்டம் தொகுதியிலே இருக்கின்ற கருங்குளம் ஊராட்சி ஒன்றியம் தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் எல்லாம் இன்றையதினம் மானாவாரிப் பிரதேசமாக, வறட்சியாக இருந்து கொண்டிருக்கிறது, ஆகவே சிதம்பரனார் மாவட்டத்தையும் வறட்சி மாவட்டமாக அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்ரீவைகுண்டத்திலே நவ திருப்பதியில் உள்ளடங்கிய அருள்மிகு கள்ளபிரான் திருக்கோயில் இருந்துகொண்டிருக்கிறது. இந்த அருள்மிகு கள்ளபிரான் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்வதற்கும் கோபுர திருப்பணி செய்வதற்கும் அரசு உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்து கடந்த இருபத்தைந்து ஆண்டுகாலமாக அங்கே கும்பாபிஷேகம் நடத்தப்படவில்லை, அங்கு உடனடியாக கும்பாபிஷேகம் நடத்துவதற்குவேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீவைகுண்டத்திலே தாலுக்கா மருத்துவமனை இயங்கி வருகிறது. சுதந்திரம் அடைந்த காலத்திலேயிருந்து 20 படுக்கைகள் கொண்ட தாலுக்கா மருத்துவமனையாகத்தான் அது இயங்கி வருகிறது. தினசரி 500க்கு மேற்பட்ட புறநோயாளிகள் வந்து சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இதுவரையில் 20 படுக்கைகள் கொண்ட அந்த தாலூக்கா மருத்துவமனையை உயர்த்தவில்லை, ஆக அரசைப் பொறுத்த மட்டிலே 50 படுக்கைகள் கொண்ட தாலூக்கா மருத்துவ மனையாக உயர்த்தியாகவேண்டும் என்றும் புதிய கட்டடங்களைக் கட்டுவதற்குவேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் பொற்கால முதல்வர். மாண்புமிகு டாக்டர் புரட்சி தெய்வத்தின் இரண்டாவது நிதிநிலை அறிக்கையின் சலுகைகள் தமிழக மக்கள் அனைவருக்கும் உயிர்காக்கும் மருந்துகள் போல் அமைந்திருக்கின்றன. எல்லா துறைகளிலும் முதல்வரின் சாதனை விளங்குகிறது.



1992 ஏப்ரல் 24] [டாக்டர் ஜெ. பரந்தாமன்]

அவர் தொட்டதெல்லாம் பொன்னாகும் ராசி நன்றாகத் தெரிகிறது, டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில்தான் சாதனைகள், அற்புதங்கள், வரலாறுகள், புரட்சிகள் நடந்தன என வரலாற்று ஆசிரியர்கள் எதிர்காலத்தில் எழுதுவார்கள் என்பது உறுதி.

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தின் முழுமையான தண்ணீர் தேவையை நிறைவேற்ற பாலாற்றில் தண்ணீர் திறந்து விட கர்நாடக அரசை வலியுறுத்த வேண்டும் காவிரியைப் பெற்றுத் தந்த வரலாற்று சிறப்புமிக்க புரட்சி தெய்வம் இதற்குஉதவ வேண்டும். குடிநீர் தேவை, விவசாயத்தேவை இதனால் பூர்த்தி ஆகும், மாவட்டதுவல் உப்பு நீர், நல்ல நீராக மாறி வாய்ப்பு உண்டாகும்.

அது போல். பேரணாம்பட்டு தொகுதியில் பெரியமணியம் மலையாம்பட்டி, திருமலைக்குப்பம், வெங்கடசமுத்திரம் ஏரி, குளம் குட்டைகள் தூர் வாரப்படவேண்டும்.

முற்பகல் 11.30

தொழில் துறையில் பின் தங்கிய பகுதிகளாக வட்டங்களை அறிவிப்பதற்குப் பதிலாக ஒன்றியங்களை அறிவித்து ஒன்றியங்களை தொழில் துறையில் முன்னேற்றவேண்டும். ஊனமுற்றவர்கள் ஆதரவற்றவர்கள், பெண்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்படவேண்டும், வயது வரம்பு அனைவருக்கும் தளர்த்தப்படவேண்டும், அவ்வாறு தளர்த்தி வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படவேண்டும் அல்லது தொழில் ஆலோசனைகள் வழங்கி சுயவேலைவாய்ப்பு செய்து தரப்படவேண்டும், அரசு ஊழியர்கள் பணியில் இருக்கும்போது இறந்துவிட்டால் வழங்கப்படும் ரூ, 60.000-ஐ உயர்த்தி 2 லட்சம், 3 லட்சம் என்று வழங்கப்படவேண்டும். காரணம் அடிப்படை ஊழியர்களிலிருந்து ஐ.ஏ.எஸ், அதிகாரிகள் வரை ஒரே மாதிரியாக இத்தொகை இருப்பதால அவர்களின் தேவை வாழ்க்கை முறைகளை அனுசரித்து ஊழியர்களின் மாதச்சம்பளம் விருப்பம், ஆகிய அடிப்படையில் மாதம் ரூ. 100, ரூ50 என்று பிடித்தம் செய்யலாம், இதனால் அரசிற்கு சேமிப்பும் உயரும், ஊழியர்களுக்கும் சிரமமான நேரத்தில் உதவியும் கிடைக்கும், போக்குவரத்துக் கழகங்களில் பொருட்கள் எடுத்துச்செல்ல வாங்குகிற கட்டணம் குறைக்கப்பட வேண்டும். கீரை, காய்கறிகள் போன்றவைகளுக்கு கட்டணம் குறைத்தால் விலையும் குறையும், விவசாயிகளுக்கு லாபமும் கிடைக்கும்.

கோவை, சேலம், மதுரை, திண்டுக்கல், கன்னியாகுமரி, போன்ற ஊர்களிலிருந்து திருப்பதி செல்பவர்கள் ஆம்பூர், பேரணாம்பட், குடியாத்தம், சித்தூர் வழியாக சென்றால் நேரமும் கட்டணமும் குறையும். எரிபொருளும் சிக்கனமாகும். பாதையும் சீராகும்.

பேரணாம்பட் தொகுதியின் மற்ற தேவைகளான பத்ரபள்ளி அணைத்திட்டம். உதயந்திரம் கூட்டு குடிநீர்த் திட்டம், மன்னவாகம் பெரியவர்கம், துத்திப்பட்டு, தேவலாபுரம், வெங்கடசமுத்திரம் கூட்டுக் குடிநீர்த்திட்டங்கள் செயல்படுத்த வேண்டு

பேரணாம்பட்டில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தப்பட வேண்டும், காரணம் ஏராளமான தோல் தொழிற்சாலைகளும், மற்ற தொழில்களும். குடிசைப் பகுதிகளும் இருப்பதால் அந்தப் பகுதியில் தீயணைப்பு நிலையம் நிச்சயமாக நிரந்தரமாகத் தேவை, எனவே இதயதெய்வம் அவர்கள் அதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், பேரணாம்பட்டில் சார் பதிவாளர் அலுவலகம் தேவை, ஏராளமான முஸ்லீம் பெண்கள் அங்கே வந்து சொத்துக்களை பதிகிறார்கள், இப்போது குடியாத்தத்திற்கு 18 கிலோ மீட்டர் செல்ல வேண்டியிருப்பதால் அங்கே பேரணாம்பட்டில் சார்பதிவாளர் அலுவலகம் அமைத்துத் தரவேண்டுமென்று புரட்சித்தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பேரணாம்பட்டில் ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படவேண்டும், பேர்ணாம்பட்டிற்கு பிளஸ் 2-க்கும். மேல்பட்டி. வடசேரிக்கு எஸ்.எஸ்.எல்.சி.-க்கும் தேர்வு மையம் அமைக்கப்படவேண்டும். தொழில் கல்விப் பயிற்சி நிலையம் பேர்ணாம்பட்டிற்குத் தேவை. காரணம் ஏராளமான தொழிலாளர்களின் பிள்ளைகள், விவசாயிகளின் குழந்தைகள் அங்கே மற்ற பயிற்சிப் பள்ளிகளில் படிப்பதால். அங்கே தொழில் கல்விப் பயிற்சிப் பள்ளி தேவை, ஒரு கல்லூரிகூட அங்கே இல்லை. பேரணாம்பட்டில் தோல் தொழிற்பேட்டை தேவை. தோல் தொழில் முன்னேற்றத்திற்கு சலுகைகள் தேவை. காரணம் பேரணாம்பட் தொகுதியிலுள்ள தொழில் அதிபர்கள் வறுமை நிலையில் இருப்பவர்கள், அந்த வகையில் தோல் தொழிலுக்கு வரியைக் குறைத்தமைக்காக அனைவரும் புரட்சித்தலைவி அவர்களுக்கு நன்றி காட்டுகிறார்கள் பாலாற்றில் வாணியம்பாடிக்கும் அகரம்சேரிக்கும் இடையில் பச்சைகுப்பம் கேட் அருகில் தண்ணீர் தேக்கிவைக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும். இதனால் ஆம்பூர் குடிநீர்த் தேவையும் பூர்த்தியாகும். நிலத்தடி நீரும் உயரும். பேரணாம்பட் தொகுதியில் விவசாயத்திற்கு நீர் தேவை. மற்றும் நிலத்தடி நீர் உயரவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். உப்பு நீர் நல்ல நீராக மாறவும் இதனால் வழி ஏற்படும்.

தொகுப்பு வீடுகள் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஆண்டிற்கு 500 வீடுகள் கட்டித்தரப்பட வேண்டும், கிராமங்களில் மருத்துவர்கள் தனியார் மருத்துவமனை நடத்த ஊக்கப்படுத்தப்பட வேண்டும், அவர்களுக்கு எல்லா வசதிகளும் செய்து தரப்பட வேண்டும். அதேபோல் ஒவ்வொரு பிரைமரி சுகாதார நிலைய மருத்துவர்களுக்கும் மோட்டார் சைக்கிளும், பெண் மருத்துவர்களுக்கு சிறிய மோட்டார் சைக்கிள்களும் தரப்படவேண்டும். அப்படிச் செய்தால் அவர்கள் கேம்ப் போவதற்கும், அவசர சிகிச்சைக்காகச் செல்வதற்கும் உதவியாக இருக்கும்.





ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை வளர்ச்சிக்காக கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி காகித தொழிற்சாலை அமைக்கப்படவேண்டும். கரும்பு உற்பத்தி ஊக்கப்படுத்தப்பட வேண்டும். விவசாயிகளுக்குத் தேவையான அளவு கடன் உதவி வழங்கப்படவேண்டும், விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கங்களின் மூலம் தங்க நகை கடன் தரப்படவேண்டும். தற்போது அவை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகள் யாருக்குமே கடன் உதவ முன்வரவில்லை என்ற காரணத்தால் அரசே அவர்களை தத்து எடுத்து உதவிடவேண்டும். பேரணாம்பட் தொகுதியில் காய்கறி உற்பத்தியை ஊக்கப்படுத்தி, கிராம விவசாயிகளின் பொருளாதாரம் ஊக்கப்படுத்தப்படவேண்டும். காவல்துறையினருக்கு உதவியாக திருவிழாக் காலங்களில் மற்றும் போக்குவரத்து நெரிசல் நேரங்களில் என்.சி.சி. மாணவர்களை ஈடுபடுத்தினால் நன்றாக இருக்கும். இந்த மாணவர்களுக்கு எதிர்காலத்தில் வேலைவாய்ப்பு அளிக்கும்போது முன்னுரிமை தரலாம்.

வனத்துறை மூலம் மரங்கள் நட ஏற்பாடு செய்து வன வளத்தை உயர்த்தவும், வேலை வாய்ப்பு அளிக்கவும் ஏற்பாடு செய்யப்படவேண்டும். பேரணாம்பட்டில் பல மாணவர்கள் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். பேராணம்பட்டில் இருக்கிற பல பிரச்சினைகளை பல தேவைகளை நீண்டகாலமாக இருப்பவைகளை இந்த புரட்சித்தலைவியின் ஆட்சியில்தான் உதவிகள் செய்து பூர்த்தி செய்யப்படும் உதவிகள் கிடைக்கும் என்று அங்குள்ள அனைவரும் நம்புகிறார்கள், ஆகவே வேலைவாய்ப்பு, தொழில் வளர்ச்சி. வன வளம் ஆகியவற்றிற்கு பேரணாம்பட் தொகுதிக்கு முன்னுரிமை தந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் உதவ வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ஜி. பழனிசாமி.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த ஒதுக்கீடு சட்ட முன்வடிவின் மீது என்னுடைய கருத்தை நான் கூற விழைகின்றேன். இன்றைக்கு தமிழகம் முழுவதும் வறட்சி துவங்கி, குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு, பல இடங்களில் ஏழை எளிய மக்கள் பல மைல் தூரத்திற்கு அப்பால் சென்று தண்ணீர் கொண்டுவரும் அபாய நிலைமை இருக்கிறது.

முற்பகல் 11-35

அமைச்சர் அவர்கள் உடனடியாக வறட்சிப் பகுதிகளையெல்லாம் கணக்கிட்டு குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

[திரு. ஜி. பழனிச்சாமி]

தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டதன் மூலமாக பல இடங்களிலே பாதுகாக்கப்பட்ட தண்ணீர் கிடைக்காத காரணத்தால் ஆங்காங்கே இருக்கக் கூடிய குட்டைகளில் தண்ணீர் சாப்பிட்டு இன்றைக்கு பல்வேறு இடங்களிலே காலரா நோய் பரவிக் கொண்டிருக்கிறது. என்னுடைய தொகுதியிலேகூட இன்றைய தினம் எனக்கு தகவல் அனுப்பப்பட்டிருப்பதிலே குளத்து தண்ணீரை எடுத்து சாப்பிட்டதன் மூலமாக 13 பேர்களுக்கு மேலாக காலரா நோய் ஏற்பட்டு இன்றைய தினம் அவர்கள் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டதாக மாண்புமிகு முதலமைச்சருக்கு கடிதம் எழுதி எனக்கும் அதனுடைய நகலை அனுப்பியிருக்கிறார்கள். அதே போன்று தமிழகத்திலே வறட்சி நிலைமைகளை உடனடியாக போக்குவதற்கு அரசு ஒரு துரிதமான நடவடிக்கையை எடுக்கச் சொல்லி நான் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய தினம் குடிநீர் பஞ்சத்தைப் போக்குவதில் அரசு அலட்சியம் காட்டாமல் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் என்னுடைய தொகுதியில் ஒரு பேரல் தண்ணீர் சுமார் 6 ரூபாயிலிருந்து எட்டு ரூபாய் வரையிலும் விற்பனை செய்யக்கூடிய அபாய நிலைமையை தொடர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கிறோம், அந்த தண்ணீர் பஞ்சத்தை போக்குவதற்காக பட்டுக்கோட்டை—வேதாரண்யம் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு முன்னாள் முதலமைச்சர் மரியாதைக்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோது கால்நாட்டு விழா நடத்தப்பட்டது. சுமார் ஐந்து கோடி ரூபாய்க்கு மேலாக செலவிடப்பட்டது. ஆனால் அந்த திட்டம் இன்றைய தினம் கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. உடனடியாக அந்த திட்டத்தை நிறைவேற்றி கடலோரப் பகுதியில் இருக்கின்ற வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, தலைஞாயிறு போன்ற பகுதிகளுக்கு நீங்கள் தண்ணீர் வழங்க வேண்டும். அந்த பகுதியிலே ஆழ்குழாய் கிணறு போட்டாலும் உப்பு நீர் தான் கிடைக்கிறது. நல்ல நீர் கிடைப்பதில்லை. ஆகவே பல மைல்களுக்கு அப்பால் சென்று தண்ணீர் கொண்டு வரக்கூடிய அபாய நிலைமை எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவது என்னுடைய கடமையாகும்.

நேற்றைய முன் தினம் ஏழை எளிய மக்களுக்கு வருமானத்தின் அடிப்படையில் அரிசி வழங்க வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்து அதற்குப் பிறகு அந்த வருமான அடிப்படையிலான திட்டத்தை ரத்து செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கிலோவிற்கு 50 பைசா என்கிற அளவில் விலையைக் குறைத்து, அதனால் அரசாங்கத்திற்கு 60 கோடி ரூபாய் நஷ்டம் என்ற அறிவிப்போடு இன்றைய தினம் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஏழையெளிய மக்கள் வாங்கி சாப்பிடக் கூடிய அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கப்படுவதாக அறிவித்தார்கள். ஆனால் சமீபத்திலே ஊர்களுக்குச் சென்றபோது அந்த இரண்டு ரூபாய் அரிசி வழங்



1992 ஏப்ரல் 24] [திரு. ஜி. பழனிசாமி]

கப்படவில்லை. மிகச் சன்ன இரக அரிசி ரூ. 3.50 விலையுள்ள அரிசிதான் கிடைக்கிறதே தவிர ஏழையெளிய மக்கள், அன்றாடம் உழைக்கக் கூடிய மக்களுக்கு இரண்டு ரூபாய்க்கு வாங்கி சாப்பிடக்கூடிய மக்களுக்கு அந்த அரிசி கிடைக்கவில்லை. தஞ்சை மாவட்டத்திலே உள்ள விவசாயிகள் நெல்லை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திற்கு உணவு உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். கையை காலை நம்பியுள்ள அந்த தொழிலாளர்களுக்கு இரண்டு ரூபாய் அரிசியை வாங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கும், மற்றவர்களுக்கும் சம்பள சலுகைகள் எல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்குத் தேவை. அறிவியுங்கள். ஆனால் தஞ்சை, நாகப்பட்டினம் — காயிதே மில்லத் மாவட்டங்களில் பத்து இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு மாத காலம் பணியாற்றி விட்டு மற்ற காலங்களில் உறங்கிக் கொண்டிருக்கும் அவர்களுடைய வாழ்க்கை நிலைகளை கணக்கிலே எடுத்துக்கொண்டு மாற்று வேலைத் திட்டத்தை இந்த நேரத்திலே அறிவிக்க நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும். அந்த விவசாயத் தொழிலாளிகளுக்கு எதாவது ஒரு வருமானத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இல்லை என்று சொன்னால், மீனவ மக்களுக்கு மீன் பிடிக்க முடியாத காலங்களில் நீங்கள் நிவாரணம் வழங்குவதைப் போல விவசாயத் தொழிலாளர்களுக்கும் நீங்கள் நிவாரணம் வழங்க, அவர்கள் வேலையின்றி ஓய்வாக இருக்கும் நேரத்தில் நிவாரணம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசுகின்றபோது அவருடைய பகுதியில் சாதாரண அரிசி வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார்கள். எல்லா இடங்களிலும் இதுவரை இரண்டு கிலோ வழங்கிக் கொண்டிருக்கிறோம். அடுத்த மாதத்திலிருந்து 4 கிலோவாக அதை அதிகப்படுத்தி கொடுக்க இருக்கிறோம். எனக்குத் தெரிந்த அளவில் தமிழ்நாட்டிலிருந்து எந்த இடத்திலும் இரண்டு கிலோ கொடுக்கப்படவில்லை என்ற புகார் வரவில்லை. அப்படி ஏதாகிலும் குறிப்பிட்ட இடத்தில் கொடுக்காமல் இருந்தால், அதைச் சொன்னால், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

திரு. ஜி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை உண்டு. நடவடிக்கை இல்லாததால்தான் சொன்னேன். ஆகையால் இந்த 2 ரூபாய் அரிசி கொடுப்ப தற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக, அந்த விவசாயத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையை நம்முடைய அரசு கணக்கில் எடுத்துக்கொண்டு அவர்களுடைய வாழ்க்கைக்கு இங்கே உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இன்றைய தினம் வெளிநாட்டினுடைய அபாயங்கள் தமிழகத்திலேயும் இந்தியாவிலேயும் ஊடுருவி இருந்தாலும் அதை கட்டுப்படுத்துவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறது. ஆனால், உள்நாட்டில் எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், ஆங்காங்கு பல்வேறு கொலைகள் நடக்கின்றன; கொள்ளைகள் நடக்கின்றன; திருடுகள் நடக்கின்றன; வழிப்பறி கொள்ளைகள் நடக்கின்றன. காவல் துறையினரே துப்பாக்கிச் சூடு நடத்தக்கூடிய அபாய நிலைமை இன்றைய தினம் இருக்கிறது. இவையெல்லாம் தடுத்து உள்நாட்டினுடைய அமைதியை ஏற்படுத்தி மக்கள் அமைதியாக வாழ நீங்கள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோன்று இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தினுடைய அமைச்சரினுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் ஒரு சிறப்புத் திட்டம் மூலமாக—நீங்கள் ஆராய்ந்து பாருங்கள், சரியாக இருந்தால் செய்வதற்கு முயற்சி எடுங்கள் — ஒரு 100 ஏக்கருக்கு 10 ஏக்கர் கொண்ட ஒரு குளத்தை அமைப்பதற்கு முயற்சி எடுத்தால் தஞ்சை மாவட்டத்தில் நீர் ஊற்றை பாதுகாக்க முடியும். விவசாயத்துக்கு தண்ணீர் இல்லாத காலங்களில் அந்த நீரை விவசாயத்துக்கு பயன்படுத்த முடியும். அந்த நீர்வளத்தின் மூலம் அரசாங்கத்திற்கு கோடிக் கணக்கான ரூபாய்கள் லாபம் ஈட்ட முடியும். அதேபோன்று பல்வேறு பயிர்களை செய்வதாலும், ஊடு பயிர்களை செய்வதாலும் அவற்றின் மூலம் அரசாங்கத்திற்கு லாபம் கிட்டும். எனவே, தஞ்சை மாவட்டத்தில் 100 ஏக்கருக்கு ஒரு இடத்திலே 10 ஏக்கர் கொண்ட குளங்களை அமைத்தால் அங்கே இருக்கக் கூடிய பல்வேறு பிரச்சினைகளுக்கு நிரந்தரமாகத் தீர்வு காண்பதோடு, கடும் மழையின் போது அந்த மழைத் தண்ணீர் கடலுக்கு செல்வதைத் தடுக்க, அதேபோல் வெள்ள காலங்களில் வரக்கூடிய தண்ணீரை பாதுகாத்து வைப்பதற்கு அது ஒரு உயர்ந்த திட்டமாக அமையும்.





அரசு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றும்போது, அந்தத் திட்டத்தையும் ஆராய்ந்து பார்த்து செய்தால் தஞ்சை, காயிதே மில்லத் மாவட்டங்களில் இருக்கக்கூடிய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வு, அதே நேரத்தில் அரசுக்கு வருமானம் ஆகியவற்றைப் பெறுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோன்று, இன்றைக்கு தஞ்சை, காயிதே மில்லத் மாவட்டங்களில் தனியாரிடம் சாலைகளை விடுவதாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு இருக்கிற கிராமப்புற சாலைகள், அதுவும் தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற சாலைகள் பள்ளமும் படுகுழியும் நிறைந்து மோசமான சாலைகளாக மாறி இருக்கின்றன. அந்த சாலைகளை செப்பனிடுவதற்கு நீங்கள் ஒரு தற்காலிகமான நடவடிக்கையை எடுங்கள். தனியார்கள் எப்போது அந்த பணிகளை துவங்கப் போகிறார்கள் என்பது எங்களுக்கு தெரியவில்லை. இன்றைக்கு போக்குவரத்து கூட மிகவும் குறையக்கூடிய நிலைமையிலே தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய சாலைகள் மிக படுமோசமான நிலையில் இருக்கின்றன. அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று என்னுடைய தொகுதி குறித்து நான் தொடர்ந்து வலியுறுத்திக் கேட்டுக்கொண்டு இருப்பதெல்லாம், திருத்துறைப்பூண்டியில் இருக்கிற ஒரு தாலுக்கா அரசு மருத்துவ மனை பற்றி. அங்கே 13 மருத்துவர்கள் இருக்கிறார்கள். அந்த மருத்துவமனைக்கு போதுமான கட்டிட வசதி கிடையாது. மருத்துவர்கள் கூட அங்கே சென்று தங்களுடைய தொழிலை நடத்துகிறார்களே தவிர, அரசு மருத்துவமனையிலே இருந்து பணியாற்றுவதில்லை. யார் அந்த மருத்துவமனைக்கு சென்றாலும், அங்கே இருக்கக்கூடிய மருத்துவர்கள் 'இங்கே மருந்துகள் கிடையாது; மாத்திரைகள் இல்லை; நீங்கள் தனியார் மருத்துவமனைக்கு சென்றுவிடுங்கள்' என்று சொல்லி அனுப்பக்கூடிய ஒரு அபாயகரமான நிலை இருக்கிறது. அந்தப் பகுதியில் இருக்கிற ஏழை எளிய மக்கள், சாதாரண விவசாயத் தொழிலாளர்கள் தஞ்சைக்கும் நாகைக்கும் செல்லக்கூடிய ஒரு அபாயகரமான நிலை இருக்கிறது. நான் தொடர்ந்து நம்முடைய அமைச்சருடைய கவனத்திற்கு இதை கொண்டு வந்தபோதிலும். அப்படிப்பட்ட நிலைமைகளைக் களைய உடனடியாக துரிதமாக நடவடிக்கை எடுப்பதாக அறிவித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், அப்படிப்பட்ட நடவடிக்கை இல்லை. நான் சமீபத்தில் கூட, தாலுகா மருத்துவ மனையில் அப்படி ஒரு நிலைமை இருக்கிறது என்று கூறி இருக்கிறேன். ஒரு மருத்துவர்கூட டூட்டி நேரத்தில் அங்கே

இல்லாத ஒரு நிலைமை இருந்தபோது, நான் நாகப்பட்டினத்தில் இருக்கிற தலைமை மருத்துவருக்கு தந்தி மூலமாகவும், தொலைபேசி மூலமாகவும் தெரிவித்து இருக்கிறேன். இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11.45

அதேபோன்று ஒரு வழிப் பாதையாக இருப்பதை இரு வழிப் பாதையாக மாற்றிக் கொடுக்க வேண்டும். முன்னால் இருந்த அரசு அதற்கு ரூ. 42 லட்சம் நிதியை ஒதுக்கி அந்த மாற்று வழிப் பாதைகளுக்கு அவர்கள் வித்திட்டு இருந்தார்கள். நம்முடைய அ.தி.மு.க. அரசு வந்த பிறகு அந்த பணிகள் நடைபெறாமல் நிறுத்தப்பட்டு இருக்கிறது. அந்த பணிகளையும் உடனடியாக செய்து கொடுக்க வேண்டும். அங்கே வேளாங்கண்ணி, நாகூர் போன்ற மிகப் பெரிய கோயில் தலங்கள் இருக்கின்ற காரணத்தினால், இராமநாதபுரத்தில் இருந்தும், திருநெல்வேலியிலிருந்தும் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய சுற்றுலாப் பயணிகள் ஆயிரக் கணக்கான வாகனங்களில் சென்று கொண்டிருக்கிறார்கள். அது ஒரு வழிப்பாதையாக இருக்கிற காரணத்தால் திருத்துறைப்பூண்டி நகரில் இருக்கிற ஒரு குறுகிய பாலம் இடிந்த நிலையில் இருக்கிறதால்—தற்சமயத்தில் வேலை செய்து வந்து கொண்டிருக்கிறார்கள். அது இடிந்து விட்டால் மிகப் பெரிய போக்குவரத்து பாதிப்பு ஏற்படும். ஆகவே, அந்தப் பணிகளை அமைச்சர் அவர்கள் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று துறைக்கு உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல வெள்ளையர் காலத்தில் கட்டப்பட்ட அரசு உயர் நிலைப் பள்ளி, இன்றைய தினம் 1,200-க்கு மேலே அதிலே மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பள்ளியில் பல்வேறு இடிபாடுகள் ஏற்பட்டு பல்வேறு இடங்கள் இடிந்து விழுந்து கொண்டிருக்கின்றன. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும் அதனுடைய போட்டோ காபிகளை எடுத்து நேரடியாகக் கொடுத்து இருக்கிறேன். அந்தப் பள்ளி மாணவர்கள் மர நிழலில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்கள் அச்சப்படுகிறார்கள். குழந்தைகளை அந்தப் பள்ளிக்கு அனுப்புவதற்கு பெற்றோர்கள் கூட இன்றைக்கு யோசிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இப்போது நடந்து முடிந்த தேர்வுகளை கூட மாணவர்கள் வெளியில் இருந்து எழுதக் கூடிய நிலைமை இருந்திருக்கிறது. அந்தப் பள்ளியை பழுது பார்த்து, மாணவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டு, **பேசுவதற்கு அனுமதி தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.**



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தி. சாத்தையா.

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நிதியொதுக்க மசோதாவில் எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். கடந்த பட்ஜெட்டில் 40 விடுதிகளை ஆதி திராவிட மாணவர்களுக்கு திறக்க இருப்பதாக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்தார்கள். அதில் ஒன்றை எனது மாவட்டமான காமராசர் மாவட்டத்திற்கு அளித்தது மட்டுமல்லாமல், எனது இராஜபாளையம் தொகுதியில் ஜமீன் கொல்லகொண்டான் கிராமத்தில் திறக்க ஆணையிட்டதற்கு என் தொகுதி மக்களின் சார்பாக நன்றி கூறிக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் வகுப்பில் ஒருவர் இறந்து விட்டால் ஈமக் கிரியைக்கு கொடுத்து வந்த உதவித் தொகையை ரூ. 100-லிருந்து ரூ. 200 ஆக உயர்த்தி ஆணையிட்டதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு கோடிக்கணக்கான ஆதி திராவிட இன மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் தொகுதியான இராஜபாளையம் ஒரு பெரிய நகரம். அங்கே கல்லூரி, பாலிடெக்னிக் இருந்தும், ஆதிதிராவிடர் துறையில் நடத்தப்படும் கல்லூரி எதுவும் இல்லை. கல்லூரி மாணவர் விடுதியும் அங்கே இல்லை. எனவே, இவ்வாண்டு ஆரம்பிக்க இருக்கும் 30 விடுதிகளில் ஒரு விடுதியை இராஜபாளையத்தில் அமைக்க வேண்டுகிறேன்.

எனது தொகுதியில் சுந்தரராஜபுரத்தில் இந்தத் துறையால் நடத்தப்படும் உயர்நிலைப் பள்ளி ஒன்று உள்ளது. இந்த ஊரிலுள்ள மக்கள் அனைவரும் ஆதிதிராவிடர் மேல் நிலைப் பள்ளி இல்லாததால் வயதுக்கு வந்த பெண்கள் பல கிலோ மீட்டர் நடந்து சென்று படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. ம. சின்னசாமி தலைமை)

குறிப்பாக பல கிலோ மீட்டர் நடக்க வேண்டியிருப்பதால், ஒவ்வொரு வீட்டிலும், பெண்கள் படிப்பை அதோடு நிறுத்தும் சூழ்நிலை இருக்கிறது. எனவே, சுந்தரராஜபுரத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி தர ஆணையிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

என் தொகுதியின் கடைசி எல்லையில் அமைந்துள்ள சொக்கநாதம்பட்டியில் வீடில்லாத ஏழை மக்களுக்கு வீட்டு மனை வழங்கும் திட்டத்தின் கீழ் 44 வீட்டு மனைகள் வழங்க ஏற்கெனவே 4 (1) அறிவிக்கை வெளியிட்டும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படாததால் அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. **எனவே, கூடிய விரைவில் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.**

ஆதி திராவிடர் நலத் துறையில் கடந்த மூன்றாண்டுகளுக்கு மேலாக துணை இயக்குநர்—டெபுடி டைரக்டர்—பணியிடமும், வட்டார உதவி இயக்குநர்—ரீஜினல் அசிஸ்டெண்ட் டைரக்டர்—பணியிடமும் நிரப்பப்படாமல் இருக்கிறது. முக்கியமான இந்த இரண்டு பதவிகளும் நிரப்பப்படாமல் இருப்பதால் இந்தப் பகுதி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கல்வியின் தரம் உயர வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே, விரைவில் இந்த இரண்டு பதவிகளையும் நிரப்பும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையில் கிட்டத்தட்ட 1,222 பள்ளிகள் இருந்தும் ஒரு கல்லூரி கூட எங்கும் அமைக்கப்படவில்லை. நாடு முழுமையும் அண்ணல் அம்பேத்கார் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்நிலையில், ஆதி திராவிடர் நலத் துறை மூலமாக கல்லூரி ஒன்றை இராஜபாளையம் நகரில் நிறுவி, அதற்கு அன்னாரது பெயரைச் சூட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11.50.

இவ்வாண்டு முதல் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு படிக்கும் ஆதி திராவிடர் நலப் பள்ளி மாணவர்களுக்கு மாதிரி வினா விடை அச்சிட்டு வழங்கியது கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அதே போல், பொதுப் பள்ளிக் கூடங்களில் படிக்கும், ஜெனரல் ஸ்கூல்களில் படிக்கும் ஆதிதிராவிட மாணவர்களுக்கு இதை அச்சிட்டு அளித்தால் அந்த மாணவர்களும் பயன்பெறுவார்கள் என கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது ஆதி திராவிடர்களுக்கு என 18 சதவீதம் ஒதுக்கீடும் பழங்குடியினருக்கு 1 சதவீதம் ஒதுக்கீடும் அளிக்கப்படுகிறது. இந்த ஒதுக்கீடு மக்கள் தொகை அடிப்படையை ஒட்டியே உள்ளது. அதாவது தமிழ்நாட்டில் ஜனத்தொகையில் 13.35 சதவீதம் ஆதி திராவிடர் என கொள்கை விளக்கக் குறிப்பில் உள்ளது. எனவே, இம்மக்கள் தொகை அடிப்படையில் வழங்கப்படும் ஒதுக்கீட்டை, புரட்சித் தலைவியின் ஆட்சியில் சற்று உயர்த்தி அளித்தால், இம்மக்களுக்கு இப்பொற்கால ஆட்சியில் அளிக்கும் பரிசாக அமையும் என்று நினைக்கிறேன். எனவே, ஆதி திராவிடர்களுக்கான ஒதுக்கீட்டை 25 சதவீதமாக உயர்த்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் பெர்பார்மன்ஸ் பட்ஜெட்டில் உள்ளது போல், பல்வேறு துறைகளில், ஏ, பி, சி என்று கேட்டகரிகள் உள்ளன. அவற்றில் 18 சதவீதம் இடம் நிரப்பப்படாமல் உள்ளன. தகுந்த நபர்கள் கிடைக்காவிட்டால் அந்த இடங்களில் டைரக்ட் ரெக்ரூட்மெண்ட் மூலமாகவோ, புரமோசன் மூலமாகவோ, அல்லது எஸ்.சி. கிருஸ்டியன் மூலமாகவோ, அந்த காலி இடங்கள் அனைத்தையும், புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் இந்த பேக்-லாக் முழுவதையும் நிரப்ப வேண்டுமென்று



கேட்டுக் கொள்கிறேன். இந்த நிலைமை, கொள்கையை உருவாக்கும் தமிழகச் செயலகத்திலேயே இருக்கிறது என அறிகிறேன். இந்த நிலைமை புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சிக் காலத்திலே மாற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு அறிஞர் அண்ணா ஆட்சிக் காலத்தில் உதவித் தொகையும் தங்கப் பதக்கமும் வழங்க திட்டம் கொண்டு வரப்பட்டது. ஜாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் பிற சமூகத்தில் மணம் புரிந்தால், அது கலப்புத் திருமணம் என அங்கீகரித்து ஆணையிடப்பட்டது. ஆனால் முன்பு இருந்த தி.மு.க. அரசு அதை மாற்றி முன்னேறிய வகுப்பினரும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் மணம் முடித்தாலே அது கலப்புத் திருமணம் என ஆக்கிவிட்டார்கள். சமதர்ம சமுதாயத்தை உருவாக்க தம்பதிகளில் ஒருவர் தாழ்த்தப்பட்டவராக இருந்தால் மட்டுமே அது கலப்புத் திருமணம் என அங்கீகரிக்க ஆணையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தில் ஏறக்குறைய 3 ஆயிரம் கிராமங்கள் untouchability prone areas அதாவது சென்சிடிவ் வில்லேஜஸ் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால், கிராமங்களில் ஜாதிக் கலவரம் ஏற்படுகிறது. காரணம் அரிசன மக்களுக்கு அடிப்படைத் தேவைகள் அரசால் முழுமையாக இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை. உதாரணமாக மயானப் பாதை, குடிநீர் வசதி, சாலை வசதி, பள்ளிக்கூடங்கள், மின் வசதி போன்றவைகள் கிராமங்களுக்கு அப்பால் ஒதுக்கப்பட்ட இடங்களில் வசிக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு—பல இடங்களில்—இந்த வசதிகள் இல்லை, இந்த மக்கள் வசதிகளை நாடிப் போகும்போது, மேல்குடி மக்களோடு மோதல் ஏற்படுகிறது, இதைத் தவிர்க்க எல்லா அரிசன மக்கள் வாழும் பகுதிகளிலும் அடிப்படை வசதிகளை முழுமையாக, ஓரிரு ஆண்டுகளுக்குள் அரசு செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

குறிப்பாக, தென் ஆற்காடு, மதுரை, திருநெல்வேலி, திருச்சி, தஞ்சை போன்ற மாவட்டங்களில் பல பகுதிகளில், இக்கலவரங்கள் இதனால் ஏற்படுகின்றன.

அதைப் போல, Government of India Special Component Plan என்று ஒரு திட்டத்தை பல ஆண்டுகளுக்கு முன்பு வகுத்து, அதை மாநிலங்கள் செயல்படுத்த வேண்டும் என்று ஆண்டுதோறும் அறிவுறுத்தப்படுகிறது. ஆனால் பெரும்பாலான மாநிலங்கள், குறிப்பாக தமிழகம் இதனை இதுவரை செய்யவில்லை. எனவே, நமது புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சிக் காலத்தில், இதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், அதாவது ஒவ்வொரு இலாக்காவிற்கும் ஒதுக்கப்படும் பட்ஜெட் தொகையில் அரிசன மக்களுக்கு 18 சதவீதம் செலவிட வேண்டும்

என்பது இதன் நோக்கம். ஆனால், நம்முடைய இலாக்காக்கள் இதனை ஒதுக்குவதும் இல்லை, அரிசன மக்களுக்கு செலவு செய்வதாக கணக்கு மட்டும் காண்பிக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்,

உதாரணமாக குடிநீர் வசதிக்காக அரசு சுமார் 100 கோடி ரூபாய் செலவு செய்தால், அதில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 20 கோடியாவது செலவிட வேண்டும் என்பது விதி. ஆனால் பெரும்பாலான இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கேஸ்ட் இந்துக்கள் இருக்கும் இடங்களில் அமைக்கப்படுகின்றன. அரிசனப் பகுதிகளில், வசதியே இல்லாத இடங்களில் அமைப்பதில்லை. எக்ஸ்டன்சன் ஆப் பைப்புகளும் இல்லை. சில இடங்களில் ஆழ் குழாய் கிணறுகள் போடாததால், அவர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி தகுந்தபடி கிடைப்பதில்லை.

அதே போல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் இந்த அரிசன மக்களுக்குச் செய்து தரப்பட வேண்டும். அடுத்து ஒவ்வொரு கிராமத்திலும், கல்விக் கூடங்கள் அனேகமாக மேல்குடி மக்கள் வாழும் பகுதிகளில் தான் கட்டப்படுகின்றன, பல இடங்களில், குறிப்பாக இந்த untouchability prone area களில் அரிசன மாணவர்கள் சென்று அங்கே படிப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது,

முற்பகல் 11-55

பட்ஜெட்டிலே மட்டும் இந்த பள்ளிக்கூடத்திற்கு தரும் செலவை 18 சதவீதம் என்று கணக்கில் காட்டுகிறார்கள், ஆனால் இன்று வரை உண்மை நிலை வேறாக இருக்கிறது, அதை இன்று புரட்சித் தலைவியினுடைய அரசு கண்டு அதை சரி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், அதே போல கால்நடை பராமரிப்பு மருத்துவ நிலையங்கள், கிராமங்களை இணைக்கும் சாலைகள் போன்ற இந்தக் கணக்கில் கேஸ்ட் இந்துக்கள் வசிக்கும் இடங்கள் வரை தான் சாலைகள் போடப்படுகின்றன, ஆனால் அரிசன மக்கள் வசிக்கும் பகுதிகளில் சாலைகள் போடப்படுகின்றன என்று கணக்கு மட்டும் கொடுக்கிறார்கள், ஆனால் சில இடங்களில் போடப்படுவது இல்லை, எனவே இந்த அரசு அந்த நிலையை மாற்றி இனி வரும் ஆண்டுகளில் எல்லாத் துறைகளிலும் பொதுத் திட்டங்களை அரிசன மக்கள் வாழும் பகுதிகளில் அமைக்கும்படி உத்திரவிட வேண்டும் என்று புரட்சித் தலைவி அரசை கேட்டுக் கொள்கிறேன், அதாவது பள்ளிக் கூடங்கள், மருத்துவ நிலையங்கள், குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் போன்றவைகளை அந்த பகுதியில் அமைத்து அதன் மூலம் இதர மக்கள் அங்கு வந்து பயன் பெற வசதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், தாழ்த்தப்பட்ட மக்கள், ஏழைகள் ஆகியவர்களுடைய வருட வருமானம் - இப்போது ரூ.6,400 ஆக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதனை அடிப்படையாக கொண்டு தான் அவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா





கொடுப்பது, தாட்கோ கடன் கொடுப்பது போன்ற வசதிகள் செய்து தரப்படுகின்றன, ஆனால் இது மிகவும் குறைவாக இருக்கிறது, எனவே மத்திய அரசு நிர்ணயித்து இருப்பது போல நம்முடைய அரசும் இதனை ரூ. 6,400-லிருந்து 12 ஆயிரம் ஆக உயர்த்த வேண்டுகிறேன், அதே போல கல்வி உதவித் தொகை பெற மைய அரசு ரூ. 24 ஆயிரமாக நிர்ணயித்து இருக்கிறது, ஆனால் நம்முடைய அரசு 12 ஆயிரமாக நிர்ணயித்து இருக்கிறது, அதனையும் ரூ. 24 ஆயிரமாக உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தாட்கோ நிறுவனம் அதற்கு மைய அரசு அளிக்கும் உதவித் தொகையைக் கொண்டு தான் இயங்கி வருகிறது, சுமார் வருடத்திற்கு அவர்கள் ரூ. 15 முதல் 16 கோடி வரை பல்வேறு பொருளாதார மேம்பாட்டு திட்டங்களுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள், ஆனால் தமிழக அரசு இது வரை எந்த தனித் திட்டமும் கொடுக்கவில்லை, அதனால் தனியாக மைய அரசு கொடுக்கும் தொகைக்கு ஈடாக சமமான தொகையை கொடுத்து அந்த தாட்கோ நிறுவனத்தின் மூலம் பல மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், குறிப்பாக தாட்கோ மூலம் இந்த வேலைகளை செய்தால் அவர்களை கட்டுப்படுத்துவதற்கு, குரூப் ஹவுஸிங் போன்றவைகளை செக் பண்ணுவதற்கு வசதியாக இருக்கும் என்று . கேட்டுக்கொண்டு இந்த சந்தர்ப்பத்தை அளித்த மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்,

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) . அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு, எம், எம், எஸ், அபுல் ஹசன்,

திரு, எம், எம், எஸ், அபுல் ஹசன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நான் நேற்றைக்கு பேசிய விஷயங்களில் பாக்கி விஷயங்களை இன்று பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மறைந்த நமது மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளி வாசல்கள் மற்றும் தர்காக்களை சீர் செய்யும் பொருட்டு 1984-85 ஆம் ஆண்டில் வக்ஃப் போர்டுக்கு ரூபாய் ஒரு கோடி வழங்கினார்கள், ஆனால் பின்னர் வந்த அரசு அதனை ரூபாய் 3 லட்சமாக குறைத்து விட்டது, எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதனை உயர்த்தி ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் பத்து லட்சமாக வழங்க வேண்டும் என்று தமிழக முஸ்லீம்களின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்,

நமது தமிழக அரசு உலமாக்களின் பென்ஷன் வயதை 60 என்று நிர்ணயம் செய்து உள்ளது. ஆனால் விண்ணப்பத்தில் 70 வயது என்று இருந்தால் தான் அந்த விண்ணப்பத்தையே

பரிசீலனை செய்கிறார்கள் என்று அறிகிறேன். எனவே இந்த அரசு 60 வயது என்று போடப்பட்டிருக்கிற அனைத்து விண்ணப்பங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று வேண்டுகிறேன். உதாரணமாக தஞ்சை மாவட்டத்தில் அதிராம்பட்டணத்தில் ஜும்மா பள்ளி என்ற ஒரு பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியை கட்டுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் முன்னால் இருந்த அந்த வாரியத்தின் தலைவர் அப்துல் லத்தீப் அவர்கள் நேரிடையாக அந்த நாட்டாண்மையை அழைத்து பேசியிருக்கலாம். அதை விட்டுவிட்டு அவர்கள் தங்களுடைய கட்சியைச் சேர்ந்த ஒருவருக்கு அனுமதி கொடுத்து, அந்தப் பள்ளியை கட்ட வேண்டாம் என்ற நிலைமையை கோர்ட்டிலே ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதை மாண்புமிகு வக்ஃப் வாரிய அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பள்ளியைக் கட்டுவதற்கான நிலைமைகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு வக்ஃப் போர்ட் அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு புரட்சித் தலைவி முதலமைச்சர் அவர்களையும் வேண்டிக் கொள்கிறேன். அது சம்பந்தமாக நேற்றைக்கு நானும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம் அவர்களும் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி முதல் மந்திரி அவர்களிடம் விண்ணப்பம் கொடுத்திருக்கிறோம். உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுத்து, ஏற்பாடு செய்து கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கை உண்டு. இந்தப் பள்ளியில் 500 ஆண்டுகளாக ஒரே தொழுகை மட்டும் நடத்தி வந்தார்கள். அதையும் தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள் 100 பேரைப் பிரித்து, வேறு ஒரு இடத்தில் வைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதை நிச்சயம் செய்யவிடாமல் அந்த மக்களின் நன்மையையும், ஒற்றுமையையும் கருதி, அங்கேயே நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு வஃப் போர்ட் அமைச்சர் அவர்களையும் கேட்டு, என்னுடைய அன்பு வேண்டுகோளாக விடுத்து, அதை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

இஸ்லாமிய சமுதாயத்தில் இறந்தவர்களை அடக்கம் செய்யும் இடம்தான் மையத்துக் கொல்லை, அதாவது மயானம். அது தமிழகத்தில் 800 உள்ளது. அதற்குச் சுற்றுச் சுவர்கள் இல்லாத காரணத்தால், அங்கே பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே இந்த அரசு மையத்துக் கொல்லைகளுக்கு சுற்றுச் சுவர் கட்டுவதற்கு வருஷம் ஒன்றுக்கு 10 இலட்சம் ரூபாய் வழங்க வேண்டுமென்று வேண்டுகிறேன்.

அடுத்து நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள நாகூர் தர்காவுக்கும், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஏர்வாடி தர்காவுக்கும், காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள முத்துப்பேட்டை தர்காவுக்கும் ஏராளமான பக்தர்கள் ஜாதிமத பேதமின்றி அனைவரும் வந்து வேண்டுதல் செய்து





வருகிறார்கள். அவ்வாறு வரும் பக்தர்களுக்கு அடிப்படை வசதியாக குடிநீர், கழிப்பிடம் ஆகியவைகளை அவசியம் செய்து கொடுக்கும்படி இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஏர்வாடி தர்காவுக்கு ஏராளமான பக்தர்கள் வருவதால் பொது மக்களிடமிருந்து அரசுக்கு அதிகமான ரெவின்யூ, பணம் வருவதால், ஏர்வாடியை ஒரு நகரியமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அது இந்த அரசின் பரிசிலனையில் உள்ளது. எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வஃப் வாரிய அமைச்சர் அவர்களும் ஏர்வாடியை ஒரு நகரியமாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று வேண்டுகிறேன்.

தமிழகத்தில் மொத்தம் 6,100 பள்ளி வாசல்கள் இருக்கின்றன. இவைகளில் பல பள்ளிகள் சீர் செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இவற்றைச் சீர்படுத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், வஃப் போர்டுக்கு போதிய நிதியை வழங்க வேண்டுகிறேன். இந்தப் பேரவையில் எங்கள் சமுதாய மக்களின் முன்னேற்றத்திற்காக வைத்துள்ள அனைத்துக் கோரிக்கைகளையும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வஃப் போர்ட் அமைச்சர் அவர்களும் நிச்சயமாக செய்து கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இங்கே எனக்குப் பின்னால் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இதையே பேசுகிறீர்களே என்று சொல்லுகிறார்கள். நாங்கள் இருப்பதோ 2, 3 பேர்கள்தான். வெளியிலே எங்களைப் பார்த்து, எங்களுடைய சமுதாயத்திற்கு என்ன செய்கிறாய் என்று கேட்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதனால்தான் பேசுகிறேன். எனக்கு எல்லா மக்களும் சமம். இந்த நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட குடும்பம் எங்கள் குடும்பம் என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். வெளியிலே போனவுடன் என்னுடைய சமுதாய மக்கள் கேட்பதால் அதைப் பற்றிப் பேச வேண்டியதாக இருக்கிறது. வேறு யாரும் இதை எடுத்துச் சொல்வதில்லை. அதனால்தான் நான் பேசுகிறேன் என்று உண்மையை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.. நாட்டின் விஷயத்தில் நான் பின்தங்கியவன் அல்ல. 10 முறை சிறை சென்றவன். சுதந்திரத்திற்காகப் பாடுபட்டு, இந்த ஒரு முறைதான் இந்த சேரில் அமர்கிறேன் என்றால் நான் தியாகம் செய்தேன் என்பதும் ஒரு காரணம் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதன் காரணமாக ஒன்றை வேண்டுகோளாக வைக்கிறேன். நான் முன்பு சொன்னது போல 500 ஆண்டுகளாக இருந்த அந்த நிலைமையை

பிரித்துவிடாமல் ஒற்றுமையாக இருக்கும்படியான ஒரு சூழ் நிலையை முதல்வர் அவர்களும் மாண்புமிகு வக்ஃப் வாரிய அமைச்சர் அவர்களும் நிச்சயமாக செய்து கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஊரகத் தொழில் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் பேசுகின்றபோது இந்த பள்ளிவாசலை புதுப் பிப்பதற்கு கொடுக்கப்பட்டு வருகின்ற கிராண்டின் மூலம் மையத்து கொல்லைகளுக்குத் தடுப்புச் சுவர் எழுப்ப வேண்டும் என்று கேட்டார்கள். மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே மையத்து கொல்லை களுக்கு தடுப்புச் சுவர் எழுப்புவதற்கும் இந்த நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது. அதே போல இன்றைக்கு நமது ஒப்பற்ற டாக்டர் முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கூட மையத்து கொல்லைகளுக்கு எங்கேனும் தடுப்புச் சுவர் எழுப்ப வேண்டும் என முறையாக மாண்புமிகு உறுப்பினர்கள் மூலம் விண்ணப்பிக்கப்படுமானால், இந்த அரசு அதற்குரிய நிதியை ஒதுக்கும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ச. இராமச் சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய பொருளாதாரத்தை வளர்க் கின்ற ஒரு முக்கியமான கருவியாக நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு அமைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வறுமை, வேலையின்மை, விலைவாசி உயர்வு ஆகிய இம்மூன்றும் பொருளா தாரத்தில் மிகப்பெரிய பிரச்சினைகளாக இருக்கின்றன. இந்திய நாட்டிற்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டிற்கும் குறிப்பாக இவை பற்றி அரசு தனி அக்கறை செலுத்த வேண்டிய தருணம் இது. இந்திய அரசே விலைவாசி குறையும் என்று எதிர்பார்த்தும் கூட. இந்த ஆண்டு முதல் குறையும் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக அதிகரித்திருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டுள்ளது. 13.6 சதவீதம் விலைவாசி உயர்ந்திருக்கிறது என்றும் அதை இந்த ஆண்டிலே 8 சதவீதமாக குறைப்பதற்கு பல்வேறு நடவடிக்கைங் களை மேற்கொள்ள வேண்டும் என்றும் மத்திய ரிசர்வ் வங்கி யினுடைய தலைவர் வெங்கடரமணன் அவர்கள் கூட பல திட்டங் களை அறிவித்திருக்கின்றார். ஆகையினாலே தமிழ்நாட்டினுடைய பொருளாதாரத்தை ஓர் நல்ல ஆரோக்கியமான சூழ்நிலைக்கு கொண்டுவருவதற்கு இந்த அரசு பாடுபட வேண்டும். பாஸிட்டிவ்



ஆஸ்பெக்ட்ஸ் என்று பார்க்கின்றபோது இன்று மணி மார்க்கெட் நன்றாக இருக்கிறது. தொழில் முனைவர்கள், வணிகர்கள் செலவழிப்பதற்கு அல்லது முதலீடு செய்வதற்கு வாய்ப்பு இருக் கிறது. அதை முழு அளவிலே அரசு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல அரசு என்று பார்க்கின்றபோது அது தனது வரவு செலவு திட்ட கொள்கைகளின் மூலமும் ஓர் நல்ல நிலைமையை உருவாக்கலாம். ஒரு காலத்தில் பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டம் என்றால் அது வளர்ச்சியைக் குறிக்கும் என்ற கருத்து இருந்தது. ஆனால் இப்போது உபரி வரவு-செலவுத் திட்டம் போட்டு வரிகளை குறைக்கக் கூடிய நிலைமை உலகத்தில் உண்டாகி வருகிறது. ஆகையினால் வரவு-செலவுத் திட்டத்தை சரிக்கட்டுவது, பேலன்ஸ் பண்ணுவது என்பது இன்று எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிற ஒரு கொள்கையாகும், பேலன்ஸ்டு பட்ஜெட். அந்த வகையில் வருகின்றபோது மார்ச் மாதத்தில் முடிந்த பட்ஜெட்டுக்கு அத் தகைய வரவு செலவுத் திட்டத்தை இந்த அரசு ஈடு செய்ததா என்று அறிய விரும்புகிறேன், இந்த ஆண்டு வரவு செலவுத் திட்ட உரையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பாரா 220-ல் கூடுதலாக நிதி உதவி அளிக்க வேண்டும் என்ற நம் கோரிக்கையை மத்திய அரசு அதன் நிதி நிலைமை சற்று மேம் பட்டு இருக்கும் இந்த நேரத்திலாவது தீவிரமாகப் பரிசீலிக்கும்

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

என்று நம்புகிறோம். நடப்பாண்டில் நிதி உதவி தொகுப்பு ஒன்று அளிக்கப்பட வேண்டும் என்பதே— பேக்கேஜ் அஸிஸ் டென்ஸ் —நம்முடைய திட்டவட்டமான வேண்டுகோளாகும், அப்பொழுதுதான் நடப்பாண்டின் இறுதியில் ஏற்படக்கூடிய பற்றாக்குறை சரிக்கட்டப்பட முடியும். அத்தகைய நிதி உதவி கிடைக்கும் என நம்புகிறோம் என்று அறிவித்து இருந்தார். அந்த நிதி உதவி கிடைத்து இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

பிற்பகல் 12-10

வரவு-செலவுத் திட்டத்தில் சரிக்கட்டுவது என்று சொல்லு கிறபோது ஆங்கிலத்திலே சொல்லப் போனால் the Budget must be balanced by controlling expenditure rather than boosting Taxes.

''ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை''

என்றார் வள்ளுவர். வருமானத்தை அதிகப்படுத்துகின்ற வரி இனங்களையும், வருவாய் இனங்களையும், பெருக்குவதற்குப் பதிலாக செலவினங்களைக் குறைக்கின்ற வகையில் வரவு செலவுத் திட்டத்தை நிர்வகிக்க வேண்டுமென்று சொல்கிறார் கள். அப்படி சொல்லுகிறபோது எதற்கெடுத்தாலும் இல்லை என்று சொல்லவேண்டும் என்பதல்ல. பிரையாரிட்டிஸ்

it is important to have a sense of priorities. எவை தேவையான செலவுகள், எவை எவை தேவையற்ற செலவுகள் என்று பார்த்து தேவையான செலவுகளைச் செய்யவும் தேவையற்ற செலவுகளைக் குறைக்கவுமான ஒரு முகாந்திரத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கையாள வேண்டும். ஆங்கிலத்தில் இதை செய்கிறபோது நிதி அமைச்சருக்கு சொல்லுவது "A nice guy will have to become beastly" என்று இருக்கிறது. ரொம்ப நைசாக இருந்தால் இதெல்லாம் நடக்காது, கொஞ்சம் கடுமையாக இருக்க வேண்டும் என்று சொல்கின்றார்கள். (குறுக்கீடு) 'Beastly' என்பதை அப்படியே சொல்லக்கூடாது, அதற்காகத்தான் சொல்கிறேன். (சிரிப்பு) அதாவது கொஞ்சம் கடுமையாக இருக்கவேண்டும். அது இங்கிலீஷில் சரியாக இருக்கும், தமிழில் சரியாக வராது. ஆகையினாலே நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்ளுவது, செய்கிற செலவினங்களில் தேவையற்ற செலவுகள் என்று உதாரணத்திற்குச் சொல்லப் போனால்,

"தாமேயும் இன்புறார், தக்கார்க்கும்
நன்று ஆற்றார்" என்றார்.

தகுதி உடையவர்களுக்கு அந்த உதவி போய்ச் சேர வேண்டும். எந்த எந்த வகையில் அரசினுடைய உதவிகள், சலுகைகள் அளிக்கப்படுகின்றனவோ, அவை பொருளாதார கொள்கையின் மூலம் பாதிக்கப்பட்டு இருக்கின்ற ஏழை, எளிய, சாதாரண மக்களுக்கு பயன்படுகின்ற அந்த வகையில்தான் இருக்க வேண்டுமே தவிர, மற்ற சலுகைகளை எல்லாம் பார்த்து அவைகளை எல்லாம் ரத்து செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கத்தினுடைய அனாவசியமான செலவுகளைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏழைகளைப் பொறுத்தவரையிலே கூட, give the poor real choices about, where they live, how their children are educated and above all how they can start earning again; give them hope. ஏழைகளின், அவர்களுடைய குடும்ப நிலைகளைப் பார்த்து, அந்த குடும்பத்தை அவர்கள் எந்த அளவிலே நல்லமுறையிலே நடத்த வேண்டும், தன்னுடைய பிள்ளைகளை வளர்க்க வேண்டும், தன்னுடைய வருவாயை பெருக்க வேண்டும் என்ற அளவுக்கு நம்பிக்கை ஊட்டுகின்ற அளவுக்கு அவர்களுக்குரிய திட்டங்களைப் போடுகின்ற அந்தத் தன்மையில் இருக்க வேண்டும். அதைத்தான் இந்திய அரசு கூட சேப்டி நெட் என்று சொல்லுகிறது. ஆகையினாலே அந்த சேப்டி நெட்டை பெரிதாக ஆக்கிக் கொண்டே போவார்களானால் செலவுகள் அதிகமாகிக் கொண்டே போகுமானால், வருவாய் வருவதற்காக வரிகளையும் உயர்த்திக்கொண்டே போவோமானால் அதனால் விலைவாசி உயரும். அப்படி விலைவாசி உயருகிறபோது ஏழ்மை பெருகும். ஆகையினாலே செலவுகளை எந்த எந்த வகைகளிலே குறைக்க வேண்டுமோ அவற்றைக் குறைக்க வேண்டும். ஆனால் இந்த அரசு செலவுகளை அதிகரித்துக்கொண்டே போகிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு செலவு செய்கிறபோது சிலவற்றுக்கு முன்னுரிமைக் கொடுத்து செலவு செய்ய வேண்டும் என்பது ஏற்க வேண்டிய ஒன்றுதான். இப்போது செலவுகள் என்று கடந்த 40 ஆண்டு காலமாக நாம் பார்த்துக்கொண்டு வருகிறபோது பொதுத்துறை முதலீடு என்பது ஒரு முக்கியமான இடத்தைப் பெறுகிறது. ஆக இப்போது புதிய பொருளாதாரக் கொள்கை என்ற நிலையை நாம் எடுக்கின்ற நேரத்திலே அந்த தனியார் முதலீடு செய்கின்ற அந்த செலவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. தனியார் செய்யாத, செய்ய முடியாத நிலையில் அரசாங்கம் அந்தச் செலவை செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே நான் பொதுத் துறையா? தனியார் துறையா? என்ற விவாதம் கடந்த ஒரு வருட காலமாகவே எல்லா மட்டங்களிலும் பேசப்பட்டு வருகிறது.

மதிப்பிற்குரிய மேற்கு வங்க முதல்வர் திரு. ஜோதிபாசு அவர்கள் கூட போக்குவரத்துத் துறையை ஏன் தேசியமயம் ஆக்கவில்லை என்று கேட்கப்பட்டபோது இதைவிட முன்னுரிமைப் பெற்ற செலவுகள் நிறைய இருக்கின்றன. ஆகவேதான் நான் தேசியமயமாக்கவில்லை என்று சொன்னார்கள். அவைகள் எல்லாம் நமக்கு ஒரு பாடங்களாக, படிப்பினையாக வைத்து பார்க்கிறபோது நாம் பொதுத் துறையிலே முதலீடு செய்வதைக் குறைத்து ஏழைகளை பாதுகாக்கின்ற வகையில் முன்னுரிமைக் கொடுப்பது என்கிற முறையில்தான் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு கடந்த 8 மாத காலமாக செயல்பட்டு வருகிறது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-15

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பொருளாதாரக் கொள்கையின் மூலம் பாதிக்கப்படுகின்றவர்கள் என்கின்ற பகுதியினருக்கு மட்டும் உதவி செய்தால் போதுமானது என்பதைத்தான் நானும் சொல்கிறேன். பொதுத் துறை, தனியார் துறை முதலீடு என்பது வேறு விவாதம். ஒரு பொருளாதாரக் கொள்கை இன்றைக்கு வந்துவிட்டது. அதை இனிமேல் மாற்ற முடியும் என்கின்ற நிலை இல்லை. இந்திய அரசு அறிவித்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அதனுடைய விளைவாக விலைவாசி உயருகிறது, வேலையில்லாத் திண்டாட்டம் வளரும், வறுமை அதிகமாகும். இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு அப்படித்தான் இருக்கும் என்று மாண்புமிகு பிரதமர் அவர்களே குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆகையினாலே அப்படி பாதிக்கப்பட்ட பிரிவினருக்கு அவர்களை அடையாளம் கண்டுபிடித்து, compassionate and Individualistic"

அதைப்பார்த்து, அதை மட்டும் செலவு செய்தால் அதிக செலவாகாது, செலவைக் குறைப்பதற்காகத்தான் நான் குறிப்பிட்டேனே தவிர, வேறு அல்ல. ஆகையினாலே அரசாங்கம் செலவுகளைச் செய்கின்றபோது அத்தகைய முன்னுரிமையைக் கடைபிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி, தமிழ்நாடு அரசாங்கம் திட்டக் கமிஷனோடு பேசி ஒரு முடிவுக்கு வந்ததாக பத்திரிகையிலே பார்த்தோம், அதற்கான பைனான்சிங் எப்படி? இந்திய அரசு எவ்வளவு முதலீடு உதவி தருகிறார்கள். மாநில அரசு எவ்வளவு நிதி ஆதாரத்தைப் பெருக்கபோகிறது? கொடுக்கின்ற மானியங்களை ஏதாவது மாநில அரசு ரத்து செய்யப் போகிறதா என்கின்ற விவரங்களை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திட்டக் குழுவைப் பொறுத்தவரையிலே எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஏழு லட்சத்து 97 ஆயிரம் கோடி ரூபாய் என்று அளவிட்டு, பொதுத்துறைக்கு 4 இலட்சம் கோடி ரூபாய் என்று ஒதுக்கியிருக்கிறார்கள். அதில், இந்திய அரசு 2 இலட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாயும், மாநிலங்களுக்கு ஒரு இலட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாய் என்றும் அவர்கள் தீர்மானித்து இருக்கிறார்கள். எனக்கு கிடைத்திருக்கிற தகவல், திட்டக் குழுவினுடைய நிதி ஆதாரங்கள் என்ன என்பதை இந்திய அரசினுடைய அமைச்சகமே இன்னும் தெரிவிக்கவில்லை என்பதும் ஆகையினாலே திட்டக் குழு எந்தவிதமான முடிவும் எடுக்க முடியாமல் தவிக்கின்றார்கள் என்றும் அறிகின்றேன். அதோடு மட்டுமல்லாமல் இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கை வந்துவிட்டதன் காரணமாக திட்டக் குழுவே தேவையா என்ற ஒரு விவாதம் ஏற்பட்டு, இந்திய அரசினுடைய நிதி அமைச்சர் அவர்கள் திட்டக் குழு தேவைதான், ஆனால் அது இப்போது இருக்கின்ற ஃபங்ஷனைவிட, அதாவது செயல்களைவிட, நிபுணர்களைக் கொண்டு எவால்யூவேட் பண்ணக்கூடிய அந்தமாதிரி ஒரு முறையிலே மாற்றி அமைக்கலாம் என்று ஒரு பேட்டியிலே கூட குறிப்பிட்டார்கள். ஆகையினாலே, எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் உண்மையிலே வருமா? அப்படி வருமானால் என்ன முதலீடு? அதற்கு எந்தெந்த வகையான உதவிகள் என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையிலும், 1992-93 ஆம் ஆண்டுத் திட்டம் ஓரளவுக்கு எல்லா மாநிலங்களைப் பொறுத்தவரையிலும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, முடிவு செய்யப்பட்டிருக்



கிறது. ஆனால் எட்டாவது ஐந்தாண்டு திட்டத்திலே, அகில இந்தியாவைப் பொறுத்தும், பொதுவார் துறையைப் பொறுத்தும், தனியார் துறையைப் பொறுத்தும், மாநிலங்களைப் பொறுத்தும் இன்னும் ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வரவில்லை. ஆக, மே திங்களிலே நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் மீட்டிங் நடைபெறும் என்று தெரிய வருகிறது. ஆகவே, மே திங்கள் 22, 23–இல் பெரும்பாலும் இருக்கக்கூடும். இன்னும் நிச்சயமாகவில்லை. ஆகவே, இனிமேல் முடிவு செய்கின்றபொழுது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று, அதனுடைய இலக்கு என்ன, எவ்வளவு என்பதும் திட்டவட்டமாக, தெளிவாகத் தெரியும் என்கின்ற நிலைமை அடுத்த திங்களிலேதான் தெரியுமே தவிர இப்பொழுது தெரியாது.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, இந்த நிதி ஒதுக்க சட்டமுன்வடிவில் என்னுடைய இரண்டு கருத்துக்களைச் சொல்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். அண்ணாசலையில் ஒரு மேம்பாலம் மாதிரி போட்டு, பஸ்களை விடுவதற்கான ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை நன்கு ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், ஏனென்றால், பஸ்கள் மட்டும் போவது என்றால். 1 மணி நேரத்திலே 36ஆயிரம் பேர் போவதற்கு இடம் தேவை. ரெயில்வே என்றால் 10 மீட்டர், மற்ற வாகனம் என்றால் 75 மீட்டர் ரோடு ஸ்பேஸ் தேவைப்படும். அதோடு மட்டுமல்ல, சர்ஃபேஸ் முழுவதும் ரோடு ஸ்பேஸ் என்றால் மெயின்டெயின் பண்ண வேண்டும். தண்டவாளங்கள் அப்படி அல்ல, ஆகையினாலே Light Rapid transit System என்று இருக்கிறது. அந்த சிஸ்டத்தின் மூலம் பின்னாலே அதை Mass Rapid Transit System ஆக மாற்ற முடியும். ஆகவே இதைப்பற்றி முடிவெடுப்பதற்கு முன்னால் அதிலே பேருந்துகள் மட்டும் தான் போக வேண்டுமா அல்லது Light Rapid Transit System என்பதைப்போல ஒரு சிலயிடங்களிலே ரோடாகவும், ஒரு சில இடங்களிலே இரயிலாகவும் இருக்கும், அடுத்தது, Mass Rapid Transit system. ஆகவே, இந்த மூன்றையும் பரிசீலனை செய்து அதற்குப் பிறகு முடிவெடுப்பது தான் சிறந்தது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இது சம்பந்தமாக HighWays Research and Design organisation இருக்கிறதே, அவர்களைக் கேட்கலாம். அதேபோல Railway Industrial Economic Service இருக்கிறதே, அவர்களையும் கேட்டு அதை முடிவு பண்ண வேண்டுமென்பதை நான் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது உலக வங்கிக் குழு அங்கத்தினர் ஒருவரை கன்சல்டன்டாக பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினுடைய அந்த ஆலோசனை நிறுவனம் நியமித்திருப்பதாக நான் அறிகிறேன். அது உண்மையா அல்லவா என்று எனக்குத் தெரியவில்லை. உலக வங்கிக் குழு அங்கத்தினர் Messrs. Hatkinsons and Partners என்பவரைப் போட்டிருக்கிறார்கள். அவர் அந்த உலக வங்கிக் குழுவிலேயும்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1992 ஏப்ரல் 24

இருக்கிறார்; இந்த ஆலோசனையிலேயும் இருக்கிறார். அது சரி அல்ல. ஏதாவது ஒரு காண்ட்ராக்டர் வேலை செய்கிறார் என்றால், என்ஜினியர் அதைப் பார்ப்பார். இரண்டு வேலையும் ஒருவரிடத்திலேயிருப்பது சரியாக வராது. ஆகவே, அதைப்பற்றி எல்லாவகையான ஆய்வுகளையும் செய்த பிறகு திட்டத்தைக் கொண்டு வர வேண்டும். இல்லையென்றால் ஏற்கனவே வீராணம் திட்டத்திலே போய்ச் சிக்கிய மாதிரி இது ஒரு திட்டமாக ஆகவிடக்கூடாது என்பதை நான் முன்கூட்டியே எச்சரிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 12-20

அதற்கடுத்தபடியாக, இந்தக் குதிரைப் பந்தயம் இப்பொழுது அரசு ஒரு துறை மூலம் நடத்துகிறது. ஒருகாலத்திலே, அந்தக் குதிரைப் பந்தய சங்கத்தினுடைய தலைவராக இருந்த அனுபவத்தை வைத்துச் சொல்கிறேன். அதை ஒழுங்காக நடத்தினால் நிறைய வருமானம் வரும். ஆனால் இப்பொழுது அதில் பல தவறுகள் நடைபெறுகின்றன என்று அறிகின்றேன். அதற்கு முக்கியமான காரணம், அதிலே நல்ல நிர்வாக அதிகாரியைப் போட்டு அதை நாம் நடத்த வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்திலே அதை டிபார்ட்மெண்டே எடுத்து நடத்தியது. It is a departmental race ஆகத்தான் நடத்துகிறோம். அதிலே சரியான அதிகாரியை, நல்ல அதிகாரியை, நேர்மையான அதிகாரியைப் போட்டால் நல்ல வருமானம் கிடைக்கும். ஆனால் அதிலே ஒரு அதிகாரி இருந்து, நல்லமாதிரியாகச் செய்தார்கள். அவரை முப்பது நாளிலே மாற்றிவிட்டார்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். அதிலே நிறையத் தவறுகள் நடக்கின்றன. டெண்டரிலே தவறு நடக்கிறது; அவர்கள் வாங்குகிற பொருள்களிலே தவறு நடக்கிறது; ரேசிலே தவறு நடக்கிறது. அப்புறம்—Inter-venue betting—இலே தவறு நடக்கிறது; Stakles—இலே தவறு நடக்கிறது. அதற்கு என்ன காரணம் சொல்கிறார்கள் என்றால் அரசாங்கம் இதை நடத்துகிறது. இந்த ரேஸ் நஷ்டத்திலே வந்து கணக்கு காட்டிவிட்டால் அதை உடனே தனியார் நாம் எடுத்துக் கொள்ளலாம் என்று ஒருசிலர் நினைக்கின்றார்கள். அவர்களுடைய கூட்டுச் சதியினுடைய விளைவாக இந்தத் தவறுகள் நடக்கின்றன என்ற ஒரு குறைபாடு இருக்கிறது. ஆகையினாலே, ஒரு நல்ல அதிகாரியைப் போட்டு, நேர்மையான அதிகாரியைப் போட்டு அதை நன்றாக நடத்தினால் அரசுக்கு வருவாய் கிடைக்கும் என்று கூறி அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவை ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும் தலைப்பின்கீழ் எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி எனது கருத்துக்களை இந்த அவையில் வைக்கின்றேன்.



1992 ஏப்ரல் 24] [டாக்டர் எஸ். சுந்தரராஜ்]

1992-93 ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் பரமக்குடியில் எமனேஸ்வரத்திற்கும் பரமக்குடிக்கும் இடையே வைகையாற்றில் பாலம் கட்டுவதற்காகக் கிட்டத்தட்ட 64 இலட்சம் மனமுவந்து அளித்த தமிழக முதல்வரவர்களுக்கு என் சார்பாகவும் எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நான் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேசமயம் இராமநாதபுரம் மாவட்டம் தொழில்துறையில் மிகவும் பின் தங்கிய மாவட்டமாக இருந்ததை அறிந்து, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு என்று ஒரே வருஷத்தில் தொழில்கள் தொடங்குவதற்காக இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதிக்கும், பரமக்குடி சட்டமன்றத் தொகுதிக்கும் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க மனமுவந்து உத்தரவு வழங்கிய தமிழக முதல்வரவர்களை மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பரமக்குடியில் அரியனேந்தல் அருகே உள்ள அரியனேந்தல் அருகே கிட்டத்தட்ட 6 1/2 கோடி அளவில் 30 சிட்கோ தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கு உத்தரவு வழங்கிய சிறுதொழில்—தொழில் துறை அமைச்சரவர்களை இந்தச் சமயத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரையில் இயங்கி வந்த நீதிமன்றக் கட்டிடங்கள் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருவதற்கு மறுத்ததை அறிந்து மாண்புமிகு தமிழக முதல்வரவர்களும், மாண்புமிகு நிதியமைச்சரவர்களும் இந்த நிதிப்பற்றாக்குறை நெருக்கடி காலத்திலே கிட்டத்தட்ட 2.45 கோடி நீதிமன்றத்திற்காக வழங்கியதற்காக மாவட்ட மக்களின் சார்பில் இந்தத் தமிழக அரசுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வரவர்களுக்கும் நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-25

தமிழகத்திலே துணைப் பதிவாளர் அலுவலகம் இல்லாத கோட்டமாக இருந்த பரமக்குடித் தொகுதிக்கு, உடனே துணைப் பதிவாளர் அலுவலகம் வழங்கிய உணவுத் துறை அமைச்சர் மற்றும் தமிழக முதல்வர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். கோட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்காக 1992-93 ஆம் ஆண்டு, கிட்டத்தட்ட 30 லட்சம் ரூபாய் வழங்கிய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பில் நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பரமக்குடி தொகுதியில் இட நெருக்கடி இருப்பதை அறிந்து பரமக்குடி தொகுதியில் அரசுப் பணியாளர்களுக்கு கட்டிடம் கட்டுவதற்கு கிட்டத்தட்ட 12.5 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்து,

[டாக்டர் எஸ். சுந்தரராஜ்] [1992 ஏப்ரல் 24

8 லட்சம் செலவில் குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.85 லட்சம் அனுமதி வழங்கிய வீட்டுவசதி வாரிய அமைச்சர் அவர்களுக்கும், தமிழக முதல்வர் அவர்களுக்கும், எனது சார்பிலும் தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம் கூட்டுறவு வங்கியை, மதுரையிலே இயங்கி வந்ததை மூன்றாகப் பிரித்து, பசும்பொன் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் காமராஜர் மாவட்டம் ஆகியவற்றிற்கு அந்தந்த தலைமை இடங்களிலேயே இயங்கு வதற்கு உத்தரவு வழங்கிட தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு எனது மாவட்ட மக்களின் சார்பிலே நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். முன்பெல்லாம் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று ஆராய்ந்து பார்த்து, ஆளுங்கட்சி தொகுதிக்கு மட்டும் செய்து தருகின்ற திட்டங் களை நிறைவேற்றிய முந்தைய ஆட்சியை, இப்போது அடியோடு ஒழித்து, எல்லா மக்களும், தமிழக மக்கள் எல் லோரும் முன்னேற வேண்டுமென்று, ஆளுங்கட்சி தொகுதி, எதிர்க்கட்சி தொகுதி என்று பாராமல், ஒன்றியத்திற்கு ஒரு கோடி என வழங்கி, அந்த ஒன்றியத்திலுள்ள சாலை வசதிகள் மற்றும் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு, ஒன்றியத் திற்கு ஒரு கோடி வழங்கிய தமிழக முதலமைச்சர் அவர்களை தமிழக மக்களின் சார்பாக பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன்.

மலிவுவிலை மதுவை அறவே ஒழித்து, அதைக் கட்டுப் படுத்துவதற்காக காவல்துறை சிறப்பாகப் பணியாற்றி வரு கிறது. இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் கிட்டத் தட்ட 75 ஆயிரம் மக்கள் தொகை இருக்கிறது. அந்த 75 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரே ஒரு நகரக் காவல் நிலையம் மட்டும்தான் இருக்கிறது. அந்தக் காவல் நிலையத் தில் கிட்டத்தட்ட 17 காவலர்கள்தான் பணியாற்றுகிறார்கள். ஆகவே, மக்கள் தொகைக்கேற்ப காவலர்களை உயர்த்தவோ அல்லது அதிகமான காவல் நிலையங்களை ஏற்படுத்தவோ வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர் களுக்கு நான் கோரிக்கையாக விடக் கடமைப்பட்டிருக் கிறேன்.

என்னுடைய இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், குடிப்பதற்கு தண்ணீர் கிடைக்கிற இடங்களைக் காட்டிலும், குடிநீர் கிடைக்காத இடங்கள்தான் அதிகமாக இருக்கிறது. என்னுடைய பரமக்குடி தொகுதியில் 3 ஒன்றி யங்கள் இருக்கின்றன. ஒன்று, நைனார்கோவில் ஒன்றியம், இரண்டு, போகலூர், மூன்று பரமக்குடி ஒன்றியம். நைனார் கோவில் ஒன்றியத்தில் சாத்தனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத் திற்கு என்று ஒரு 56 ஊர்களுக்கும், பொட்டவயல் கூட்டுக் குடி நீர்த் திட்டத்திற்கு என்று ஒரு 36 ஊர்களுக்கும் போடப் பட்டிருக்கிறது. பொட்டவயல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை



1992 ஏப்ரல் 24] [டாக்டர் எஸ். சுந்தரராஜ்]

36 ஊர்களுக்குப் போட்டாலும், ஒரே ஊருக்கு மட்டும்தான் தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. அதேபோல், சாத்தனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை 56 ஊர்களுக்குப் போட்டாலும், கிட்டத்தட்ட 7 ஊர்களுக்கு மட்டும்தான் தண்ணீர் கிடைக் கிறது. ஆகவே, கூட்டுக் குடிநீர்த் திட்டம் சரியாக செயல் படவில்லை. இதற்கு நிரூபணாதாரங்களே இல்லை. அது போன்று போகலூர் ஒன்றியத்தில், கே. கருங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், 36 ஊர்களுக்குப் போட்டது, ஒரே ஒரு ஊருக்குத்தான் பயன்படுகிறது. மற்றும் பொட்டிதட்டியி லிருந்து இராமநாதபுரம் தலைநகருக்குத் தண்ணீர் செல்கிறது. ஆனால், பொட்டிதட்டிக்கே தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. பரமக்குடி ஒன்றியத்தைப் பொறுத்தமட்டில், பரமக்குடியில் வேந்தோணி கூட்டுக் குடிநீர்த் திட்டம், கிட்டதட்ட 16 ஊர்களுக்குப் போட்டாலும் வேந்தோணி என்ற ஊருக்குக்கூட தண்ணீர் சப்ளை செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது. ஆகவே, கூட்டுக் குடிநீர்த் திட்டம் சரியாக செயல்படாத திட்டமாக இருக்கிறது. இதை எதற்காகக் கூறுகிறேன் என்றால், இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சியின் காரணமாக நிலத்தடி நீர் இல்லாமல் கீழே இறங்கிக் கொண்டே போகிறது. ஆகவே, உற்பத்தியைப் பெருக்கு வதற்கும், நீண்ட தொலைநோக்குப் பார்வையுடன் செயல் பட்டு வருகிற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், குடிநீர் இல்லாத கிராமங்களுக்கு, குடிநீர் கொடுக்கிற ஒரு திட்டமாக, நல்ல திட்டமாக நிறைவேற்றுவதற்கு, ஆறுகளை யெல்லாம் தேசியமயமாக்கி கங்கை-காவிரியை இணைப்பதன் மூலம், இப்பகுதியை நல்ல வளமிக்கப் பகுதியாக மாற்றவும், அதுபோன்று உபரியாக காவிரி நீர் ஆற்றின் மூலம், கடலில் கலக்கிற நீர், வைகையில் இணைக்கப்பட்டு, காவிரியை— வைகையை இணைப்பதற்கு திட்டமிட வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பம்பை ஆறு, அச்சன்கோவில் ஆறுகளை வைகையாற்றில் இணைப்பதன் மூலம் அப்பகுதியிலுள்ள குடிநீர் கிடைக்காத கிராமங்களுக்கு குடிநீர் கிடைக்குமென்று கேட்டுக் கொள் கிறேன். ரெயின் ஹார்வெஸ்டிங் என்ற ஒரு திட்டத்தின் மூலம் மழைக் காலங்களில் மழை நீரைத் தேக்கிவைத்து, அதன்மூலம் மழைக் காலங்களில் குடிநீருக்காவது பயன் படுத்துகிற திட்டத்தை, இராமநாதபுரம் மாவட்டத்தில் முக்கியமாக அமல்படுத்துவதற்கு இந்த வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், நிதி அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய கிராமங் களில் இப்பொழுது எங்கு பார்த்தாலும் ஆடு, மாடுகள் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, குளங்களை மராமத்துச் செய்து, மிகவும் ஆழப் படுத்தி, மழைக்காலங்களில் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்குத் திட்டமிட நான் இந்தச் சமயத்திலே கேட்டுக் கொள்கிறேன்,

பிற்பகல் 12-30

தொழிற்துறையில் எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டம் பின்னடைந்துள்ளது. கிட்டத்தட்ட 247 கி.மீ. நீளம் உள்ள கடல் பகுதியை எல்லையாகக் கொண்டுள்ளது. இறால் வளர்ப்பதற்கு நல்ல கடல் வளம் இருக்கிறது. ஆகவே, அந்த மாவட்ட மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், தொழில் ரீதியாக முன்னேறுவதற்காகவும், இறால் பண்ணைகளை அதிகமாக எங்கள் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தமட்டில், எங்களுடைய மாவட்டத்தில் பெண்களுக்கென்று கல்லூரிகளே கிடையாது. இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி பெரிய நகரமாக இருக்கிறது. அங்கே கல்லூரிகள் இல்லை. ஆகவே அத்தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான, கல்லூரிகளை ஆரம்பிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிட மக்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் வசிக்கின்ற குடியிருப்புகள் அடிப்படை வசதியின்றி, தண்ணீர் வசதியின்றி, ரோடு வசதியின்றி, மின்சார வசதியின்றி வாழ்கின்றார்கள். 20—11-1985 இல் முன்னாள் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆதி திராவிட மக்களுக்கு விடுதி கட்டுவதற்காக 28 இலட்சம் ரூபாய்க்கு அனுமதி வழங்கினார்கள். ஆனால், சிலர் கோர்ட்டுக்குச் சென்றதால் இன்னும் அந்தக் கட்டிடம் கட்டப்படாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, கூடிய சீக்கிரம் அந்தக் கட்டிடத்தைக் கட்டித்தர, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : 5 நிமிடத்திற்குள் முடித்து விடுகிறேன என்றீர்கள், முடியுங்கள்.

<u>டாக்டர் எஸ். சுந்தரராஜ்</u> : பொது விநியோகத்தைப் பொறுத்தமட்டில் அரசு மானியம் அதிகமாகப் பெற்று ரேஷன் கடைகளில் பொருட்களை வழங்குகிறார்கள். ஆனால் இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் பசும்பொன் மாவட்டத்தில் இருக்கின்ற ரேஷன் கடைகளுக்கான ஸ்பெஷல் ஆபீசர் அவர்கள் மதுரையில் இருக்கின்றார்கள். மதுரையில் இருக்கின்ற ஸ்பெஷல் ஆபீசர் அவர்களை இராமநாதபுரம் மாவட்டத்திற்கோ அல்லது பசும்பொன் மாவட்டம் சிவகெங்கைக்கோ மாற்றி, அடிக்கடி ரேஷன் கடைகளுக்கு வந்து சோதனையிடுமாறு செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அங்கே தவறுகள் நடக்காமல் இருப்





பதற்கான நிலையை ஏற்படுத்த முடியும். எனவே, அந்த எஸ்.ஓ; அலுவலகத்தை இராமநாதபுரத்திற்கோ அல்லது சிவகெங்கைக்கோ மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

மருத்துவமனையைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 75 ஆயிரம் ஜனத்தொகை இருந்தும் கூட 24 படுக்கை வசதிதான் இருக்கிறது. இராமநாதாபுரம் மாவட்டத்தின் பெரிய நகரமாகப் பரமக்குடி இருந்தும்கூட, போதிய வசதி இல்லாமல் மருத்துவமனை இருக்கிறது. ஸ்கேன் போன்ற வசதிகளை நிறுவவும், கண் மருத்துவம் மற்றும் இதர மருத்துவ வசதிகளை அங்கே நிறுவி அந்த மருத்துவமனையை உயர்த்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில். . , .(மணியடிக்கப்பெற்றது).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. த. க. இராதாகிருஷ்ணன், ஐந்து நிமிடங்களில் முடிக்கவும்.

<u>திரு. த. க. இராதாகிருஷ்ணன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவிற்கான ஆய்வில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது திருமங்கலம் தொகுதியின் தேவைகளைக் கோரிக்கைகளாக இந்த வாய்ப்பிலே எடுத்துரைக்க விரும்புகிறேன்.

திருமங்கலம் தாலூக்கா மருத்துவமனையில் ரத்தம் சேமித்து வைக்கக் கூடிய சூழ்நிலை அதாவது 'ப்ளட் பேங்க்' இல்லாமல் இருக்கிறது. அதைப் போல மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நிபுணர் இல்லாத சூழ்நிலை பல மாதங்களாக இருக்கிறது. ஆப்பரேஷன் தியேட்டருக்கு ஜெனரேட்டர் வசதி இல்லாமல் இருக்கிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுத்து, உடனடியாக ஒரு அறுவை சிகிச்சை நிபுணரை அந்த மருத்துவமனைக்கு பணி நியமனம் செய்ய வேண்டுமென்ற என்னுடைய வேண்டுகோளை விடுக்கிறேன்.

எங்கள் தொகுதி மக்களின் நெடுநாளையக் கோரிக்கையான அரசு ஓமியோபதி கல்லூரிக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யுமாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். இன்று அந்தக் கல்லூரி ஒரு உயர்நிலைப் பள்ளியின் கட்டிட அளவுதான் இருக்கிறது. ஒரு மருத்துவக் கல்லூரி நிலைக்கு வர வேண்டுமென்றால் உடனடியாக அதற்கு நில ஆர்ஜிதம் செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கிறேன்.

[திரு. த. க. இராதாகிருஷ்ணன்] [1992 ஏப்ரல் 24

முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியின்போது நிலையூர் கால்வாயைப் பதிவுக் கால்வாயாக மாற்றவும், அதை நீடித்து ஆவியூர் வரை சென்றடைய ஒரு திட்டத்திற்கான கருத்துரு இருந்தது. ஆனால் ஈராண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அதைக் கிடப்பில் போட்டு விட்டார்கள். இன்றிருக்கும் சூழ்நிலையில் மதுரை மாநகரைச் சுற்றியுள்ள பல கண்மாய்கள், ஆயக்கட்டுகள் வீட்டடி மனைகளாக மாற்றியமைக்கப்பட்ட காரணத்தால் வைகை ஆற்றின் ஆயக்கட்டுப் பரப்பு கணிசமாகக் குறைந்துள்ளது. புரட்சித் தலைவி அவர்கள் உயிர் மூச்சாகக் கருதுகிற இந்த மக்களின் நெடுநாளைய கனவு நனவாகும் வண்ணம், நிலையூர் கால்வாயைப் பதிவுக் கால்வாயாகவும், அதனை ஆவியூர் வரை நீட்டித்துத் தருமாறும் கேட்டுக் கொள்கிறேன். இந்தப் புதிய திட்டம் இப்போது மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் ஆய்வில் இருக்கிறது. அந்த ப்ரப்போஸலை சாங்ஷன் பண்ணி கூடிய விரைவில் அந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்குமாறு எனது வேண்டுகோளை விடுக்கிறேன்.

பிற்பகல் 12—35

சத்துணவு அமைப்பாளர்களைப் பொறுத்தவரையில் ஏதாவது குறை இருந்தால் அவர்களை மாறுதல் செய்யக்கூடிய அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருந்தது. ஆனால் இன்றைய சூழ்நிலையில் அந்த உத்தரவு ரத்து செய்யப்பட்டுள்ளது. அதை மீண்டும் மாற்றி அவ்வாறு மாறுதல் செய்யக் கூடிய அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கிற வகையில் உத்தரவிடுமாறு தாழ்மையுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு 20 உயர்நிலைப் பள்ளிகள் உருவாக்கப்பட இருப்பதாக இந்த நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எனது தொகுதியிலுள்ள வெள்ளூர் கிராமத்திற்கு ஒரு உயர்நிலைப் பள்ளி நிறுவ ஆணை பிறப்பிக்குமாறு மாண்புமிகு கல்வியமைச்சருக்குப் பேரவைத் தலைவரின் வாயிலாக என் வேண்டுகோளை விடுக்கிறேன்.

திருமங்கலம் சுற்றுப் பாதைத் திட்டம் இப்போது மத்திய அரசின் ஒப்புதலுக்காக டெல்லிக்கு அனுப்பப்பட்டுள்ளது. மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் திருமங்கலம் நகர மக்களின் நெடுங்காலக் கனவு நனவாகும் வண்ணம் மைய அரசை அணுகி கூடிய விரைவில் இந்த ஒப்புதலை வாங்கித் தருமாறு தாழ்மையுடன் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு பொதுவான பிரச்சினை. பல இளைஞர்கள் பல ஆண்டுகளாக வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிந்தும் ஒரு அழைப்பு கூட அவர்களுக்கு வராமல் அவர்களுடைய வயது வரம்பு கூட கடந்து விட்டது. இவ்வாறு அவர்களுடைய வயது வரம்பு கடந்து விட்டது என்ற காரணத்தைக் காட்டி



1992 ஏப்ரல் 24] [திரு. த. க. இராதாகிருஷ்ணன்]

பட்டியலிலிருந்து அவர்கள் பெயரை எடுத்துள்ளார்கள். இதனால் மிகவும் பாதிப்புக்குள்ளானவர்கள் ஃபார்வட் கம்யூனிட்டியைச் சேர்ந்தவர்கள் தான். ஆகவே வேலை வாய்ப்புக்குரிய வயது வரம்பை உயர்த்துமாறு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நான் வேண்டுகோள் விடுக்கிறேன்,

அதே போல் ஒரு பொதுவான பிரச்சினை. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் கல்லூரி மாணவ, மாணவிகள் போதை மருந்துப் பழக்கத்தில் சிக்கி அதனால் பலர் துன்புறுகின்றனர். இந்தப் பழக்கத்திலிருந்து அவர்கள் விடுபட நகரங்களில் டீ-அடிக்‌ஷன் சென்டர் நிறுவ வேண்டும் என்று தாழ்மையோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அதே போல பல நகரங்களில் மனம் மற்றும் உடல்நிலை குன்றிய குழந்தைகளுக்காக அதாவது ஸ்பாஸ்டிக் சில்ட்ரன்ஸ்-க்காக மையங்கள் அமைக்க வேண்டும், குறிப்பாக அதனை மதுரையில் அமைக்க வேண்டும் என்ற என்னுடைய தாழ்மையான வேண்டுகோளை வைக்கிறேன். இந்த அளவில் இந்த நிதி ஒதுக்க சட்ட முன் வடிவில் பேச எனக்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு குறித்து ஒருசில கருத்துக்களைக் கூற அனுமதி தந்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக இன்றைய தினம் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதி தேவைப்படுகிறது. இந்த நிதி மத்திய அரசிடமிருந்து கோரப்படுகிறது என்று பல திட்டங்களுக்குச் சொல்லப்படுகிறது. ஆனால் மத்திய அரசினுடைய நிலைமை இன்றைய தினம் உலக வங்கியின் நிர்ப்பந்தத்திற்குப் பணியக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டு அதனால் பல்வேறு திட்டங்களுக்கு ஒதுக்கக்கூடிய நிதியில் வெட்டு ஏற்படுகிறது. குறிப்பாகச் சொன்னால் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகையைப் பொறுத்த வரையில் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டு இருக்கிற நிதியில் 25 சதவீதம் வெட்டப்பட்டிருக்கிறது.

அது போன்று வேளாண்மை. அதனுடைய அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 25 சதவீதம் வெட்டப்பட்டிருக்கிறது. இதனுடைய விளைவாக கிராமப்புறத்தில் இருக்கிற மக்களின் நிலைமைகளைப் பாதுகாப்பதில் எதிர்காலத்தில் பல்வேறு சிரமங்கள் ஏற்படும். வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரையில் ஒரு புறத்தில் நீர்ப்பாசனம், இன்னொரு புறத்தில் உணவு உற்பத்தி செய்வதற்கான இடுபொருட்களை வழங்குதல். இந்த

அபிவிருத்திகளைப் பொறுத்தவரையில் எதிர்காலத்தில் ஒரு கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்படுகின்ற அத்தகைய சூழ்நிலை இருக்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது.

அதே போன்று, மத்தியிலே ஏற்றுமதி, இறக்குமதிக்குக் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நாம் மறுக்க முடியாது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே நம்முடைய திட்டத்திற்காக மத்திய அரசிடம் இருந்து எதிர்பார்ப்பது என்பது எந்த அளவுக்குச் சாத்தியமாக இருக்கும் என்பதைப் பரிசீலிக்க வேண்டியுள்ளது. அந்த வகையிலே தான் நம் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் தமிழக அரசு தங்களுக்கு என்று ஒரு பொருளாதாரக் கொள்கையை உருவாக்க வேண்டியிருக்கிறது. பொதுவாக புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரால் இன்றைக்கு அதிகமாக அனைத்துத் துறைகளையும் இன்றைய தினம் தனியாரிடம் விடுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படித் தனியாரிடம் தொழில்கள் மாறுகின்றபோது, இன்றைய தினம் அரசுத் துறையிலே இருக்கின்ற துறைகளும் கடுமையான நெருக்கடிக்கு ஆளாகி நிறுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும் என்பதைப் பரிசீலிக்க வேண்டும்.

பிற்பகல் 12-40

அதே போல தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில், இன்றைய தினம் நாட்டிலே பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. அப்படித் தொழிற்சாலைகளைத் திறப்பதற்குப் புதிய திட்டங்களை உருவாக்குவதற்குப் பதிலாக, இருக்கின்ற தொழிற்சாலைகளைத் தனியாரிடத்திலே ஒப்படைக்க வேண்டும் என்று இருப்பது எந்தவிதத்திலேயும் பொருத்தமானதாகாது. உதாரணத்திற்கு இப்போது நமது மாநிலத்திலே வெட்ட இருக்கின்ற நிலக்கரிச் சுரங்கத்தை ஒரு கூட்டுத் தொழிலாகத் தொடங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அது போன்று மின்சாரத் துறை. இதர தொழில் துறைகளும் அந்த நிலைமைக்குப் போகின்ற ஒரு அபாய நிலைமை இருக்கிறது. அதையும் எதிர் காலத்திலே பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

** என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இன்னமும் சொல்லப் போனால் கூட இன்னமும் பேரூராட்சி.......

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி எங்கே சொல்லியிருக்கிறது? ஒரு அரசும் சொல்லவில்லை எந்த அரசு சொல்லியிருக்கிறது? ** என்று சொல்கிறார்கள். அப்படி எல்லாம் இல்லை என்று அவர்கள் சொல்லச் சொல்லி இருக்கின்றார்கள். . He has made a categorical assurance. Both the Prime Minister.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, நீங்கள் சொல்லுங்கள். அவர் கேட்கிறார், **என்று மத்திய அரசு முடிவு செய்து இருக்கிறது என்று சொல்கின்றீர்களே, என்ன ஆதாரத்தில் சொல்கின்றீர்கள் ?

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: என்ன ஆதாரம் இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி நடந்து இருக்கிறதா என்றுதான் கேட்கிறார். சொல்லுங்கள். (குறுக்கீடு) அவர் சொல்லட்டும். (குறுக்கீடு) இல்லை, ** என்று நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள்.

திரு. வே. தம்புசாமி : பத்திரிகையிலே வந்த செய்திதான். நான் சொல்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பதில் சொல்லட்டும். அவரே சொல்லட்டும. (குறுக்கீடுகள்) அது வேறு. நிதி ஒதுக்கீட்டிலே, நம்முடைய பட்ஜெட்டிலே இவற்றிலே நிதி குறைந்திருக்கிறது என்று சொல்கிறார். அதைத்தான் அவர் சொல்கிறார். ** என்று சொல்வதற்குப் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) ஆதாரம் இல்லை என்றால் அந்தக் குற்றச்சாட்டை விட்டுவிடலாம். ** அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மிகப் பெரிய தொழிலாக இருக்கின்ற விவசாயத் தொழிலுக்கு வழங்கக் கூடிய மானியம், மானிய விலை, உர விலை உயர்ந்திருக்கிறது. அதற்கு வழங்கப்பட்டு இருக்கின்ற மானியம், விலை உயர்ந்திருக்கக் கூடிய ஒரு கால கட்டத்திலே வழங்கப்படாமல் இருந்திருக்கிறது. பின்னர் அது வழங்கப்பட்டிருக்கிறது. அது போன்று அரசைப் பொறுத்த வரையில் இன்றைய தினம் பல்வேறு துறைகளில் ஒப்பந்தப் பணியாளர்களாகப் பணிபுரிந்து வருகிறார்கள். அது போன்று ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் ஒப்பந்த ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். அந்த ஒப்பந்த ஆசிரியர்களை அரசு எதிர் காலத்திலே நிரந்தரம் ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று விவசாயத் துறைகளிலே, விவசாயப் பணிகளிலே ஒப்பந்தப் பணியாளர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை எதிர் காலத்திலே நிரந்தரம் ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல் மின் துறையில் இருக்கின்றார்கள். அது போன்று பொதுப் பணித்துறையில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் ஆக நீண்ட நெடுங்காலமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களை எதிர்காலத்திலே நிரந்தரம் ஆக்குவதற்கு அரசு கடுமையான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று, இன்றைய தினம் பல பணிகளிலே ஒப்பந்தத் தொழிலாளர்களாக பணிப் புரிந்தாலும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

குறைந்த சம்பளம் வழங்கப்படுகிறது. அவர்களுக்கும் விலைவாசி அடிப்படையிலே கணக்கிட்டு சம்பளம் வழங்கப்பட வேண்டும். இன்றைய தினம் பணியிலே இருப்பவர்கள் சம்பளம் போதவில்லை என்பதற்காக வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலிக்க வேண்டும். அதைப் போன்று மாதவரம் பால் பண்ணையிலே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். ஏறத்தாழ 4, 5 ஆண்டுகளாக அவர்கள் வேலை நிறுத்த நிலையில் இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலித்து, அவர்களை வேலையில் அமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் தமிழகத்திலே கடுமையான வறட்சி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகிறது. இந்த வறட்சியைப் போக்குவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி போதுமானதாக இல்லை. எனவே அந்த நிதியை மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கு மாநில அரசு கடுமையாக முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முக்கியமாக குடிநீர்த் தட்டுப்பாடு கடுமையாக ஏற்பட்டு இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில்கூட கிராமங்களிலே குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் காயிதேமில்லத் மாவட்டத்துனுடைய தலைநகரான நாகையிலேகூட குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டு, அதற்காகத் தகராறு ஏற்பட்டு, வழக்கு நடந்துகொண்டிருக்கிறது என்று பத்திரிகையில் செய்திகள் வருகின்றன. அதுபோல கிராமங்களில் இருக்கிற அனைத்துப் பகுதி மக்களுக்கும் குடிநீர் கிடைப்பதற்கு விரைவான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

பிற்பகல் 12-45

அடுத்து வறட்சி ஏற்படுகிறபோது கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் அல்லது உழைக்கக் கூடிய மக்களுக்கு வேலைக்கு ஒரு உத்தரவாதத்தை ஏற்படுத்த வேண்டும். அந்தக் கிராமங்களிலே இருக்கிற குளங்களை ஆழப் படுத்துதல், ஏரிகளை ஆழப்படுத்துதல், சாலைகளைப் பராமரிப்பது போன்ற அந்தத் திட்டங்களை நிறைவேற்றி, அவர்களுக்கு உணவு அளிக்கக்கூடிய திட்டத்தை அரசு விரைவாக உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று கிராமப்புறங்களிலே இருக்கிற விவசாயிகளுடைய பொருளாதார வளர்ச்சிக்குப் பல திட்டங்களை உருவாக்க வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையிலே முதலிலே நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு அல்லது நிலத்தைச் சாகுபடி செய்து கொண்டிருக்கிற குத்தகை விவசாயிகளுக்குத் தனியார் நிலங்கள் அல்லது பினாமி நிலங்களை எடுத்து அளிப்பது ஒருபுறம் இருந்தாலும், இன்றையதினம் கோவில் நிலங்கள், மடத்து நிலங்கள், டிரஸ்ட் நிலங்கள் என்று இருக்கின்ற நிலங்





களை எல்லாம் சாகுபடி செய்யக்கூடியவர்களுக்கு, அரசு அந்த நிலங்களை எடுத்து, அவர்களுக்கு வழங்குவதற்கு முன்முயற்சி எடுக்க வேண்டும். அதற்கான சட்டங்களைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று விவசாயிகள் வாங்கி இருக்கிற கடனை அரசு தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அது போல கூட்டுறவுத் துறையில் கடன் பெற்றவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதையும், ஜப்தி நடவடிக்கை எடுப்பதையும் நிறுத்த வேண்டும். அதைப்போல இலவசமாக வழங்கிக் கொண்டிருந்த மின்சாரத்தை நிறுத்தாமல் தொடர்ந்து வழங்க வேண்டும். இந்த மின்சாரம் பெற அவர்கள் முன்னுரிமை பெற வேண்டுமென்று சொன்னால், அதாவது இணைப்பு வேண்டுமென்று சொன்னால் 25,000 ரூபாய் கட்டினால்தான் இணைப்பு வழங்குவதற்கு அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று கூறப்படுகிறது. அதை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். அப்படி ரத்து செய்து, விரைவாக விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான துரித நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கால்நடை மருத்துவர்களாக இருக்கக்கூடியவர்களுக்கு அரசு மருத்துவமனைகளிலே பணியாற்றக்கூடிய மருத்துவர்கள் அளவுக்குச் சமமான ஊதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருவாரூர் நகரத்தில் இன்றைக்குக் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அந்தக் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்கு 65.5 இலட்சம் ரூபாய்க்கான திட்டம் உருவாக்கப்பட்டு, அதற்குச் சுழல் நிதி என்று ஏறத்தாழ ஒரு லட்சத்து முப்பத்தி நாலாயிரம் ரூபாய் நிதி வழங்கப்பட்டிருக்கிறது. அதை அரசு விரைவாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல திருவாரூர் நகர மக்கள் அங்கே ஒரு பெண்கள் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்று கோருகிறார்கள். அதை அரசு நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று கீவளூர் ஒன்றியத்திலே 42 கிராமங்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக ஏறத்தாழ 11 இலட்சத்திலே ஒரு திட்டம் உருவாக்கப்பட்டு, அது செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. அதை அரசு விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல திருவாரூரை மையமாகக் கொண்டு, அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலே நிலவாயு அதிகமாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அந்த வாயுவைப் பயன்படுத்தி, திருவாரூரை மையமாகக் கொண்டு ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு

பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல திருவாரூரை மையமாகக் கொண்டு ஒரு வேளாண்மை மண் பரிசோதனை நிலையத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று பொதுவாகத் திருவாரூர் நகரத்திலே சாக்கடை என்பது அதிகமாக இருக்கிறது. பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அங்கே நிறைவேற்ற வேண்டுமென்று அந்த மக்கள் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

பிற்பகல் 12-50

அடுத்து இன்றைய தினம் பத்திரிகைகள்மீது போட்டிருக்கிற வழக்குகளை அரசு பரிசீலனை பண்ணி, அந்தத் தாக்குதலைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போல சட்டம் ஒழுங்கு என்பதைப் பொறுத்தவரையில் தொடர்ந்து திருட்டுகள் அதிகமாக நடைபெறுகின்றன என்று பத்திரிகைகளிலே செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. மேலும் கற்பழிப்பு நிகழ்ச்சிகள் பற்றி செய்திகளும் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல லாக்கப்பிலே நடைபெறும் அந்தச் சாவைத் தடுப்பதற்கும் அரசு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி சாவு நடக்கும்போது சாதாரண ஊழியர்கள்மீது பழியைப் போட்டு, உயர் அதிகாரிகள் தப்பித்து விடுகிறார்கள். அதை எல்லாம் உடனடியாகக் கண்டுபிடித்து அரசு நடவடிக்கை எடுத்து, எதிர்காலத்தில் மக்களைப் பாதுகாக்க, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்க மசோதா மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க நான் விரும்புகிறேன். இந்த மன்றத்தில் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டபோது மாநிலத்தில் நிலவிய நிதி நெருக்கடி நிலைமை தொடர்ந்து நீடித்துக்கொண்டிருக்கிறது. இருப்பினும் சாதாரண மக்களின் நலனைக் கருத்திலே கொண்டு கூடுதலான நிதியை ஒதுக்குவதற்கு அரசாங்கம் முன் வந்திருக்கிறது. ஆண்டு தோறும் அரிசிக்கு வழங்கப்படும் மானியம் 340 கோடியிலிருந்து 400 கோடியாக உயர்கிறது. அரசு ஊழியர்களுக்குக் கூடுதல் ஊதியமும், அகவிலைப்படியும் கொடுக்கும் வகையிலே 11 கோடிக்கும் அதிகமாக நிதிச் சுமையை ஏற்க வேண்டி வந்திருக்கிறது. நமது சட்டப் பேரவையில் பணியாற்றும் தலைமை நிருபர்களுடைய ஊதியத்தை உயர்த்தி வழங்குவதற்கு அரசாங்





கம் முன் வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். அதேபோன்று கூடுதல் நிதிச் சுமை ஏற்பட்டாலும் பல்வேறு தரப்பினருடைய நலன் கருதி தாராள மனப்பான்மையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பது பாராட்டத்தக்கது.

தொழில் துறையைப் பொறுத்தவரையில் இங்கே எனக்கு முன்னாலே பேசிய என் நண்பர்கள், எதிர் வரிசையிலே இங்கே வீற்றிருக்கின்ற நண்பர்கள் நிறையச் சொன்னார்கள். இங்கே இருக்கிற மாநில அரசாங்கத்தினுடைய கொள்கை, மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கை தவறு என்று சுட்டிக் காட்டினார்கள். ஆனால், தொழில் துறையைப் பொறுத்தவரையில் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருப்பதைத் தொடர்ந்து பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அரசு மேற்கொண்டுள்ள உறுதியான நடவடிக்கைகளின் விளைவாக நீண்ட நாட்களாக மூடப்பட்டுக் கிடந்த ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற்சாலை திறக்கப்பட்டிருக்கிறது. தமிழக அரசு அதற்கான நிதி ஒதுக்கத்திற்குரிய ஏற்பாடுகளை விரைந்து செய்தது. முந்தைய அரசுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே இருந்த முட்டுக்கட்டை நிலை அகன்றது. ஆயிரக் கணக்கான தொழிலாளர்களுடைய வீடுகளில் அடுப்பு எரியவும், அவர்கள் உள்ளங்களில் மகிழ்ச்சி பொங்கவும் இந்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை மனம் திறந்து பாராட்டாமல் இருக்க முடியாது. அதைப்போல பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றும் பி அண்ட் சி மில் பல மாதங்களாக மூடிக் கிடந்தது. தொழிலாளர்கள் வறுமையில் வாடினார்கள். பலர் பட்டினியால் வாடியும், பிச்சை எடுத்தும், உயிர் விட்டும் — இப்படி சோக நிகழ்ச்சிகளைத் தொடர் கதையாகக் கொண்ட கொடிய நிகழ்ச்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர் நலன் கருதி நிர்வாகத்திற்கு நிர்ப்பந்தத்தைக் கொடுத்து ஆலை திறக்கப் பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு அரசாங்கம் கொடுத்திருந்த பல லட்சம் ரூபாய் கடன் தொகையைப் திருப்பித் தரத் தேவையில்லை என்று முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டு, பசித்த வயிற்றுக்குப் பால் வார்த்திருக்கிறார்கள். அதைப் போன்றே திருவொற்றியூரில் வேலை நிறுத்தத்தால் மூடிக் கிடந்த யூனிவர்சல் கார் பொராண்டம் நிறுவனம் அரசாங்கத்தின் தலையீட்டால் திறக்கப்பட்டு, அங்கே தொழில் அமைதி ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். இதற்கு முன்னால் அந்தப் பகுதியில் மூடப்பட்டுக் கிடந்த கே.சி.பி. நிறுவனத்தைத் திறப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. பொதுத் துறை நிறுவனங்களைப் பொறுத்தவரையில் மிகுந்த நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த தமிழ்நாடு சிறு தொழில் கழகத்தைச் சேர்ந்த சில தொழிற்சாலைகளைத் தனியார்களுக்கு விற்றுவிடுவதற்கு எடுத்த முயற்சியும், அதில் பணியாற்றும் தொழிலாளர்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் அவர்களுக்கு மறு பயிற்சியும், வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிற வகையில் முறை செ

மைப்பு நிதியத்தை உருவாக்கி இருப்பது வரவேற்கத்தக்கதாகும். அதற்கு மத்திய அரசிடமிருந்து 50 கோடி ரூபாய் நிதி உதவி கோரியிருப்பது நியாயமான கோரிக்கையாகும். அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மத்திய அரசை, இந்த மன்றத்தின் மூலம் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12.55

தமிழ்நாடு சிமின்ட் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரை, அதை ஒரு கூட்டுத்துறை நிறுவனமாக மாற்றும் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதை இங்குள்ள உறுப்பினர்களில் ஒன்றிரண்டு பேர் குறையாகக்கூட கூறினார்கள். அந்த நிறுவனம் இலாபத்தில் இயங்கி வருவதால் கூட்டுத் துறைக்கு மாற்றக் கூடாது என்றும் வாதிட்டார்கள். அண்மைக் காலமாக அந்த நிறுவனம் ஓரளவு இலாபத்தில் இயங்குவது உண்மை. ஆனால் ஓகோ என்று இலாபத்தில் இயங்கவில்லை என்பது அதைவிட உண்மை. தனியார் வசம் இருக்கும் இந்தியா சிமின்ட்ஸ், செட்டிநாடு சிமின்ட்ஸ், மெட்ராஸ் சிமின்ட்ஸ் போன்ற நிறுவனங்கள் எல்லாம் எந்த அளவுக்கு இலாபத்தில் இயங்குகின்றன என்பதை எடை போட்டுப் பார்த்து, நம்முடைய அரசுத் துறை நிறுவனமான 'டான்சம்' எப்படி இயங்கி வருகிறது என்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தால்தான் உண்மை நிலையை அறிய முடியும். அதிகார வர்க்கத்தை மட்டுமே நம்பி ஒப்படைக்கப்பட்டுள்ள அரசுத் துறை நிறுவனங்கள் பல்வேறு குறைபாடுகளுக்கு இலக்காகி இருக்கின்றன. மேல் மட்டத்தில் தேவைக்கு அதிகமான அதிகாரிகள் நியமனமும், கூடுதலான செலவினங்களும், உற்பத்தியில் அக்கறை இல்லாத போக்கும், ஊழல்களும் நமது அரசுத் துறை நிறுவனங்களை அரித்துக்கொண்டிருக்கின்றன. இவற்றைச் சீராக்குவதற்கும், சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்கும் தொழில் துறையில் அனுபவம், ஆற்றல் வாய்ந்த தொழில் முனைவர்கள் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. அதைப் பெறுகின்ற வகையில் தகுதி வாய்ந்த தனியாரையும் பங்காளியாகச் சேர்த்துக் கொண்டு செயல்படும் வகையில் அரசுத் துறை நிறுவனமான டான்சம் கூட்டுத்துறை நிறுவனமாக மாற்றப்பட்டிருக்கிறது.

நாம் வகுத்துள்ள புதிய பொருளாதாரக் கொள்கைக்கு ஏற்ப நமது தொழில்கள் போட்டியில் வெற்றிபெறக் கூடிய சக்தி படைத்தவையாக மாற்றப்பட வேண்டும். அதற்காக அரசாங்கத்தின் தயவில், நாட்டு மக்களின் வரிப் பணத்தில் சவலக் குழந்தையாகக் காலம் தள்ளும் நிலை அகற்றப்பட வேண்டும். அதற்காகவே மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் காப்பு வரி பெருமளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. லைசென்ஸ் வழங்கும் முறையும் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. நமது தொழில்கள் மற்ற நாடுகளின் தொழில்களோடு போட்டி போடும் அளவுக்கு வளர்க்கப்பட வேண்டும் என்பதை



வலியுறுத்தும்போது இங்குள்ள தொழில்கள் மட்டும் அதற்கு மாறுபட்டு இயங்க முடியாது. எனவே தான் அரசாங்கத்தின் தயவை நாடாமல் மற்ற தொழில்களுடன் போட்டி போட்டு வளரும் வகையில் தரத்தை உயர்த்தவும் நிர்வாகத்தைச் சீராக்கவும் வழி வகுப்பதற்காக டான்சம் கூட்டுத்துறை நிறுவனமாக மாற்றப்படுகிறது. அது சிறப்பாக இயங்கி, அதிகமான இலாபத்தை ஈட்டும்போது அரசாங்கம் அதில் போட்டுள்ள முதலீட்டைத் திரும்பப் பெற்று, வேறு புதிய தொழில்களைத் தொடங்க அந்த மூலதனத்தைப் பயன்படுத்தலாம். இது நாம் ஏற்றுக்கொண்டுள்ள கொள்கையின் அடிப்படையில் உரிய நேரத்தில் எடுக்கப்பட்டுள்ள சரியான முடிவாகும். இந்த முயற்சியை மற்ற பொதுத்துறை நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு பங்கு வகிக்கும் 'ஸ்பிக்' கூட்டுத்துறை நிறுவனத்தில் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. கூடுதலான நிர்வாகப் பொறுப்பும் பணிச் சுமையும் நிறைந்த தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், முதலமைச்சரின் தனிச் செயலாளர் போன்றவர்கள் எல்லாம் கூட்டுத்துறை நிறுவனங்களின் தலைவர்களாக ஆக்கப்பட்டார்கள். உள்துறைச் செயலாளர் ஏராளமான நிறுவனங்களுக்குத் தலைவராக ஆக்கப்பட்டார். இந்த அதிகாரிகளின் கீழ் செயல்படுவதற்கு எந்தத் தொழில் முனைவருக்கும் விருப்பம் இருக்காது; ஊக்கம் பிறக்காது. அதிகாரிகளுக்கும் தொழில் நிறுவனங்களை நிர்வகிக்கும் ஆற்றல் வந்துவிடாது. நிறுவனங்களின் மற்ற பங்குதாரர்களைக் கருத்தில் கொள்ளாமல் எடுக்கப்பட்ட அந்த முயற்சி கூடவே எதிர்ப்பைச் சந்திக்க நேர்ந்தது.

தமிழக அரசால் நிர்வாக இயக்குநர் என்று நியமிக்கப்பட்டு, 'ஸ்பிக்' நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட மாதவன் நாயர் என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி அந்தப் பொறுப்பை ஏற்க முடியாமலேயே திரும்ப நேரிட்டது. கம்பெனியின் பங்குதாரர்கள் அனைவரும் ஏகோபித்த குரலில் எதிர்ப்பு தெரிவித்ததே அதற்குக் காரணம். அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் எல்லா கூட்டுத்துறை நிறுவனங்களிலும் அரசு அதிகாரிகள் இயக்குநர்களாக இருந்து வருகிறார்கள். இந்த நிலையில் நிர்வாகத் தலைமைப் பொறுப்பையும் அரசு அதிகாரிகளிடம் ஒப்படைப்பது தற்கொலைப் பாதைக்கு ஒப்பாகும். அதை நன்றாக உணர்ந்து விருப்பு வெறுப்பு இல்லாத வகையில் இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். அதற்கு உள்நோக்கம் கற்பிக்கும் வகையில் இந்த அவையிலும் வெளியிலும் சிலர் குரல் எழுப்புவது வருந்தத்தக்கது.

இங்கே தொழில்களைத் தொடங்குவதற்கு, வெளிநாடுகளிலிருந்து மூலதனத்தை ஈர்ப்பதற்குப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. வெளி நாடுகளிலிருந்து

தங்கத்தைத் தாராளமாகக் கொண்டு வருவதற்கும், அதன் மூலம் கள்ளக்கடத்தல், விலையேற்றம் ஆகியவற்றைத் தடுப்பதற்கும் மத்திய அரசு முன்வந்திருக்கிறது. அதனால் தங்கம் தாராளமாகக் கொண்டு வருவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது; விலையும் குறைந்திருக்கிறது. இருந்தாலும் எதிர்பார்த்த அளவுக்கு இன்னும் பலன் ஏற்படவில்லை. தற்போது வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரும் தங்கத்திற்கு 15 சதவீதம் சுங்கவரி விதிக்கப்படுவதே இந்த நிச்சயமற்ற நிலைக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

பிற்பகல் 1.00.

எனவே தங்கத்தை தாராளமாகக் கொண்டுவர அனுமதிக்கிற அரசு அதற்குத் தடையாக 15 சதவிகித சுங்க வரியை இறுகப் பற்றிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. இதனை நீக்கி விடுமாறு இந்த மன்றத்தின் வாயிலாக மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத்திற்கு வருமானம் வர வேண்டும் என்பதற்காகத்தான் சுங்க வரி விதிக்கப்படுகிறது. ஆனால் வரி விதிக்கப்படுகிற காரணத்தாலேயே தங்கம் தாராளமாக வருவது தடைபடுகிறது. தங்கம் வராததால் வரி வருமானத்திற்கும் வழி இல்லாமல் போய்விடுகிறது. எனவே வருமானம் தராத வரியை வைத்துக் கொண்டிருப்பதைவிட அதனை ரத்து செய்து விட்டு தங்கம் தாராளமாக வருவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென மத்திய அரசை மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசின் நடவடிக்கைகளின் மூலம் நம்முடைய அன்னியச் செலாவணியின் கையிருப்பு ரூ. 15,000 கோடியை எட்டியிருக்கும் இந்தச் சூழ்நிலையில் தங்கத்தின் மீது விதிக்கப்படும் சுங்க வரியை நீக்குவதால் பங்கம் எதுவும் வந்துவிடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெளிநாட்டு மூலதனம் இங்கே வருவதற்குத் தடையாகக் கருதப்படுவது அதிகார வர்க்கமும், விதிமுறைகளும்தான். இந்த விதிமுறைகளை அகற்றுவதற்காகவும், அதிகார வர்க்கத்தின் பிடியைத் தளர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் ஜெர்மன் நாட்டு தொழிலதிபர்கள் மத்தியிலே பேசுகின்ற நேரத்தில் நம்முடைய பிரதமர் அவர்கள் வாக்குறுதியை அளித்திருக்கிறார்கள். அதே போன்று பல்வேறு தொழிலதிபர்களுக்கும் உறுதி அளிக்கப்பட்டு வருகிறது. அண்மையிலே சென்னையிலே ஒரு கருத்தரங்கில் பேசிய மத்திய அமைச்சர் திரு. பி. ஏ. சங்மா ஒரு தகவலை வெளியிட்டார். அவர் தூரகிழக்கு நாட்டிற்குப் போயிருந்த நேரத்தில் வர்த்தகப் பிரமுகர்கள் அடங்கிய கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார். அப்போது உங்கள் நாட்டிலேயிருந்து பெருமளவில் எண்ணெயை விலை கொடுத்து வாங்குவதற்கு நான் இங்கே வந்திருக்கிறேன் என்று அவர் கூறியிருக்கிறார். ஆனால் அங்கேயிருந்து யாரும் அதை வரவேற்காதது



அமைச்சருக்கு ஆச்சரியத்தை அளித்திருக்கிறது. அதற்கான காரணத்தை அவர் கேட்டபோது நீங்கள் வாங்குவது பெரிதல்ல. அதற்காக 50 பத்திரங்களில், பாரத்தை அச்சடித்து அதை நிரப்பச் சொல்லுவீர்கள். எங்களுக்கு அதற்கெல்லாம் நேரம் இல்லை என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதைவிட நாங்கள் வேறு நாடுகளோடு வர்த்தகம் செய்து கொள்வோம் என்று அவர்கள் கூறிவிட்டார்கள். அந்த அளவிற்கு வெளிநாட்டவர்களை மிரட்டுகிற வகையில் நம்முடைய விதிமுறைகளும், அதிகார வர்க்கத்தின் செயல்பாடுகளும் அமைந்திருக்கின்றன. எனவே அவற்றை மாற்றுவதற்காகத்தான் புதிய வர்த்தக கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது. அதை பின்பற்றியே இந்த அரசாங்கமும் அதிகார வர்க்கத்தின் பிடியிலிருந்து தொழில்களை விடுவிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. இத்தகைய தொழில் முனைவர்களுக்கு ஒரு நம்பிக்கையூட்டும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறது.

இந்திய நாட்டிலே ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை சமாளிக்கும் சக்தி மத்திய அரசுக்கு இல்லை என்ற கருத்து ஏற்பட்டதால்தான் 1990-91-ல் நாம் கடனை திருப்பிச் செலுத்துவதில் சிக்கல் ஏற்பட்டது. அன்றைய மத்திய அரசின் மீது ஏற்பட்ட அவநம்பிக்கையை போக்குவதற்காகத்தான் புதிதாக பொறுப்பேற்ற நரசிம்மராவ் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு நிலைமைகளை சீர்கிருத்தி நிமிர்ந்து நிற்கிறது. அதற்கு எல்லா வகையிலும் கை கொடுத்து மத்திய சர்க்காரை துரிதப்படுத்தும் வகையில் இந்த அரசு தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதை நான் வரவேற்கிறேன்.

இந்த அவையில் பேசும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். நாம் என்னதான் திட்டங்களை தீட்டினாலும் நிதி ஒதுக்கீடு செய்தாலும் அவை அடித்தளத்து மக்களை சென்று அடைவதில்லை என்று வேதனையோடு குறிப்பிட்டார்கள். அதற்குக் காரணமாக ஐ.ஏ.எஸ். போன்ற உயர் மட்ட அதிகாரிகளின் மனப்போக்கினை சுட்டிக் காட்டினார்கள். மேல் மட்டத்திலே மாத்திரமல்லாமல் அத்தகைய போக்கு கீழ் மட்டத்திலே நிலவுவதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். பல சின்ன சின்ன பிரச்சினைகள் என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அவற்றிலே சிலவற்றை நான் இந்த அவையிலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மதுரை மாவட்டத்திலே இராணிமங்கம்மாள் மகளிர் மன்றம் என்கிற அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த அமைப்பிலே விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், உடல் ஊனமுற்றோர், பொருளாதாரத்தில் நலிவுற்ற பெண்கள் கொண்ட அமைப்பாக அந்த அமைப்பு இருக்கிறது. அந்த அமைப்பு செயல்படத் துவங்கி மதுரையிலே இருக்கிற ஆட்சித் தலைவரிடத்திலே அவர்கள் அணுகி, வீட்டுமனைப்

பட்டாக்கள் வாங்கினார்கள். வீட்டுமனைப் பட்டாக்களில் வீடு கட்டுவதற்காக அவர்கள் ஏற்பாடு செய்து, 'ஹட்கோ'—விலிருந்தும் 'ரிச் அண்டு ரிச்' நிறுவனத்தின் மூலமாகவும் கடன் வாங்கி 50 வீடுகளை கட்டியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட வீடு ஒன்றுக்கு 13,000 ரூபாய் என்ற அளவிலே 150 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு ஆறு மாத காலம் ஆகிறது. ஆனால் அந்த வீடுகளில் இன்று வரை யாரும் குடியேறவில்லை. காரணம், லே அவுட் போட்டிருக்கிறார்கள். என்றாலும் தண்ணீர் வசதி கிடையாது; சாலை வசதி கிடையாது; மின் இணைப்பு வசதி கிடையாது. இதற்கு மின் இணைப்பு வேண்டும். சாலை வசதி வேண்டும் என்று அவர்கள் கேட்கிற நேரத்தில் அதற்குத் தேவையான சான்றிதழ்கள் வழங்க அதிகாரிகள் மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய ஆணையாளர், 'நோ அப்ஜக்ஷன்' சர்டிபிகேட் கொடுக்க முடியாது என்று சொல்லி இன்று வரை அங்கே எதுவும் நடைபெறாமல் அந்த வீடுகள் இன்றைய தினம் மோசமான நிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறது. அவற்றையெல்லாம் கவனிக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1.05

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோல பால் பெருக்கு திட்டத்தை அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். இது நீண்டகாலமாக இருக்கிற திட்டம் என்றாலும்கூட, புதிய ஊக்குவிப்பு திட்டங்களையும் அறிவித்து இருக்கிறார்கள். இதிலே ஒன்று calf rearing Scheme. நல்ல தரமுள்ள கன்றுகளை வளர்ப்பதற்கு என்றே அரசாங்கம் திட்டம் வைத்து இருக்கிறது. நல்ல தரமுள்ள கன்றுகளை வளர்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு ஒரு கன்றுக்கு 3 ஆயிரம் ரூபாய் கடன் கொடுக்கிறார்கள். இதிலே சிறு விவசாயி, குறு விவசாயிகளுக்கு மானியமாக 1,500 ரூபாயும் கடனாக 1,500 ரூபாயும் கொடுக்கிறார்கள். நிலம் இல்லாத விவசாயி என்று சொன்னால் 3,000 ரூபாயில் 2,000 ரூபாய் மானியமாகவும் வழங்கப்படுகிறது. இந்த தொகை முழுவதுமாக அவர்களுக்கு நேரடியாகக் கொடுக்கப்படுவது இல்லை. நாலாவது மாதத்திலே தொடங்கி, அவர்களுக்கு தீவனமாக, மாட்டுத் தீவனமாக வழங்கப்படுகிறது. சரி, முழுவதுமாக அந்த தொகை அவர்களுக்கு சென்று சேருகிறதா என்றால், இல்லை. 25—வது நாள் 27-வது நாள், 28-வது நாள் என்று எப்போது அதிகாரிகளுக்கு தோன்றுகிறதோ, திடீரென்று நிறுத்திவிடுகிறார்கள். நிலம் இல்லாத விவசாயிகளாக இருந்தாலும்சரி, சிறு விவசாயிகள் குறு விவசாயிகளாக இருந்தாலும்சரி பல பேருக்கு 300 ரூபாய், 400 ரூபாய் வரவேண்டிய பாக்கி நின்று





போய்விடுகிறது. அதை விட்டு விட்டு கடனைத் திருப்பி வசூலிக்க ஆரம்பிக்கிறார்கள். இப்படி என்னிடத்திலே கொடுக்கப்பட்டு இருக்கிற கணக்கின்படி கிட்டத்தட்ட 55 ஆயிரம் விவசாயிகளுக்கு சேர வேண்டிய 5 கோடி ரூபாய் அந்த இணையத்தினிடம் நிற்பதாக சொல்கிறார்கள். அந்தப் பணம் இணையத்தின் பணம் அல்ல. அரசின் பணம்; மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் சேர்ந்து மானியமாகக் கொடுக்கிற பணம். அந்தப் பணம் முழுவதுமாக அவர்களுக்கு எட்டுவதில்லை. அவைகளையெல்லாம் எட்டும்படி செய்ய வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பாலுக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென்று நான் இங்கே பேசி இருந்தேன். குறிப்பாக எருமைப் பாலுக்கு மட்டும் விலையை ஏற்றிவிட்டு இருக்கிறீர்கள். மாட்டுப் பாலுக்கும் சேர்த்து விலையை ஏற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு இருந்தேன். இன்றைய தினம் அதற்கு இடையிலே எருமைப் பாலுக்கு ஒரு ரூபாய் உயர்த்தப்பட்டும், கடந்த 2 நாட்களுக்கு முன்னாலே அமைச்சர் அவர்கள் இங்கே பேசுகின்ற நேரத்தில் மாட்டுப் பாலுக்கு 50 பைசா விலை உயர்த்தி இருக்கிறார்கள். ஆனால், இந்த தொகை போதுமானதா என்றால், நிச்சயமாக மாட்டுப் பாலை பொறுத்தவரை கட்டுப்படியாகாது என்று சொல்லுகிறார்கள். 1 கிலோ திடப் பொருளுக்கு குறைந்தபட்சம் எருமைப் பாலைப் பொறுத்தவரை 40 பைசாவிலிருந்து 47.7 பைசா வரை எருமைப் பாலுக்கு கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள். ஆனால், அதேநேரத்தில் இந்த விலைக்கு மாட்டு பாலுக்கு போட்டால் அது கிடைப்பது இல்லை. இப்போது ஒரு கிலோ திடப் பொருளுக்கு மாட்டுப் பாலுக்கு இன்று வரை தரப்பட்டுள்ள விலை ரூ. 32.50 பைசா. இப்போது விலை ஏற்றத்திற்கு பிறகு அது எவ்வளவு ஆகிறது என்றால் 36½ ரூபாய் ஆகிறது. ஆனால், அதிகாரிகளோடு பேச்சு வார்த்தை நடத்துகின்ற நேரத்தில் அவர்கள் 38 ரூபாய் வரை கொடுப்பதற்கு அவர்கள் தயாராக இருந்து இருக்கிறார்கள். இன்று அறிவிக்கப்பட்டு இருக்கிற விலை அதிகரிப்பு அதை விட குறைவாக இருக்கின்றன. 90 ரூபாய் இன்றைய தினம் எருமைப் பாலுக்கு தரப்படுகிறது என்று சொன்னால், அதிலே அந்த ரேஷியோபடி, விகிதாசாரப்படி மாட்டுப் பாலுக்கு ஒரு கிலோ திடப் பொருளுக்கு கொடுக்க வேண்டிய விலை 45 ரூபாய் 50 பைசா. அதிலே 8 ரூபாய் வித்தியாசம் வருகிறது. அந்த அளவுக்கு தராவிட்டாலும் கூட நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன், குறைந்தபட்சம் நமது அண்டை மாநிலங்கள் கொடுக்கின்ற விலையையாவது அவர்களுக்குத் தர வேண்டும். கேரளாவிலே, கர்நாடகாவிலே, ஆந்திராவிலே நம் விலையேற்றத்திற்குப் பின்னால் என்ன விலை தரப் போகிறோமோ அதைவிட அதிகமான விலை பால் உற்

பத்தியாளர்களுக்குத் தரப்படுகிறது. ரூ. 5.20, ரூ. 5.10, ரூ. 5.51 என்று ஒவ்வொரு மாநிலத்திலேயும் தருகிறார்கள். இங்கே இந்த விலைவாசிப்படி அவர்களுக்கு உரிய விலை கிடைக்காது. ஏனென்றால் அத்தனை பேருக்கும் ரூ. 4.20 கொடுக்கப்போவது இல்லை. அத்தனை பேர் ஊற்றுகின்ற பாலிலேயும் 4 சதவீத கொழுப்புச் சத்து இருக்காது. எனவே, அந்த 36 ரூபாய் என்பதை—44 ரூபாய் வேண்டுமென்று உற்பத்தியாளர்கள் கேட்கிறார்கள். ரூ. 44.50 ஏற்றிக் கொடுப் பீர்களேயானால், நான் மகிழ்ச்சியடைவேன். அதை குறைந்த பட்சம் 40 ரூபாய் 50 பைசாவாகவாவது உயர்த்த வேண்டு மென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல விவசாய கடனுக்காக ஜப்தி நடவடிக்கை மேற் கொள்ளப்படுகின்றன. அரசாங்கத்தினுடைய கொள்கையை பல்வேறு நேரங்களிலே இங்கே தெளிவாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அரசாங்கத்தினுடைய அறிவிப்புகளுக்கு மாறாக ஜப்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்குக் காரணம் அதிகாரிகள் உதாசீனம் செய்வதுதான் என்பதை என்னாலே இங்கே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

அந்த அதிகாரிகள் எல்லாம் முறையாக அறிவுறுத்தப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்றைய தினம் தமிழகத்தினுடைய பல்வேறு மாவட்டங்களில் கடு மையான தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. கடுமையான குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அங்கெல்லாம் போர்க் கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஆனால் மேற்கொள்ளப்பட்டிருக்கிற நடவடிக்கை போதுமான தாக இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள் கிறேன். குறிப்பாக இங்கே ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக் கிறார்கள். அமைத்ததற்குப் பிறகு அதிலே குழாய் அமைப் பதற்கு மாதக்கணக்கிலே எடுத்துக் கொள்கிறார்கள். குழாய் இருக்கிறது. இருக்கிற குழாய் பழுதுபட்டால் அதை பழுது பார்ப்பதற்கு பல நாட்கள், பல மாதங்கள் எடுத்துக்கொள் கிறார்கள். இதுபோன்ற நிலைமைகளையெல்லாம்—ஹேண்ட் பம்ப் ரிப்பேர் செய்வது, அல்லது மோட்டார்களை சரி செய் வது இவைகளையெல்லாம் போர்க்கால அடிப்படையில் மேற் கொள்ள வேண்டும். அதிகாரிகளிடத்தில் கொஞ்சம் கடுமையாக எச்சரித்து வேலை வாங்குவதற்கு அரசாங்கம் முன் வர வேண்டு மென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

அதைப்போல தமிழ்நாடு சத்துணவு ஊழியர்கள் சங்கம்— அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை அரசினிடத்தில் கொடுத் திருக்கிறார்கள். நான் முழுவதுமாக இங்கே பேச வேண்டிய





அவசியம் இல்லையென்றாலும் கூட, குறைந்த பட்சமாக அவர்களுடைய கோரிக்கைகளையாவது நீங்கள் கவனிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மதிப்பூதியம், தொகுப்பூதியம் என்ற பெயரால் 220 ரூபாய், 105 ரூபாய், 65 ரூபாய், 225 ரூபாய் என்றெல்லாம் கொடுப் பதற்குப் பதிலாக, அவர்களுக்கு ஓரளவுக்கு நியாயமான ஊதியம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக அவர்களைப் பொறுத்த வரையில் பல வேறு வேலைகளுக்கும் அவர்களை ஈடுபடுத்து கிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். பலமுறை பல உறுப் பினர்கள் இந்த அவையிலே எடுத்துப் பேசியிருக்கிறார்கள். குடும்பக் கட்டுப்பாடு சான்றிதழ் வாங்கி வர வேண்டும்— குறைந்தபட்சம் ஒரு நபரிடத்திலேயாவது குடும்ப கட்டுப்பாடுச் சான்றிதழ் வாங்கி வரவேண்டுமென்று அவர்கள் நிர்ப்பந்திக்கப்படு வதாக இங்கே பல உறுப்பினர்கள் குற்றம் சுமத்தி இருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

5 <u>மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி</u> : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அப்படி சான்றிதழ் வாங்கிக் கொண்டு வரவேண்டுமென்று எங்கே கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை குறிப்பாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர் கள் தருவாரானால் தகுந்த நடவடிக்கையெடுக்கப்படும். இது வரையில் அப்படி சொல்கிறார்களே தவிர தகுந்த ஆதாரங் கள் எங்கள் கையில் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்</u> : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, என்னிடத்தில் ஆதாரம் இருக்கிறது. நான் தனியாகத் தருகிறேன். முதலமைச்சரிடத்திலே தரு கிறேன். உங்களிடத்திலே தருகிறேன். இந்த அவையில் பேசி, அதற்கு ஒரு விளம்பரம் வர வேண்டுமென்று நான் கருதவில்லை. அதைச் சொல்ல வேண்டாம் என்று தான் அப்படி சொன்னேன். நேரடியாக ஊராட்சி ஒன்றிய ஆணையர்களிடமிருந்து பிறப்பிக் கப்பட்ட உத்தரவுகள், ஆணைகள் என்னிடத்தில் இருக்கின்றன. ஒரிஜினல் என்னிடத்தில் இருக்கிறது. உங்களிடத்தில் தருகிறேன், முதலமைச்சரிடத்தில் தருகிறேன். அதிலே நடவடிக்கை எடுப் பீர்களானால் எனக்குப் போதுமானது. அதிலே எதுவும் விளம்பரம் தேடவேண்டுமென்ற நோக்கத்தோடு சொல்லவில்லை. அப்படி சொல்ல வேண்டுமென்றால், பெயரையெல்லாம் சொல்லி விடு வேன். நிச்சயமாக நான் அதை செய்ய மாட்டேன். அதற்கு அவசியமும் இல்லை. அது போன்ற பணிகளுக்கு அவர்களைப் பயன்படுத்தக்கூடாது என்பது தான் என்னுடைய—நாம் இங்கே எடுத்திருக்கிற நோக்கமே தவிர வேறல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரத்தினுடைய அடிப்படையில் அவர்களையெல்லாம் வற்புறுத்தி, கட்டாயம் குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று சொல்வது தவறு. அப்படி ஏதாவது இருக்குமானால் தக்க நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் நாட்டின நலன் கருதி அவரவர்கள் தாங்களாகவே சென்று, நாம் வற்புறுத்த வேண்டிய அவசியத்திற்கு இடமில்லாத அளவுக்கு, அவர்கள் எல்லாம் உணர்ந்து, புரிந்து, தெரிந்து இந்தப் பணிகளை மேற்கொள்வார்களானால் அவர்கள் மிக மிகப் பாராட்டிற்குரியவர்களாக இருப்பார்கள். இந்தப் பணியைச் செய்வார்கள். செய்ய வேண்டுமென்று நாம் விரும்புவதில் தவறில்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை, குடும்ப நலத் திட்டத்தை நான் முழுக்க முழுக்க ஏற்றுக்கொள்பவன். அவரோடு சேர்ந்து வேண்டுமானால் நானும் அதற்கு பிரச்சாரம் செய்ய தயாராக இருக்கிறேன். இதுபோன்று தவறான அணுகுமுறைகள் வேண்டாம் என்று தான் சொன்னேனே தவிர வேறு கிடையாது.

அதேபோல ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரிஸ்—இன்றையதினம் நிறைய மூடப்படுவதாக செய்திகள் வருகின்றன. அதற்கு என்ன காரணம் என்று கண்டறிய முழுமையாக விசாரிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அதிகாரிகள் அதிலுள்ள சிரமங்களை புரிந்து உதவ முன் வர வேண்டும். பாக்கி வசூலில் கண்டிப்பு காட்டுவதில் கண்ணாக இருக்கிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் 105 தாலுக்காக்கள் பின் தங்கிய தாலுக்காக்களாகவும், மிகவும் பின்தங்கிய தாலுக்காக்களாகவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் தாலுக்காக்களில் அமைகிற தொழிற்சாலைகளுக்கு மூலதன மானியம் விற்பனை வரிச்சலுகை. மின்சாரமானியம் என்று அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இவைகள் தெளிவாக அரசாணையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எந்த அளவுக்கு அவர்களுக்கு மானியம் கிடைக்கும் என்றெல்லாம் குறிப்பிட்டு இருக்கிறோம்.

பிற்பகல் 1.15

குறிப்பாக விற்பனை வரி என்று எடுத்துக் கொண்டால்,5 ஆண்டுக்காலத்திற்கு முழுவதுமாக அவர்களுக்கு விற்பனை வரிச்சலுகைகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. 'டெபரல் பேமென்ட்' என்று



ஒப்புக்கொண்டால், 9 ஆண்டுக்காலத்திற்கு அவர்களுக்கு அந்தச் சலுகைகள் விரிவுப்படுத்தப்பட்டு இருக்கின்றன. 9 ஆண்டுக் காலம் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று இதிலே இருக்கிறது. ஆனால் இதிலே இருக்கிற ஒரு குறை என்னவென்றால் அந்தத் தொழிற்சாலை ஆரம்பித்த ஓர் ஆண்டுக்காலத்திற்கு உள்ளாக, அரசாங்கத்திற்கு விண்ணப்பித்து இருக்கவேண்டும். அதற்குப் பின்னாலே விண்ணப்பிப்பவர்களுக்கு அந்தச் சலுகை கிடையாது என்று அதிகாரிகள் கைவிரித்துவிடுகிறார்கள். ஏதேனும் ஒரு காரணத்தாலே, 15 நாட்கள், 1 மாதம், 2 மாதம் என்று காலம் கடந்துவிடுவதாலேயே, அவர்களுக்கு அந்தச் சலுகைகள் கொடுப்பதில்லை என்று சொல்வது முறையாக இருக்காது. ஏன் என்றால், பழைய தொழிற்சாலையாக இருந்து, அதிலே கூடுதல் மூலதனம் போடப்பட்டு இருக்குமானால், அவர்களுக்கும் இந்தச் சலுகை பொருந்தும் என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது. ஆணையிலே தெளிவாக இருக்கிறது. பழைய தொழிற்சாலைக்கே பொருந்தும் என்று சொல்லும்போது, புதிதாக துவங்கப்பட்ட தொழிற்சாலைக்கு, 15 நாட்கள், 1 மாதம், 2 மாதம் என்கிற காரணத்தாலே, இந்தச் சலுகைகள் பொருந்தாது என்று சொல்வது முறையாக இருக்காது.

குறிப்பாக தி. மு. க. ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரத்தில் இது போன்ற தவறுகள் நிறைய நடைபெற்று இருக்கின்றன. 1989-லே இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிற காரணத்தாலே, ஏதேனும் ஒரு காரணத்தாலே, சில மாதங்கள் தவறிப்போய் இருந்தாலும் கூட, அவர்களுக்கு இந்தச் சலுகை கிடைக்கச் செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தை நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதாக நண்பர்கள் சொன்னார்கள். நான் திறந்ததொழிற்சாலையைப்பற்றி மட்டும் இங்கே எடுத்துச் சொன்னேன். மூடப்பட்டு இருக்கிற தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், மேட்டூர் டெக்ஸ்டைல் மில்லைப் பொறுத்தவரையில், காலையிலே காங்கிரஸ் கட்சியினுடைய துணைத்தலைவர், டேனியல்ராஜ் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். திருப்பியும் அதை நான் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. இன்றையதினம் திறக்கப்பட்டு இருந்தாலும் கூட, அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வேலை தரப்படவில்லை. ஒரு ஷிப்டுக்கு 170 பேர்களுக்குத்தான் வேலை தரப்படுகிறது. அது ஒரு பெரிய தொழிற்சாலை, 29,688 நூற்புக் கதிர்களுடன், 654 தறிகளுடன் Bleaching processing printing அனைத்தும் கொண்ட, ஒரு பெரிய டெக்ஸ்டைல் மில்லாக இருக்கிறது. அதை முழுமையாக இயங்கச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், மேட்டூரிலே இருக்கிற மால்கோ தொழிற்சாலை, நான் சென்ற முறை பேசும்போதே சொன்னேன். அதை மூடிவிட்டிருக்கிறார்கள், அதைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக் கொண்டேன். யார் நடத்துவது என்பது பெரிதல்ல. இருக்கிற நிர்வாகம் நடத்துவதற்குத் தயாராக இருந்தால், அவர்கள் நடத்தட்டும். இல்லாவிட்டால் அரசாங்கமே ஏற்று நடத்தட்டும். அதுவும் இல்லை என்று சொன்னால், யார் நடத்தத் தயாராக இருக்கிறார்களோ, யார் நடத்த முன் வருகிறார்களோ, அவர்களுக்கு நாம் தரவேண்டும் என்று அன்றையதினம் கேட்டுக்கொண்டேன். இன்றையதினம் முழுமையாக லாக்—அவுட்டை அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் பல சலுகைகளை முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்திருக்கிறார்கள். அந்தச் சலுகைகளை எல்லாம் பயன்படுத்திக் கொண்டு, அந்தத் தொழிற்சாலையைத் திறக்கவேண்டும் என்பது நம்முடைய குறிக்கோளாக இருக்கிறது. ஆனால் தொழிலாளர்கள் உள்ளபடியே பயப்படுகிறார்கள். திறப்பார்களா என்று அச்சம் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். திறக்க மாட்டார்கள் என்று பயப்படுகிறார்கள். அந்த நிலைமை ஏற்பட்டுவிடாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும் என்று நான் பணிவன்போடு அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், நம்முடைய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களுடைய தொகுதியிலே இருக்கிற ஒரு நூற்பாலை, 5½ கோடி ரூபாய் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டு இருந்த, அந்த நூற்பாலையை ஒரு புதிய நிர்வாகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அவர்கள் இன்று வரையில் ஒரு கோடி ரூபாய்க்கு மேலே அதிலே மூலதனம் போட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். கிராஜுவிட்டிக்காக மட்டும், தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட தொகை மட்டும் 30 லட்சம் ரூபாய் செலவழித்திருப்பதாகச் சொல்கிறார்கள். பெருமளவிலே செலவு செய்திருக்கிறார்கள். இருக்கிற 17,500 ஸ்பின்டிலை 22 ஆயிரம் ஸ்பின்டிலாக மாற்றியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். என்றாலும் கச்சாப் பொருட்களுடைய விலையேற்றத்தின் காரணமாக, பருத்தி விலையேற்றத்தின் காரணமாக, இன்றையதினம் அதைத் தொடர்ந்து நடத்துவது சிரமமாக இருக்கும் என்கிற நிலையிலே அது இயங்கிக் கொண்டு இருப்பதாகச் சொல்கிறார்கள். இது போன்ற நிலைமை ஏற்பட்டுவிடாமல், இதுபோன்ற தொழிற்சாலைகளுக்கு எல்லாம் கொஞ்சம் நலிவுற்று இருக்கிற தொழிற்சாலைகளுக்குத் தரப்படுகிற மானியங்களைத் தரமுன்வர வேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், கோயில் பாதுகாப்புப் படை அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். உள்ளபடியே வரவேற்கத்தக்க ஒரு நல்லமுயற்சி. அனைவருமே வரவேற்கவேண்டும். ஏனென்றால் இன்றையதினம் சிலையைத் திருடிக் கொண்டு போய்விட்டார்கள். கடவுளை திருடிக்கொண்டு போய்விடுகிறார்கள் என்று எங்கே பார்த்தாலும் புகாராக இருந்த



கொண்டு இருக்கிறது. ஆனால் அதற்காக 10 சதவிதம் கோயில் நிர்வாகங்கள் தரவேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதைத்தருவதற்கு சிரமமாக இருக்கும் என்று அந்த நிர்வாகங்கள் எல்லாம், சம்பந்தப்பட்ட பெரியவர்கள், சன்னிதானங்கள் எல்லாம் சொல்கிறார்கள். அவர்கள் ஏற்கனவே 14 சதவீதம் சகாயத் தொகையைக் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். தணிக்கைக் கட்டணமாக 1 சதவீதமாக, 1½ சதவீதமாக இருந்த தணிக்கைக் கட்டணம், இன்றையதினம் 3 சதவீதத்திலிருந்து 3½ சதவீதமாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. நில வரி, வீட்டுவரி, என்று 10 சதவீதம் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். இதிலே அரசினுடைய காவல் படை என்பதை இன்று 10 சதவிகிதம் என்று இருந்தால் நாளையதினம் கோரிக்கை வைப்பார்கள். சம்பளம் போதாது என்று சொல்வார்கள். அதிகமான ஊதியம் வேண்டுமென்று கேட்பார்கள். அதிகமான ஊதியம் கொடுக்கின்ற நேரத்திலே........

பிற்பகல் 1.20

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கத்தைக் கூற விரும்புகிறேன். கோயில் நிர்வாகங்கள் ஆடிட் பீசுக்காக ஒரு குறிப்பிட்ட தொகையை செலுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பது. It is only on paper அவர்கள் செலுத்த வேண்டும். ஆனால் பல ஆண்டுகளாகச் செலுத்தவில்லை. அந்த ஹெட்டிங் கீழே, அந்தத் தலைப்பின்கீழே, ஏறத்தாழ (I don't have the correct fighers with me at the moment. I believe, nearly, 14 கோடி ரூபாய் இன்னும் அரசுக்கு வரவேண்டியுள்ளது. எனவே இந்தப் பணிகளை எல்லாம் (in actual practice) நடைமுறையில், அரசாங்கமே ஏற்று, அரசாங்கம் தான் செலவு செய்து கொண்டிருக்கிறது. They are supposed to pay audit fees. But, they are anable to pay audit fees. எனவே அவர்களுடைய நிலைமையைப் புரிந்துகொண்டு, கோயில்களின் நலிந்த நிலையைப் புரிந்துகொண்டு, அரசாங்கம் இதற்காக எந்தப் பணியையும் தடைபட அனுமதிப்பதில்லை. கோயில்கள் செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்தினாலும், செலுத்தவிட்டாலும் அரசாங்கமே அந்தச் செலவையும் ஏற்றுக் கொண்டு அந்தப் பணிகள் தொய்வு இல்லாமல் நடக்கும்படி பார்த்துக்கொள்கிறது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி. என்றாலும் கொடுக்க முடியாத நிலையில் கொடுக்காமல் இருப்பார்கள். கொடுக்க முடியாதவர்கள் எல்லாம் கொடுக்க வேண்டுமென்று என்னிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். அதைப் போல வேறு செலவுகளையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் ஏன் இதை சொல்கிறேன் என்றால் கோயில் பாதுகாப்புப்

படைகளைப் பொறுத்தவரையில் ஓரளவு அரசே ஏற்றுக்கொள்ளலாம் என்று நான் நினைக்கிறேன். அது எந்த அளவு சாத்தியம் என்று பிறகு அவர்கள் முடிவு சொல்லட்டும். நான் அவசரப்படவில்லை. ஆனால் அதேநேரத்தில் அவர்களுக்கு வருமானம் வருவதற்கும் நாம் ஏதாவது வழி தேடலாம் என்று நான் நினைக்கிறேன். குறிப்பாக, கோயில்களில் 100 தென்னை மரம் வைத்துக் கொடுத்து, மின் இணைப்பும் கொடுத்துவிட்டால் 5 வருஷம் கழித்து குறைந்தபட்சம் அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கும். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எல்லா கோயில்களிலும் மூன்றாவது பிரகாரத்தில் ஏராளமாக இடம் இருக்கிறது. எந்தக் கோயிலில் வேண்டுமானாலும் 100 தென்னை மட்டுமல்ல, இன்னும்கூட வைக்க முடியும். ஆகவே, அவர்களுக்கு மாதந்தோறும் ஒரு 5 ஆயிரம் ரூபாய் வருமானம் வருகிறது என்றால், பஞ்சப்பாட்டு இல்லாமல் அவர்களுடைய காரியங்கள் நல்லபடியாக நடப்பதற்கு வழி பிறக்கும் என்று நான் கருதுகிறேன்.

அதுபோல தமிழக அரசினுடைய நிர்வாகத்தின் கீழே 11 மருத்துவக் கல்லூரிகளும், 7 பட்ட மேற்படிப்பு நிலையங்களும் உள்ளன. மருத்துவ அறிவியல் இளநிலை, முதுநிலை மற்றும் மூதுநிலை சிறப்புப் பாடம் பயிலும் மாணவர்களும், மருத்துவ ஆராய்ச்சியாளர்களும், மருத்துவப் பேராசிரியர்களும், மருத்துவ நூலகங்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மனித சமுதாயத்தினுடைய உயிர் காக்கும் செய்திகளை வெளிநாட்டு 'பருவ இதழ்கள்' வெளிப்படுத்துவதால் அரசு ஆண்டுதோறும் அதற்காக செலவு செய்துகொண்டிருக்கிறது. ஆனால் இவ்வாறு செலவு செய்தாலும்கூட அவர்கள் அந்தப் புத்தகங்களை முழுமையாக பாதுகாப்பதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறதா என்றால் இல்லையென்ற தகவலை சொல்கிறார்கள். அங்கே அந்தப் புத்தகங்களை வைப்பதற்கு அலமாரிகள் வாங்கப்படவில்லை. 10 ஆண்டுகளாக என்று சொல்கிறார்கள். அப்புத்தகங்களைப் பராமரிக்க பல மருத்துவ நிலையங்களில் அடிப்படை ஊழியர்கள் கூட நியமிக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். புத்தகங்களைப் பகுக்கவும், நூல் விவரப்பட்டி தயாரிக்கவும் லைப்ரரி அசிஸ்டென்ட்ஸ் நூலக உதவியாளர்கள், நியமிக்கப்படவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். பல கல்லூரிகளில் இரண்டு மூன்று உதவி நூலகர் பதவிகள் உள்ளனவேயொழிய நூலகத்தின் பல்வேறு பணிகளைக் கண்காணிக்கும் நூலகர்கள் பதவிகள் உருவாக்கப்படவில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். இதுபோன்ற நிலைமைகளை எல்லாம் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மருத்துவக் கல்லூரி நூலகங்களினுடைய தரத்தை மேம்படுத்துவது குறித்து, இந்திய மருத்துவக் குழு பல பரிந்துரைகளை செய்திருக்கிறது. அதன்படி மருத்துவக் கல்லூரிகளினுடைய நூலகத்திற்கு துறை தகுதி வழங்க வேண்டுமென்று பரிந்துரை





செய்திருக்கிறார்கள். அது சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். அதற்கு துறை தகுதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில் கலைக் கல்லூரி, சட்டக் கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி நூலகர்களை ஆசிரியர்களுக்கு இணையாக, அதாவது காலேஜ் லெச்சரர்ஸ்க்கு இணையாக நடத்துவதுடன், 16 ஆண்டுகள் பணி முடிந்தவுடன் பேராசிரியர்களுக்கு இணையாக தகுதி வழங்கி அவர்களுக்கு உள்ளதைபோல மருத்துவக் கல்லூரி நூலகர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

மேலும் விலை உயர்ந்த புத்தகங்களையும். பருவ இதழ்களையும் பராமரிக்க அடிப்படை ஊழியர் இல்லாத இடங்களில் அடிப்படை ஊழியர் பதவிகளையும், அனைத்துக் கல்லூரி நூலகங்களிலுமுள்ள புத்தகங்களைப் பகுக்கவும், நூல் விவரப்பட்டி தயாரிக்கவும் அவர்களுக்கு உதவியாளர் பதவிகள் உருவாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

நூலகர் பதவி இல்லாத மருத்துவக் கல்லூரிகளில் உள்ள உதவி நூலகர்கள் பதவிகளை நிலை உயர்த்தி அவர்களை நூலகர்களாக மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்,

பிற்பகல் 1–25

அதேபோல, நம்முடைய சட்டப்பேரவையிலே பணிபுரியும் நிருபர்கள் சிறப்பாக பணி புரிந்துக் கொண்டிருக்கிறார்கள், கொஞ்சம் கஷ்டமான வேலையும் கூட, நாம் எவ்வளவு வேகமாகப் பேசினாலும், அதே வேகத்தில் அவர்கள் எடுத்தாக வேண்டும், கொஞ்சம் குறைகள் தவறுகள் இருந்தால் நாம் அவர்களிடத்திலே கொஞ்சம் கடுமையாகக் கூட நடந்து கொள்வது உண்டு. அவர்களை நான் உள்ளபடியே மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன், அவர்கள் காலையிலேயும் மாலையிலேயும் குறிப்பு எடுத்து, நாம் கேட்ட மாத்திரத்தில், எந்த நேரத்தில் வேண்டுமானாலும் கேட்கிறோம், எப்போது கேட்டாலும் கொடுத்து விடுகிறார்கள், காலையிலே பேசியதை மாலைக்குள்ளேயே கொடுத்து விடுகிறார்கள், மாலையிலே பேசியதை அடுத்த நாள் காலையிலே அவர்கள் கொடுத்து விடுகிறார்கள், ஒரே வேளை இங்கே இல்லை என்றால் ஏன் இல்லை என்று அழைத்துக் கேட்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம். அவர்கள் அந்த அளவுக்குச் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள், அவர்களுடைய தலைமை நிருபர்களுக்கு, நேற்றைய தினம் ஊதிய உயர்வு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய சிறப்பான பணி புரியும் அவர்களுக்கு அரசு செயலாளர்களது

நேர்முகச் செயலாளருக்கு வழங்கப்படும் சிறப்பூதியம் ரூபாய் 140 மற்றும் சிறப்பு அலவன்ஸ் ரூ. 100 ஆகிய இரண்டையும் வழங்க வேண்டும். இது சம்பள குழுவினுடைய அனாமலி என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதைக் கனிவோடு பரிசீலிக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, கால்நடை மருந்தகங்கள் 400 புதிதாக துவங்கப் பட இருப்பதாக அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். அந்த 400 கால்நடை மருந்தகங்களிலும் இன்றையதினம் படித்த பட்டதாரிகள் 300 பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அதிலே 35 பேர் பெண்கள் என்று சொல்லுகிறார்கள்—நீங்கள் அதிலே பிரிவு அலுவலர்களை முழுக்க கொண்டு வந்து போடு வதை விட, இங்கே வேலை இல்லாமல் இருக்கக்கூடிய படித்த பட்டதாரிகளை முழுவதாக உங்களால் எடுத்துக் கொள்ள முடியா விட்டாலும் அதிலே பாதியாவது படித்த வேலையில்லாமல் இருக்கக் கூடிய பட்டதாரிகளை எடுத்துக் கொள்ள வேண்டும். மற்றவர்களில் வேண்டுமானால் அலுவலர்களையே நீங்கள் கொண்டு வரலாம் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

நான் நிதிநிலை அறிக்கையிலே பேசுகிறபோதே அப்போதே சொன்னேன். இந்த நிலத்திற்கு விதிக்கப்பட்டிருக்கிற வரி, சர் சார்ஜ் லேண்ட் செஸ் இரண்டுமே அதிகம். கிராமப்புறங்களில் இருப்பவர்கள் கொஞ்சம் சிரமப்படுவார்கள் என்று சொன்னேன். அதிலே லோக்கல் செஸ் என்பது முன்பு 45 பைசாவாக இருந்தது. இன்றையதினம் 1 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. லோக்கல் செஸ்-சினுடைய சர்ச்சார்ஜ் 2 1/2 ரூபாயிலிருந்து 10 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. உதாரணமாக, என்னிடத்திலே எல்லா புள்ளி விவரங்களும் இல்லாவிட்டாலும் கூட எங்கள் பகுதியைப் பொறுத்தவரையிலே, என்னிடத்திலே இருக்கும் ஓரிரு புள்ளி விவரங்களை நான் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக பரம்பிக் குளம்—ஆளியாறு பாசன திட்டத்தைப் பற்றி உங்களுக்கு தெரியும். அதிகப்படியான புகார்கள் எழுப்பப்படுகிற திட்டம், இந்த பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம் காரணம், அதிலே அஷ்யூர்டு இர்ரிகேஷன் கிடையாது. ஆண்டுதோறும் இன்ன தேதியிலே தண்ணீர் வரும், இன்ன தேதியிலே மூடுவார்கள் என்று சொல்ல முடியாது. சரியாக நல்ல மழை பெய்து அணைகள் நிறைந்து இருந்தால் 1 1/2 ஆண்டுகளுக்கு ஒரு முறை 3 மண்டலங்களிலேயும தண்ணீர் வரும், அதுவும் ஏதாவது ஒரு மண்டலத்தில் தண்ணீர் திறந்து இருக்கும்போது எங்கள் ஊரிலே தண்ணீர் இல்லை என்று சொன்ன உடனே, அங்கே திறந்து விட்டால் இங்கே தண்ணீர் வராது. பல நேரங்களிலே பயிர்கள் காய்ந்துவிடக் கூடும். இந்த ஆண்டுகூட அது போன்ற நிலைமைகள் எல்லாம் நடை பெற்றிருக்கிறது. பலபேர் கடலையைப் போட்டவர்கள் இன்னும் கடலையை எடுக்க முடியாமல் இருக்கிறார்கள். தென்னை மரங்கள் சில பகுதிகளிலே காய்ந்து கொண்டிருக்கின்றன. மக்காச்சோளம





முழுவதுமாக காய்ந்து விட்ட பகுதிகள் உண்டு. இந்த நிலைமை கள் எல்லாம் இருக்கிறது. இன்னும் 2, 3 நாட்களிலே தான் முறையாக தண்ணீர் வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர் கள் அங்கே காய்ந்து கொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இன்றைக்கு இருக்கிற தண்ணீர் ஆதாரங்கள் நெருக்கடியான சூழ்நிலையிலே இருந்தாலும் கூட—தென்னை மரங்களுக்கு உயிர் தண்ணீர் விடவேண்டும் என்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கோரிக்கை வைத்தபோது, பிரச்சினை கடுமையாக இருந்தாலும் அவைகளைக் கருதிப் பார்க் காமல். இன்றையதினம் தண்ணீர் விட்டிருக்கிறார்கள், என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடலைக்கு கூட மேற்கொண்டு 15 நாளைக்கு தண்ணீர்விட வேண்டும் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்லிய போது 15 ஆம் தேதி வரை வேண்டும் என்று கேட்டார்கள். அதை 8 ஆம் தேதி வரை நீடித்துத் தர வேண்டும் என்று கேட்டார்கள். இந்த அரசு அதற்கு ஒப்புதல் கொடுத் திருக்கிறது. ஆகவே தண்ணீர் இல்லை என்று எதிர்க்கட்சி தலைவர் கூட என்னிடத்திலே தொலைபேசியிலே சொன்னார்கள். ஆக பிரச்சினைகள் இருக்குமானால் என்னிடத்திலே சில இடங் களிலே குறிப்பிட்டு எழுத்து மூலமாக தெரிவிக்கலாம், மொத்தமாக குற்றச்சாட்டு தண்ணீர் இல்லை என்று சொல்லக் கூடாது என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

திரு. எஸ், ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே குற்றச்சாட்டு கிடையாது. நான் இந்த பாசனத் திட்டம் எப்படி செயல்படுகிறது என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இப்படி நடந்தது என்று சொன் னேன். குற்றச்சாட்டு என்பதற்கே இடம் இல்லை. இல்லாத தண்ணீர் நான் சொன்னால் மட்டும் வந்துவிடுமா என்ன? எனவே சென்ற ஆண்டுதான் பத்தாண்டு காலத்திற்குப் பின்னாலே முதல் முறையாக பரம்பிக்குளம் அணை நிரம்பியது. அப்படி இருந்தும் கூட இந்த ஆண்டே எவ்வளவு தட்டுப்பாடு? இதை எதற்காக சொல்ல வந்தேன் என்றால் வரிவிதிப்பிலே இருக்கிற நிலைமையை சொல்ல வந்தேன். அமைச்சர் அவர்கள், நான் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, 15 நாட்களுக்கு தண்ணீரை நீட்டித்து தருவதாக சொல்லியிருக்கிறார்கள். நான் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1.30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : தலைவர் அவர்களே, அதுமட்டுமல்லாமல் என்னுடைய தொகுதி என்றுகூட நான் சொல்ல மாட்டேன். தொகுதி என்று நான் பேசுவது முறையாக இருக்காது. பெரியார் மாவட்டத்திலே இருக்கின்ற தாராபுரம் தாலுக்காவில்—தாராபுரம் தாலுக்கா என்றாலே எப்படி இருக்கும் என்று உங்களுக்குத் தெரியும். அதிலும் குறிப்பாக மிக மிக வறட்சியான பகுதி என்று எடுத்துக்கொள்வீர்களானால் குண்டடம் ஒன்றியம், குண்டடம் வட்டாரம், தண்ணீர் என்பதைப் பார்ப்பதே சிரமம். அங்கேயும் இந்த பாசனத்திலே பயனடுத்து கிறார்கள். அங்கேயும் விரிவாக்கப்பட்ட பகுதி இருக்கிறது. விரிவாக்கப்பட்ட பகுதிக்கு இந்த ஆண்டு தண்ணீர் விடவில்லை. அதை நான் சொல்லவில்லை. ஆனால் அங்கே தண்ணீர் தட்டுப்பாடு மிகக் கடுமையாக இருக்கிறது. இந்த நேரத்தில் சொல்லிவிட்டால் அதற்கும் அமைச்சர் அவர்கள் நல்ல முடிவு சொல்வார்கள் என்று நினைக்கிறேன். நான் முன்பே அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறேன. இப்போதும் அருள்கூர்ந்து கேட்கிறேன். குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது என்னுடைய தொகுதி என்றாலும்கூட, இன்னொரு சட்டப்பேரவை உறுப்பினர் இங்கே வீற்றிருக்கின்ற உறுப்பினருடைய சொந்த ஒன்றியம் அது. சொந்த ஊர் அங்கேதான் இருக்கிறது. அவருடைய ஊருக்குக்கூட தண்ணீர் பாயாது. அந்த இடத்திற்கு தண்ணீர் விட வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொண்டேன். அதிகாரிகளிடத்திலும் கேட்டுக்கொண்டேன். விடுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். விடுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. கண்டிப்பாக குளம் குட்டைகளுக்கு-குடிதண்ணீருக்காக தண்ணீர் விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இந்த தென்னை மரத்தை பொறுத்தவரையில் அங்கே ஏக்கர் ஒன்றுக்கு 30 ரூபாய் என்று போடுகிறார்கள். 30 ரூபாயும். லோக்கல் செஸ் பழையபடி போட்டால் 88 ரூபாய் வருகிறது. அதிலே அந்த 30 ரூபாயையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். 118 ரூபாய் வருகிறது. ஆனால் இன்றைய நிலை என்னவென்று சொன்னால் 30 ரூபாயை 2.95-லே பெருக்குவதற்குப் பதிலாக 30 ரூபாயை 11 ரூபாயாலே பெருக்க வேண்டும். லோக்கல் செஸ் 1 ரூபாய். லோக்கல் செஸ் சர்ச்சார்ஜ் 10 ரூபாய். ஆக 30-ஐ 11-ஆலே பெருக்கினால் 330. 330 ப்ளஸ் 30— 360 ரூபாய் ஆகிறது. இந்த ஆண்டு இவ்வளவு பெரிய தொகையை அந்தப் பகுதியிலே வாழ்கின்ற விவசாயிகளாலே கட்ட முடியுமா என்றால் நிச்சயமாகக் கட்ட முடியாது. தொகை மிகவும் அதிகம்.





எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புக்கொண்டால்கூட நிதியமைச்சர் அவர்கள் கொஞ்சம் தயங்கக் கூடும். அவர்களிடத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அருள்கூர்ந்து அதைக் குறைக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல தி.மு.க. ஆட்சிக்கு வருகின்ற வரை இங்கேயிருந்த நிலைமை கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களுக்கு கன்வேயன்ஸ் டீட் மூலம் உரிமை மாற்றம் செய்யும் மனைகட்டு முத்திரைத்தாள் தீர்வையிலிருந்து விலக்கு இருந்தது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே கடந்த இரண்டு ஆண்டுக் காலத்திற்குள்ளாக அதற்கு முத்திரைத்தாள் வாங்க வேண்டும் என்ற நிலையை உருவாக்கி இருக்கிறார்கள். அந்த விதி விலக்கு இப்போது இல்லை. எனவே மீண்டும் முன்பு போலவே கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் தங்களுடைய உறுப்பினர்களுக்கு கன்வேயன்ஸ் டீட் மூலம் உரிமை மாற்றம் செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் நான இரண்டு அமைச்சர்களையும் முன்பு ஒரு முறை சந்தித்து சொன்னேன். அவர்களும் ஓரளவிற்கு நடவடிக்கை எடுத்தார்கள் என்றாலும் கூட கோயம்பத்தூர் போஸ்ட் ஸ்டாஃப் கோ-ஆப்பரேட்டிவ் ரெசிடென்சியல் வெல்ஃபேர் அசோசியேஷன் அங்கிருக்கின்ற அஞ்சலக ஊழியர்கள் எல்லாம் மிகுந்த ஆர்வத்தோடு அதிலே சேர்ந்தார்கள். அதிலே 2, 3 பேர்கள் அதற்குச் சம்பந்தம் இல்லாதவர்கள் அதிலே சேர்ந்து கொண்டு அங்கே பல தவறுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இரண்டு அமைச்சர்களுக்கும் அது தெரியும். இரண்டு பேரும் ஓரளவிற்கு விசாரித்தும் இருக்கிறார்கள். மீண்டும் அவர்கள் அந்தச் சங்கத்திலே இருக்கின்ற உறுப்பினர்களை மிரட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதிலே தீர விசாரித்து அவர்களுடைய பிடியிலிருந்து அடியோடு அவர்களைக் காப்பாற்றி அவர்களுடைய கஷ்டங்களைத் தீர்க்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல இன்னொன்று. அம்பேத்கார் நூற்றாண்டு விழா ஆண்டாக இந்த ஆண்டு இருக்கிறது. இந்த ஆண்டிலே அம்பேத்காருடைய நினைவாக பல நல்ல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. தாழ்த்தப்பட்ட மக்களிலே ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களிலே தொழில் முனைவோர் மிகவும் குறைவு. தொழில் துவங்க வேண்டும் என்று அவர்கள் விண்ணப்பித்தாலும், ஓரளவிற்கு நடுத்தர தொழில் அல்லது பெரிய தொழில் என்று விண்ணப்பித்தால் அவர்களைப் போதுமான அளவிற்கு ஊக்குவிப்பதில்லை என்று புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷனாக இருந்தாலும் சரி அல்லது வேறு நிதி நிறுவன

மாக இருந்தாலும் சரி நான் மாண்புமித முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, அப்படி எவ்வளவு பேரிடத்திலிருந்து மனுக்கள் பெறப்பட்டு இருக்கிறது, அவர்களிலே எத்தனை பேருக்குக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் கொஞ்சம் கண்காணிக்க வேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல நேற்றையதினம் மாண்புமிகு அவை முன்னவர்கள் சட்டப் பேரவைஉறுப்பினர்களுக்குப் புதிய விடுதி கட்டப் போகிறோம் எனறு சொன்னார்கள். நானஅதை வரவேற்கிறேன். அதேபோல பேரவைக்கு ஒரு புதிய கட்டிடமும் கட்டவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நீண்ட நாட்களாக இது நிலுவையில் இருக்கிறது. ஏன் என்றால் அடுத்து 'டீ லிமிடேஷன் கமிட்டி' வருகின்ற நேரத்திலே ஒரு வேளை ஒரு மக்களவைத் தொகுதிக்கு 6 சட்டமன்ற உறுப்பினர்கள் என்பதற்குப் பதிலாக 7 சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று வந்தால் இந்த அவையில் உட்காருவதற்குக்கூட இடம் இல்லை. இன்னும் கொஞ்சம் அதிக வசதிகளோடு நம்மைவிட சின்ன மாநிலங்கள் எல்லாம் நம்மைவிட அழகான, வசதியான பேரவை மண்டபத்தை இன்றைக்கு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இங்கேயும் ஒரு புதிய பேரவை மண்டபம் கட்டவேண்டும் என்று எம். ஜி. ஆர். அவர்கள் காலத்திலே முயற்சிகள் நடைபெற்றன. அந்த முயற்சிகளை மீண்டும் தொடர்ந்து நீங்கள் எடுத்து புதிய பேரவை மண்டபம் கட்டவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–35

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு அவை முன்னவர்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ஒரு சட்டமன்றம் வசதியாகவும் வாய்ப்பாகவும் பலபேர்கள் கொள்ளத்தக்க அளவுக்கு அமைக்கவேண்டுமென்று கொள்கைக் குறிப்பை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே அதுபற்றிப் பேசியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உரிய துறையினரை அதற்கான இடத்தையும், இந்த வளாகத்திலேயே தேர்ந்தெடுக்கலாமா அல்லது வேறு வளாகத்தில் தேர்ந்தெடுக்கலாமா, வேறு இடத்திலே என்பதை ஆராயவும் சொல்லியிருக்கிறார்கள். ஏன் என்றால் அடுத்து கூடுகின்றபோது ஒவ்வொரு தொகுதிலேயும் 1½ லட்சம், 2 லட்சம், 3 லட்சம் என்ற அளவுக்குக் கூட வாக்காளப் பெருமக்கள் பெருகிவிடுவதன் காரணமாக பல தொகுதிகளைப் பிரிக்க வேண்டிய அவசியம் வருகிறது. நாடாளுமன்றத் தொகுதியினுடைய எண்ணிக்கையை நாம் குறைக்க முடியாது. கூட்டவும் முடியாது. ஆனால் ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு 6 சட்டமன்றத் தொகுதிகள் என்று இப்போது இருப்பதை 7-ஆகவும் ஆக்கலாம், 8—ஆகவும் ஆக்கலாம், 9 ஆகவும் ஆக்கலாம். அது நம்முடைய விருப்பமும், மத்திய அரசினுடைய



ஒப்புதலையும் பொறுத்து இருக்கிறது. அப்படி 7 சட்டமன்ற உறுப்பினர்கள், 8 சட்டமன்ற உறுப்பினர்கள் என்று ஆகின்றபோது நமக்கு இந்த அவை போதாது, இந்தக் கட்டிடம் போதாது. அதை எல்லாம் மனதிலே வைத்துத் தான் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம். ஒரே ஆண்டில் இல்லாவிட்டாலும், 2, 3 ஆண்டுகளிலாவது கட்டிமுடிப்பதற்கான ஒரு முயற்சியை மேற்கொள்ளலாம் என்ற கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வெளியிட்டு இருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு முதலமைச்சர்

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி ஏற்கெனவே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடமும், தலைமைச் செயலாளர் அவர்களிடமும் நான் விவாதித்து இருக்கிறேன். ஒரு firm Project Report தயாரித்து விட்டு பிறகு அதனை இந்தச் சட்டமன்றத்திலே அறிவிக்கலாம் என்று இருந்தேன். ஆனால் இப்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தக் கோரிக்கையை எழுப்பியுள்ளதால் என்ன எண்ணியிருக்கிறோம் என்பதை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒரு புதிய சட்டமன்றப் பேரவைக் கட்டிடம் கட்ட எண்ணியுள்ளோம் என்பதைச் சொன்னார்கள். அது வெறும் சட்டமன்றக் கட்டிடமாக மட்டும் இருக்காது. நான் நினைத்துள்ளது, ஒரு புதிய 'செகரட்டேரியட் காம்ப்ளக்ஸ்' கட்ட வேண்டும் என்று. அதாவது பெங்களூரிலுள்ள விதான் சௌதா அதனை மிஞ்சுகின்ற அளவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) அதைவிடச் சிறப்பாக, பிரம்மாண்டமான முறையில் புதிய தொரு வளாகத்தையே ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய நோக்கமாகும். அதற்கான இடத்தைத் தேர்வு செய்கின்ற பணி ஏற்கெனவே தொடங்கிவிட்டது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு பாராட்டையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். நீண்ட நாளைய ஒரு கோரிக்கையாக, நீண்ட நாளைய எண்ணமாக இங்கே இருக்கின்ற சட்டப்பேரவை உறுப்பினர்களின் எண்ணத்தை இன்றையதினம் நான் விரைவிலே செய்து முடிப்பேன் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்று, சட்டப்பேரவை உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் நீண்டகாலமாக நாம் இங்கே பலமுறை பேசிக்கொண்டிருக்கிற பிரச்சினை இங்கே இருக்கின்ற பல உறுப்பினர்களுக்கு 2 மாவட்டங்கள் அடங்கிய தொகுதிகள் இருக்கின்றன. உதாரணமாக திருவாடனை என்று எடுத்துக்கொண்டால் பசும்பொன் மாவட்டத்திலே அந்தத் தொகுதி அடங்கும். இராமநாதபுரம் மாவட்டத்திலும் அந்தத் தொகுதி அடங்கும். அதேபோல் இளையாங்குடி, கோவில்பட்டி, தாராபுரம், பொங்களூர் போன்ற பல தொகுதிகளை அடுக்கிக்கொண்டே போகலாம். ஒரு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேதான் ஒரு உறுப்பினர் கலந்துகொள்ள முடியும் என்கிற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. நான் தொடர்ந்து சென்ற சட்டப்பேரவையிலும் எழுப்பியிருக்கிறேன். முந்தைய ஆட்சிக் காலத்திலும் எழுப்பியிருக்கிறேன். அதிலே அப்போதே குறுக்கே நின்றவர் வருவாய்த் துறை அமைச்சர். இப்போது அவர் குறுக்கே நிற்க மாட்டார் என்று நினைக்கிறேன். அந்த வருவாய்த் துறை அமைச்சர் கொஞ்சம் குறுக்கே நின்றார். (குறுக்கீடு) உங்களைச் சொல்லவில்லை, நான் அவரைச் சொன்னேன். அதிலே சட்டப்பேரவைத் தலைவருக்கே கொஞ்சம் அவருக்கே நடக்கவேண்டும் என்ற ஆசை இருந்த காரணத்தால் அவருடைய தொகுதி 2 மாவட்டங்களில் இடம் பெற்று இருந்தது. (குறுக்கீடு) அன்றைய சட்டப் பேரவைத் தலைவர்.....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தற்போது இரண்டு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலும் இன்றைய சட்ட மன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்வதற்கு வாய்ப்பு அளிக்கப் பட்டிருக்கிறது.

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :</u> தலைவர் அவர்களே, அப்படி இல்லை. இப்போது என்ன நிலைமை என்றால் ஒரு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே கலந்து கொள்ளலாம் உறுப்பினராக. இன்னொரு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொள்ளலாம். அதிலே தீர்மானங்கள் கொடுக்க முடியாது. பேசலாம். பொதுப் பிரச்சினைகளைப் பேசலாம். அதிகாரிகள் என்ன சொல்லுவார்கள், எழுதிக்கொள்கிறோம், குறித்துக் கொள்கிறோம் என்று சொல்வார்கள். இதை முன்னாலேயே தீர்மானமாக அனுப்பியிருந்தால், அதற்குப் பதில் வரும். இதிலே பதில் வராது. எனவே, இரண்டு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலேயும் கலந்து கொள்வதற்கு எவ்வளவு விரைவிலே சட்டம் கொண்டுவர முடியுமோ, கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதில், மாற்றி மாற்றி சொல்லிக்கொண்டு இருப்பதாக நண்பர்கள் என்னிடத்திலே சொல்கிறார்கள். ஒரு நேரத்திலே சட்டத் துறை அமைச்சர்





அதற்குப் பொறுப்பு என்கிறார்கள். இன்னொரு நேரத்தில் லோக்கல் அட்மினிஸ்ட்ரேஷன் அமைச்சர் அதைச் செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். இன்னொரு நேரத்திலே வருவாய்த் துறை அமைச்சர் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் இதிலே யார் பொறுப்பாக இருந்தாலும் இனியும் காலதாமதம் இல்லாமல் அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று, இரண்டு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலேயும் சட்டப் பேரவை உறுப்பினர்கள் முழுமையான உறுப்பினர் என்ற அந்தஸ்த்தோடு கலந்து கொள்ள முடியும் என்கிற நிலைமையை உருவாக்கித் தரவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1–40

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு நிதி அமைச்சர்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுவது போன்று இப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கின்றன. இந்தச் சங்கடங்களை நிரந்தரமாகத் தீர்க்கவேண்டுமானால் தொகுதி வரையறுப்புக் குழு வந்ததற்குப்பிறகுதான், டீ–லிமிட்டேஷன் கமிட்டி அமைத்ததற்குப் பிறகுதான் இதைச் செய்யமுடியும். ஆனால் இப்போது ஒரு வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே கலந்துகொள்வதற்குத்தான் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. வாக்களிக்க உரிமை இருக்கிறது. மற்ற ஒன்றில் இல்லை என்று குறிப்பிட்டார்கள். அதை அரசு ஆணைகள் மூலம், சட்டத் துறையைக் கலந்துகொண்டு, அரசு ஆணையின் மூலமாகவே அதை நிறைவேற்றி, இரண்டு கூட்டங்களிலும் கலந்து கொள்ள உரிமை உண்டு என்று ஆக்க முடியும் என்று சொன்னால் அதற்கான ஆணையைப் பிறப்பிக்கலாம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய சார்பிலே நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொரு முக்கியமான பிரச்சினை, சென்னை நகரத்திலே நீண்ட நாட்களாக இருக்கின்ற நேரு விளையாட்டு அரங்கம் இன்றையதினம் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. அந்தப் பகுதியிலே, அதைச்சுற்றி வாழ்ந்துகொண்டிருந்த மக்களையெல்லாம் வெளியேற்றி இருக்கிறார்கள். அந்த மக்களுக்கு

மணலி சாலையிலே கொடுங்கையூர் பகுதியிலே வீடுகள் கட்டித் தயாராக இருப்பதாகச் சொல்கிறார்கள். அவர்களை அங்கே குடியமர்த்த முடியுமா என்று பார்த்து, முடிந்தால் அவர்களை அங்கே குடியமர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

கல்விக் கொள்கையைப் பொறுத்தவரையில், அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பாராட்டத்தக்க அளவுக்கு அமைந்து இருக்கின்றன. உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் 'பி' பிரிவு ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் களையப்பட்டு இருக்கின்றன. அதற்கு முழுக்க முழுக்க காரணமாக அமைந்திருக்கும் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களுக்குப் பலரும் நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதி இருக்கிறார்கள்.

பல்கலைக் கழகங்களின் நிர்வாகத்தைச் சீர்திருத்துகின்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்திற்குத் துணை வேந்தரை நியமிக்க துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நல்ல அனுபவமும் ஆற்றலும் மிக்க பேராசிரியர் டாக்டர் வசந்தி தேவி அவர்களை நியமித்து இருப்பது பெரிதும் வரவேற்கத்தக்கதாகும், பெண்களுக்கு என்று அமைக்கப்பட்டிருக்கும் அன்னை தெரசா பல்கலைக் கழகத்தை, தலைநகரமான சென்னையிலே இயங்க வைப்பது பல வகையிலேயும் பொருத்தமானதாக இருக்கும் என்று பலரும் விரும்புகிறார்கள். குறிப்பாக அந்தப் பல்கலைக் கழகத்திலே படித்துக் கொண்டு இருப்பவர்கள், பணியாற்றிக் கொண்டு இருப்பவர்கள் கோரிக்கை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். எனவே அவர்களது கோரிக்கைகளைப் பரிவுடன் பரிசீலிக்க வேண்டுமென்று அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ச. காந்திராஜன்.

<u>திரு. ச. காந்திராஜன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை தெரசா பல்கலைக் கழகத்தை சென்னையிலேயிருந்து அண்ணா மாவட்டத்திற்கு வேண்டுமென்று ஏற்கெனவே நாங்கள் கோரிக்கை வைத்திருக்கின்றோம். இந்த நேரத்திலே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்வது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதைச் செய்ய வேண்டுமென்று அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு கல்வி அமைச்சர்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை தெரசா பல்கலைக் கழகம் இருக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்



அவர்கள் சொல்லும்பொழுதுதான் பலருக்குத் தெரியும், ஏன் என்றால் அது சென்னையிலே இருக்கிற காரணத்தால் அதை கொடைக்கானலுக்கே கொண்டு போனால், இருக்கிறதாவது தெரியும். எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அதைத் திரும்ப கொடைக்கானலுக்கு கொண்டு போக முடிவு செய்து விட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்தபடியாக நாடு முழுவதும் ஏற்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நவோதயா கல்வி முறையை, தாய் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் திருத்தத்துடன் நாமும் ஏற்றுக்கொள்வதாக அரசாங்கம் அறிவித்து இருப்பது புரட்சிகரமான நடவடிக்கையாகும். மொழியால் தமிழராகவும், நாட்டால் இந்தியராகவும், உலகத்தால் மனிதராகவும், வருங்கால தலைமுறையினரை உருவாக்குவதற்குரிய உயர்ந்த நோக்குடன் இந்த அரசு மேற்கொண்டுள்ள நெஞ்சுரமிக்க, நேர்மைத் திறம் கொண்ட நடவடிக்கை இது என்பதை நான் குறிப்பிட்டே ஆக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி), இந்த நடவடிக்கையின் மூலம் தமிழக அரசு தன்னை ஒரு அண்ணா தி.மு.க. அரசு என்பது மட்டுமல்லாமல். அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசு என்பதை உறுதியாக வெளிப்படுத்தி இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல உள்ளம் படைத்த நமது நாட்டு மக்கள் அனைவரும் இந்த நடவடிக்கையை மனமார போற்றி வரவேற்கிறார்கள்.

இது போன்று, காவிரி நீர்ப் பிரச்சினையில் முதலமைச்சர் மேற்கொண்டுள்ள நிலையை நாங்கள் முழுமையாக ஏற்றுக் கொள்கிறோம். இந்தப் பிரச்சினையில் நீதிமன்றத்தின் உதவியுடன், சட்டத்திற்கு உட்பட்டு, தீர்வு காண்போம் என்பதை ஏற்கெனவே அரசாங்கம் அறிவித்து இருக்கிறது. தற்போது நடுவர் மன்றம் வழங்கியுள்ள தீர்ப்பினை ஏற்று அமல்படுத்துவதற்கு கர்நாடக அரசு முன்வராததால் உச்சநீதிமன்றத்தினுடைய உதவியை நாட வேண்டியுள்ளது.

நடுவர் மன்றத் தீர்ப்பை அமல்படுத்த மறுக்கும் உரிமை எந்த அரசாங்கத்திற்கும் எந்த அரசுக்கும் இல்லை. எனவே, சட்டப்படி இயங்கும் நமது அரசு சட்டத்தின் உதவியை நாடும் சரியான பாதையை மேற் கொண்டிருக்கிறது. அரசியல் சட்ட நெறிமுறைகளுக்கு உட்பட்டு, உச்ச நீதிமன்றத்தின் உதவியுடன் நிச்சயமாக நம்முடைய உரிமையை நிலைநாட்ட முடியும், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையும் உதாசீனப்படுத்தும் அளவிற்கு எந்த மாநில அரசும் இருக்க முடியாது. நம்முடைய நாட்டைப் பொறுத்தவரை நம்முடைய அரசமைப்புச் சட்டம்தான் உயர் அதிகாரம் படைத்தது. இங்கிலாந்து நாட்டைப் போல, பாராளுமன்றமே உயர் அதிகாரம் படைத்த நிலை இங்கே

இல்லை. எனவே, உச்ச நீதிமன்றத்தை அணுகுவது என்று முதலமைச்சர் எடுத்த முடிவு மிக மிகச் சரியானதும், வரவேற்கத் தக்கதும் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-45

எதிலும் பிடிவாதப் போக்கைக் கைக்கொள்ளாமல், மக்களுடைய எண்ணங்களுக்கும், உணர்வுகளுக்கும் மதிப்பளித்து, தன்னுடைய முடிவுகளை மாற்றிக் கொள்வதற்குக்கூட இந்த அரசு தயங்குவதில்லை. குடும்ப அட்டைகளுக்கு அரிசி வழங்கும் போது அதற்கு ஊதிய வரம்பு நிர்ணயிக்கப்பட்டது, ஆனால் அத்தகைய வரம்பு விதிக்கப்படுவதால் பெரும்பாலான மக்கள் பாதிக்கப்படக் கூடும் என்று பலரும் அச்சம் தெரிவித்ததின் விளைவாக முதலமைச்சர் தன்னுடைய முடிவை மறு பரிசீலனை செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). எங்களைப் போன்றவர்களின் வேண்டுகோள்களை ஏற்று தன்னுடைய முடிவை மாற்றி அறிவித்தார். அதற்காக அவருக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னதான் ஏராளமான நன்மைகளை இந்த அரசு செய்தாலும், புதிய புதிய திட்டங்களை அறிவித்து அமல்படுத்தினாலும், சிறிய சிறிய தவறுகளை இறுகப் பற்றிக் கொண்டு, துரும்பைத் தூளாக்க முயலும் குறும்புத்தனம் படைத்தவர்களும் இல்லாமல் போய்விட மாட்டார்கள்.

ஜனநாயக நாட்டில் அத்தகைய விமர்சனங்களுக்கும் உரிமை பெற்றிருக்கிறார்கள். இந்திய நாட்டின் தலைசிறந்த கலாச்சாரம் என்று போற்றப்படும் சகிப்புத் தன்மைக்கும், மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மனம் உண்டு என்ற தத்துவத்தைப் பின்பற்றி, நம் செயல்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டிய நிலையிலே இருக்கிறோம்.

அன்னை இந்திராவையும், பெருந்தலைவர் காமராஜரையும் எந்த அளவிற்கு இழிவுபடுத்தியும், கொச்சைப்படுத்தியும் பிரச்சாரம் செய்தார்கள் என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். ஆனால் அந்த இரு பெரும் தலைவர்கள்தான் வரலாற்று நாயகர்களாக இன்றைய தினம் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அதே போன்று அண்ணா அவர்கள் மீதும் பொழியப்படாத அவதூறுகளே இல்லை என்று கூறலாம். ஆனால் அவர் எந்தக் கட்டத்திலும் ஆத்திரப்படாமலும், தன் அணுகுமுறையை மாற்றிக் கொள்ளாமலும், எதையும் தாங்கும் இதயத்தோடு செயலாற்றி அமரராகிவிட்டார். அவரது பெயரால் அமைந்துள்ள இந்த அரசும் அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி ஆட்சி செலுத்தும் நமது முதலமைச்சரும், வேண்டாத விமர்சனங்களைப் பற்றியும், அவதூறுகளைப் பற்றியும் கவலைப்



படாமல், அவற்றை எல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு இந்த ஆட்சிக்கு அரணாக விளங்கும் அனுபவமும் ஆற்றலும் நடுநிலைமையும் தவறாத நாவலர் போன்றவர்களின் ஒத்துழைப்புடன், எல்லாத் தடைகளையும் தாண்டி தங்களுடைய நல்லாட்சியைத் தொடர வேண்டுமென நான் விரும்புகின்றேன்.

பத்திரிகைகளாக இருந்தாலும், எதிர்க்கட்சிகளாக இருந்தாலும், ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கினால் ஏற்றுக்கொள்ளவும், அவதூறுகளைப் பரப்பினால் அதைப் பொருட்படுத்தாது ஒதுக்கித் தள்ளிவிட்டு, என் கடன் மக்களுக்குப் பணி செய்து கிடப்பதே என்ற உங்களுடைய பாதையில் இந்த அரசு வீர நடைபோட வேண்டுமென்று நாட்டு மக்கள் எதிர்பார்க்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி),

தெய்வப்புலவர் திருவள்ளுவர் சொன்னதைப்போல, ''செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன் கவிகைக்கீழ்த் தங்கும் உலகு'' என்பதைப்போல, தங்களுடைய வெண்கொற்றக் குடையின் நிழலில் தான் இந்த மன்பதையே தங்கும் என்பதைக் கூறி, நிதி ஒதுக்க மசோதாவை வரவேற்று அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு நிதியமைச்சர்

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1992-93 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட அறிக்கையின் மீது இன்றைக்கு 30-வது நாளாக இங்கே விவாதத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். 1992-93 வது ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் வைக்கப்பட்ட நாளும், அதற்குப்பிறகு ஆறு நாள் பொது விவாதத்திலே கலந்து கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல சீரிய கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப்பிறகு 22 நாட்கள் மானியக் கோரிக்கைகளின் மீது விரிவான, விளக்கமான விவாதங்களெல்லாம் நடைபெற்று, அதற்குத் தெளிவான, திட்டமான பதிலுரைகளெல்லாம் இங்கே தரப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு 30-வது நாளாக, நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டிய கட்டத்திற்கு இந்தப் பேரவை வந்திருக்கிறது.

திருக்கோயில் திருவிழாக் காலங்களிலெல்லாம் கொடியேற்றியதற்குப் பிறகு மண்டகப்படி விழாக்கள் பல நாட்கள் நடைபெறும். ஆக, அவ்வாறு நடைபெற்று முடிந்து, கடைசியில் விடையாற்றி விழா என்று ஒன்று உண்டு. அதை விடையாற்றி விழா இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு, உண்டாற்றி விழா என்று ஒன்று உண்டு ; அந்த உண்டாற்றி விழாவை நாளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் நடத்தி வைக்க இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-50

இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் தொடங்கிய காலத்திலிருந்து, 1992-93 ஆம் ஆண்டு இந்த நிதிநிலை அறிக்கை, சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு தந்த உறுப்பினர் பெருமக்கள் அத்தனைப் பேருக்கும், நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்ன ஒரு சிறப்பு என்றுசொன்னால், ஒரு வெட்டுத் தீர்மானத்தின்மீதுகூட வாக்கெடுப்பு ஏற்படுத்தாத அளவுக்கு இந்த 30 நாட்களிலும் ஏகோபித்த நல்ல முறையில் மானியக் கோரிக்கைகள் எல்லாம் சிறப்பாக நிறைவேறி இருக்கின்றன என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. மற்றொன்று, எந்த ஒரு மானியக் கோரிக்கைக்கும் வெட்டுப் போடாமல், 'கில்லடின்' பண்ணாமல், அவ்வளவு மானியக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தருகிற அளவுக்கு பெருத்த உறுப்பினர்கள் மிகவும் ஒத்துழைப்பு தந்திருப்பதும் இங்கே மகிழ்ச்சிக்குரிய ஒன்று. அதோடு மட்டுமல்லாமல், பல்வேறு உறுப்பினர்கள் மிகச் சிறப்பாக இங்கே எடுத்துச் சொன்னக் கருத்துக்களுக்கெல்லாம் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களும் மிகச் சிறப்பான விளக்கங்களை எல்லாம் தந்திருக்கிறார்கள். இந்த அவையிலே இவ்வளவு நாட்கள் நடைபெறுகிற ஒவ்வொரு நாள் விவாதத்திலும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள், கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்து, ஒவ்வொரு நாள் விவாதத்தைப் பொறுத்தும் எடுத்துச் சொல்ல வேண்டிய கருத்துக்கள், நிறைவேற்ற வேண்டியவைகளையெல்லாம் ஒவ்வொரு அமைச்சரோடும் உட்கார்ந்து பேசி, அதனை நிறைவேற்றுகிற வகையிலே மிகச் சிறப்பாக அவர்கள் முடித்திருக்கிறார்கள் என்பது மட்டுல்லாமல், ஒவ்வோரு நாள் விவாதத்திலேயும் வந்திருந்து, கடைசிவரையில் இருந்து, விவாதத்தை முடித்து வைக்கிற அளவுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய நேரத்தின் பெருமையையும் கூட்டியிருக்கிறார் என்பதும் (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளபடியே இந்த அவைக்குத் தர வேண்டிய மதிப்பையும், நாடாளுமன்ற நடைமுறைக்குத் தரவேண்டிய மதிப்பையும், இந்த அவையிலே நிறைவேற்றப்பட வேண்டிய கருத்துக்களுக்கு தரவேண்டிய மதிப்பையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உரிய முறையிலே போற்றி, பாராட்டி, வாழ்த்தி, வரவேற்றிருக்கிறார்கள் என்ற முறையிலே நாம் எல்லோரும் மகிழ்ச்சி கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துரைத்த பல்வேறு கருத்துக்களுக்கு, அந்தந்த மானியக் கோரிக்கைகள் வந்தபோது, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அத்தனைப் பேரும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களும், அவரவர்களுக்குரிய மானியக் கோரிக்கைகளின் மீது எழுப்பப்பட்ட ஐயங்கள், அறியா வினாக்கள், அறியும் வினாக்கள், தெரிந்த வினாக்கள், தெரியாதவைகள் ஆகியவற்றுக்கெல்லாம்,





மிகச் சிறப்பான வகைகளிலே விளக்கங்களை எல்லாம் தந்திருக்கிறார்கள். வினா-விடை நேரங்களிலேயும் தரவேண்டிய பல்வேறு கருத்துக்களையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தந்திருக்கிறார்கள். இன்றைக்கும் 10 உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். அவர்கள் பேசிய கருத்துக்கள் முழுவதையும் எடுத்துச் சொல்வோமேயானால் நேரம் இடம்தராது. சுருங்கச் சொல்லி விளக்க வைத்தல் என்ற அழகு முறையை மட்டுமே கையாண்டு, விரைவிலே முடிப்பதுதான் நல்லது என்று நான் கருதுகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி எடுத்து வைத்த கருத்துக்களுக்கு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அத்தனைப் பேரும் அந்தந்தத் துறையின் வாயிலாக மேற்கொள்ள வேண்டியவற்றை முறையாக மேற்கொள்வார்கள் என்பதையும் இந்த் வாய்ப்பிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இந்த அரசு ஏற்று நடத்தி வருகிற செயல்பாடுகளையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு நடத்தி வருகிற பாங்குகளையும் மிகவும் பாராட்டி, போற்றி வாழ்த்தியிருக்கிறார்கள். ஒரு ஆட்சியிலே எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற எதிர்க்கட்சி வரிசைக்குத் தலைமை தாங்குகிற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பாராட்டி, போற்றி, வரவேற்கிற அத்தகைய சூழ்நிலை, இன்றைய அவையில் மிகச் சிறப்பாக அமைந்திருக்கிற பாங்கு, அப்படிப்பட்ட பல்வேறு சூழ்நிலைகளை உருவாக்கித் தந்து, மனம் திறந்து பல்வேறு வகைகளைப் பாராட்டி இருப்பதற்காக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு இந்த அரசின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்ளவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பாராட்டப்பட வேண்டியவைகள் பாராட்டப்பட வேண்டும்; போற்றப்பட வேண்டியவைகள் போற்றப்பட வேண்டும்; வரவேற்கப்பட வேண்டியவைகள் வரவேற்கப்பட வேண்டும், வாழ்த்தப்பட வேண்டியவைகள் வாழ்த்தப்பட வேண்டும் என்பதற்காகவும் அதே நேரத்திலே குற்றங்குறைகள் இருக்குமேயானால் அதை சுட்டிக்காட்ட வேண்டுமென்ற உணர்வோடு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். காழ்ப்புணர்ச்சிக்கு இடம் கொடுக்காத வகையில், பணியாற்றி வந்திருக்கிறார்கள் என்கிற வகையில் நாம் மகிழ்ச்சி பெற வேண்டியவர்களாக இருக்கிறோம். அது மட்டுமல்லாமல் இந்த அரசு பல்வேறு நிதி நெருக்கடிநிலையில் இருந்த காலத்திலேயும், பல்வேறு சங்கடங்கள் இருந்தன என்ற நிலைமையிலேயும்கூட, எப்படிப்பட்ட திட்டங்களை எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள் என்றெல்லாம் எடுத்துச் சொல்லி, மூடிக் கிடந்த மில்களை ஆலைகளைத் திறப்பதற்கு அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளை, அணுகுமுறையை எந்த அளவுக்கு பாராட்டுக்குரியன என்றும், மாண்பு

பிற்பகல் 1-55

மிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருப்பது உள்ளபடியே மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். அந்த வகையிலேதான் பல்வேறு பணிகளையெல்லாம் கூர்ந்து கவனித்து, பல்வேறு நெருக்கடிகள் இருந்தாலும் கூட எந்தவொரு பணியும் தடைப்பட்டுவிடக் கூடாது என்பதிலேயும், எந்தவொரு வளர்ச்சித் திட்டமும் தடைப்படக் கூடாது என்பதிலேயும், சமூக வளர்ச்சித் திட்டங்களினாலும், மேம்பாட்டு வளர்ச்சித் திட்டங்களாலும் அல்லது ஊரக வளர்ச்சித் திட்டங்களானாலும், குடிநீர் வழங்குகின்ற திட்டங்களானாலும், அவைகள் எல்லாம் முறைப்படி நிறைவேற்றப்பட வேண்டும் என்பதிலே கண்ணும் கருத்துமாக அவர்கள் இருக்கின்றார்கள். எல்லாத் துறைகளைப் பற்றியும் எல்லாப் பிரச்சினைகளைப் பற்றியும், விவாதிப்பதின் மூலமாகவும், கலந்துரையாடல் மூலமாகவும் முழுவதும் தெரிந்து கொண்டிருக்கின்ற அத்தகைய பாங்கினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் எடுத்துச் சொல்லுகின்றபோது, பல்வேறு பிரச்சினைகள் வருகின்றபொழுதெல்லாம் அதற்கு உரிய முறையில் நடவடிக்கை எடுத்து, அவ்வப்பொழுது பதில்களையும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டுமல்லாமல், உடனுக்குடன் அதற்குத் தக்க நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நாம் நன்றாகக் காண்கிறோம். ஏற்கனவே நான் எடுத்துச் சொன்னது மாதிரி 4,846 கோடி ரூபாய்க்குத்தான் 1992-93 ஆம் ஆண்டிற்கான ஆண்டுத் திட்டத்திற்கு முதலிலே அனுமதி அளித்தார்கள். மத்திய அரசின் சார்பாகத் தரவேண்டிய பணமும் தருவதற்கு இயலாத, மாநிலத்திலேயும் அதிகமான அளவுக்கு வருமான வசதி வாய்ப்புகளைப் பெருக்குவதற்கு இடம் இருக்காது என்ற காரணத்தைக் காட்டி 4,846 கோடிக்குத்தான் அனுமதி அளித்தார்கள் என்றாலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேற்கொண்டிருந்த அத்தகைய அழுத்தமான தன்மையின் காரணமாகவும், அதனை முதலிலே ஏற்றுக் கொள்ளாமல் இருந்தும், மறுபடியும் 1,751 கோடிக்கு நாங்கள் போட்ட திட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் எடுத்துச் சொல்லியதற்குப் பிறகு ஒரு மாதம் கழித்து மாண்புமிகு இந்தியாவின் பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்களும், திட்டக் குழுவின் துணைத் தலைவராக இருந்த திரு. பிரணாப் முகர்ஜி அவர்களும் ஏற்றுக் கொண்டு, 1,751 கோடி ரூபாயை ஆண்டுத் திட்டத்திற்கு வழங்கினார்கள் என்று சொன்னால் அதிலே எவ்வளவு சிரமங்கள் இருக்கும். அதை எவ்வளவு எளிதாக நிறைவேற்றினார்கள் என்று காணுகின்றபோது— பல ஆண்டுகளாக நான் திட்டக் குழுவின் முன் உட்கார்ந்து, உட்கார்ந்து கொண்டு வருபவன் என்ற முறையில், அவர்கள் எல்லாம் எப்படிப் பேசுவார்கள். என்ன நடக்கும் கேட்டது எந்த அளவுக்கு நடக்கும் என்று பார்க்கின்ற பொழுது, கேட்டது முழுவதும் வந்திருக்கின்றது என்பதிலே மிக்க மகிழ்ச்சி. (மேசையைத் தட்டும் ஒலி)





8-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான திட்டங்கள் போடுகின்றபோது கூட, முதலிலே நமக்கு இருக்கின்ற நிதி ஆதார வசதிகள், மத்திய அரசின் மூலமாகக் கிடைக்கின்ற நிதி ஆதார வசதிகள் ஆகியவற்றை வைக்கின்றபோது, முதலிலே ஒன்பதாயிரத்து ஐநூறு கோடி ரூபாய்க்குத்தான் போடலாம் என்கிற அளவு இருந்து, நாட்டில் பிற மாநிலங்களுடைய வளர்ச்சி, பிற மாநிலங்களுடைய தன்மைகளையெல்லாம் அப்படிப் பார்க்கின்றபோது, 10 ஆயிரம், 11 ஆயிரம் கோடிக்குப் போகலாமா என்ற அளவுக்குக் கூடப் பார்த்து, கடைசியிலே பல நெருக்கடி நிலைமைகள் இருந்தாலும் கூட, ஒன்பதாயிரத்து ஐநூறு கோடிக்குத்தான் இருக்க முடியும் என்ற சூழ்நிலையிலே, அண்மையிலே 5, 6 நாட்களுக்கு முன்னால் நடைபெற்ற கூட்டத்திலே திட்டக் குழுவின் துணைத் தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்களோடு வாதாடி, பத்தாயிரத்து இருநூறு கோடிக்கு அதைக் கொண்டு வந்து நிறுத்தி (மேசையைத் தட்டும் ஒலி), அந்த அளவு 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றலாம். நிதி நெருக்கடி என்ற காரணத்தால் திட்ட முயற்சிகள் குறைபடக் கூடாது. எப்படியேனும் இந்த அரசு திட்டங்களை நிறைவேற்றும். அதற்கான ஆதாரங்களைத் திரட்டிவிட முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலே அவர்கள் நிறைவேற்றுவதற்கான தன்மையில் அதை முடித்துத் தந்தார்கள் என்பதுதான் பெருமைக்குரிய ஒன்று. இந்தப் பேச்சுவார்த்தை கூட நீண்ட காலம் நடக்குமா என்று ஏராளமான புள்ளி விவரங்களையெல்லாம் சேகரித்துக் கொண்டு போய் உட்கார்ந்து கொண்டிருந்தாலும்கூட, அது 40 நிமிடங்களிலே முடிந்துவிட்டது என்கிறபோது நாம் பெருமகிழ்ச்சி அடைய வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அது மட்டுமல்லாமல், பல்வேறு சூழ்நிலைகளுடைய அடிப்படையில் இங்கு பலரும் எடுத்துத் தெரிவித்த கருத்துக்கள் அத்தனையையும், எங்கெங்கு, என்னென்ன தேவைகள் என்று கருதப்படுகின்றபோது, அவற்றையெல்லாம் நிறைவேற்றித் தருவதற்காக அத்தகைய முயற்சிகளிலே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். மத்திய அரசை நாம் கேட்கிறோம். மத்திய அரசினிடத்திலே இருந்து எதிர்பார்க்கிறோம். ஒரு தனி நிதி நமக்குக் கிடைத்தால்தான் இப்படிப்பட்ட இக்கட்டான கட்டங்களை நாம் தாண்ட முடியும் என்ற காரண, காரிய விளக்கங்களோடு மாண்புமிகு முதல்வர் அவர்களும் பல தடவை அங்கு எழுதியிருக்கிறார்கள் என்பதனையும் இந்த அவைக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். வேறு பல மாநிலங்களுக்கு 500 கோடி ரூபாய், 300 கோடி ரூபாய், 200 கோடி ரூபாய் என்று தனி நிதியாக ஒதுக்கித் தந்திருப்பதைச் சுட்டிக்காட்டி, மலிவு விலை மதுவினை எடுத்ததன் மூலமாக ஏற்பட்ட இழப்பையும் சுட்டிக்காட்டி, அரசியல் அமைப்புச் சட்டத்திலே இது ஒரு கொள்கையாக வலியுறுத்தப்பட்டிருக்கின்றபொழுது, இதை வெற்றிகரமாக ஆக்குகிற பொறுப்பு, மாநில அரசுக்கு மட்டு

மல்ல, மத்திய அரசுக்கும் இருக்கிறதென்பதையும் எடுத்துக் காட்டி ஆகவே இதற்கென்று ஏற்பட்ட இழப்பை ஈடுகட்டுகிற அளவுக்கு மத்திய அரசு ஓரளவுக்கு நிதி தரவேண்டும் என்று வற்புறுத்தி வருவது தவறல்ல. ஆகவே அந்த அடிப்படையில் தான் அவர்கள் அடிக்கடி எடுத்துச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். மத்திய அரசு தரவேண்டும் என்று நாம் கேட்பதில் எந்தத் தவறும் இல்லை. பல திட்டங்களை எடுக்கிறபோது எந்த அளவுக்கு நம்மால் செய்ய முடியும், நமக்கு இருக்கிற நிதி எந்த அளவுக்கு இருக்கிறது, மத்திய அரசு எந்த அளவுக்கு உதவி செய்யும் என்று எதிர்பார்க்கிறோம். நம்புகிறோம். விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம் என்று நாம் நிதிநிலை அறிக்கையில் எடுத்துச் சொல்கிறபோது மத்திய அரசு கொடுக்குமா என்றெல்லாம் கேட்கிறார்கள். அவர்கள் கொடுக்க நியாயம் இருக்கிறது. நாம் கேட்கவும் நியாயம் இருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன்.

பிற்பகல் 2-00

**1990-91** ஆம் ஆண்டுக் கணக்கை மட்டும் நாம் எடுத்துப் பார்ப்போமேயானால் கிட்டத்தட்ட இந்த மாநிலத்திலிருந்து மட்டும் மத்திய அரசுக்குப் போகிற அதாவது தமிழக மாநிலத்திலிருந்து மட்டும் மத்திய அரசுக்குப் போகிற வரியினங்கள், வருமானங்கள் எல்லாம் 5,349 கோடியே 36 இலட்சம் போகிறது. மத்திய அரசு நமக்குத் திருப்பித் தருகிற தொகை, அதாவது மானியத்தில் போட்டிருக்கிற கணக்குப்படி அவர்கள் திருப்பித் தருகிற தொகை 1,288 கோடியே 16 இலட்சம் ரூபாய். நாம் கொடுப்பது 5,349 கோடி. நாம் திரும்பப் பெறுவது 1,288 கோடி. முழுவதையும் அவர்கள் கொடுக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. முழுவதையும் தந்தால் மத்திய அரசை நடத்த முடியாது, மத்திய அரசை நடத்துவதற்கு ஒரு பங்கு வேண்டும். ஆனால் மத்திய அரசை நடத்துவதற்கு எல்லா மாநிலங்களிலிருந்தும் பங்கு வருகிறபோது மத்திய அரசுக்கு 50 பங்கு, நமக்கு 50 பங்கு என்று வைத்துக்கொண்டாலும் கூட 2,900 கோடி ரூபாய் அளவுக்குப் பெறுவதற்கு நமக்கு நியாயம் இருக்கிறது. ஆனால் நாம் இன்றைக்குப் பெறுவது 1,288 கோடிதான். மத்திய அரசுக்கு 5,000 கோடி ரூபாய் இந்த மாநிலத்திலிருந்து மட்டும் போகிறது. எனவே நாம் கேட்க நியாயம் இருக்கிறது. கொடுக்கவும் அவர்களுக்கு நியாயம் இருக்கிறது என்ற காரணத்தால் தான் திரும்பத் திரும்ப நாம் வலியுறுத்திக் கொண்டு வருகிறோம். எனவே இந்தப் பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது என்கிற சூழ்நிலையில் பல்வேறு மானியக் கோரிக்கைகளைப் பொறுத்த வரையில் சட்டமன்றப் பேரவை மூலம் இங்கே மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் வாக்களித்து அளிக்கப்பட்ட தொகை 7.461 கோடியே 64 ஆயிரம் ரூபாய். இந்த அளவுக்கு இந்த அவை வாக்களித்து இருக்கிறது. இந்த மாநில தொகுப்பு நிதியத்தில்





சாட்டப்பட்ட தொகை 2,473 கோடியே 10 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய் ஆகும். ஆக மொத்தம் 9,934 கோடியே 11 இலட்சத்து 12 ஆயிரத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யவேண்டிய பொறுப்பில் இந்த அவை இருக்கிறது. நீங்கள் ஒதுக்கினால் தான் காரியங்கள் எல்லாம் நடைபெறும். நீங்கள் ஒதுக்காவிட்டால் எந்தக் காரியமும் நடைபெறாது. இந்த அளவில் பல காரியங்களை எடுத்துச் செய்கிற இந்தச் சூழ்நிலையை நாம் காண வேண்டும். எப்படிப்பட்ட நெருக்கடியான தன்மையில், எப்படிப்பட்ட இக்கட்டான கட்டங்களில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பல திட்டங்களை வெளியிட்டு, பல மேம்பாட்டுத் திட்டங்களையும், சமுதாய நலத் திட்டங்களையும் நிறைவேற்றி வருவதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

ஏற்கெனவே இந்த நிதி நிலை அறிக்கையில் நாம் குறிப்பிட்டபோது எல்லாவற்றையும் பார்த்து புது வரியினத்தையும் பார்த்து, சிக்கன நடவடிக்கையாக 55 கோடிக்கு செய்யலாம் என்ற நிலையையும் பார்த்து இறுதிப் பற்றாக்குறை 494 கோடி ரூபாயாக அமையக் கூடும் என்று நான் எடுத்துச் சொல்லியிருந்தாலும் கூட நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப் படாமல், இந்த அவையில் பல்வேறு மானியக் கோரிக்கைகள் வருகிறபோது புதிய திட்டங்களுக்கென சுமார் 40 கோடி நடப்பாண்டில் 1992–93 செலவு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இவ்வளவு நிதி நெருக்கடி இருந்தாலும் கூட நாட்டுக்குச் செய்ய வேண்டிய அத்தகைய பணிகளை,

''துன்பம் உறவரினுஞ் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை,''

என வள்ளுவப் பெருந்தகை கூறியதற்கிணங்க அதைச் செய்கிற முயற்சியில் தான், திட்டத்திற்கு மேல், ஒதுக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையின் வரவு-செலவுக் கணக்குக்கு மேலாக 40 கோடி ரூபாய் அளவுக்கு இந்த 21 நாட்கள் நடைபெற்ற மானியக் கோரிக்கைகளில் அமைச்சர்கள் பலரும் எடுத்து வைத்தார்கள். இது பலருக்கு மகிழ்ச்சியாக இருந்தாலும்கூட எனக்குத்தான் திகில் இருந்து கொண்டே இருக்கும். ஏற, ஏற சமாளிக்க வேண்டிய ஒரு கட்டம் வருமே என்று. இருந்தாலும் எப்படியும் சமாளிக்கலாம் என்ற அத்தகைய தன்மையின் அடிப்படையில் தான் எப்படியும் சமாளிப்பதற்கான அத்தகைய வழியை நாம் தேடுவோம் என்ற அத்தகைய முறையில்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கெல்லாம் ஆக்கம் தந்து, மாண்புமிகு உறுப்பினர்களின் வேணவாக்களை நிறைவேற்றுகிற அத்தகைய தன்மையில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 2.05

மேலும் நடப்பாண்டில், 1992–93ல், சிறு சேமிப்பு மூலம் நாம் எதிர்பார்க்கின்ற வசதி கிடைக்குமா என்கின்ற ஒரு ஐயப்பாடும் இருக்கிறது. ஓரளவுக்கு—குறிப்பிட்ட அளவுக்கு வரும் என்று, நாம் கருதினோம். அதிலே இன்கம் டேக்ஸ்-லேரீடக்ஷன் என்று தள்ளுபடி என்று இருக்கின்ற ஒரு பகுதியையும் மத்திய அரசு வரவு-செலவுத் திட்டத்திலே எடுத்து விட்டதன் காரணமாக இனிமேல் சிறு சேமிப்பிலே கொண்டு வந்து போடுவார்களா என்று பார்க்கும்போது, பலரும் ஷேர் மார்க்கெட்டுக்குப் போய் விடுவார்களே தவிர, சிறு சேமிப்புக்குப் போட்டால் நமக்கு இலாபம் இருக்கும்; தங்களுடைய வருமான வரியிலே தங்களுக்குத் தள்ளுபடி கிடைக்கும் என்ற எண்ணம் இல்லாததனால் நமக்கு எதிர் பார்க்கின்ற பணம் வராது, எதிர்பார்க்கின்ற பணம் வராது என்றால், நமக்கு சாதாரணமாக, வரி போட வேண்டிய அவசியம் ஏற்படாமல், கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படாமல், புதுக் கடன்கள் நிறைய எழுப்ப வேண்டிய அவசியம் ஏற்படாமல், மத்திய அரசாங்கம் மானியம் தர வேண்டும் என்று கெஞ்ச வேண்டிய அவசியம் ஏற்படாமல், இந்த சிறு சேமிப்பு மூலமாக வருகின்ற பணத்தை ஓரளவுக்கு வைத்து சமாளிக்க வேண்டும். அதுவும் எதிர்பார்க்கின்ற அளவுக்குக் கிடைக்குமா என்கின்ற ஒரு ஐயப்பாடும் இருக்கிறது. அது போகப் போகத்தான் தெரிய வேண்டும். ஆனால் அந்த நீக்கப்பட்ட பகுதியையும் மறுபடியும் கொடுத்து சிறு சேமிப்பிலே முதலீடு செய்கின்றவர்களுக்கு வருமான வரியிலே சலுகைகள் தர வேண்டும் என்று எல்லா மாநிலங்களும் வற்புறுத்தி இருக்கின்றன. இந்த தமிழகத்திலே எப்படி நெருக்கடியான நிலைமைகளை நாம் சமாளிக்க எதிர்பார்க்கிறோமோ அதே நிலையில் எல்லா மாநிலங்களும் இருக்கின்றன. ஆனால் மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு. மன்மோகன்சிங் அவர்கள் நாடாளுமன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவரிடம் பலரும் கேட்டிருக்கிறார்கள். அதை மீண்டும் பரிசீலிக்கிறேன் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். விரைவில் அவர்கள் பரிசீலிப்பார்களேயானால், நாம் இதிலே குறைவு ஏற்படும் என்று எதிர்பார்க்காத ஒரு சூழ்நிலை நமக்கு ஏற்படக்கூடும். துவக்கத்தில் இருந்த பற்றாக்குறையும், மற்ற நிதிநிலை அறிக்கையிலே உள்ள பற்றாக்குறையும், மேலும் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள செலவையும் பார்த்தால், இப்போது இருக்கின்ற சூழ்நிலையைப் பொறுத்து சுமார் ரூ. 596 கோடி பற்றாக்குறையை நாம் சமாளிக்க வேண்டிய கட்டம் வந்திருக்கிறது. இந்த பட்ஜெட் போடும்போது ரூ. 494 கோடியிலே பற்றாக்குறையை சமாளிக்க வேண்டிய நிலை இருந்தாலும், இன்றைய சூழ்நிலையில் ரூ. 596 கோடி பற்றாக்குறையை சமாளிக்க வேண்டிய நிலை இருக்கிறது என்பதை அறிய வேண்டும். கடந்த ஆண்டு மிகச் சிறந்த முயற்சியினால் இந்த அரசு நூற்றுக்கணக்கான சூழ்நிலையைச் சீர்படுத்தி ஆண்டுத் திட்டங்களை முழுமையாக நிறைவேற்றி அதிலே குறைபாடு இல்லாத அளவுக்கு நிறைவேற்றிய தன்மை இந்த ஆட்சிக்கு உண்டு. இந்த முயற்சி மிகச் சிறந்த முயற்சியாகவும் அமைந்தது.



அரசு அலுவலர்களுக்குப் பதவி உயர்த்தியதனால் மற்றும் ஊதிய விகிதங்கள் மாற்றியதினாலே ஏற்படும் கூடுதல் செலவும், அகவிலைப் படி உயர்த்தியதனால் ஏற்பட்ட கூடுதல் செலவையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் மேலும் சுமார் 80 கோடி ரூபாய் செலவழிக்க வேண்டிய கட்டாயம் நமக்கு ஏற்படுகிறது. இப்போது கூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து இருக்கின்ற அறிவிப்பின்படியும் ஒரு 12 கோடி ரூபாய் கூடுதலாக ஆகிறது. அவர்களுக்கு வேலை உயர்வும், பதவி உயர்வும் மற்ற கேட்கின்ற வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

ஆயிரம் ரூபாய் ஒரு அதிகாரி சம்பளம் வாங்குகிறார் என்றால் இன்றைக்கு நாம் அகவிலைப்படி 60 சதவிகிதம் தந்து கொண்டு வருகிறோம் என்றால் ரூ. 600 அகவிலைப்படி கிடைக்கிறது. அகவிலைப்படி நாம் தருவதே எதற்கு என்று கேட்டால் விலைவாசிகளை அவர்கள் சமாளிப்பதற்குத் தான், அகவிலைப்படியும் தந்து அரிசி 2 ரூபாய்க்குத் தந்து, அதுவும் வேண்டும் என்று கேட்டால், அதற்கு அகவிலைப்படி கொடுப்பதே இதற்காகத்தானே தவிர வேறில்லை. ஆகையினால் தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதலிலே கேட்டிருந்தது, ஒரு உச்சவரம்பு வைத்ததற்குக் காரணமே, அதற்கு மேலே இருப்பவர்கள் அகவிலைப்படி என்ற பெயரில் ஒரு அகவிலைப்படியையும் வாங்கிக் கொண்டு, மற்றவர்களுக்கு, ஏழையெளியவர்களுக்குப் போய்ச் சேர வேண்டியவைகளிலே பங்கு பெறுவது நியாயம் இல்லை என்று தான் கொண்டு வந்தார்கள். இருந்தாலும் பொது மக்கள் எண்ணங்களுக்கு மதிப்பு அளிக்க வேண்டும் என்ற காரணத்தினாலேயே, விளைவு பற்றிக் கவலைப்படாமல் பல பேர்கள் பல கருத்துக்களை எடுத்துச் சொல்வதனாலும், பொது மக்களை இன்னும் கொஞ்சம் பக்குவப்படுத்தி, அதாவது பழத்தைப் பக்குவப்படுத்தி—இப்போது அறுக்க முடியாது, பலாப்பழத்தை கொஞ்சம் பதப்படுத்தி, பக்குவப்படுத்தி, அறுக்கலாம் என்கின்ற மாதிரி அது விடப்பட்டிருக்கிறதே தவிர இதை அறவே நீக்கிவிட்டோம் என்று மட்டும் யாராவது நினைத்தால் அது சரியாகாது. என்றைக்காவது ஒரு நாளைக்கு மக்களைப் பக்குவப்படுத்தி, இதற்கான காரண காரியங்கள், விளக்கங்களை மக்களுக்குத் தெரிய வைத்து அதற்குப் பிறகு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் வளர்ச்சித் திட்டங்கள் மற்றவர்களுக்குத் தருவதற்குத்தான். டிசர்விங் கேசஸ் யார் யார் என்று பார்த்து அவருக்குக் கொடுக்க வேண்டும். ஏழையெளியவர்கள், முடியாதவர்கள், ஊனமுற்றோர்கள், காப்பதற்கு யாரும் இல்லாதவர்கள், திக்கற்றவர்கள் இவர்களைக் காப்பாற்ற வேண்டியதுதான். இரண்டரை

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 ஏப்ரல் 24

ஏக்கர் நிலத்திற்கு மேலே வைத்துக் கொண்டு, ஒரு ஏக்கருக்கு 40 மூட்டை அல்லது 45 மூட்டை என்று எடுத்துக்கொண்டு, உரத்தையும் சலுகை விலையிலே வாங்கிக் கொண்டு, எல்லா வசதிகளையும் வாங்கிக் கொண்டு, தண்ணீர் தீர்வையே கட்டாமல், வாங்கின கடனைக் கட்டாமல், கூட்டுறவுக் கடனையும் கட்டாமல், அதற்கு வட்டியும் தள்ளி, அபராதத்தைத் தள்ளி, எங்க வீட்டுக் கல்யாணத்தையும் பார்த்துக் கொள் நீ, எங்கள் வீட்டிலே நடக்கின்ற விழாக்களையும் பார்த்துக் கொள்ளுங்கள், இதற்கும் சேர்த்து கடன் தா என்று கேட்டு வாங்கிக் கொண்டு இருக்கின்றவர்களுக்கு, 2½ ஏக்கர் நிலம் வைத்துக் கொண்டு, ஒரு ஏக்கருக்கு 40 மூட்டை, 45 மூட்டை என்று பெற்றுக் கொண்டிருப்பவர்களுக்கு இரண்டு ரூபாய் அரிசி ஏன் கொடுக்க வேண்டும்?

பிற்பகல் 2–10

3½ ரூபாய் அரிசி ஏன்? அவர்களிடத்தில் அரிசி இருக்கிறதே? அந்த அரிசியை விற்றுவிட்டு இந்த அரிசியை வாங்குவானேன். அதைத்தான் மனதிலே வைத்து அவர்கள் எடுத்துச் சொன்னார்கள், அது கூடாது என்று. ஏன் என்றால் அதிலே குறையக் குறைய, உதாரணத்திற்குச் சொல்கிறேன், 340 கோடி ரூபாய் இப்போது 60 கோடி ரூபாய்க்கு மேல் சென்று 400 சில்லறை கோடி ரூபாய்க்கு வந்திருக்கிறது என்று சொன்னால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் உணர வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். 1 கோடி ரூபாய் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரு பள்ளிக் கூடத்திற்கு 10 லட்சம் ரூபாய், பத்து லட்சம் ரூபாய் என்று வைத்துக்கொண்டால் கூட கட்டிட வசதி இல்லாத 10 பள்ளிக் கூடங்கள் கட்டலாம். 10 லட்சம் ரூபாய்க்கு ஒரு பள்ளிக்கூடம் கட்டலாம் என்று சொன்னால் 100 வருடத்திற்கு அது நிற்கும். ஆனால் இந்த 500 கோடி ரூபாயிலே எதுவும் மிஞ்சாது. 500 கோடி ரூபாய் போனது போனதுதான். ஆள்தான் வந்து நிற்பான். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி இருக்கிறாய் என்று கேட்டால் நீ கொடுத்த 500 கோடி ரூபாயை சாப்பிட்டுவிட்டு நாங்கள் எல்லாம் வந்து நிற்கிறோம் என்பார்கள். ஆனால் 500 கோடி ரூபாய்க்கு அவர்கள் சொன்னதைப்போல மருத்துவமனை, சாலை, குண்டு குழியான சாலைகள் இவைகளை எல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால், நல்ல முறையில் பணத்தை செலவழிக்க வேண்டுமென்று சொல்லத்தான் சட்டமன்ற உறுப்பினர்கள். எதையும் சிந்திக்காதவன் வெளியே இருக்கிறான். எப்படி சிந்திக்க வேண்டும், எதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதை சிந்தித்து முடிவு கட்ட வேண்டியது நாம். நாமே முடிவு கட்டவில்லையென்று சொன்னால் யாரும் முடிவு கட்டமாட்டார்கள். ஆகவே, எதற்கு முன்னுரிமை தர வேண்டும் என்று பார்த்தால் வரவு-செலவுத் திட்டத்தில் பல இடங்களில் நமக்கு செலவுக் கணக்குதான் தெரிகிறதே தவிர எப்படி அது வருகிறது என்று யாரும் சொல்லமாட்டார்கள். அரசாங்கம் ஒன்றுதான் வருவாய் இன்னின்ன வகையில் இருக்கிறது. செலவு இவ்வளவு வருகிறது. இன்னின்ன இனத்திலே



1992 ஏப்ரல் 24] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அது வரும், இதற்கு மேலே வரவு. செலவு, இது இதுக்கு இவ்வளவு செலவழிக்க வேண்டுமென்று நினைக்கிறோம். செலவழிக்க வேண்டுமென்று நினைத்திருக்கிறோம். வேண்டுமா வேண்டாமா என்று சொல்லி, அதனால்தான் 21 நாட்கள் இங்கே பேசினீர்கள். எந்தச் செலவைக் குறைக்கலாம் என்று ஒருவரும் சொல்லவில்லையே. குறைக்க முடியாது என்றால் வருவாயை எப்படிப் பெருக்கலாம் என்று ஒருவராவது பெருக்கும் வழியை சொன்னார்களா என்று கேட்டால் ஒருவரும் சொல்லவில்லை. (சிரிப்பு) ஆகவே, செலவை கூட்ட வேண்டும் என்றால் வருவாயை எப்படிப் பெருக்க வேண்டும் என்பதற்கும் வழிவகை சொல்ல வேண்டும். இல்லையென்றால் வேறு எந்த ஒரு செலவையும் வெட்டிவிட்டுதான் இதற்கு செலவழிக்க வேண்டும் என்பதையும் சொல்லியாக வேண்டும். இரண்டையும் கொடுத்து விட்டோம். வரவையும் கொடுத்து விட்டோம், செலவையும் கொடுத்துவிட்டோம். எப்படி அட்ஜெஸ்ட் பண்ண வேண்டும் என்பதைதான் நீங்கள் இங்கே சொல்ல வேண்டுமென்று கேட்டிருந்தோம். நாங்கள் கேட்பதை நாங்கள் கேட்போம், செய்கிறதை நீங்கள் செய்யுங்கள் என்று சொல்லிக்கொண்டு போவோமானால் காரியங்கள் நடைபெறாது என்பதற்காகதான், நிலைமையை உணர வேண்டும் என்பதற்காகதான் இதை நான் சொல்கிறேன்.

உணவு மானியக் கோரிக்கையைப் பொறுத்த வரையில் கடந்த ஆண்டில், 1991-92-ல் ஏற்பட்ட நிதி நெருக்கடியினால் செலுத்த முடியாத தேக்கத்துக்கு இந்த ஆண்டு நாம் செலுத்துவதற்கு முன்வந்து ரிசர்வ் வங்கி எல்லாம் நமக்கு எவ்வளவோ கஷ்டங்கள் கொடுத்தாலும் கூட இந்த ஆண்டு செலுத்துகிறோம் என்று அனுமதி பெற்று 160 கோடி ரூபாயை இந்த ஆண்டில் அதாவது 1992-93-ல் செலுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தொகையை ரிசர்வ் வங்கியுடன் ஏற்படுத்தி கொடுத்துள்ள ஒப்பந்தத்தின்படி நாம் கட்ட வேண்டும். ரூ. 160 கோடி என்று கணக்கிடப்பட்ட தொகை இப்போது எவ்வளவாக ஆகியிருக்கிறது என்றால் 204 கோடி ரூபாயாக நாம் கட்ட வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியிருக்கிறோம். இதனால் நிதிநிலையில் மேலும் 40 கோடி ரூபாய் அதிகம் ஒதுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. மேலும் பொது விநியோக முறையில் வழங்கும் சன்ன ரகம் மற்றும் மிக சன்ன ரக அரிசியின் விலையை 3 1/2 ரூபாயிலிருந்து 3 ரூபாய்க்கு குறைத்திருக்கிறோம். இதன் மூலம் 60 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கனவே இங்கே குறிப்பிட்டு காட்டினார்கள். இத்தகைய நிதி நெருக்கடி நிலைமைகளை எல்லாம் சமாளித்து நாம் திட்டங்களையும் மற்றவைகளையும் நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். ஏன் இந்தக் கணக்குகளை எல்லாம் தான் சொல்கிறேன் என்றால் எப்படிப்பட்ட நெருக்கடியான கட்டத்திலும் நாம் இருந்து இவைகளை எல்லாம் சமாளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை எடுத்துச் சொல்வதற்காகத்தான்.

வரவேண்டும். அப்புறம் தொகுதிக்குத் தொகுதி கொடுத்ததற்குப் பிறகு நீங்கள் கேட்பீர்கள், ஊருக்கு ஊர் வேண்டும் என்று, அப்புறம் தெருவுக்கு தெரு வேண்டுமென்று கேட்டாலும் கேட்கலாம். ஆகவே 100 ரூபாயில் 90 ரூபாய் போயிற்று. ஏதாவது குறைக்க முடியும் என்றால் சம்பளத்தில் குறைக்க முடியாது, மதிய உணவுத் திட்டத்தில் குறைக்கமுடியாது, கிராண்ட்ஸ் கொடுப்பதிலிருந்து குறைக்க முடியாது. கான்ட்ரிபியூஷன் கொடுக்க வேண்டிய அளவில் பார்த்தால், ஏழை எளியவர்களுக்கு மட்டும் கிட்டத்தட்ட 38 கோடி ரூபாய் போகிறது. அது கொடுத்துத் தீரவேண்டியதுதான். குறைக்கலாம் அல்லது வைத்துக் கொள்ளலாம் என்று சொல்வது இந்த இலவசமாகக் கொடுப்பதைத்தான். 1956 கோடியே 83 லட்சம் மானிய உதவித்தொகை, இலவசத்திற்கு மட்டும் போகிறது. ஆக கிட்டத்தட்ட 1100 கோடி ரூபாய்க்கு மேல் சப்சிடி மட்டும் போகிறது. நீங்கள் ஏதாவது ஒத்துழைத்தால், மக்களையும் பக்குவப்படுத்தினால், எவ்வளவுக்கெவ்வளவு இதைக் குறைப்பதற்கு வழி காண்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு பள்ளிக்கூடத்திற்கும் மருத்துவ மனைக்கும் மற்றவைகளுக்கும் திருப்பி விடலாம். இல்லையென்றால் இப்படியே இருக்கலாம். [சிரிப்பு] ஆகவே இதையெல்லாம் நாம் உணர்ந்து செய்யவேண்டும். ஆகவே பொருளாதார நிலைக்கேற்றவாறு....

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுத் திட்டத்தைப் பற்றி இங்கே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஏற்கனவே குறிப்பிட்டுச் சொன்னார்கள். இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோதே ஏறக்குறைய 900 கோடி ரூபாய் நிதிப் பற்றாக் குறை (Deficit Budget) இருந்தது. அப்படிப்பட்ட ஒருமோசமான நிலையில்தான் அரசு பதவியேற்றது. அதை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டோம். அதே நேரத்தில் ஏற்கனவே ரூ. 900 கோடி பற்றாக்குறை இருந்தாலும், மலிவு விலை மதுக்கடைகளை மூடினோம். இதனால் மொத்த பற்றாக்குறை 1,120 கோடி ரூபாய் அளவுக்கு சென்றது. இப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தால் தான் மத்தியத்திட்டக்குழு 1991–92-க்கான ஆண்டுத் திட்டத்தை நீங்கள் எப்படி நிறைவேற்றப் போகிறீர்கள் என்ற ஐயப்பாட்டினைத் தெரிவித்தார்கள். கடந்த முறை டெல்லியில் மத்தியத் திட்டக்குழுத் துணைத்தலைவரை சந்தித்த போது, அவர்கள் கடந்த ஆண்டுக்கு அதாவது 1991–92 நிர்ணயிக்கப்பட்ட ஆண்டுத் திட்டம் 1,605 கோடி ரூபாய்க்கு அதையே நீங்கள் நிறைவேற்ற முடியாது. எனவே 1992–93 கான ஆண்டு திட்டத்தை ரூ. 1,486 கோடி ரூபாயாக குறைத்து கொள்ளலாம் என்று சொன்னார்கள். அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று திரும்பி வந்துவிட்டேன். இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மின்சாரக் கட்டணத்தை உயர்த்திய போது இது கூடாது கூடாது என்றார்கள். பஸ் கட்டணத்தை ஏற்றிய போது இதையும் ஏற்றக்கூடாது என்றார்கள். இந்த அவைக்கு வெளியிலேயும் இதற்கு எவ்வளவோ எதிர்ப்புகள்



இருந்தன, விமர்சனங்கள் கூறப்பட்டன. ஆனால் இத்தகைய நடவடிக்கைகளை எடுத்ததால்தான் எடுத்துக்கொண்ட சவாலில் நாம் வெற்றி கொண்டு [மேசையை தட்டும் ஒலி] இப்போது மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் அவர்கள் சில நாட்களுக்கு முன்னால் கடந்த 18–ந்தேதி என்னைச் சந்தித்தபோது, அவர்களே பாராட்டுகின்ற அளவுக்கு அவர்கள் ரூ. 1,605 கோடிக்கான கடந்த ஆண்டுத் திட்டத்தையே நிறைவேற்ற முடியாது என்று அவர்கள் அஞ்சிய நேரத்தில் அதனையும் மிஞ்சி, அதனை மீறி, 1,640 கோடி ரூபாய்க்கு [மேசையைத் தட்டும் ஒலி]. கடந்த ஆண்டுத் திட்டத்தை நாம் மிகையாக நிறைவேற்றியிருக்கிறோம் என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். [மேசையைத் தட்டும் ஒலி].

பிற்பகல் 2-25

1,605 கோடி ரூபாயே முடியாது என்றார்கள். ஆனால் ரூ. 1,640 கோடிக்கான் திட்டத்தை நிறைவேற்றி இருக்கிறோம். இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்ததால்தான் மத்திய திட்டக் குழு 1992-93-க்கான ஆண்டுத் திட்டம் ரூ. 1,751 கோடியாக நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டபோது முதலிலே முடியாது என்று சொன்னாலும் பின்னர் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். ஏனென்றால் அவர்களுக்கு எப்படியும் தமிழக அரசு எடுக்க வேண்டிய சில கடுமையான நடவடிக்கைகளை எடுத்து சில கண்டிப்பான நடவடிக்கைகளை எடுத்து எப்படியும் நிறைவேற்றியே தீரும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதால் (மேசையை தட்டும் ஒலி) அவர்கள் இதைச் செய்தார்கள். எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே பேசுகின்ற போது மிகவும் ஆழமான ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த அவைக்கு வெளியே இருப்பவர்களுக்கு அவ்வளவாக விவரங்கள் எல்லாம் புரியாது அரசாங்கத்திற்கு எத்தகைய சிரமங்கள் இருக்கின்றன, நிதிநிலைமைகளுடைய உண்மையான நிலைமை என்ன, ஆகியவற்றையெல்லாம் வெளியே இருப்பவர்கள் எளிதில் புரிந்து கொள்ள வேண்டும் என்று நாம் எதிர்பார்த்தால், இன்றைய சூழ்நிலையில் உடனடியாக அவர்கள் புரிந்து கொள்ள முடியாது என்பது நமக்கே தெரிகிறது. ஆனால் இந்த அவையில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் மக்கள் பிரதிநிதிகள் இதை புரிந்து கொள்ள வேண்டும். அரசுக்குள்ள சிரமங்களை அவர்கள் புரிந்துகொண்டு அதைப்பற்றி வெளியே இருக்கிற மக்களுக்கு எடுத்து சொல்ல வேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பதில் தவறு இல்லை என்றே கருதுகிறேன்.

இத்தகைய நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் இன்று தமிழகத்திலே நிலைமை என்ன? இன்று தமிழகத்தின் நிலை போகட்டும். எதிர்காலத்திலே தமிழகத்தின் நிலைமை என்ன?

கடந்த ஆண்டு திட்டம் 1,605 கோடி ரூபாய். ஆனால் முந்தைய அரசுகள் எடுத்த தவறான நடவடிக்கைகளின் காரணமாக நிதி பற்றாக்குறை ஏற்பட்டு, இதனால் திட்டக் கமிஷன் என்ன சொன்னது ? அடுத்த ஆண்டு திட்டத்தை 1,486 கோடி ரூபாய் என்று குறைத்தது. அதை நாம் ஏற்றுக் கொண்டால் பின்னர் இந்த மாநிலம் எப்படி முன்னேறும் ? தமிழகத்தை எப்படி முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வது ? எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் இதை இலவசமாக கொடுங்கள், அதை இலவசமாக கொடுங்கள், இந்தக் கட்டணத்தைக் குறையுங்கள், அந்த டாக்சை ரத்து செய்யுங்கள் என்பன போன்ற கோரிக்கைகளை வைப்பதற்கு முன்னால் இதை ஆயிரம் முறை சிந்திக்க வேண்டும். நீங்கள் ஒரு சலுகையைக் கேட்கிறபோது you are taking Tamil Nadu on the path of regression. தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு மாறாக பின்நோக்கி அழைத்துச் சென்று கொண்டிருக்கிறீர்கள் என்பதை புரிந்து கொண்டு இத்தகைய கோரிக்கைகளை இனிமேல் வைப்பதற்கு முன்னால் ஆயிரம் முறை சிந்தித்து இத்தகைய கோரிக்கைகளை வைக்க வேண்டும் என்பதை மட்டும் பணிவுடன் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் இதனை மிகவும் தெளிவுபடுத்தி உங்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் அது மட்டுமல்ல. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு பத்திரிக்கைகளில் பார்க்கும் போது இன்றைக்கு இங்கிலாந்து நாட்டிலே கூட இந்த நிலை வந்துவிட்டது. ஜான் மேஜருக்கு ஒரு எக்கானமிஸ்ட் சொல்லியிருக்கிறார் இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு. சப்சிடி கொடுப்பது என்பதை நிறுத்த வேண்டும், ஒவ்வொருவருடைய நடவடிக்கையைப் பற்றி அறிந்து யார் யாருக்கு கொடுக்க வேண்டுமோ அவருக்குக் கொடுத்தால்தான் பிரிட்டிஷ் எக்கானமியை காப்பாற்ற முடியுமே தவிர இல்லாவிட்டால் பிரிட்டிஷ் எக்கானமியை காப்பாற்ற முடியாது என்று தெரிவித்திருக்கிறார். அவர்களுடைய நிலைமை மட்டுமல்ல, அமெரிக்காவிலும் அந்த நிலை வந்துவிட்டது. அந்த நாட்டினுடைய தேவை, மக்களுடைய தேவை, மாநிலங்களுடைய தேவை, அந்த நாட்டினுடைய வளர்ச்சிக்கு எல்லாம் செலவழித்தது போக பணத்தை மிச்சப்படுத்தி உலக நாடுகளுக்கெல்லாம் உதவி செய்கின்ற அமெரிக்காவில் பிற நாடுகளுக்கு உதவி செய்யக் கூடாது என்ற தன்மையை வைத்து இன்றைக்கு புஷ்ஷினுடைய நிலைமை கீழே இறங்குமா, நிலைமை என்ன ஆகுமோ என்ற நிலை ஏற்பட்டதற்குக் காரணம், அந்நிய நாட்டுக்கு அதிகமாக உதவி செய்ததுதான். அமெரிக்காவில் இப்போதே வேலையில்லாத் திண்டாட்டம் 7 சதவீதம் என்ற நிலைக்கு வந்துவிட்டது. அதை போக்க வேண்டும் என்ற நெருக்கடி நிலை அங்கே இருக்கிறது. இங்கே மட்டுமல்ல.





ஆகவேதான் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்து தெரிவித்ததற்கிணங்க உணர வேண்டியவர்கள் நாம். ஐந்தரை கோடி மக்களுடைய பிரதிநிதிகள் நாம். அவர்களுக்காக பாடுபட வேண்டியவர்கள் நாம், சிந்திக்க வேண்டியவர்கள் நாம். திட்டங்கள் தீட்ட வேண்டியவர்கள் நாம், நடைமுறைப்படுத்த வேண்டியவர்கள் நாம். ஒரு அமைதியான, நிம்மதியான மன நிறைவைக் கொண்டு மன மகிழ்ச்சியோடு இருக்கக் கூடிய ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டிய பெரும் பொறுப்பில் நாம் இருப்பதன் காரணமாக நாம் பொறுப்புணர்ச்சியோடும், கடமை உணர்ச்சியோடும் இருப்பது மட்டுமல்லாமல் மக்களை திருத்த வேண்டிய பொறுப்பிலேயும் இருக்கிறோம். மக்கள் போகிற போக்கிலே போகக் கூடாது, நீ நினைக்கிற நல்ல நிலைக்கு மக்களை இழுக்க வேண்டும் என்று மாவீரன் லெனின் மிக அழகாக எடுத்துச் சொன்னான். அந்த நாட்டினுடைய நிலைமையைப் பார்க்கிற போது, லெனினின் அணுகுமுறை கையாளப்பட்டிருக்குமானால் நிலைமைகள் வேறு. அந்த நிலைமைகள் எல்லாம் மாறி வந்ததற்குப் பிறகு அங்கே சித்றுண்டு போயிருக்கிறது என்பதை நீங்கள் காணலாம்.

ஆக, அந்த வகையிலே எல்லாம் காணுகின்றபொழுது, இந்த மத்திய அரசாங்கத்தினுடைய புதிய பொருளாதார கொள்கையையும் மத்திய அரசின் வர்த்தகக் கொள்கையையும் மாண்புமிகு முதல்வர் அவர்களே வரவேற்று எழுதியது மட்டுமல்லாமல், வரவு செலவுத் திட்டத்திலே அதை நாம் பாராட்டுகிறோம், போற்றுகிறோம் ; நிலைமை சீரடைந்து இருக்கிறது என்பதற்கான காரண காரிய விளக்கங்களை எல்லாம் காணுகிறோம். 2,500 கோடி ரூபாயாக இருந்த அந்நிய செலாவணியினுடைய நிலைமை கீழே போய் இருக்குமேயானால், பல சங்கதிகளிலே உலகத்தினால் வெறுக்கப்பட்டு, இந்த நாடு இழி நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கும். கிட்டத்தட்ட அதை 14 ஆயிரம் கோடி அளவுக்கு கொண்டு வருகின்ற அளவுக்கு அதைக் கொண்டுவந்து சேர்த்து இருப்பதற்கு புதிய பொருளாதார கொள்கை தான் காரணமாக இருந்து இருக்கிறது என்பதோடு, அதைத்தான் நாம் இங்கேயும் கடைப்பிடிக்க வேண்டிய்வர்களாக இருக்கிறோம்.

பிற்பகல் 2.30

இப்போது மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி என்று பார்த்தோமேயானால், எல்லாவற்றையும் உடைமையாக்கி தனியார் உடமையே கிடையாது ; பொதுவார் உடைமைதான் என்று கிழக்கு ஜெர்மனி வைத்து இருந்தது. மேற்கு ஜெர்மனி அமெரிக்காவை பின்பற்றி தனியாக நடத்திக்கொண்டு வந்தது. கடந்த 30, 35 ஆண்டுக் காலத்தில் அந்த வரலாற்றைப் பார்த்தோமேயானால் மேற்கு ஜெர்மனியினுடைய பொருளாதார வளர்ச்சி 64 சதவீதம் உயர்ந்தது என்றும், கிழக்கு ஜெர்மனியினுடைய

பொருளாதார வளர்ச்சி 31 சதவீதம்தான் வளர்ந்தது என்றும், ஆகவே தான் மக்களே திரண்டு எழுந்து இடையிலே வைத்து இருந்த சுவரையே இடித்து அந்த கல்லையும் விற்றுவிட்டு போய் விட்டார்கள் ; அமெரிக்கா ஏலத்திலே எடுத்துக்கொண்டு போய் இருக்கின்றது. ஏனென்றால் உடைந்ததில் அமெரிக்காகாரனுக்கு மகிழ்ச்சி. அந்த உடைந்த கல்லும் அங்கே இருந்தால் மறுபடியும் கட்டிவிடப் போகிறானோ என்னவோ என்று நினைத்து, அமெரிக்காகாரனே அதை வாங்கிக்கொண்டு போய் விட்டான். எதற்காக சொல்கிறேன் என்றால், அந்தக் கொள்கையில், உலகமே மாறுபட்டுக்கொண்டு வருகிறது என்கிறபொழுது, இங்கே இருக்கிற நிலைமைகளை எல்லாம் காணவேண்டும். இந்த பொருளாதார நிலைமைகளை எல்லாம் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் இந்த நேரத்தை எடுத்துக் கொண்டேனே தவிர மற்ற உறுப்பினர்களுடைய கோரிக்கைகள், நீங்கள் எடுத்து வைத்தது எல்லாம் அந்தந்த. அமைச்சர்கள், மற்றவர்கள் அவ்வப்போது முறைப்படி பார்ப்பார்கள். இதற்கு மேல் நீங்களும் தாங்கமாட்டீர்கள் ; அவையும் தாங்காது என்ற காரணத்தால், இவற்றையெல்லாம் உணர்ந்து எதிர்காலத்தில் எடுக்கப்படுகிற சீரிய முறையான நல்ல ஒழுங்கான திட்டவட்டமான உறுதியான நடவடிக்கைகளுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனைபேரும் தங்களுடைய முழு ஆதரவையும் தர வேண்டுமென்று கூறி, ஒட்டுமொத்தமாக நீங்கள் இன்றைக்கு ஒதுக்கித் தரப்போவது ஒன்பதாயிரத்து சில்லரை கோடி; இதற்குக் கூட பல பேர் வரவில்லையே ! (சிரிப்பு) இந்த பணத்தை ஒதுக்குவதற்குக்கூட வரமாட்டேன்கிறார்களே ; இதற்காவது இந்த 9 ஆயிரத்து சில்லரை கோடியை 'ஏற்போர் ஆம் என்க' என்கிறபோது, 5, 6 பேர் மட்டும் 'ஆம்' என்று சொல்கிற அளவுக்கு விட்டுவிடாமல் (சிரிப்பு) இந்த கடைசி, இந்தப் பக்கம் பரவாயில்லை ; (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பக்கமே எப்போதுமே பரவாயில்லை ; (மேசையை தட்டும் ஒலி) அந்த அளவுக்கு 'ஆம்' என்று சொல்கிறபோது, இன்றைக்காவது எல்லோரும் சேர்ந்து 'ஆம்' என்று சொல்லி, இந்த 9ஆயிரத்து சில்லரை கோடி ரூபாயை ஒதுக்கித் தந்தீர்கள் என்றால், உங்கள் தொகுதி வேலை நல்லா இருக்கும் என்று சொல்லி இதை நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. பழனிசாமியையும் தம்புசாமியையும் சேர்த்து என்று சொல்லுங்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> இவர்களையும் சேர்த்து தான். நான் சொன்ன அவ்வளவு பொறுப்புணர்ச்சியும் கடமையுணர்ச்சியும்—கருத்து வேறுபாடுகளிலே வேறுபாடு இருக்கலாம் ; கொள்கைகளிலே வேறுபாடு இருக்கலாம் ; வேறுபல நிலைமைகள் இருக்கலாம் ; இந்த மாநிலம் நன்றாக இருக்கவேண்டும், பொருளாதார நிலை சரியாக இருக்க வேண்டும் என்பதில் யாருக்கும் வேறுபாடு இருக்க நியாயமில்லை.



அவர்களுடைய முழு ஒத்துழைப்பு எனக்கு வரும். ஏனென்றால் வெஸ்ட் பெங்காலே திருந்திக்கொண்டு வரும்போது, சைனாவே திருந்தும் போது, திரு. பழனிசாமி திருந்தவா மாட்டார் ? (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)... பழனிசாமி திருந்தவா மாட்டார் ? ரொம்ப சுலபமாக திருந்துவார் என்று சொல்லி, இந்த வரவு-செலவு திட்ட விவாதங்களை எல்லாம் மிக சிறப்பாக நடத்தி, கண்ணியத்தோடு நடத்தி, முறையோடு நடத்தி, வெற்றி தேடித்தந்த மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, சட்டமன்றப் பேரவையிலே பணியாற்றுகின்ற செயலாளர், மற்றவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, நிதித் துறையிலே இருக்கின்ற செயலாளர் அவர்களுக்கும், துணைச் செயலாளர் அவர்களுக்கும், மற்ற அலுவலர்களுக்கும், அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து தேவைப்படுகின்ற கருத்துக்களை எல்லாம் அவ்வப்போது எடுத்துத் தந்து, அமைச்சர் பெருமக்களுக்கெல்லாம் பேருதவியாக இருந்த அதிகாரிகள் அத்தனை பேருக்கும் நான் நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வாக்கெடுப்புக்கு விடுவதற்கு முன்னர், பேரவை உறுப்பினர்களுக்கு ஒரு செய்தியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தன்னுடைய ஆட்சிக்கு எதிரான விமர்சனங்களை எந்த அளவுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சகிப்புத் தன்மையோடு தாங்கிக் கொள்கிறார் என்பதைத் தெளிவுபட எடுத்துச் சொன்னார்கள். எந்த அளவுக்கு சகிப்புத்தன்மையோடு, ஜனநாயகத்தின் பெயரால் இன்னும் பல்வேறு தியாகங்களைச் செய்வதற்கும் அவர்கள் தயாராக இருந்திருக்கிறார்கள் என்கிற செய்தியை நான் பேரவைக்குத் தெரிவிப்பது இந்த நேரத்தில் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

பிற்பகல் 2-35

இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் பொது விவாதத்தின் போது மொத்த உறுப்பினர்கள் விவாதத்தில் பங்கு கொண்டு எடுத்துக்கொண்ட நேரம் 15 மணி 23 நிமிடங்கள். இதிலே 163 உறுப்பினர்கள் கொண்டிருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் எடுத்துக் கொண்ட நேரம் வெறும் 5 மணி 14 நிமிடங்கள் தான். காங்கிரஸ் கட்சி எடுத்துக்கொண்ட நேரம் 6 மணி 37 நிமிடங்கள். ஆளுங் கட்சியைவிட எதிர்க்கட்சி அதிக நேரம் எடுத்துக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது சட்டமன்ற வரலாற்றிலேயே எடுத்துப் பார்த்தால் கூட, இந்த தமிழ்நாடு சட்ட மன்றத்திலேதான் (மேசையைத் தட்டும் ஒலி) ஆளுங் கட்சியை விட பிரதான எதிர்க்கட்சி அதிகமான நேரம்

[பேரவைத் தலைவர்] [1992 ஏப்ரல் 24

எடுத்துக்கொண்டது என்று சொல்லவேண்டியிருக்கும். அதை விட இன்னும் ஒன்று குறிப்பாகச் சொல்ல வேண்டியது பிரதான எதிர்க்கட்சியாவது 6 மணி நேரம் 37 நிமிடங்கள் எடுத்துக்கொண்டார்கள். ஆளுங்கட்சி 5 மணி நேரம் 14 நிமிடங்கள் தான் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். 12 உறுப்பினர்களைப் பெற்றிருக்கிற மற்ற எதிர்க்கட்சிகள் எல்லாம் சேர்ந்து எடுத்திருக்கிற நேரம் 3 மணி 32 நிமிடங்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) விகிதாச்சாரப்படி பார்த்தால் 29 நிமிடங்கள்தான் இந்தக் கட்சிகளின் உறுப்பினர்கள் அனைவருக்கும் சேர்த்தே கூட ஒதுக்க முடியும். பாராளுமன்றத்திலே அப்படித்தான் நடைமுறையிலே இருக்கிறது. நான் 11 உறுப்பினர்களை உடைய கட்சியினுடைய மக்களவைக் குழுத் தலைவராக இருந்தேன். மக்களவைத் தலைவரிடத்திலிருந்து எனக்குக் கடிதம் வரும். உங்கள் கட்சிக்கு இருக்கிற உறுப்பினர்கள் எண்ணிக்கையின்படி உங்களுக்கு 7 நிமிடங்கள் 21 நொடிகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கடிதம் வரும். அதன் பின்னர் ஸ்பீக்கருடைய கிரேஸ் டைமாக கொடுத்து உங்களுடைய கட்சிக்கு 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று வரும். அப்படி இருக்கிற நிலைமையில் 12 உறுப்பினர்களைப் பெற்றிருக்கிற கட்சிக்கு 3 மணி நேரம் 32 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு கட்சிக்கும் அளிக்கப்பட்ட நேரம்கூட இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை இங்கே பேச விடுவதே இல்லை என்பதைப் போன்ற ஒரு தோற்றத்தை வெளியில் உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒரே ஒரு தி.மு.க. உறுப்பினர் மட்டும் இருந்து, அவர் மட்டும் பேசிய நேரம் 20 நிமிடங்கள். பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் இப்போது அவையில் இல்லை. அவர் எடுத்துக்கொண்ட நேரம் 28 நிமிடங்கள். ஜனதா தள உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிற நேரம் 16 நிமிடங்கள். அன்றைக்கு வேறு அரசியல் கட்சி விவகாரங்களை, கட்சிப் பிரச்சினைகளைப் பேசி, கடைசியில் அவர் வெளிநடப்புச் செய்து விட்டார், இல்லையென்றால் அவர் அதிக நேரம்தான் எடுத்துக் கொண்டிருப்பார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் எடுத்துக் கொண்ட நேரம் 34 நிமிடங்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் திரு. வே. தம்புசாமி அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக அந்த நேரத்தில் அவைக்கு வரவில்லை. எனவே அவருக்கு நேரம் இல்லை. மொத்தம் 34 நிமிடங்கள் திரு. ஜி. பழனிசாமி பேசியிருக்கிறார். திரு.எஸ். திருநாவுக்கரசு 36 நிமிடங்கள் பேசியிருக்கிறார். அகில இந்திய பார்வர்ட் பிளாக் 12 நிமிடங்கள், இந்தியக் குடியரசு கட்சி 16 நிமிடங்கள். ஐக்கிய பொதுவுடைமைக் கட்சி 24 நிமிடங்கள். உழவர் உழைப்பாளர் கட்சி 17 நிமிடங்கள். இந்திய மனித உரிமைக்கட்சி சார்புடைய உறுப்பினர் 10 நிமிடங்கள்.



1992 ஏப்ரல் 24] [பேரவைத் தலைவர்]

ஆகவே இதன்படி பார்த்தால்கூட இதிலே இருக்கிற தோழமைக் கட்சிகள், எடுத்துக்கொண்ட நேரத்தை விட அதிக நேரம் (குறுக்கீடு) 6 நாட்களில், பொது விவாதத்தின்போது எடுத்துக்கொண்ட நேரம். ஆகவே, எந்த அளவுக்குப் பேரவைத் தலைவர் ஆளுங்கட்சியினுடைய நேரத்தை எடுத்து, ஜனநாயகத்தின் பெயரால் இப்படி உறுப்பினர்களுக்குக் கொடுத்திருப்பதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சகித்துக்கொண்டு இருந்து இருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு இது. (மேசையை தட்டும் ஒலி)

இன்றைக்குக் கூட ஒரு பிரபல ஆங்கிலப் பத்திரிகை தலையங்கம் எழுதி இருக்கிறது. இங்கே பத்திரிகையாளர்கள் எல்லாம் இருக்கிறார்கள். நான் அன்றைக்கு மிக வெளிப்படையாகச் சொன்னேன். தரமான மற்றப் பத்திரிகைகளைப் பற்றி எங்களுக்கு எவ்விதமான மாறுபாடான கருத்தும் இல்லையென்று சொன்னேன். அதிலேகூட உள்நோக்கம் கற்பித்துக் கொண்டு, அப்படியானால் ஏதோ இவர்கள்மீது விமர்சிக்கிற சில பத்திரிகைகள்மீது நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்று எழுதுகிற தன்மை இருந்துகொண்டிருக்கிறது. தன்னைப் பற்றி விமர்சிக்கிறவர்களை எந்த அளவுக்குத் தாங்கிக் கொள்கிற சக்தியோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) நான் அத்துமீறி 3 மணி நேரம் 32 நிமிடங்களை 12 கட்சிகள் இருக்கிற, 29 நிமிடங்கள் மட்டுமே விகிதாச்சாரப்படி பெற இருக்கிற கட்சிகளுக்கு, 3 மணி நேரம் 32 நிமிடங்களை, ஆளுங்கட்சியினுடைய நேரத்தை எடுத்துக்கொடுத்திருப்பதையும், பேரவைத் தலைவர் செய்திருக்கிற அந்தக் காரியத்தையும் சகித்துக் கொண்டிருக்கிற அளவுக்கு இருந்திருக்கிறார்கள் என்றால், ஜனநாயகத்துக்கு எந்த அளவுக்கு அவர்கள் மதிப்பு கொடுத்திருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 2-40

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இப்பொழுது என்னுடைய சகிப்புத் தன்மையைப்பற்றி தாங்கள் பேசியதாலும், ஏற்கனவே இங்கே பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சில விமர்சனங்கள் இருந்தாலும் அதைத் தாங்கிக் கொள்ளும் சகிப்புத் தன்மை எனக்கு வேண்டும் என்று கூறியதாலும், இப்பொழுது ஏதோ என்னை விமர்சித்து எழுதுகின்ற பத்திரிகைகள் மீது அரசாங்கம் பழிவாங்குகிற நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருவதாக பத்திரிகைகளில் ஒரு தவறான தோற்றத்தை கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். இதற்கு அடிப்படையாக அவர்கள் எதைக் காட்டுகிறார்கள், எதைக் காரணமாகக் கூறுகிறார்கள்? இங்கே சில பத்திரிகை ஆசிரியர்கள் மீதும், நிருபர்கள் மீதும் இந்தப் பேரவையின் பிரிவிலெஜஸ்

கமிட்டி சில பரிந்துரைகளைச் செய்து, அதன்பேரில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அவர்களுக்கு ஒரு மிகக் குறைந்தபட்ச தண்டனையை வழங்கியிருக்கிறார். அதாவது 'இல்லஸ்ட்ரேடட் வீக்லியின்' நிருபர், 'இல்லஸ்ட்ரேட் வீக்லி யின் நிருபராக இருந்த, கே. பி. சுனில், கோவை மாலை முரசு, முரசொலி, இந்தப் பத்திரிகைகளைச் சார்ந்த நிருபர்கள் மீது இங்கே புகார்கள் கூறப்பட்டு, அந்தப் புகார்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால், இந்தச் சட்டமன்றத்தில் பிரிவிலெஜஸ் கமிட்டிக்கு ரெபர் செய்யப்பட்டு, அவர்கள் தந்த அறிக்கைகளின்பேரில், தாங்கள் இந்த தண்டனையை அறிவித்திருக்கிறீர்கள். இதில் நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், இந்தப் பிரச்சினைகளுக்கும் எனக்கும் துளியும் சம்பந்தமே இல்லை என்பதுதான். இல்லஸ்ட்ரேடட் வீக்லியைப் பொறுத்தவரை, இங்கே இந்த ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பியது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே ஒரு புகாரைச் சொல்லி அவர்கள் எழுப்பிய பிரிவிலெஜ்ஸ் இஸ்யூவின்மீதுதான், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இதை ரெபர் செய்து, அதன்மீது பிரிவிலெஜஸ் கமிட்டி ஒரு அறிக்கையைத் தந்து இப்போது இந்தத் தண்டனையை பேரவைத் தலைவர் அவர்கள் வழங்கி இருக்கிறீர்கள். ஆனால் வெளியிலே பேசப்படுவது என்ன? இன்றுகூட ஒரு மிகப் பிரபலமான அகில இந்திய நாளேட்டில் வந்துள்ள தலையங்கத்தில் எழுதி இருப்பது என்ன? ஜெயலலிதாவிற்கு சகிப்புத் தன்மை இல்லை. ஜெயலலிதாவை விமர்சித்தால் தாங்கிக் கொள்வதில்லை. ஜெயலலிதாவை குறை கூறியதால் இந்த பத்திரிகை நிருபர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதுவா உண்மை? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன பிரச்சினைக்கும், எனக்கும் துளியும் சம்பந்தம் இல்லை. அதைப்போலவே கோவை மாலை முரசு, முரசொலி, இந்த இரண்டு பத்திரிகைகளிலும் இந்த அவையில் நடக்காத சில சம்பவங்களை நிகழ்வுகளை நடந்ததாக அவர்கள் எழுதினார்கள். அதனால், சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்பினார்கள். அதன்மீது பேரவைத் தலைவர் அவர்கள், அவற்றை பிரிவிலெஜஸ் கமிட்டிக்கு ரெபர் செய்து, பிரிவிலெஜஸ் கமிட்டி கொடுத்த அறிக்கையின்பேரில், தாங்கள் தண்டனையை அறிவித்து இருக்கிறீர்கள். இதில், where do I come into the picture? நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், இதனை இன்றைக்கு இந்தியா முழுவதும் ஏதோ ஒரு பெரிய இயக்கமாக நடத்திக் கொண்டிருக்கிறார்களே, சில பத்திரிகை உலக நண்பர்கள், தமிழகத்தில் பத்திரிகை சுதந்திரம் நசுக்கப்படுகிறது.. ஒடுக்கப்படுகிறது. பத்திரிகையாளர்கள் பழிவாங்கப்படுகிறார்கள் என்று. நான் சொல்ல விரும்புவது எல்லாம், என்னைப் பற்றி எவ்வளவோ டுமையான விமர்சனங்கள் பத்திரிகையிலே வந்து இருக்கின்னவே, தினமும் வந்து கொண்டிருக்கின்றனவே, இன்றும் ட[illegible] வந்திருக்கின்றனவே, என்னைப்பற்றி எழுதப்பட்ட,



கூறப்பட்ட, விமர்சனங்களுக்கு இதுவரை, இந்தப் பேரவை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? (மேசையைத் தட்டும் ஒலி)

என்னை விமர்சனம் செய்ததற்காகவோ, என்மீது அபாண்டமான பழிகள் சுமத்தப்பட்டதற்காகவோ. என்னைத் தரக்குறைவாக சித்தரித்து என்னை கேலிக்குறியாக்கி, என்னைப் பற்றி எழுதப்பட்ட விமர்சனங்களுக்கு இந்தப் பேரவையில் இதுவரை நான் ஏதாவது ஒரு ஒழுங்குப் பிரச்சினையாவது எழுப்பி இருக்கின்றேனா, இதுவரை தங்களிடம் இத்தகைய புகார் ஏதும் நான் சொல்லி இருக்கின்றேனா? நான் விமர்சிக்கப்பட்டதற்கு இதுவரை இந்தப் பேரவை ஏதாவது பழி வாங்குகிற நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதா என்றால் இல்லை. இப்பொழுது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கும் எனக்கும் தனிப்பட்ட முறையில் எவ்வித சம்பந்தமும் இல்லை. எனவே, தமிழகத்தில் பத்திரிகைச் சுதந்திரம் ஆரோக்கியமாக இருக்கிறது. ஜனநாயகமும் ஆரோக்கியமாக இருக்கிறது. பத்திரிகை உலக நண்பர்களையோ, பத்திரிகை உலகத்தையோ ஒட்டுமொத்தமாக பழிவாங்குகின்ற நடவடிக்கைகளில் இந்த அரசு ஈடுபடவில்லை, இந்தப் பேரவையும் ஈடுபடவில்லை என்பதை மட்டும் இந்த நேரத்திலே சொல்லிக்கொண்டு, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 2—45

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சொல்லிவிட்டார்கள். இந்தக் கருத்தை நான் சொல்ல வேண்டும் என்றுதான் இந்தப் பிரச்சினைக்கே வந்தேன். இந்த அளவிற்கு ஜனநாயகத்திற்கு மதிப்பு அளித்து, தன்னுடைய கட்சி உறுப்பினர்களுடைய பேச்சுக்களையும் எண்ணிக்கையையும் குறைத்துக்கொண்டு, அவர்களுடைய நேரத்தையும் குறைத்துக்கொண்டு—29 மணித்துளிகள் மட்டுமே ஒதுக்கி இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிச்சாமி மட்டும் கூட பேசி முடித்திருக்க முடியாது.— அந்த அளவுக்கு இருக்கக் கூடிய சூழ்நிலையில் அவர்கள் அனைவரும் பேச வேண்டும், அவர்களுடைய கருத்துக்களையும் சொல்லவேண்டும், விமர்சனங்கள் இருந்தால் அதற்குப் பதில் சொல்லுகிறோம். குற்றம் குறைகள் இருந்தால் அதைக் களைவதற்கு ஏற்பாடு செய்கிறோம், ஆகவே எங்கள் நேரத்தையும் அவர்களுக்குக் கொடுங்கள் என்று எந்த அளவுக்குச் சகிப்புத் தன்மையோடு நடந்துகொண்டு, இந்தப் பேரவையில் ஜனநாயகத்திற்கு மதிப்பு அளித்து காரியம் ஆற்றி வந்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—இன்றைக்குக்கூட அப்படிப் பத்திரிகையில் வந்திருக்கிறது—தன்னை விமர்சனம் செய்தவர்களை எதிர்த்து இத்தகைய நடவடிக்கைகளுக்கு சென்றிருக்கிறார்கள் என்பதைப் போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்கியும் அகில இந்திய அளவில் ஏதோ பத்திரிகையாளர்களைக் கடுமையாக இந்தப் பேரவை நடத்தி வருகிறது என்பது போலவும் ஒரு [illegible]த்தை உருவாக்கிக் கொண்டு வருகிறார்கள்.

குறிப்பாக இன்றைக்கு நாம் தண்டனை வழங்க இருக்கிறோம் என்று சொல்வதே கூட, ஏதோ வாரண்ட் போட்டு பிடித்துக் கொண்டு சிறைச் சாலையிலே போடுங்கள் என்று நாம் வாரண்ட் பிறப்பித்து இருக்கவில்லை. 20 ஆம் தேதி இந்தப் பேரவைக்கு வரவேண்டும் என்று அனுப்பிய சம்மனை வாங்கிக்கொண்டு, அந்த சம்மனுக்கு மதிப்பு அளிக்க மறுத்திருக்கிற ஒரு பத்திரிகையாளரைக் காவல் துறை மூலம் இங்கே கொண்டுவாருங்கள் என்று சொல்லியிருக்கிறோம். தண்டனை என்பதே கூட இல்லை. இந்தப் பேரவைக்கு அவர்களை அழைத்து வருவதற்காகத்தான் இந்த வாரண்ட் என்று பெயர் இருக்கிறதே தவிர வேறு அல்ல. இந்தப் பேரவைக்கு அழைத்து வரச் சொல்லியிருக்கிறோம்.

அது தவிர இங்கே இருக்கிற இரண்டு பத்திரிகையாளர்கள் மீது எடுத்த ஒரு நடவடிக்கையும் கூட, இதில் தன்னுடைய பெயரை இழுத்துத் தன்னுடைய பகுதியில் தனக்கு அவப்பெயரை உண்டாக்குகிற வகையில், இந்தப் பேரவையில், தான் நடந்து கொண்டதாக, நடக்காத ஒரு சம்பவத்தை நடந்ததாக எழுதியிருக்கிற பத்திரிகையின் மீது உரிமைப் பிரச்சினையை திரு. வி. பி. சந்திரசேகரன் அவர்கள் கொண்டு வந்தார். இந்தப் பேரவையில் நடக்காத ஒரு சம்பவத்தை நடந்ததாகக் குறிப்பிட்டு தன்னுடைய பெயரையும் அதிலே இழுத்து, தனக்குக் களங்கம் உண்டாக்குகிற வகையில் நடந்து கொண்டிருக்கிறார்கள். அதன் மீது உரிமைக் குழுவிற்கு அனுப்பி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு. தண்டாயுதபாணி கொண்டு வந்தார்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்பினேன். இப்போது இந்தியா முழுவதிலும் உள்ள பத்திரிகையில் பெரிய கூக்குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே எனக்கு சகிப்புத் தன்மை இல்லை. பத்திரிகை சுதந்திரத்தை நசுக்கிக் கொண்டு இருக்கிறேன், ஜனநாயகத்தையே குழி தோண்டிப் புதைத்துக் கொண்டிருக்கிறேன் என்று, அதைத் தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்னுடைய சகிப்புத் தன்மையைப் பற்றி யாருக்கும் சிறிதளவும் சந்தேகம் வேண்டாம். எனக்கு நிறைய சகிப்புத் தன்மை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு நிறைய சகிப்புத் தன்மை இருப்பதனால்தான் என்னைப்பற்றி கூறப்பட்ட, எழுதப்பட்ட விமர்சனங்களுக்கு உண்மைக்குப் புறம்பான செய்திகளுக்கு, இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்க வேண்டும் என்று இந்தப் பேரவையை, பேரவைத் தலைவரை நான் கேட்டுக் கொள்ளவில்லை. அத்தகைய எந்த ஒரு நடவடிக்கையும் இந்த அரசாங்கம் எடுக்கவில்லை. இப்போது தாங்களே குறிப்பிட்டபடி எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகள் யார் கொடுத்த புகார்களின் பேரில் ஒன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இன்னொன்று மாண்புமிகு உறுப்பினர் சந்திரசேகரன் அவர்கள், மூன்றாவது மாண்புமிகு உறுப்பினர் தண்டாயுதபாணி அவர்கள், இந்த மூன்று



பிரச்சினைகளிலுமே நான் சம்பந்தப்படவில்லை. இவை எல்லாம் அவையின் கண்ணியத்தைப் பாதிக்கும் விஷயங்கள். எனவே தான் இந்த பிரச்சினைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்றைக்கு இருக்கிற ஒரு வழக்கம் என்ன ? ஒரு டிரண்ட் என்ன ? தமிழகத்திலே என்ன நடந்தாலும், அரசாங்கத்திலே என்ன நடந்தாலும், இந்தப் பேரவையில் என்ன நடந்தாலும் உடனே அவைகளை ஜெயலலிதா மீது போடு. என்ன பிரச்சினை என்று ஆராய வேண்டியது இல்லை. எதற்காக அந்த ஒழுங்கு பிரச்சினை எழுப்பப்பட்டது என்று பார்க்க வேண்டியது இல்லை. எதற்காக இந்தத் தண்டனை கொடுக்கப்பட்டது என்பதைப் பற்றிக் கவனிக்க வேண்டியது இல்லை; பரிசீலிக்க வேண்டியது இல்லை; ஒட்டு மொத்தமாக கண் மூடித்தனமாக யார் புகார் கொடுத்தாலும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் உடனே பழியை ஜெயலலிதா மீது போடுவது என்ற வழக்கத்தைப் பத்திரிகை உலக நண்பர்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தயவு செய்து பத்திரிகை உலக நண்பர்கள் அந்த பழக்கத்தை கைவிட வேண்டும் என்று மட்டும் கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 2-50

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு அவை முன்னவர்

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாலைமுரசைப் பொறுத்த வரையில் அவை உரிமை குழுவிலே நானும் உறுப்பினராக இருக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும் இருக்கிறார்கள். அவருடைய ஆசிரியரை வைத்து கேட்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரசேகர் எங்களுக்குப் பின்னால் உட்கார்ந்து இருக்கிறார். திரு. பரிதி இளம்வழுதி எதிரிலே இருக்கிறார். கேள்வி நேரத்தின்போது அவரவர்கள் அவரவர்கள் இடத்திலே இருக்க வேண்டும் என்பது தான் நியதி. கேள்வி நேரம் முடிந்ததற்குப் பிறகும் கூட அவரவர்கள் அவரவர்கள் இடத்தை விட்டு நகர முடியாது. ஆனால் இங்கே இருப்பவர் அங்கே போய் அடித்தார் என்று பத்திரிக்கையில் வருகின்றபோது தவறு என்று நாம் சொல்கிறோம். இது தவறு என்று இந்த அவை உரிமைக் குழு கருதுகிறது. திரு. சந்திரசேகர் இருக்கிற இடம் எங்களுக்கு பின்னால், திரு. பரிதி இளம்வழுதி இருந்தது எதிரிலே, எப்படி போய் அடித்து இருப்பார், அடித்து இருக்க முடியாது, நீர் பார்த்தீரா ? என்றால் அந்த நிருபர் சொல்லுகிறார், பார்த்தேன் அடித்தார், திருப்பி, திருப்பிச் சொல்லுகிறார். ஆசிரியரைக் கேட்கிறோம், நான் நிருபரை நம்புகிறேன், நீங்கள் சொல்லுவதை நான் நம்பவில்லை என்று சொல்லியதற்குப் பிறகு என்ன தண்டனைக் கொடுப்பது ? இது தவறு என்று எந்த பத்திரிகையாவது எழுதுகிறார்களா ? இந்த மாதிரி இல்லாத ஒன்றை எழுதியது தவறு என்றாவது பத்திரிகைகள், சுதந்திரத்தை காப்பாற்றுகின்றவர்கள் குறிப்பிட்டுக் காட்டுகிறார்களா என்றால் அதுவும் இல்லை. இப்படிப்பட்ட பிரச்சினைகளை பிரஸ்

கவுன்சிலாவது பொறுப்பு ஏற்றுக்கொண்டு நடக்கும் என்று இருந்தால் இந்த அவை கூட விசாரிக்க வேண்டிய அவசியம் இருக்காது. அதையாவது செய்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. ஆனால் இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சிறப்பாக எடுத்து தெரிவித்ததைப் போல இந்தப் பிரச்சினைகள் இந்த அவையைப் பொருத்ததே தவிர அவர்களைப் பற்றி தனிப்பட்ட முறையில் எழுதினார்கள் என்பதற்காகவோ, தனிப்பட்ட முறையில் விமர்சித்தார்கள் என்பதற்காகவோ, இந்த அவை யார் மீதும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதைத் தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். இதை நாடும் உணர வேண்டும்; உலகமும் அறிய வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்லிவிடுகிறேன் இருங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போன்று பல்வேறு வாரப் பத்திரிகைகள் சில கேலிச் சித்திரங்களையும் சில கேலிக் கூத்தான படங்களைப் போட்டுக் கூட சிலர் பொறுப்பு இல்லாமல் எழுதுவது என்பது உண்மை தான். அதை நாங்கள் யாரும் மறுக்கவில்லை. அப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்கின்றன. சில பொறுப்பான பத்திரிகைகள் கூட அப்படி எழுதுகிறபோது நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கூட இது சட்டமன்றத்திலே நாம் இப்படிப்பட்ட தவறான கருத்துக்களை கொண்டுவருகிறபோது கண்டனம் தெரிவிக்கலாம். அவர்களை நாம் தண்டிக்கலாம். இப்படிப்பட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு இடையிலே பிரிவில்லேஜ் கமிட்டிக்கு விட்டு அதற்குப் பிறகு அவர்கள் தொடர்ந்து அதேபோல் கையாண்டார்கள் என்று சொன்னால் அந்தப் பத்திரிகைகள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உண்மையிலேயே தைரியமாக இந்த சபையினுடைய மரபை காபந்து பண்ணுவதிலே ஒரு முக்கியமான கருத்தாகும். ஆனால் அதேநேரத்தில் நாம், நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அதுபோன்ற பத்திரிகை ஆசிரியரை, பத்திரிகையினுடைய நிருபரை ஒரு கோர்ட் போன்று (குறுக்கீடு) நான் சொல்லி விடுகிறேன், உட்காருங்கள் இந்த சபையில் கொண்டுவந்து நிறுத்தி (குறுக்கீடு) நான் சொல்லி விடுகிறேன். அதன் பிறகு நீங்கள் சொல்லுங்கள் (குறுக்கீடு), தீர்ப்பை நான் மறுத்து சொல்லவில்லை. நான் என்ன சொல்ல வருகிறேன் என்று கேளுங்கள். நான் சொல்லிய பிறகு நீங்கள் சொல்லுங்களேன். நான் மாண்புமிகு சபாநாயகருடைய தீர்ப்பை மறுக்கவில்லை. நான் இன்னும் சொல்லுகிறேன். மாண்புமிகு சபாநாயகருடைய தீர்ப்பை மறுக்கவில்லை.

அதேபோன்ற நம்முடைய சட்டமன்றத்திற்கு இருக்கக்கூடிய ஆழமான பலத்தை நாம் எந்த நேரத்திலும் இழந்து விடாமல் நீங்கள் பாதுகாக்க வேண்டும். அதில் உங்களுக்கு கடமை



இருக்கிறது. நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆக அப்படிப்பட்ட பத்திரிகைகளை இதுபோன்ற கோர்ட் போன்று கொண்டுவந்து நிறுத்துவது என்பது அதை நீங்கள் மீண்டும் மறுபரிசீலனைச் செய்ய வேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதற்குத் தான் வருகிறேன். நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டு இருக்கிறீர்கள் நான் இப்போது அதற்குத்தான் வருகிறேன். நான் உங்களைக் கேட்கிறேன்; இப்போது உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன்.

இப்போது மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஒரு பத்திரிகையைப்பற்றிச் சொன்னார்கள். உரிமைக் குழுவிலே வைத்து இது தவறா? இல்லையா? என்று கேட்கிறார்கள். தவறு தான் வருந்துகிறோம் என்று சொல்லலாம். நாங்கள் வருத்தப்பட வேண்டிய அவசியம் இல்லை, நடந்ததைப் போட்டோம் என்று சொல்கிறார்கள்.

இன்னொரு பத்திரிகை முரசொலி. முரசொலிப் பத்திரிகையைப் பொறுத்தமட்டில் இங்கே ஒரு உறுப்பினரை அவருடைய பொது வாழ்வுக்குக் களங்கம் ஏற்படுகிற வகையில் செய்தியையும் வெளியிட்டுவிட்டு, அதற்கும் மேற்கொண்டு இந்த அவையிலே அவைத் தலைவரால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதியை பிரசுரித்துவிட்டு, இப்படி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட ஒரு பகுதியை நீங்கள் பிரசுரிக்கலாமா என்று கேட்டால் எங்களுக்கு நிருபர் கொடுத்தார், நான் போடுகிறேன். என்றும் சரி அந்த நிருபர் யார் என்றால் சொல்ல முடியாது என்றும் உரிமைக் குழுவிலே வந்து பத்திரிகை ஆசிரியர் சொல்லியிருக்கிறார். இவர்களுக்குத் தண்டனை என்பதை இப்படி இதிலே கொண்டுவந்து நிறுத்துவதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நீங்கள் கேட்கிறீர்கள். இந்த உண்மையை அந்தப் பத்திரிகைகள் இன்றைக்கு வெளியிலே சொல்கிறார்களா அல்லது அவர்களுக்காகப் பரிந்துப் பேசுகிற பத்திரிகைகள் வெளியிலே சொல்கிறார்களா என்று தான் நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 2–55

அதை விடுத்து இத்தனையையும் சகித்துக் கொண்டிருக்கின்ற முதலமைச்சரை அவர்மீது விமரிசித்து எழுதியிருக்கின்ற காரணத்தினால் இந்தப் பத்திரிகைமீது நடவடிக்கை என்கிற அளவுக்கு அவர்கள் செய்தியை வெளியிட்டுக் கொண்டு வெளியிலேயும் செய்தியைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தான் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கின்ற உண்மை இன்றைக்குத் தலையங்கம் எழுதியிருக்கின்ற அந்தப் பிரபல பத்திரிகையே, இந்த அவை எடுத்த நடவடிக்கையை முதலமைச்சர் அவர்கள்மீது எவ்வளவோ வசைமாரிகளைப் பொழிந்து அத்தனையையும் சகித்துக் கொண்டிருக்கின்ற ஒரு முதலமைச்சரை—இந்த அவையில் மற்ற உறுப்பினர்கள், திரு.

சந்திரசேகர் நான் பாதிக்கப்படுகிறேன், என்னுடைய ஊரில் என்னைத் தவறாக நினைக்கிறார்கள் என்று சொல்கிறார். நான் அனைத்து இன மக்களையும் என்னுடைய உடன்பிறந்த உடன்பிறப்புக்களாக கருதிக்கொண்டு இருக்கிறவன், நான் ஜாதித் துவேஷம் உடையவன் என்பதைப் போல ஒரு செய்தியைப் பரப்பி விட்டார்கள் என்று திரு. தண்டாயுதபாணி இங்கே ஆத்திரப்படுகிறார். அதைத் தாங்கிக்கொள்ள இரண்டு உறுப்பினர்களாலே முடியவில்லை என்கிற அளவில் இந்த அவையும் ஏற்றுக்கொண்டு அவர்களுடைய உணர்வுகளை ஏற்றுக்கொண்டு உரிமைக் குழுவுக்கு அனுப்பி, உரிமைக் குழு விசாரித்து இன்றைக்கு நடவடிக்கை எடுக்கிறது, ஆனால் இதைப்போல தாங்கமுடியாத கொடுமைகளை இன்றைக்குத் தாங்கிக் கொண்டிருக்கின்ற முதலமைச்சர் அதைத் தாங்கிக் கொண்டிருக்கிறார் என்று சொன்னால், இந்த இரண்டு உறுப்பினர்கள் நாங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறோம், நடவடிக்கை எடுத்து எங்களுக்கு நீதி வழங்குங்கள் என்று கேட்டுக்கொண்ட தன்மீது நாம் நடவடிக்கை எடுத்து இருப்பதில் இந்தியா முழுமையும் இதிலே எந்த வகையிலேயும் சம்பந்தம் இல்லாமல் அனைத்தையும் சகித்துக் கொண்டிருக்கின்ற முதலமைச்சரை— இழித்தும், பழித்தும் பேசுகின்ற அளவுக்குச் செய்திகளை வெளியிட்டுக் கொண்டு இருக்கிறார்கள் என்று சொன்னால், நான் எதிர்பார்த்தேன், திரு. பழனிசாமி அவர்கள் எழுந்த உடனேயே அதைக் கண்டிக்கிறேன் என்று சொல்ல வருகிறார் என்று, அதை விடுத்துவிட்டு, அவர்களுக்குப் பரிந்து பேச எழுந்து நின்றாரே என்றுதான் வருத்தமாக இருக்கிறது. (குறுக்கீடு) நம்முடைய தண்டனை என்பது, அன்றைக்கே உங்களிடம் நான் படித்துக் காண்பித்தேன் மே'ஸ் பார்லிமெண்டரி ப்ராக்டீஸில் ஒரு பேரவை, பேரவை உரிமை மீறியவர்களைத் தண்டிப்பது என்பதற்காக ரிப்ரிமாண்ட் செய்வது என்பது இருக்கிறதே அது தான் குறைந்தபட்ச தண்டனை என்பதைத் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள், அந்தக் குறைந்தபட்சத் தண்டனையை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று தான் நாம் கோரியிருக்கிறோம். உரிமைக் குழுவிலே வைத்து அவர்களிடத்திலே, இப்போதாவது உரிமைக் குழுவினிடத்தில் வருத்தம் தெரிவிக்கிறீர்களா என்று கேட்டிருக்கிறார்கள் இந்த இரண்டு பத்திரிகையையும்—கோவை மாலைமுரசு பத்திரிகை ஆசிரியரையும், முரசொலி பத்திரிகை ஆசிரியரையும், இப்போதாவது இந்தக் குழுவின் முன்னர் இந்த அவையில் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குவது, சில நேரங்களில் நீங்களே கேட்கிறீர்கள், அவைக் குறிப்பிலேயிருந்து இதை இதை நீக்குங்கள் என்று. உங்களுடைய வேண்டுகோளை ஏற்றே கூடச் சிலவற்றை நீக்குகிறேன். அதையெல்லாம் ஒரு பத்திரிகை வெளியிடுவோம் என்று வெளியிட்டு விடுகிறார்கள்— இப்படி நீக்கியிருக்கிறாரே பேரவைத் தலைவர், அதை வெளியிட்டிருக்கிறீர்களே என்று உரிமைக் குழுவிலே கேட்டு அதற்காக நீங்கள் வருத்தம் தெரிவிக்கிறீர்களா என்று கேட்டால் நான் வருத்தம் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று



உரிமைக் குழுவில் அந்த ஆசிரியர் வந்து சொல்கிறார். அவருக்காகப் பரிந்து பேசுவதற்கு திரு. பழனிசாமி எழுந்து நிற்கின்ற போதே எனக்கு வருத்தமாக இருக்கிறது. இங்கு இதுதான் வளரும். நான் கேட்கிறேன் இந்த அவையில், அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதியை ஒரு பத்திரிகை வெளியிட்டுவிட்டு அதை வெளியிட்டதற்காக வருத்தம் தெரிவிக்கிறீர்களா என்று கேட்டால் நாங்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று உரிமைக் குழுவிலே வந்து சாட்சியம் அளித்திருக்கிறார்களே அது நியாயமா?

இன்றைக்கு மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்களும், திரு. சந்திரசேகர் அவர்களும் திரு. தண்டாயுதபாணி அவர்களும் எழுப்பிய பிரச்சினையின்மீது எடுத்திருக்கின்ற நடவடிக்கைக்கு மாண்புமிகு முதலமைச்சரை இதிலே அவர்கள் பெயரை இழுத்து சம்பந்தப்படுத்தி அவர் எடுத்திருக்கின்ற நடவடிக்கை என்பதைப் போல வெளியில் டெல்லி வரையிலேயும் எழுதிக் கொண்டிருக்கிறார்களே அது நியாயமா என்பதற்கு மட்டும் நீங்கள் பதில் சொன்னால் நன்றாக இருக்கும்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா</u> : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பத்திரிகைகளில் என்ன எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இன்று ஒரு தலையங்கம் வந்திருக்கிறது, அதே பத்திரிகையில் ஏறக்குறைய 5, 6 நாட்களுக்கு முன்னால் இதே சப்ஜெக்ட்டை பற்றி இன்னொரு தலையங்கம் தீட்டியிருந்தார்கள்? இதே பொருளைப் பற்றித்தான், என்ன சொல்கிறார்கள் என் மீது கூறப்படுகின்ற குற்றச்சாட்டுகள் என்ன? என்னை விமர்சித்தால் அதைச் சகித்துக்கொள்ளும் தன்மை எனக்கு இல்லை என்கிறார்கள், என்னைச் சில பத்திரிகைகள் விமர்சித்தால் அந்தப் பத்திரிகைகளை நான் பழிவாங்குகின்றேன், பழிவாங்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளேன் என்று குற்றம் சாட்டுகிறார்கள், ஏற்கெனவே இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோதே முதலமைச்சர் சொன்னார்களே, எதிர்க்கட்சி வரிசையில் அதிகப்படியான உறுப்பினர்கள் இல்லாததால் பத்திரிகைகள் தான் எதிர்க்கட்சியின். அந்தப் பங்கை அந்தப் பணியைச் செய்யவேண்டும் என்று முதலமைச்சரே சொன்னார்களே, எனவே அந்தப் பணியைச் செய்கின்ற பத்திரிகைகள் மீது ஏன் பழிவாங்குகின்ற நடவடிக்கைகளில் இறங்க

பிற்பகல் 3-00

வேண்டும் என்று கேட்கிறார்கள், நான் அன்றைக்கும் சொன்னேன், இன்றைக்கும் சொல்கிறேன், விமர்சனம் செய்யக் கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால் அந்த விமர்சனம், Their Critiuism should be based on facts.
உண்மைகளின் அடிப்படையில் விமர்சனம் செய்யுங்கள், தாராளமாக விமர்சனம் செய்யுங்கள். அதை நான் என்றைக்கும் ஏற்றுக் கொள்வேன், சகித்துக் கொள்வேன், ஆனால். இல்லாதவற்றைச் சொல்லி இட்டுக்கட்டி. உண்மைக்குப் புறம்பான

குற்றச்சாட்டுகளை சுமத்துகின்றபோது அதற்குப் பெயர் விமர்சனமா? அதைச் சகித்துக்கொள்ள வேண்டுமா? ஆனால் அப்படிப்பட்ட உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுகள். அபாண்டமான பழிகள் என்மீது சுமத்தப்பட்டபோதிலும் அவற்றை நான் சகித்துக்கொண்டுதான் இருக்கிறேன், அவற்றின் அடிப்படையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை, சான்றாக இந்த அவையின் நேரத்தைக் கருதி ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன், 5, 6 நாட்களுக்கு முன்னர் ஒரு பிரபல அகில இந்திய நாளேட்டில் ஒரு தலையங்கம் எழுதி இருந்தார்கள் இன்றைக்கு தலையங்கம் வெளியிட்டு இருக்கிறதே, அதே நாளேடுதான், அதில் என்ன எழுதி இருந்தார்கள் என்றால். இந்த அம்மையார் செய்கின்ற தவறான காரியங்கலை. சில வாரப் பத்திரிகைகள் வெளியிட்டுவிட்டன; இதனால் அந்தப் பத்திரிகைகளை நசுக்கவேண்டுமென்று இந்த அம்மையார் கருதுகிறார், ஆனால் இதில் என்ன தவறு இருக்கிறது? ஏனென்றால், இதே விஷயங்களை வேறு சில நாளேடுகளும் வெளியிட்டு விட்டன, அதாவது. அவர்கள் என்ன சொல்கிறார்கள், சமீபத்தில், I have acquired some property, there has been property acquisition. சில சொத்துக்களை நான் வாங்கி இருக்கிறேன் என்கிறார்கள்

There has been corrborating evidence in some other papers என்றும் சொல்கிறார்கள். இவையெல்லாம், இந்தப் பொறுப்புள்ள அகில இந்திய நாளேட்டில் தலையங்கத்தில் கூறப்பட்ட விஷயங்கள் அவர்கள் எதை ரெஃபர் செய்கிறார்கள் என்றால் நான் ஏதோ சமீபத்தில் ஒரு நிலத்தை வாங்கியதாகச் சொல்கிறார்கள், அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த நிலம், 24 ஆண்டுகளுக்கு முன்னால் நான் வாங்கிய திராட்சைத் தோட்டமாகும், நான் அரசியலுக்கே வராத காலத்தில் நான் சினிமா படங்களில் நடித்துக்கொண்டிருந்த நேரத்தில் ஹைதராபாத்தில் ஒரு திராட்சைத் தோட்டத்தை வாங்கினேன். அதைத்தான் அவர்கள் recent property acquisition.

என்று கூறுகிறார்கள், அதுமட்டுமல்ல. இங்கே. 1989–90 ஆம் ஆண்டுகளில் தி,மு,க, அரசு இருந்தபொழுது என்னை எந்த அளவிற்குப் பழிவாங்கினார்கள் என்பதை நான் வெளியில் சொல்ல முடியவில்லை, இங்கே வாழ்க்கையே நடத்தமுடியாத ஒரு சூழ்நிலையை அவர்கள் ஏற்படுத்தியதால். என்னை அந்த அளவிற்கு முன்னாள் முதலமைச்சர் பழி வாங்கியதால். அவருடைய கொடுங்கோன்மையைத் தாங்க முடியாமல். எனக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைத் தாங்க முடியாமல். இங்கே மருத்துவ சிகிச்சைக்கூடப்பெற முடியாத ஒரு சூழ்நிலையை அவர்கள் ஏற்படுத்தியதைத் தாங்க முடியாமல். ஹைதராபாத்திற்குச் சென்று அங்கே ஏற்கெனவே 24 ஆண்டுகளுக்கு முன்னால் 1968-ஆம் ஆண்டில் நான் வாங்கிய திராட்சைத் தோட்டத்தில் ஒரு வீட்டைக் கட்டலாம்; அங்கேயே சிலகாலம் குடியேறி விடலாம் என்ற எண்ணத்துடன் அப்போது ஆந்திரா அரசாங்கத்திற்கு, அங்கே அந்தத் தோட்டத்தில் வீட்டைக் கட்ட அனுமதி கோரினேன், 1990-ஆம் ஆண்டில், அந்த அனுமதி எனக்கு 1991-ஆம் ஆண்டு ஜனவரி



மாதம் வழங்கப்பட்டது, 1990-இல். முதலில் ஒரு கடிதம் எழுதினேன், அதற்கு உடனடியாக பதில் வரவில்லை, எனவே. 1991-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 2–ஆம் தேதி நான் மீண்டும் ஒரு கடிதத்தை ஆந்திரா அரசிற்கு எழுதினேன், அதற்கு அவர்கள் 15-ஆம் தேதியே எனக்கு பதில் கொடுத்து. எனக்கு அனுமதியும் தந்தார்கள். வீட்டைக் கட்டலாம் என்று. உடனேயே வீட்டைக் கட்டும் பணியைத் தொடங்கினேன், அந்தக் கடிதத்தை எப்படியோ பெற்று, அதை இங்கே சில பத்திரிகைகள், முரசொலி தமிழன். தினகரன் போன்ற பத்திரிகைகள் வெளியிட்டு, அவர்கள் என்ன செய்தார்கள் என்றால், அந்த 1991 என்ற ஆண்டை மட்டும் இருட்டடிப்பு செய்து விட்டார்கள், அதை block out செய்து. 15/11 என்ற தேதியை, ஏதோ இந்த ஆண்டு நான் முதலமைச்சரான பிறகு இப்பொழுது ஒரு நிலத்தை வாங்கி. இப்பொழுது புதியதாக ஒரு வீட்டை கட்டுவதுபோன்று அவர்கள் ஒரு பொய்யான தோற்றத்தை அளிக்க முயற்சி செய்திருக்கிறார்கள். இதையே எடுத்து ஸ்டேட்ஸ்மேன் போன்ற பத்திரிகைகள், இன்னும் சில அகில இந்திய ஆங்கில நாளேடுகளெல்லாம் இதையே மீண்டும் பிரசுரித்து, இதைத்தான் Corrcborative evidence which has been published by other newspapers also, என்று கூறுகிறார்கள். ஆனால், அதிலேயே அவர்கள் சிக்கிக் கொண்டார்கள், ஏனென்றால், அந்த ஆந்திர அரசு அதிகாரி அனுமதி வழங்கியபொழுது அவர் அந்த letter pad–லேயே அதே கடிதத்திலேயே அவர் 15/11 என்று தேதி போட்டிருக்கிறார் அதை இவர்கள் கவனிக்கவில்லை, எனவே, அவர்கள் எவ்வளவு உண்மைக்குப் புறம்பான ஒரு விஷயத்தை வெளியிட்டு இருக்கிறார்கள் என்பது அவர்கள் வெளியிட்ட அந்தக் கடிதத்தின் ஜெராக்ஸ் காப்பியிலேயே இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி).

எனவே, நான் விண்ணப்பித்தது எப்போது? அங்கே வீட்டை கட்டலாம் என்ற அனுமதி எனக்கு வழங்கப்பட்டது எப்போது? 15–1–1991. அப்பொழுது இன்னும் இங்கே தி. மு. கழகம்தான் ஆட்சியில் இருந்தது. தி. மு. கழக அரசுதான் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்பொழுது இன்னும் தி. மு. க. அரசு கலைக்கப்படவில்லை. அப்பொழுது 15–1–1991-ல் நான் தி. மு. க. அரசு கலைக்கப்படப் போகிறது. பின்னர் மீண்டும் மே மாதத்தில் தேர்தலை அறிவிக்கப் போகின்றார்கள், பின்னர் அந்தத் தேர்தல் ஜூன் மாதத்திற்குத் தள்ளி வைக்கப்படப் போகிறது; மீண்டும் அந்தத் தேர்தலில் வெற்றி பெற்று நான் முதலமைச்சராக வரப்போகிறேன் என்று எனக்கென்ன ஜோசியமா தெரியும்? (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 3–05

எனவே, தி. மு. கழக ஆட்சி இங்கே நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் 1991-ஆம் ஆண்டில் நான் அனுமதியைப் பெற்று அங்கே 24 ஆண்டுகளுக்கு முன்னால் வாங்கப்பட்ட ஒரு தோட்டத்தில் ஒரு வீட்டை நான் கட்ட ஆரம்பித்தேன். அதனை அவர்கள் வேண்டுமென்றே திரித்து 1991 என்ற டேட்

ணிடையே அவர்கள் இருட்டடிப்பு செய்து அதை மறைத்து ஏதோ இப்பொழுது முதலமைச்சரான பிறகு நான் புதிதாக ஒரு நிலத்தை வாங்கி இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் 1992-ஆம் ஆண்டு நான் அனுமதியைப் பெற்று ஒரு வீட்டைக் கட்டுகிறேன் என்பது போன்ற உண்மைக்குப் புறம்பான ஒரு தோற்றத்தை அளிக்கிறார்கள் என்றால் இதைப்பற்றியெல்லாம் நான் கேட்டேனா ? இதற்கெல்லாம் விமர்சனம் என்றுபெயரா?

'இப்படிப்பட்ட' உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிடுவது தான் ஒரு எதிர்க்கட்சியின் பணியா ? ஒரு எதிர்க்கட்சியின் பணியைச் செய்வதாகத்தானே பத்திரிகையாளர்கள் இன்று கூறுகிறார்கள். இதுதான் ஆக்கப் பூர்வமான விமர்சனமா ? எனவேதான் இன்றும் சொல்கிறேன். இப்படிப்பட்ட செய்திகளுக்கெல்லாம் நான் எந்தவிதமான பழி வாங்குகின்ற நடவடிக்கையிலும் ஈடுபடவில்லையே. இத்தகைய செய்திகளைச் சில பொறுப்பற்ற, நாலாந்தர வாரப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன என்றால், இந்தச் செய்திகளை அடிப்படையாக வைத்து பொறுப்புள்ள அகில இந்திய நாளேடுகளில் வெளியிடலாமா ?

இந்தச் செய்தியை வெளியிடுவதற்கு முன்னால் என்னிடம் கேட்டிருக்கலாம் அல்லவா ? இப்படிப்பட்ட ஒரு செய்தி வந்திருக்கிறதே, இது உண்மையா இல்லையா என்று என்னிடம் கேட்டிருந்தால் நான் விளக்கம் கூறியிருப்பேனே. இதை தான் நான் மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இப்பொழுதும் சொல்கிறேன். நாங்கள் ஜனநாயகத்திற்கு எதிரானவர்கள் அல்ல . பத்திரிகைச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றோ, நசுக்க வேண்டுமென்றோ நினைப்பவர்கள் அல்ல.

பத்திரிகையாளர்கள் தாராளமாக அவர்களுடைய கடமையைச் செய்யட்டும். விமர்சனம் செய்வதுதான் அவர்களுடைய பணி என்றால் தாராளமாகச் செய்யட்டும். ஆனால் அந்த விமர்சனம் உண்மையின் அடிப்படையில்தான் இருக்க வேண்டுமே தவிர (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி உண்மைக்குப் புறம்பான, இட்டுக்கட்டிய கதைகளில், உண்மைக்குப் புறம்பான செய்திகளின் அடிப்படையில் இருக்கக்கூடாது என்பதை மட்டும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிற இத்தனை விளக்கத்திற்கும் பின்னரும், எந்த அளவிற்கு அவர்கள் சகிப்புத்தன்மையோடு இருந்திருக்கிறார்கள் என்பதற்கு வேறு எவ்வித எடுத்துக்காட்டும் கூற வேண்டியதில்லை என்றே நான் கருதுகிறேன். அந்த வகையில் இந்தியாவில் முழுமையாக எல்லா மாநிலங்களையும் இன்றைக்கு எடுத்துக்கொண்டாலும் இந்த அளவிற்குச் சகிப்புத் தன்மையோடு ஒரு முதலமைச்சர் இருக்கிறார்கள் என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி). அது நம்முடைய



முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களாகத்தான் இருக்க முடியும் என்பதை மட்டும் இந்த அவையின் மூலம் வெளியில், பத்திரிகைகளில் வேறுவிதமாகத் திரித்து எழுதிக் கொண்டிருக்கிற நண்பர்களுக்கு, இந்த அவையின் மூலம் என்னுடைய வேண்டுகோளாகத் தெரிவித்து, இதுபோன்ற நிரிபுவாத வேலையில் பத்திரிகைகள்—ஒரு ஒன்றிரண்டு பத்திரிகைகள் தான் அதுவும் ஈடுபட்டிருக்கிறீர்கள், எல்லாப் பத்திரிகைகளும் என்று இல்லை—அப்படிப்பட்ட பத்திரிகைகள் ஈடுபடாமல் இருப்பது நல்லது.

இன்றைக்கு நாம் எடுத்திருக்கிற நடவடிக்கை என்பது தமிழ்ப் பத்திரிகைகளைப் பொறுத்தமட்டில், இந்த அவையில் நடக்காததை, அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டதை எழுதியதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்பதை நீங்கள் வெளியிலே சொல்ல வேண்டும்.

அதேபோல, ஆங்கிலப் பத்திரிகையின்மீது எடுத்த நடவடிக்கை என்பது, அவையினுடைய உரிமைக் குழுவையே அவமதித்து, இந்த அவையை அவமதித்ததற்காக எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை என்பதை மட்டும் நீங்கள் வெளியிலே நாட்டுக்குச் சொன்னால் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன் (குறுக்கீடு) இதிலே வேண்டாம். வாரப்பத்திரிகைகளைப் பற்றியெல்லாம் வேண்டாம், விட்டுவிடுங்கள்.

நிதி ஒதுக்க மசோதாவின் மீது நடைபெற்ற விவாதம் முடிவுற்றது.

மாண்புமிகு நிதியமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்)

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி).

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிற்பகல் 3—10

பிரிவு 2, மற்றும் இணைப்புப் பட்டியலில் திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்றும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை ' என்க (இல்லை).

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

[பேரவைத் தலைவர்] [1992 ஏப்ரல் 24

ஏற்போரே அதிகம் ; தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி).

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, சட்டமுன் வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் ; தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண். 2) சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டும் '' எனக் கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இப்போதுதான் 'ஆம்' ரொம்பப் பெரிதாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் ; தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி) சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 27-4-92 அன்று திங்கட்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை, பிற்பகல் 3-11 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## <u>11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.</u>

### <u>(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்</u>

**72. தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் 1986-1987-ஆம் ஆண்டிற்கான பதினெட்டாவது ஆண்டறிக்கை. 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).**



1992 ஏப்ரல் 24] [பேரவை தலைவர்]

**73. தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் 1987-1988-ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).**

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

166. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தி இரண்டாவது அறிக்கை, 1991-1992.

167. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தி மூன்றாவது அறிக்கை, 1991-1992.

168. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தி நான்காவது அறிக்கை, 1991-1992.

169. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தைந்தாவது அறிக்கை, 1991-1992.

170. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஆறாவது அறிக்கை, 1991-1992.

171. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஏழாவது அறிக்கை, 1991-1992.

172. மனுக்கள் குழுவின் ஒன்பதாவது அறிக்கை, 1991-1992.

173. மனுக்கள் குழுவின் பத்தாவது அறிக்கை, 1991-1992.

174. மனுக்கள் குழுவின் பதினொன்றாவது அறிக்கை, 1991-1992.

175. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் (பத்தாம் பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை).

176. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் (பதினொன்றாம் பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை).

177. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் (பன்னிரெண்டாம் பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை).

178. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் (பதின்மூன்றாம் பட்டியல்) (வரிசை எண். 1 முதல் 50 வரை.)

V2I1.3 (N92
N92.26-1
163182
600 003.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore. Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminadhan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 55, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem
16 Meenakshi Pathippagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.